வெளியீடு 26-3-1992 Issued 26-3-1992

தமிழ்நாடு ... 26 ... சென்னை-600

14

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 17, 1991 - தொகுதி 7 - எண் 2
Tuesday the 17th September, 1991 - Volume 7 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

# Tamil Nadu Legislative Assembly Debates.

## Official Report

vol-7 NO-2

17.9.1991

C

D
11,31 'N91
N91.7.2
161493

உள்ளடக்கம்.

17—9—1991.

பக்கங்கள்.


i. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 439-455

2. தகவல் கோரல்—

வட்டம் முத்துப்பேட்டை ஊராட்சி
ந்தில் எடையூர் கிராமத்தில் இடி,
ால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்
ு குறித்து — .. .. .. 455-456

டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த
க்குப் பணம் பட்டுவாடா செய்யாத
தால் கூட்டுறவு கைத்தறி சங்கங்
ணிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து. 457-460

த்தல்—

ணக்குக் குழு .. .. .. 460-462

i. மானியக் கோரிக்கைகள், 1991-92—விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்.
(ஆ) கோரிக்கை எண் 50—நகராட்சி நிருவாகம்— } 462-573

1. *திரு.ச. அழகிரி .. .. .. 465-478

.. *திரு. எஸ். ஆசைமணி.. .. .. 478-483

3. திரு. ஜி. பழனிசாமி .. .. .. 483-493

4. *திரு. சி. தாமோதரன் .. .. .. 493-495

5. *திரு. கே. செல்வராஜ் .. .. .. 496-499

6. திரு. பே. தர்மலிங்கம் .. .. .. 499-503

7. திரு. வ. மு. சுப்பிரமணியம் .. 503-507

8. திரு. ச. இராமச்சந்திரன் 507-519

9. திரு. ஆர். டி. அரங்கநாதன் . 519-523

10. திரு. எ. சம்பத் .. 523-528

11. திரு. கி. தர்மலிங்கம் .. 528-530

12. டாக்டர் தே. குமாரதாஸ் .. . 531-538

13. *திரு. க. பழனிசாமி . . 538-543

14. *திரு. வி. தம்புசாமி . 543-551

15. *திரு. ஆ. பாலையா .. 551-560

16. மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு 562-465, 560-570

6. பேரவை முன் வைக்கப் பெற்றவடுகள் .. 573-576



V211.31 N91

N91.7.2

161493




## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 1, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு-2022.

1991, செப்டம்பர் 17, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.''

குடிகளை அன்போடு அணைத்துக் கொண்டு செங்கோல் செலுத்துகிற அரசனுடைய அடியைப் பின்பற்றியே சென்று கொண்டிருக்கும் இவ்வுலகம்.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

வினாக்கள்—விடைகள். வினா எண் 40—திரு. கே. தவசி.
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

40—

ஆண்டிப்பட்டியில் நடுவர் நீதிமன்றம்.

*789—திரு. கே. தவசி:
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டிப்பட்டி மற்றும் கண்டமனூர் காவல் துறை சரகங்களைச் சேர்ந்த வழக்குகளை விசாரிப்பதற்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1 உசிலம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ளதை ஆண்டிப்பட்டிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) தாலுகாவிற்கு ஒரு உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டப்படி ஆண்டிப்பட்டி தாலுகாவுக்கென ஆண்டிப்பட்டியில் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு [illegible]. ஏ. கிருஷ்ணசாமி. பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) உயர்நீதிமன்றத்தின் கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

[1991 செப்டம்பர் 11

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டிப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுகா அலுவலகம் ஏற்படுத்தினார்கள். அதேபோல் உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் வேண்டுமென்ற அடிப்படையில் அங்கே இரண்டு நீதிமன்றங்கள் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையில் தற்போது உசிலம்பட்டியில் அந்த ஆண்டிப்பட்டி வழக்குகளை விசாரிக்கிற கோர்ட்டும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவருகிறது. எனவே அந்தக் கட்டிடத்தை ஆண்டிப்பட்டியில் மாற்றி அங்கே முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படுமா என்பதை நான் அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் 3 நீதிமன்றங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றை உத்தமபாளையத்திற்கு மாற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது. உசிலம்பட்டியில் ஏராளமான வழக்குகள் இருக்கின்ற காரணத்தால், இரண்டு நீதிமன்றங்கள் அங்கே தேவைப்படுகின்றன. ஆனால் ஆண்டிப்பட்டியிலும் ஒரு நீதிமன்றம் தேவைப்படுகிறது. அதை முன்னிட்டு எங்களுடைய இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் உயர்நீதிமன்றத்திற்கு எழுதி இருக்கிறோம். அதைத் துரிதப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசும் முயன்று கொண்டிருக்கிறது.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகாவிற்கு ஒரு உரிமையியல் நீதிமன்றம் என்ற அடிப்படையில் ஆண்டிப்பட்டிக்கும் உரிமையியல் நீதிமன்றம் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக என்னுடைய விடையிலே கருத்தைத் தெரிவித்து இருக்கிறேன். உயர்நீதிமன்றத்திற்கு வற்புறுத்திச் சொல்லி இருக்கிறோம். நிச்சயமாக விரைவில் ஆண்டிப்பட்டியில் ஒரு நீதிமன்றம் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 41. திரு. காஞ்சி பன்னீர்செல்வம். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

41— உத்திரமேரூரில் துணை நீதிமன்றம்.

*1757 – திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உத்திரமேரூரில் துணை நீதிமன்றம் அமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?



1991 செப்டம்பர் 17]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42. செல்வி ஜி. மல்லிகா. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

42— புவனகிரியை தாலுகாவாக மாற்றுதல்.

*340—செல்வி ஜி. மல்லிகா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரியை தாலுகாவாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேவை எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செல்வி ஜி. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தாலுகாவுக்கு மாற்ற இயலாவிட்டாலும் என்னுடைய தொகுதியிலுள்ள பரங்கிப்பேட்டையை நமது புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் தாலுகா தலைமையிடமாக மாற்றித் தர அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி என்றாலும் பரங்கிப்பேட்டை என்றாலும் இரண்டும் ஒரே வட்டத்தில்தான் வருகின்றன. முதலில் சிதம்பரம் வட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம் ஆகிய இரண்டும் சேர்ந்து ஒரே வட்டமாக இருந்தது. புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் காட்டுமன்னார் கோயில் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சிதம்பரம் வருவாய் வட்டம், காட்டுமன்னார்கோயில் வருவாய் வட்டம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இப்போது பிரிக்கப்பட வேண்டிய தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

செல்வி ஜி. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரங்கிப்பேட்டையில் உள்ள மக்கள் தங்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் பெற ஏறத்தாழ 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிதம்பரத்திற்கு தற்போது செல்ல வேண்டி உள்ளதால் பரங்கிப்பேட்டையை மையமாக வைத்து தனி தாலுகா ஏற்படுத்தித் தர இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி அமைந்த பிறகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சங்கடங்களை உணர்ந்துதான் இப்போது 3 புது வட்டங்களுக்கு சேர்ந்து ஒரு துணை வட்ட ஆட்சியாளரை நியமித்திருக்கிறார்கள் தமிழ்நாடு பூராவும். துணை வட்ட ஆட்சியாளரே சான்றிதழ்களை வழங்குவதற்கு அதிகாரம் இருக்கிறது என்று இன்றைக்கு இருக்கிற அரசில் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. தாமோதரன்.

திரு. சி. தாமோதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் ஒரு வட்டத்தையும், ஒரு வருவாய்க் கோட்டத்தையும், ஒரு மாவட்டத்தையும் பிரிக்க அரசுக்கு ஆகும் தொடரும் செலவு எவ்வளவு, தொடராச் செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வட்டத்தை பிரிக்கிறதற்கு மட்டும் கேளுங்கள். எல்லாவற்றிற்கும் பதில் வராது புவனகிரியைப் பிரிப்பதற்குரிய செலவு எவ்வளவு ஆகும் என்று வேண்டுமானால் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்தைப் பிரிப்பதற்கு தொடரும் செலவு ரூ. 33 இலட்சம், தொடராச் செலவு ரூ. 51 இலட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்டத்திற்கு வேண்டுமானாலும் சொல்லிவிடுகிறேன். மாவட்டத்தைப் பிரிப்பதற்கு தொடரும் செலவு ரூ 4 கோடியே 20 இலட்சம். தொடராச் செலவு ரூ. 13 கோடியே 30 இலட்சம். அது போலவே வருவாய்க்கோட்டமாக இருந்தால், தொடரும் செலவு ரூ. 7 இலட்சம். தொடராச் செலவு ரூ. 34 இலட்சம்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் மூன்று குறு வட்டங்களை சேர்த்துஒரு துணை தாசில்தாரின் தலைமையில் நிர்வாகத்தின் அடிப்படையில் துணை வட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது என்றும் அதில் சான்றிதழ் வாங்கமுடியும் என்றும் சொன்னார்கள். ஆதிதிராவிடர் வகுப்பினர்களுக்கு சான்றிதழ் பெறவேண்டுமேயானால் அந்த துணை தாசில்தாரிடமும் பெற்று, இரண்டாவது கட்டமாக வட்ட ஆட்சியாளரிடமும் பெற வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே இருப்பதைக் காட்டிலும் இப்போது இரண்டு பங்கு வேலை இருக்கின்றது அந்தச் சாதிச் சான்றிதழ் பெறுவதில். அதை துணை வட்டாட்சியாளரே கொடுத்து விடலாம் என்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கியோர் சான்றிதழ்கள் வழங்குவதில் அங்கே வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. சில நேரங்களில் பின்தங்கியவர்களோ அல்லது முற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களோ தவறாக ஆதிதிராவிடர்கள் என்று சான்றிதழ் பெற்று கல்வி நிலையங்களுக்குச் சென்று அதுவும் தொழில் கல்வியைப் படித்து பாதியிலே நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறபோது அரசுக்குச் சில சங்கடங்கள் ஏற்படுவதனால் அப்படிப்பட்ட சான்றிதழ்கள் கொடுக்கும்போது கொஞ்சம் ஆய்வு செய்ய வேண்டியிருப்பதனால் கொஞ்சம் காலதாமதம் ஆகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களை, மாவட்டங்களைப் பிரிக்கின்ற இந்த அரசு, பெரிய தாலுக்காவாக வாணியம்பாடி தாலுக்கா இருக்கிறது, அதே போல வேலூர் தாலுக்கா......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன், இது தென் ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற ஒரு தாலுக்காவை பிரிக்கிற ஒரு கேள்வி. இங்கே வட ஆற்காடு மாவட்டத்திலே என்று ஒவ்வொரு மாவட்டமாகப் போனால், அதற்கு பதில் இருக்காது. அடுத்து, திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான ஜனத் தொகை பெருகுவதோடு மட்டுமல்லாமல் வேலைப் பளுவும் இந்த தாலுக்காக்களிலே அதிகமாகிக் கொண்டு இருப்பதனாலே மேலும் இந்த தாலுக்காக்களுடைய வேலைப் பளுவினால், வேலைகள் முடக்கப்படுவதனால்,

[1991 செப்டம்பர் 17

அரசினுடைய பல செயல்பாடுகள் மிகவும் தாமதப்படுவதாலும் இன்னும் தாலுக்காக்களைப் பிரித்து செயல்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்புதான் இந்தப் பேரவையிலே நான் தெரிவித்தேன். புரட்சித் தலைவர் காலத்திற்கு முன்னால் பெரிய பெரிய மாவட்டங்கள் பெரிய பெரிய வட்டங்கள், பெரிய பெரிய கோட்டங்கள் என்று இருந்தன. அவை பிரிக்கப்பட்டன என்று முந்தியே சொல்லியிருக்கிறேன். மீண்டும் இந்த அவையிலே அதையே சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். இப்படி வட்டம் பெரியதாக இருப்பதால், அந்த இடங்களில் வேலைப் பளு அதிகமாகி இருக்கின்ற காரணத்தினால் கணக்கம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி நீங்கள் பொதுமொத்தமாக தாமதம் தாமதம் என்று சொல்லாமல் இந்த இடங்களில் இப்படிப்பட்ட வேலை செய்யப்பட்டது என்று சொல்லுங்கள். உதாரணமாக ஒன்றிரண்டு குறிப்பிட்டால் அரசு அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 43. திரு. கே. ஏ. மனோகரன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

43—

அஞ்செட்டியைத் தனித்தாலுக்காவாக மாற்றுதல்.

*1300—திரு. கே. ஏ. மனோகரன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், அஞ்செட்டியைத் தனித்தாலுக்காவாக ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்தும் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆய்வில் உள்ளது.

முற்பகல் 9-40

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் உள்ளது என்றால் இந்த நிதி ஆண்டில் வருமா அல்லது எப்போது வரும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?



1991 செப்டம்பர் 17]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்ட கேள்வி, அரசு உத்தரவு போட்டாகிவிட்டது. ஏன் தாமதம் என்று கேட்டிருக்கிறார்கள். அரசு அப்படிப்பட்ட உத்தரவை போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனித் தாலுக்காவாகப் பிரிக்க வேண்டுமென்று வருவாய்த்துறையினுடைய சிறப்பு நிர்வாக ஆணையாளர் அவர்கள் தன்னுடைய சிபாரிசை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அரசு அதை ஆய்வில் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த நிதியாண்டில் வருவதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. ரகுபதி.

திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தாலுக்காக்கள் எந்த அடிப்படையிலே பிரிக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்த பதில்களையே மீண்டும் மீண்டும் உறுப்பினர்கள் கேட்கிறபோது இந்த அவையின் நேரம் வீணாகிறது என்பதைப் பணிவன்புடன் மாண்புமிகு பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்பற்றியெல்லாம் நான் முன்பே தெரிவித்திருக்கிறேன். இந்தக் கூட்டத் தொடரிலேயே தெரிவித்திருக்கிறேன். வட்டங்களைப் பிரிப்பதற்கு அங்கே இருக்கிற மக்கள் தொகை, பரப்பு, வேலைப் பளு, வருவாய் இவைகளை எல்லாம் பார்க்க வேண்டும். அப்படி வேலைப் பளு என்கிறபோது அங்கே இருக்கிற மக்களுடைய தன்மையைப் பொறுத்திருக்கிறது. மிகவும் பின்னால் தள்ளப்பட்ட மக்கள், அல்லது ஆதி திராவிட மக்கள் அல்லது மலைவாழ் மக்கள் அதிகமாக வசித்தல், வாசஸ்தலம், டூரிஸ்ட் சென்டர் இப்படி இருக்கிற நிலைமைகளை எல்லாம் ஆய்வு செய்து, அதற்கு ஏற்ப வட்டங்கள் பிரிக்கப்படுகின்றன என்பதை இரண்டாவது முறையாக, இந்தக் கூட்டத் தொடரிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. பெருமாள்.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் வட்டத்தைப் பிரிப்பதற்கு ஆணைப் பிறப்பித்தும், சேலம் மாவட்டத்தில் வாழப்பாடியைத் தாலுக்காவாக ஆக்குவது குறித்து இன்னும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாழப்பாடிக்கு என்று கேட்டால் பதில் வராது. பொதுவானதாக இருக்கலாம், அல்லது தேன்கனிக்கோட்டை வட்டம் பற்றியதாக இருக்கலாம். திரு. செ. பெருமாள்.

திரு. செ. பெருமாள்: நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆணை பிறப்பித்தும் சில வட்டங்கள் இன்னும் பிரிக்கப்படாமல் இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அந்த வட்டத்தைத் தருவதற்கு ஆணைப் பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆணையும் அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புதிதாக பிரிக்கப்படுமா என்பதை உறுப்பினர் திரு. ரகுபதி கேட்டு, அதற்கு நான் விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறேன். மற்றபடி எந்தெந்த வட்டங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி எங்களுடைய வருவாய்த் துறையினுடைய சிறப்பு நிர்வாக ஆணையாளர்தான் பரிந்துரை செய்கிறார்கள். அதில் நீங்கள் சொல்லியபடி சிபாரிசு செய்ய தவறிவிட்டால் இன்னின்ன காரணங்களால் அது அவசியம் பிரிக்கப்பட வேண்டுமென்று என்னிடம் எழுத்து மூலமாக எழுதிக் கேட்டால் மார்ண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடமிருந்து உத்தரவு பெற்று அதுபற்றிய உத்தரவு காலத்தில் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை வட்டத்திலே அஞ்செட்டிப் பகுதி மிகவும் மலைப் பாங்கான பகுதியாகும். அங்கேயிருந்து தேன்கனிக்கோட்டைக்கு வருவதற்கு ஒரு நாள், 1½ நாள் ஆகிறது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அந்த மலைவாழ் மக்களுக்கு, அவர்களுக்கு திட்டங்களின் நன்மைகள் கிடைப்பதற்கு அல்லது வேகமாகப் பெறுவதற்கு அடுத்த நிதியாண்டிலாவது அதை நடைமுறைப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னபடி மலைப் பிரதேசத்தில் 19 வருவாய் கிராமங்கள் இருக்கின்றன. அதை மனதில் வைத்துக்கொண்டுதான் அதை வருவாய்த்துறை சிறப்பு நிர்வாக ஆணையாளர் சிபாரிசு செய்திருக்கிறார். அதனை





அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. இந்த நிதியாண்டில் வருவது என்பது—உங்களுக்கு எல்லாம் அரசின் நிதி நிலைமைபற்றி தெரியும். அடுத்த நிதியாண்டில், அது வருவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்கிறேன். உங்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெறுவதற்கு முயற்சி செய்து பார்க்கிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய வட்டங்களைப் பிரிப்பதில் இருக்கிற பொருளாதாரப் பிரச்சினைகளை முன்னிட்டு, அப்படி பிரிக்கப்படும் வரை அந்த வட்டாட்சியரே வாரம் ஒரு பகுதிக்குச் சென்று மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரப் பிரச்சினைக்காக எதையும் காலதாமதம் பண்ணவில்லை. பெரிய வட்டங்கள் எல்லாம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், எல்லா இடங்களிலும் வருவாய்த்துறை அதிகாரிகள்—மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டாட்சித் தலைவர்கள் மக்கள் குறைகளைக் கேட்கின்ற நாட்கள் இன்றைக்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி மக்களுடைய குறைகளைக் கேட்கும் நாட்கள் போதவில்லை அல்லது சரியானபடி கேட்கவில்லை என்று தெளிவாகக் குறிப்பிட்டுச் சொன்னால் அதற்கு வேண்டிய உத்தரவுகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிய மாவட்டங்களைப் பிரிக்கும்போது சில தலைவர்களின் பெயர்களை அந்த மாவட்டங்களுக்குச் சூட்டுவது போல புதிய தாலுக்காக்கள் பிரிக்கும்போது அங்கே வாழ்ந்த விடுதலைப் போராட்ட வீரர்கள், சமுதாய சீர்திருத்த வாதிகள் போன்ற மிகப் பெரிய மனிதர்களின் ஞாபகார்த்தமாக அந்தத் தாலுக்காக்களுக்கு அவர்கள் பெயர்களை வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதே கூட்டத் தொடரிலேதான், 2 தினங் களுக்கு முன்னால் மாவட்டங்களுக்குத் தனிப்பட்டவர்களுடைய பெயர்களை வைப்பது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மீண்டும் வைக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. விசுவநாதன்.

திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வட்டத்தில் 3 தொகுதிகள் அடங்குகின்ற அளவுக்கு மிகப் பெரிய வட்டங்களாக இருக்கிற. குடியாத்தம் போன்ற வட்டங்களைப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் 234 சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகள் இருக்கின்றன. ஆனால், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு வருவாய் கோட்ட மல்ல. வருவாய்க் கோட்டங்கள், புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக ஆவதற்கு முன்னால் 100, 102தான் இருந்தன. அவர் காலத்தில் அது 170 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆக 170 வருவாய் வட்டங்கள், 234 சட்டமன்றத் தொகுதிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தொடங்க இருக்கின்ற மாவட்டங்களில் பழைய நிலைமையில் இருக்கிற தாலுக்காக்கள் மறு நிர்ணயம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகத்தினுடைய வசதிக்கேற்றவாறு வட்டங்கள், கோட்டங்கள், மாவட்டங்கள் பிரிக்கப்படுகிறபோது ஆய்வு செய்து, நிர்வாகத்திற்கு ஏற்றவாறு அவை மாற்றியும், திருத்தியும் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 44. திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.



44— கோமுகி அணையை உயர்த்திக்கட்டுதல்.

*1188—திரு. ஆர். பி. பரமசிவம் :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம் கோமுகி அணையின் நீர்ப் பிடிப்பை அதிகரிப்பதற்கு அணையை உயர்த்திக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே.

இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சின்னசேலம் தொகுதியில் ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்ற முறையில் கோமுகி அணை மட்டும்தான் இருக்கிறது. அது 'எர்த்தர்ன் டாம்' —மண் ணால் கட்டப்பட்ட டாம். பார்ஷியலி பிரிக் டாம். இந்த அணையில் கடந்த 3 ஆண்டுகளாக நல்ல மழை இல்லாததால், அதன் மூலம் பயன்பெறும் ஆயக்கட்டுகளுக்குக் கூட சரிவர தண்ணீர் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அந்த அணையின் உயரத்தை உயர்த்தினால் அங்கே 'மினிமம் வாட்டர் லெவல்' என்று குறிப்பிட்ட அளவுக்கு தண்ணீரை தேக்கி வைக்க முடியு மென்று பொறியியல் நிபுணர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு தண்ணீர் அளவை அதிகரிக்க முடியும். அதன் மூலம் சுற்று வட்டாரத்தில் உள்ள கிணறுகளில் தண்ணீர் ஊறு வதற்கு வசதி இருக்கும். அதே நிலையில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். ஒரு அணை கட்டினால் இதெல்லாம் இருக்குமென்று எல்லோருக் கும் தெரியும்.

திரு. ஆர். பி. பரமசிவம் : அந்த அணையை உயர்த்துவ தால் ஏற்படும் பலனைச் சொல்கிறேன். அந்த அணையை உயர்த்துவதால் அங்கேயுள்ள விவசாயிகளுக்கும், குடிநீர் பிரச்சி னைக்கும் ஒரு வழி பிறக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அணை உயர்த்தும் திட்டத்தை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கிற கோமுகி அணையின் கொள்ளளவு என்பது 560 மில்லியன் கன அடியாகும்.

ஆனால், தற்போது இருக்கிற நீர் மட்டத்தின் கொள்ளளவு 105 மில்லியன் கன அடியாக இருக்கிறது. புதிதாக அணை கட்டுகிற நேரத்தில் வருகிற நீர் வரத்து தன்மையின் அளவைப் பொறுத்துத்தான், புதிதாக அணைகள் கட்டப்படுகின்றன. இந்த அணையைப் பொறுத்தவரையில் அதன் கொள்ளளவுக்குக் கூட நீர் வரத்து இல்லாததால் மேலும் இந்த அணையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மழைக் காலத்தில் அதிக நீர் வரத்துள்ள ஆறாகும். ஆகவே கடந்த மூன்றாண்டுகளில் வந்த தண்ணீரை மட்டும் வைத்து திட்டமிட முடியாது. ஆகவே, எப்படியிருந்தாலும் அந்த அணையை உயர்த்துவதால் எங்கள் பகுதி மக்களுக்கு பலன் கிடைக்கும் என்பதால் அடுத்த ஆண்டாவது இந்த அணையை உயர்த்தும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விபரங்களைத் தெரிவித்து இருக்கிறேன். இருந்தாலும், இன்றைக்கு அந்த அணையின் பாசனப் பரப்பு ஏறத்தாழ 5,060 ஏக்கருக்கு அந்த அணையின் மூலம் பாசனம் செய்யப்படுகிறது. கடந்த காலத்தில் பார்த்தால் தண்ணீர் வரத்து இல்லாததால் தான் விரிவு படுத்தும் திட்டம் இல்லையென்று நான் சொன்னேன். மழை அதிகம் வந்து தண்ணீர் அதிகம் பெருகுமானால் அதைப்பற்றி இந்த அரசு கவனித்து அடுத்த ஆண்டு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட பல அணைகள் தூர் எடுக்கப்படாமல் ஒவ்வொரு ஆண்டிலும் 10 அடி 15 அடி உயரத்திற்கு சில்ட் அடைத்துக் கொண்டிருக்கிறது. அதுபோன்ற நீண்ட ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அணைகள் உயர்த்திக் கட்டப்படுமா ? அல்லது படிந்திருக்கிற 10—15 அடி உயர மண்ணை தூர் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் படிந்து விடுவதால் அணையை உயர்த்திக் கட்டுவது என்பது சாத்தியமல்ல. ஏற்கெனவே மணல் படிந்திருக்கிறது என்று புகார்கள், குறிப்பிட்ட அணைகளில் இல்-





வாறு உள்ளன என்று புகார்கள் வந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், அதை உடனடியாக சீர் செய்து மேம்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 45. டாக்டர் வெ. புருஷோத்தமன். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

45—

பென்னாகரத்தில் தொழிற்பேட்டை

*1065—டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னாகரம் தொகுதியில் தொழிற்பேட்டை துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. மூஹம்மது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். கடந்த 20 ஆண்டுகாலமாக இந்தப் பகுதிக்கு 'இல்லை' என்ற பதிலே வந்திருக்கிறது. அந்த மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்றும், பென்னாகரம் தொகுதி முழுவதும் மத்திய அரசாலும் மாநில அரசாலும் பின் தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், அடுத்த நிதி ஆண்டிலாவது இந்த பென்னாகரம் பகுதியில் தொழில் பேட்டை அமைக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மூஹம்மது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை பரிசீலனை செய்து தெரிவிக்கிறேன்.

[1991 செப்டம்பர் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இன்டஸ்டிரீஸ் சென்டர்கள் முன்பு மூடப் பட்டன. அத்தகைய இன்டஸ்ட்ரீஸ் சென்டர்களைப் புதிதாகத் துவக்கும் எண்ணம் இப்போது அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. Speaker Sir, The previous Government has closed many Industrial Centres. I want to know whether there is any proposal to re-open the Centres with the grace of our Honourable Puratchi Thalaivi ?

HON. THIRU. MOHAMED ASIF : Mr. Speaker Sir, in the Regime of our Honourable Chief Minister everyone knows that she has already declared to place our Tamil Nadu in the First place in the Industrial Map of India. So I would like to tell the Honourable Members to have full confidence that the time is not far for, not only the Small Industries, but also even the larger and largest Industries to find the first place in the Industrial Map of India.

முற்பகல் 9.55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. விசுவநாதன்.

திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டை முதலிடத்திலே கொண்டு வருவதாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அப்படியானால் தொழிற்பேட்டை அடுத்த ஆண்டுக்குள் அல்லது அடுத்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை துவக்கப்படும் என்பது முடிவு செய்யப்பட்டு இருக்கிறதா ? எத்தனை தொழிற்பேட்டைகள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : Hon. Speaker Sir, I understand that there is a plan to introduce about 200 sheds per annum. At this rate in 5 years time a minimum of 200x5 i.e. 1000 sheds will be introduced. Apart from that if any particular member an Enterpreneur, could come forward with a proposal of readily occupying a minimum of 25 sheds the department will certainly consider and come forward to provide the necessary infrastructure.



1991 செப்டம்பர் 17]

THIRU G. VISWANATHAN : Mr. Speaker Sir, the question was about the number of Industrial Centres., I did not ask about the sheds.

HON. MR. SPEAKER : Hon'ble Minister said about the 'sheds'.

THIRU G. VISWANATHAN : I only asked about the number of Industrial Centres.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தொழிற்பேட் டையை மட்டும்தான் கேட்டீர்கள். அமைச்சர் அவர்கள் அங்கே உள்ளே அமைகிற ஷெட்டுக்கே பதில் சொல்கிறார் ; இத்தனை அமைக்கப்படும் என்று சொல்கிறார். (குறுக்கீடு). அதாவது நீங்கள் கேட்கிற கேள்விக்கு அதிகப்படியான விடையே அமை கிறது என்பதை அமைச்சருடைய பதிலிலிருந்து தெரிந்துகொள்ள லாம். நீங்கள் எத்தனை தொழிற்பேட்டை என்றுதான் கேட்டீர்கள். அவர்கள் தொழிற்பேட்டைக்கு அடுத்து உள்ளே அமைகிற ஒவ்வொரு ஷெட் வாரி சொல்கிறார்.

HON. THIRU MOHAMED ASIF : Hon'ble Speaker Sir, A separate question may be put, because I do not have the information readily with me to reply.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 46. திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

46—

பல்நோக்கு மீன் பதப்படுத்தும் நிறுவனம்.

*54—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் ஒரு கடலோர கிராமத்தில் மீன் பதப்படுத்துதல், ஆயத்த உணவு தயாரித்தல், கழிவுகளால் உரம் தயாரித்தல், மீன் எண்ணெய் தயாரித்தல் போன்ற பல்நோக்குத் திட்டம் கொண்ட நிறுவனம் ஒன்றை நிறுவும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

[1991 செப்டம்பர் 17

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, என்னுடைய தொகுதியில் 7 கடலோரக் கிராமங்கள்
இருக்கின்றன. ஏராளமான மீன்களை கேரளாவுக்குத் தான்
கொண்டு செல்கிறார்கள். இது ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் ஏர்ன்
பண்ணக்கூடிய இன்டஸ்ட்ரி ஆக இருக்கின்ற காரணத்தினாலேயும்
என்னுடைய தொகுதி இன்டஸ்ட்ரியலி மோஸ்ட் பேக்வேர்ட்
என்று அறிவிக்கப்பட்டும் எந்த தொழிற்சாலையுமே இதுவரை
வராத காரணத்தினாலேயும் ஏதாவது மீனவர்களுடைய கூட்டுறவு
சங்கங்களின் மூலமாவது முனைப்புடன் செயல்பட்டு ஒரு
தொழிற்சாலையை ஏற்படுத்தி அங்குள்ள மீனவப் பெண்களுக்கும்
மீனவர்களுக்கும் வாய்ப்பைத் தர அரசு முன்வருமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரு வருடத்திற்கு அவர்கள் 4,240 டன்கள்
மீன்களைப் பிடிக்கிறார்கள். ஒரு நாளைக்கு 15 முதல் 18
டன்கள் வரை மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இதில் உயர் ரக
மீன்கள் 20 சத விகிதம் மட்டுமே. அதாவது 3-லிருந்து 4 டன்கள்
வரை உயர் ரக மீன்கள் அடங்கும். பருவ காலங்களில் ஒவ்வொரு
கிராமத்திலும் 300 முதல் 400 கிலோ கிராம் வரை உடனுக்குடன்
மீன்கள் விற்கப்படுகின்றன. பிடிக்கப்படும் மீன்கள் பொதுவாக
தேக்கம் அடைவது இல்லை. அப்படித் தேக்கம் அடைந்தாலும்
அருகிலுள்ள நகரங்களுக்கு பனிக்கட்டி இடப்பட்டு கொண்டு
செல்லப்படுகின்றது. பனிப் பொறி நிலையம் இடிந்தகரை பெரிய
சாலையில் ஏற்கனவே உள்ளது. தற்போது அது மூடப்பட்
டுள்ளது. ஏனென்றால் எதிர்பார்த்த அளவு பனிக்கட்டி விற்பனை
சரி இல்லாததால் மூடப்பட்டுள்ளது. மேலும் தரமான மீன்கள்
அங்கு நிறைய கிடைப்பதில்லை. மேலும் இது ஒரு வறட்சியான
பகுதியாகும். எனவே மீன் பக்குவம் செய்ய போதிய தண்ணீர்
கிடைப்பதில்லை. மேலும் சீரான மூன்று வழித் தொடர் அதாவது
'த்ரிஃபேஸ் லைன்' மின்சார விநியோகம் இல்லை. அதனால்
தொழிற்சாலை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறும் இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு தலைவர் அவர்களே,
அந்தப் பகுதியிலிருந்து ஏராளமான இறால் மீன்களை வெளியே
கொண்டு செல்கிறார்கள். ஏற்றுமதியே ஆகின்றது. ஆகவே
அவைகளை நாமே ஒரு தொழிற்கூடம் மூலமாக
எப்படிப் பதப்படுத்தி, பக்குவப்படுத்தி ஆயத்த உணவாக ஆக்க
முடியுமோ அப்படியெல்லாம் செய்வோமானால் 'ஃபாரின் எக்ஸ்
சேன்ஜ்' தமிழகத்துக்கு வருமே. இதை ஏன் கேரளாக்காரர்கள்



1991 செப்டம்பர் 17]

அடித்துச் செல்லவேண்டுமென்று கேட்டு, அதற்கான முனைப்பு
டன் செயல்பட வேண்டுமென்று கேட்டு, இந்த ஐஸ் பிளான்ட்—
கேரள மீன் விற்பனையாளர்கள் மீன்களை எல்லாம் எடுத்துச்
சென்றுவிடுவதால் தான்—அது பங்ஷன் ஆகாமல் இருக்கிறது;
அதனாலேயும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்பதை
யும் குறிப்பிட்டு இனிமேலாவது இதைப் பரிசிலனை
செய்து இப்படி ஒரு தொழிற்சாலை உண்டுபண்ணுவதன் மூலமாக
வறட்சிக்கு இலக்காகி இருக்கின்ற, இன்டஸ்ட்ரியலி மோஸ்ட்
பேக்வேர்டு என்று அறிவிக்கப்பட்டு இருக்கின்ற தொகுதிக்கு ஒரு
ஒளி மயமான எதிர்க்காலம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்
களின் ஆட்சியில் நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *வினாக்கள்—விடைகள்*
நேரம் முடிவுற்றது.

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது
என்பதை குறிக்கும்].

2. தகவல் கோரல்.

தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில்
ஏடையூர் கிராமத்தில் இடி, மின்னலால் பாதிக்கப்பட்டோருக்கு
நிவாரணம் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசின் கவனத்திற்கு மிக
இன்றியமையாத ஒரு அவசரப் பிரச்சினையைக் கொண்டுவர
வேண்டுமென்று திரு. பழனிசாமி என்னிடம் அனுமதி கோரி
இருக்கிறார். நான் அனுமதி வழங்கி இருக்கிறேன். திரு. பழனிச்
சாமி.

முற்பகல் 10-00

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 14 ஆம் தேதி தஞ்சை மாவட்டத்தில், முத்துப்
பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் எடையூர் என்ற உள்கிராமத்
தில் கடுமையான மழை பெய்து இடி இடித்ததன் காரணமாக
விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயத் தொழிலாளர்கள்
மூன்று பேர்கள் அந்த இடர்பாட்டில் பாதிக்கப்பட்டு ஒருவர்
ஸ்தலத்திலேயே இறந்து போய் விட்டார். இரண்டு பேர்களுடைய
உயிர் ஊசலாடுகிற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு
இன்றுவரையில் அவர்கள் பிழைப்பார்களா என்ற அச்சம் ஏற்
பட்டிருக்கிறது. தனது கணவனுக்கு உணவு எடுத்துச்சென்ற
கலைச்செல்வி என்ற பெண்ணும் இந்த இடர்பாட்டில் பாதிப்புக்

குள்ளாகி இருக்கிறார். விவசாயப் பணிகளில் ஈடுபட்டிருக்கிற ஏழை குடும்பத்தில் பிறந்திருக்கக்கூடிய அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இராமையன் என்னும் நபர் அந்த ஸ்தலத்திலேயே இறந்திருக்கிறார். அதைப்போல கணேசன், பக்கிரி, கலைச்செல்வி என்ற மூன்று பேர்களும் மிகவும் மோசமான நிலையில் இன்றுவரையில் உணர்வு திரும்பாத நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து, எந்தவிதமான வசதி வாய்ப்பும் இல்லாத அந்த ஏழை குடும்பத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் நிவாரண நிதி வழங்க வேண்டுமென்று உங்கள மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14—9—1991 அன்று மாலை மூன்று மணிக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி அங்கே எடையூர் கிராமத்தில் இடியாலும் மின்னலாலும் தாக்கப்பட்டு ஒருவர் இறந்தார் என்ற செய்தி தெரிய வந்தது. அந்தச் செய்தி எனக்கு தெரிவதற்கு முன்னாலே கூட, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு தெரிந்து இருக்கிறது. அவர்கள் உடனே என்னுடன் தொடர்பு கொண்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட இடர்பாடுகளை அன்றாடம் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு ஆகும். அதற்கு வேண்டியவற்றை செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் தெரிவித்து இருக்கிறார்கள். இராமையன் என்பவர் 35 வயதுள்ளவர் என்று சொன்னார்கள. அவர் இறந்து போய் இருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் தனக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இங்கேயிருக்கிற அரசு விதிப்படி 2,000 ரூபாய் அவர்கள் வழங்குவார்கள். வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு மேல் அவர்கள் எல்லாம் ஏழை விவசாயிகள் என்பதும், ஆதிதிராவிட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், தொழிலாளர்கள் என்பதும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்து இன்றைக்கு காலையில் அதை கவனித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். சிறப்பு நிதி வழங்கவேண்டுமென்றால், முதலமைச்சர் அவர்கள் ஆய்வுசெய்து சிறப்பு நிதியை வழங்குவார்கள் என்பதையும், தொழிலாளர்களுக்கு வேண்டிய நன்மைகளை இந்த அரசு செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



3. கவன ஈர்ப்பு.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த துணிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யாத காரணத்தால் கூட்டுறவு கைத்தறி சங்கங்களில் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. திரு. சின்னசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் குறித்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

*திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த துணிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யாத காரணத்தால் கூட்டுறவு கைத்தறி சங்கங்களில் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து" மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று இது குறித்து பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை.

கோ-ஆப்டெக்ஸ் என அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் தமிழ்நாட்டில் உள்ள 1,514 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தாய்ச் சங்கமாக விளங்குவதுடன் அவைகள் உற்பத்தி செய்யும் துணிகளை கொள்முதல் செய்து, தன் கிளை விற்பனை நிலையங்கள் வாயிலாக விற்பனை செய்து வருகிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு தேசிய விவசாய மற்றும் கிராம வளர்ச்சி வங்கி காசுக்கடனாக ரூ. 90 கோடி அனுமதி அளித்துள்ளது. இவ்வசதியினை பயன்படுத்தி கொள்முதல் செய்யும் இனங்களுக்கு அவ்வப்போது நிதி நிலைமைக்கேற்ப கோ-ஆப்டெக்ஸ் பட்டுவாடா அளித்து வருகிறது. சமீபத்தில் தமிழக அரசு விடுவித்த ரூ. 5 கோடி ரிபேட் மானியத்

துடன் காசுக்கடன் வசதியை பயன்படுத்தி ஆகஸ்ட் மாத இறுதியில் ரூ. 23.20 கோடி அளவிற்கு பட்டுவாடா அளித்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வரிசை எண். (1) | மாவட்டம். (2) | பட்டுவாடா செய்யப் பட்ட தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 1 | செங்கை எம். ஜி. ஆர். | 423.13 |
| 2 | கோயமுத்தூர் | 233.29 |
| 3 | தர்மபுரி | 26.33 |
| 4 | கன்னியாகுமரி | 52.65 |
| 5 | மதுரை | 51.84 |
| 6 | திண்டுக்கல் அண்ணா | 15.22 |
| 7 | சென்னை | 4.98 |
| 8 | வட ஆர்க்காடு அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் | 163.09 |
| 9 | பெரியார் | 435.64 |
| 10 | இராமநாதபுரம் | 13.47 |
| 11 | காமராஜர் | 217.30 |
| 12 | பசும்பொன் முத்துராமலிங்கம் | 9.39 |
| 13 | சேலம் | 361.17 |
| 14 | தென்ஆற்காடு | 17.69 |
| 15 | தஞ்சை | 114.56 |
| 16 | திருநெல்வேலி | 58.89 |
| 17 | திருச்சி | 121.55 |
| | | 2,320.19 |



நாளது தேதியில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது துணிகளை கொள்முதல் செய்த வகையில் ரூ. 13.38 கோடி மட்டுமே பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பட்டுவாடா அளிக்க வேண்டியுள்ளது. தற்போது மத்திய அரசு ரூ. 2.82 கோடி அளவிற்கு ஜனதா மானியத் தொகை வழங்கியுள்ளது. தவிரவும் மத்திய அரசு ரூ. 3.18 கோடி ஜனதா மானியமாக வழங்கப்பட வேண்டியுள்ளது. மேலும் ரிபேட் மானியத் தொகையாக 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.93 கோடி கோ-ஆப்டெக்ஸ்க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. இத்தொகையின் மொத்தமே ரூ. 12.93 கோடி ஆகும். மேற்கூறிய இனங்களின் வாயிலாகவும் வருகின்ற தீபாவளி பண்டிகையின் விற்பனை வாயிலாகவும் பெறக்கூடிய தொகையினை கொண்டும் தற்போது நிலுவையிலுள்ள தொகைகள் யாவும் அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் உரிய நேரத்தில் பட்டுவாடா அளிக்கப்படும்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் துணிகளுக்கு அவ்வப்போது பணம் பட்டுவாடா அளித்து வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி பாதிக்காத வண்ணம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது அவ்வப்போது கொள்முதல் நிலுவையின் ஒரு பகுதியினை பட்டுவாடா செய்து வருகிறது. எனவே நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் அன்றாட பணிகளுக்கு குந்தகமின்றி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் காலந்தோறும் பணம் பட்டுவாடா அளித்து வருகிறது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கங்களுக்கு எல்லாம் தாய்ச் சங்கமாக இருக்கிற கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தேசிய விவசாய மற்றும் கிராம வளர்ச்சி வங்கியிலிருந்து ரூ. 90 கோடி நிதியுதவி பெற்றுதான் சங்கம் நடத்து வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக ஆண்டுதோறும் இதே பிரச்சினை இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பொங்கல் வரும் போதெல்லாம் சங்கங்களில் இருப்பவர்களுக்கு எல்லாம் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை, துணிகள் தேங்கியிருக்கின்றன என்று ஆண்டுதோறும் சொல்கிறார்கள். ஆகவே இந்த நிதியை உயர்த்தித் தருவதற்கு மேற்படி வங்கியிடம் கேட்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து தெளிவான அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே 23.20 கோடிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. தரவேண்டியது 13.38 கோடிகள்தான், வர வேண்டியது 12.93 கோடிகளாகும், ஆதலால் அவசியம் இல்லை

என்ற காரணத்தால் கேட்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு கொள்முதல் செய்வதற்காகவும், பணம் பட்டுவாடா செய்வதற்காகவும், மத்திய அரசு ஜனதா மானியத் தொகையாக 2 கோடியே 82 லட்சமும் வழங்கியிருக்கிறது என்றும் மேலும் ரூ. 3 கோடியே 18 லட்சமும் அதோடு ரிபேட் தொகையாக 6 கோடியே 93 லட்சமும் ஆக மொத்தம் 12 கோடியே 93 லட்சமும், ஆக இந்தப் பணத்தை வைத்துக் கொண்டுதான் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அங்கே நடைபெறும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அப்படியானால், மாநில அரசு எவ்வளவு தொகை வழங்குகிறது, அதிலே மாநில அரசினுடைய பங்கு என்ன என்பதையும், எவ்வளவு பணத்தை மத்திய அரசு ஒதுக்குகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தளநாயகி, புரட்சித் தலைவி அவர்களை நம்பியவர்கள் எவரும் கெட்டதில்லை, நம்பாமல்தான் பலர் கெட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அருமை நண்பருக்கு நான் நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவி ஆட்சிப் பீடத்திற்கு வந்த சில நாட்களுக்குள்ளாகவே, 5 கோடி ரூபாயை ஒதுக்கித்தந்து இருக்கிறார்கள். இன்னும் ஒதுக்கித் தரவேண்டிய தொகை ரூபாய் 6.93 கோடிகளாகும். மத்திய அரசின் வாயிலாக 2.2 கோடி ரூபாய் ஒதுக்கீடு வந்தது. இன்னும் ஒதுக்க வேண்டிய தொகை 3.18 கோடிகளாகும். ஆதலால், 3.18 கோடிகளைக் குறித்து, நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள், கடிதங்களை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதோடு இல்லாமல், தீபாவளியை முன்னிட்டு, விற்பனை மூலமாக வருகிற லாபத்தை ஈட்டி, ஒட்டுமொத்தமாக தொழிலாளர் நண்பர்களுக்குத் தருவோம் என்பதையும் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். எந்த விதத்திலும் ஏழைகள் இந்த அரசில் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை அருமை நண்பர் அவர்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 4. அறிக்கை அளித்தல்.

### பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.



திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்:

1. 1984–85 மற்றும் 1985–86 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகளில் (சிவில்) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக்கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

2. 1984–85 மற்றும் 1985–86 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகளில் (சிவில்) கல்வித் துறை தொடர்பான பத்திகள் குறித்த பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

3. 1982–83 மற்றும் 1983–84 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகளில் (சிவில்) ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான பத்திகள் குறித்த பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984–85 மற்றும் 1985–86 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வருவாய் வரவினங்கள்) பொதுப் பணித்துறை, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, தொழில் துறை மற்றும் நிதித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

5. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1982–83 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வருவாய் வரவினங்கள்) பொதுக் கணக்குக் குழு அளித்த இருபத்தொன்பதாவது அறிக்கை (எட்டாவது பேரவையில்) சில துறைகள் பற்றிய பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் ஐந்தாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

6. 1982–83 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்) உள் துறை குறித்து பொதுக் கணகுக் குழு அளித்த ஐம்பத்தைந்

தாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் ஆறாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

7. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கைகள் (வருவாய் வரவினங்கள்) குறித்து பொதுக் கணக்குக் குழு அளித்த இருபத்தியேழாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் உள் துறை பற்றிய பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் ஏழாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

8. 1981–82 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் கல்வித் துறை தொடர்பான பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கை (எட்டாவது பேரவை) மற்றும் இருபத்தி ஒன்றாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை) யில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் எட்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10-10

## 5. மானியக் கோரிக்கைகள், 1991-92 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28. சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 367,53,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று கோருகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 311, திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஊரக வளர்ச்சியில் ஒன்றியத்திற்கு ரூ. 1 கோடி திட்டத்தில் ராதாபுரத்தைச் சேர்க்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 367,53,87,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 309, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஊராட்சிகள் மின் விளக்கு, மின் கட்டணத்தை அரசு ஏற்று கட்ட வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 367,53,87,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 295, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 367,53,87,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1991 செப்டம்பர் 17

ஆ கோரிக்கை எண் 50. நகராட்சி நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 50. நகராட்சி நிருவாகம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 43,43,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் : வெட்டுத் தீர்மானம் எண் 323, திரு. மா. சுந்தரதாஸ்.

THIRU M. SUNDARADOSS : Hon. Speaker Sir, to discuss the need to provide employment to the widows of former employees at Madurai Municipality I move—

"That the allotment of Rs. 43,43,54,000 under demand No. 50—Municipal Administration be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : வெட்டுத் தீர்மானம் எண் 315, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,43,54,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 313, டாக்டர் தே. குமாரதாஸ்.



1991 செப்டம்பர் 17]

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

"நகராட்சி நிருவாகம் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,43,54,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி** சட்டமன்ற பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைச் சொன்ன பிறகு என் பதிலை அளிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு.ச. அழகிரி.

*திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி என்னுடைய கருத்துக்களை நான் இங்கே தெரிவிப்பதற்கு சொல்வதற்கு, தாங்கள் அனுமதி அளித்ததற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 1 கோடி என்கிற தமிழக அரசினுடைய அந்தத் திட்டம் பொது மக்களிடையே மிகுந்த

---

**577—653 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 மற்றும் 2 ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

வரவேற்பினைப் பெற்றிருக்கிறது. குறிப்பாக கிராமப் புறங்களிலே இருக்கின்ற மக்கள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகத் தான் அரசினுடைய திட்டங்களை அடைகிறார்கள்.

முற்பகல் 10-15

எனவே, அரசு ஒரு கோடி ரூபாயை ஊராட்சி ஒன்டியங்களுக்கு ஒதுக்கி இருப்பது கிராமப்புற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அது பெரிய அளவில் பயன்படும் என்பதை இங்கே கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் கடந்த காலங்களில் நிதி பற்றாக் குறையினால் மிகுந்த சிரமத்திலே இருந்தன. பல்வேறு திட்டங்களை நாம் அறிவிப்போமே ஒழிய அதனை செயல்படுத்துவதற்கு நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால், ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பெருத்த சிரமங்கள் இருந்தன. ஆனால் இன்றைக்கு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதன் மூலமாக சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பலன் அடைவதற்கு மிகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதைப் பற்றி நாம் சொல்லுகிறபோது இருக்கிற நடைமுறைப் பிரச்சினைகளையும் இங்கே எடுத்துச் சொல்வதற்கு நான் விரும்புகிறேன். உதாரணமாக நம்முடைய நிர்வாக அமைப்பு என்பது மிகவும் சிரமத்தைக் கொடுக்கிற ஒன்றாக இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே இருக்கிற கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 63 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதேபோல புவனகிரியில் இருக்கிற ஊராட்சி ஒன்றியத்திற்கு 60 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. காட்டுமன்னார்குடியிலிருக்கிற ஊராட்சி ஒன்றியத்திற்கு 62 ஊராட்சிகள் இருக்கின்றன. எனவே இவ்வளவு பெரிய அளவிலே ஊராட்சிகளை வைத்துக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்களால் செயல்பட முடியாத ஒரு சிரமம் இருக்கிறது. எனவே 40 ஊராட்சி மன்றங்களுக்கு மேற்படாமல், ஊராட்சிகளை பிரிக்கின்ற ஒரு திட்டத்தை அரசு கொண்டு வருமேயானால் நடைமுறைப் பிரச்சினைகள் இருக்காது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். உதாரணமாக 40க்கும் மேற்பட்ட ஊராட்சிகளையெல்லாம் பிரித்து அதனை தனி ஊராட்சி ஒன்றியங்களாக அமைக்க அரசு முன்வரவேண்டும். குறிப்பாக என்னுடைய பகுதியிலே திருமுட்டம் பகுதியை தனி ஊராட்சி ஒன்றியமாக மாற்றி கீரப்பாளையத்திலிருந்தும், புவனகிரியிலிருந்தும், காட்டுமன்னார்குடியிலிருந்தும் 40க்கும் மேற்பட்டிருக்கிற அந்த ஊராட்சிகளையெல்லாம் பிரித்து ஒரு புதிய ஊராட்சி ஒன்றியத்தை திருமுட்டம் பகுதியிலே அமைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



அதே போல ஊராட்சிகளுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும்
இருக்கிற மிகப் பெரிய பிரச்சினை போதுமான நிதி ஆதாரம்
இல்லாத பிரச்சினைதான். இன்றைக்கு வழங்கப்படுகிற ஒரு
கோடி ரூபாய் என்பது வளர்ச்சித் திட்டங்களுக்காகப் பயன்படுத்
தப்படும். ஆனால் ஊராட்சிகளையும் ஊராட்சி ஒன்றியங்களை
யும் நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான நிதி ஆதாரங்கள்
அவர்களிடம் இல்லை. எனவே இன்றைக்கு நாம் கேளிக்கை
வரியை வசூல் செய்கிறோம். கேளிக்கை வரியிலே 40 சதவீதம்
அரசுக்கும், 30 சதவீதம் ஊராட்சி ஒன்றியத்திற்கும், 30 சதவீதம்
ஊராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது. அதிலே ஒரு பெரிய திருத்
தத்தைக் கொண்டு வந்து அரசுக்கு அளிக்காமல் 50:50 சதவீத
மாக ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஊராட்சிகளுக்குமே அந்த நிதி
யை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல தலவரி மேல்வரி என்கிற ஒரு வரியை நாம்
அறிவித்திருக்கிறோம். அது ரூபாய் 2.50-க்கு மேல் மிகைப்
படாமல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவைகள் போது
மானதாக இருக்கவில்லை. எனவே இந்த தலவரி மேல் வரியை
அதாவது சர்சார்ஜ் 5 ரூபாய் அளவிற்கு உயர்த்துவதற்கு ஊராட்சி
ஒன்றியங்களுக்கும் அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று
இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். இவை
களை நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால்
பல்வேறு ஊராட்சி மன்றங்கள் தெருவிளக்குகளுக்கான மின்சாரக்
கட்டணத்தைக் கட்டுவதற்குக் கூட அந்த ஊராட்சி மன்றங்
களிடம் போதுமான நிதி ஆதாரங்கள் இல்லை. எனவே ஊராட்சி
மன்றங்களில் தெருவிளக்குகள் எரிகின்ற போது அதற்கான
மின்சார கட்டணத்தைக் கூட கட்ட முடியாமல் அந்த ஊராட்சி
மன்ற தலைவர்கள் சிரமப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம்.
எனவே ஊராட்சி மன்றங்களுடைய ஊராட்சி ஒன்றியங்களுடைய
நிதிநிலைமை அதிகரிப்பதற்குண்டான வழிகளை உங்களுடைய
மேலான கவனத்திற்குச் கொண்டு வருகிறேன்.

அதைப் போல நிர்வாக சீர்திருத்தத்தை நாம் செய்ய
வேண்டும். இன்றைக்கு கோட்ட அளவிலே ஒரு
அலுவலகத்தை நாம் வைத்திருக்கிறோம். ஊராட்சி
ஒன்றிய அலுவலகமும் இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக
கோட்ட அளவிலே அலுவலகம் இருக்கிறது. இந்த அலுவலகத்தி
லுடைய அதிகாரங்கள் என்ன? அங்கேயிருக்கிற அதிகாரிகளுக்கு
வழங்கப்பட்டிருக்கிற அதிகார வரம்புகள் என்ன என்பதை நான்
தெரிந்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் ஊராட்சி
களுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும்தான் அதிகாரம்
இருக்கிறதே ஒழிய கோட்ட அளவில் இருக்கிற அலுவலகத்திற்கு

எந்தவிதமான அதிகாரமும் இல்லை. இன்னும் சொல்லப்
போனால் ரெட்டேப்பிசம் என்று சொல்லக் கூடிய சிகப்பு நாடா
முறைதான் கோட்ட அளவில் அதிகாரிகளால் இதுநாள் வரை
கடைபிடிக்கப்படுகிறது. எனவே அரசு நேரிடையாக ஊராட்சி
கள் ஊராட்சி ஒன்றியங்கள், அதற்கு அடுத்தபடியாக மாவட்ட
ஆட்சித் தலைமை என்கிற நிலைமையை நாம் மேற்கொள்வோ
மானால் கோட்ட அளவில் இந்த அலுவலகம் தேவையில்லை
என்பதை என்னுடைய கடந்த 5 ஆண்டுகால அனுபவத்தை
வைத்து நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

நான் ஐந்தாண்டு காலம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய
தலைவராக இருந்தபோது எனக்குத் தெரிந்தவரையில்
கோட்ட வளர்ச்சி அலுவலகம் என்பது எல்லா பைல்களையும்
அவர்கள் எடுத்துச் சென்று ஒருநாள் வைத்திருந்து
அதன் பிறகு, மாவட்ட ஆட்சி மன்றத்திற்கு போகின்ற அந்த
வேலையைச் செய்கிறார்களே ஒழிய அங்கே அவர்களுக்கு எந்த
விதமான அதிகார வரம்பும் கிடையாது. எனவே அந்த அலுவல
கத்தை எடுத்துவிட்டு அவர்களுக்கு ஏதாவது வேறு வேலை
கொடுக்கலாம் என்பதை அரசினுடைய மேலான கவனத்திற்கு
கொண்டுவர ஆசைப்படுகிறேன். அப்படிச் செய்வதன் மூல
மாக ஏராளமான நிர்வாகச் செலவுகள் குறைக்கப்படும். செலவு
கள் குறைவதால் மேலும் சமூக வளர்ச்சித் திட்டங்களை இங்கே
கொண்டுவரலாம் என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.
அதேபோல பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை அரசு இன்று
சமுதாய வளர்ச்சி திட்டங்களுக்காக அறிவித்திருக்கிறது. இவைகள்
எல்லாம் ஏராளமான நிதிகள் தான். ஆனால் இந்த
நிதியாதாரங்கள் கிராமப்புற மக்களுடைய கைகளுக்கு
சென்றடைகின்றபோது எந்த அளவுக்கு அவை சென்றடைகின்றன,
எவ்வளவு விகிதாச்சாரம் கிராமப்புற மக்களுக்குச் செல்கின்றது
என்பதை அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்றைக்கு
ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் கொடுக்
கிறோம். ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திலே நாம் பணம்
கொடுக்கிறோம். ஆனால், இவைகள் எல்லாம் மக்களுக்குச்
சென்றடைகின்றனவா என்பதை ஆராய வேண்டும். அடுத்த
பிறகு மதிப்பீடு செய்வதற்கான ஒரு முயற்சியை நம்முடைய
அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கோடிட்டுக்
காட்ட விரும்புகிறேன். உதாரணமாக 50,000 வீடுகளை
இன்றைக்கு நாம் ஆதிதிராவிட மக்களுக்காக கட்டித்தருகிறோம்.
நான் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். கட்டிக் கொடுத்
திருக்கின்ற எந்த தொகுப்பு வீடுகளையாவது திறந்திருக்கிறோமா



திறப்பு விழா நிகழ்ச்சியை நம்மால் செய்ய முடிகின்றதா என்
பதை அரசு அதிகாரிகள் கவனித்துப் பார்க்க வேண்டும். ஏனென்
றால் மிகவும் குறைந்த மதிப்பீட்டில் அந்த தொகுப்பு வீடுகள்
கட்டப்படுகின்றன. கட்டி முடிக்கப்பட்ட பிறகு அவைகள்
கீரல் விழுந்து விடுகின்றன; அல்லது விழுந்து விடுகின்றன; அல்லது
ஆதிதிராவிட மக்கள் குடியிருக்க முடியாத அளவிற்கு அவைகள்
சீர்கெட்டுப்போய்விடுகின்றன. எனவே 50,000 வீடுகள் என்ற
இலக்கிற்குப் பதிலாக 30,000 வீடுகள் என்று இலக்கை நாம்
குறைத்துக் கொண்டு தரமான வீடுகளைக் கட்டித் தருவதற்
கான நல்ல திட்டத்தை நாம் மேற்கொள்வோமேயானால் அது
ஆதிதிராவிட மக்களுக்கு பயனளிக்கக்கூடியதாக இருக்கும்
என்பதை என்னுடைய அனுபவத்திலே நான் சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

அதே போல சமூகக் காடுகளுக்காக 25 சதவீதம் தொகையை
நாம் செலவழிக்கின்றோம். ஜவஹர் வேலை வாய்ப்புத்
திட்டத்தில் மாவட்டத்திற்கு கொடுக்கப்படுகின்ற 20 விழுக்
காடுகளில் 25 விழுக்காடு தொகையை சமூக காடு
களுக்காக நாம் செலவழிக்கின்றோம். தயவுசெய்து நான் கேட்டுக்
கொள்ள ஆசைப்படுகிறேன். சமூகக் காடுகள் ஊராட்சி ஒன்றியங்
களால் அமல்படுத்தப்பட்டு இருக்கின்ற பகுதியில் எங்காவது
10 மரங்களைக் காட்ட முடியுமா என்பதை அதிகாரிகளிடம் நான்
கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் 5 ஆண்டுக்
காலம் நாங்கள் அந்த பொறுப்பிலே இருந்த போது சமூகக்
காடுகளைத் தேடி தேடி அலைந்திருக்கிறோம். அந்தப் பகுதி
யிலே சமூகக் காடுகளை நம்மால் பார்க்கவே முடியாது. ஏனென்
றால் அதற்கான நடைமுறைகள் அப்படி இருக்கின்றன. ஒரு
கிராமத்திலே சமூகக் காடுகள் திட்டம் என்று வைத்திருப்பார்கள்.
அதற்குத் தண்ணீர் ஊற்றுவதற்கு ஒரு ஆளை வைத்திருப்பார்கள்.
50 ஏக்கர் வரை ஒரு தனி ஆள் தண்ணீர் ஊற்றிட வேண்டு
மென்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 50 ஏக்கரில்
நடப்பட்டிருக்கின்ற சமூகக் காடுகளுக்கு ஒரு நபர் தண்ணீர்
ஊற்ற முடியுமா? அப்படி அந்த நபர் தண்ணீர் ஊற்றினால்
அந்த மரங்கள் வளருமா என்பதை தயவு செய்து எண்ணிப்
பார்க்க வேண்டும். சாலை ஓரங்களில் நடுகின்ற
செடிகளுக்கு 5 கிலோ மீட்டர் தூர பரப்பு ஒருவருக்கு ஒதுக்கப்
படுகின்றது. 5 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று அவர்
தண்ணீர் ஊற்ற வேண்டும். அவரால் ஊற்றமுடியுமா என்ற
நடைமுறை ரீதியான பிரச்சினைகளை நாம் பார்க்க வேண்டும்.
அன்றைக்கு அசோகர் காலத்திலே மரங்களை நட்டார்கள். அரசு
அதற்கு பணம் ஒதுக்கவில்லை. ஆனால் இன்றைக்கு மரங்
களை வளர்ப்பதற்கு 25 சதவீதம் பணத்தை நாம்
வழங்குகின்றோம். ஆனால் மரங்கள்வளருவதில்லை என்பது
தான் இங்கே இருக்கின்ற பிரச்சினை.

[1991 செப்டம்பர் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அவையில் உட்கார்ந்து ஓர் இருக்கையிலிருந்து இன்னோர் இருக்கைக்கு, எட்டி நின்று பேசிக்கொண்டிருப்பதோ, உரக்க குரல் கொடுத்துக் கொண்டிருப்பதோ நல்லது அல்ல. அவையில் அமைதி காக்க வேண்டும். இடப்புறம் உள்ள லாபியில் நிற்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கு நின்று கொண்டு உரத்த குரலிலே பேசிக் கொண்டிருக்கக் கூடாது என்பது அறிவுறுத்தப் படுகிறது. திரு. ச. அழகிரி.

முற்பகல் 10-25

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, எனவே இந்த சமூகக் காடுகள் திட்டத்தை அரசு அதிகாரிகள் ஒரு தொலைநோக்கோடு பார்த்து மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏராளமான பணம் சமூக காடுகளுக்கு நாம் ஒதுக்கியிருக்கிறோம் ஆனால் அந்த சமூக காடுகளின் மூலம் இந்த 10 ஆண்டுக் காலத்தில் எவ்வளவு மரங்கள் வளர்க்கப்பட்டிருக்கின்றன என்ற அந்த புள்ளிவிவரத்தையும், எவ்வளவு மரங்கள் உயிரோடு இருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தையும் அரசுத் துறை அதிகாரிகள் இந்த அவைக்கு வைக்க முன்வருவார்களானால் நாம் ஒதுக்கி இருக்கிற பணம் எந்த அளவுக்கு பிரயோசனமாக இருந்திருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அதேபோல் இன்றைக்கு நமக்கு இருக்கிற மிகப்பெரிய பிரச்சினை குடிநீர்ப் பிரச்சினை. கிராமப்புறங்களில் குடிநீர் ஆதாரத்தை நாம் செம்மையாக பழுதுநீக்கி மக்களுக்கு குடிநீர் கொடுப்போமானால் இந்த அரசின் மீது மக்கள் ஏராளமான நம்பிக்கையை வைப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நம்மிடம் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட கை பம்புகள் இருக்கின்றன. ஆனால் அந்த கை பம்புகள் எல்லாம் 40 அடி ஆழத்திற்கு மேல் தண்ணீர் இழுக்கக்கூடிய திறன் படைத்தவை அல்ல. கோடைக் காலத்தில், வறட்சிக் காலத்தில் தண்ணீருடைய அளவு குறைய குறைய இந்த கை பம்புகள் எல்லாம் பலன் அற்றுப் போய்விடுகின்றன. எனவே கை பம்புகளை நீக்கி மார்க்—2 என்ற விசை பம்புகளை நாம் தமிழகம் முழுவதும் நிர்மாணித்தால் குடிநீர் பிரச்சினையை நம்மால் ஓரளவுக்குத் தீர்க்க முடியும்.

இன்றைக்கு 100 பம்புகளுக்கு ஒரு பழுதுபார்ப்பாளர் என்ற முறையில் நாம் நியமித்து இருக்கிறோம். ஆனால் 100 பம்புகளை ஒரு பழுதுபார்ப்பாளரே பழுதுபார்க்க முடியாது. எனவே



1991 செப்டம்பர் 17] [திரு. ச. அழகிரி]

அவைகளைக் குறைத்து 50 பம்புகளுக்கு ஒரு பழுதுபார்ப்பாளர் என்ற விதத்தில் நியமித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தால் ஓரளவுக்கு தண்ணீர் பிரச்சினையைப் நம்மால் தீர்க்க முடியும் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இதைவிட ஒரு மிகப்பெரிய பிரச்சினை. இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் நாம் ஒதுக்குகிறோம். முன்பு மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் இதுபோன்ற ஒரு தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது அந்த தொகையை செலவழித்து நிறைய சாலைகளை செப்பனிட்டார்கள். அப்படி செப்பனிடப்பட்ட சாலைகளை பராமரிப்பதற்கு ஒரு நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் இன்றைக்கு அந்தச் சாலைகள் எல்லாம் இல்லாமல் போய்விட்டன. அவைதாங்கள் கவனத்தில் கொண்டு புதிய சாலைகளை நாம் அமைக்கிற போது அந்த சாலைகளை பராமரிப்பதற்கு ஒரு திட்டத்தை அரசு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு தன்னிறைவுத் திட்டத்தில் போடப்பட்ட சாலைகள் எல்லாம் இன்றைக்கு முற்றிலுமாக இல்லை. எனவே இப்போது நாம் போடுகின்ற சாலைகளுக்கு ஒரு பராமரிப்புத் தொகையை அதற்காக ஒரு தலைப்பின் கீழ் ஒதுக்கி ஒரு திட்டத்தை நாம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இந்த சாலைகளை பராமரிக்க முடியும்.

இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கிற மிகப்பெரிய பிரச்சினை, நெடுஞ்சாலைத் துறையினுடைய கட்டுப்பாட்டின் கீழ் சில சாலைகள் இருக்கின்றன; கிராமச்சாலை துறையின் கட்டுப்பாட்டின் கீழ் சில சாலைகள் இருக்கின்றன; ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சில சாலைகள் இருக்கின்றன. ஆனால் இந்த மூன்று துறையின் கட்டுப்பாட்டின் கீழும் இல்லாமல்; ஏராளமான சாலைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் 'அன்—கிளாசிபைடு' ரோடுகள் என்று சொல்லுகிறார்கள். எனவே அந்தச் சாலைகளை எடுத்துக் கொள்வதற்கு எந்தத் துறையும் முன்வருவதில்லை. அவைகள் எல்லாம் அனாதைக் குழந்தைகளைப் போல இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்றன. ஏன் என்றால் அந்தச் சாலைகளை யாராவது எடுத்துக்கொண்டால் அதைச் செப்பனிட வேண்டிய பொறுப்பு அந்தத் துறைக்கு வந்துவிடும் என்ற காரணத்தால் நிதி இருக்காது என்ற காரணத்தால் இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் இருக்கிற சாலைகளை விட 'அன் கிளாசிபைடு' ரோடுகள் ஏராளமாக இருக்கின்றன. எனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை

[திரு. ச. அழகிரி] [1991 செப்டம்பர் 17

அமைச்சர் அவர்கள் அவசரமாக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து இந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 'அன்-கிளாசிபைடு' ரோடுகள் இருக்கக்கூடாது; அவைகள் எல்லாம் ஒன்று நெடுஞ்சாலை எடுத்துக் கொள்ள வேண்டும்; அல்லது கிராமச் சாலைகள் துறை எடுத்துக் கொள்ள வேண்டும் அல்லது ஊராட்சி ஒன்றியங்களாவது எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் கிராமப்புறங்களில் சென்று அதிகாரிகளைப் பார்த்து இந்தச் சாலைகளைப் போட்டால் என்ன என்று கேட்டால் இந்தச் சாலை நம்முடைய பொறுப்பில் இல்லை என்று அவர்கள் கூறிவிடுகிறார்கள். எனவே அவர்கள் பொறுப்பில் இல்லாத சாலையை போடுவதற்கு அவரை நம்மால் நிர்பந்திக்க முடியவில்லை. எனவே அரசு இந்தத் திட்டத்தை உடனடியாக அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து மயான சாலைகள். கிராமப்புறங்களில் இருக்கிற மிகப்பெரிய பிரச்சினை இதுதான். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரமாக முடிக்கவும்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கிற அரிசன மக்களுக்கு மயான சாலைகள் அமைப்பதில் ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. ஏன் என்றால் கிராமப்புறங்களில் வயல் வழியாகத் தான் அரிசன மக்கள் பிணங்களைத் தூக்கிச் செல்லவேண்டிய ஒரு நிர்பந்தம் இருக்கிறது. அப்படிச் செல்லுகிறபோது, பயிர் காலமாக இருந்தால் அந்த வழியாக செல்வதற்கு அவர்களை ஜாதி இந்துக்கள் அனுமதிப்பது இல்லை. எனவே அந்தக் கொடுமையை அகற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கிற இந்த அரசு ஒரு புதிய அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து எந்த எந்த அரிசன காலனிக்கு மயான சாலைகள் இல்லையோ அவைகளுக்காக அந்த நிலங்களை எல்லாம் உடனடியாக ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக ஆர்ஜிதம் செய்து இந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்திலே அதை நாம் நிவர்த்தி செய்து கொடுத்தால் அந்த மக்களுக்கு அது ஒரு பெரிய நன்மையாக இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 10.30

இவ்வளவு தொகையை நாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளித்துவிட்டு அதனை மேற்பார்வையிடுவதற்கு, அந்தத் திட்டங்கள் சரியாக செயல்படுகிறதா என்பதைப் பார்ப்பதற்கு, உள்ளாட்சி



1991 செப்டம்பர் 17] [திரு. ச. அழகிரி]

துறையில் இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் இருப்பது மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது. நாங்களெல்லாம் உள்ளாட்சி மன்றங்களினுடைய தலைவர்களாக இருந்தபோது அங்கே நிதி ஆதாரமே இல்லை. இன்றைக்கு அங்கே நாங்களெல்லாம் இல்லை; அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, அதிகாரிகளுக்கு மட்டுமே இதைப்போன்ற அரிய சந்தர்ப்பங்களெல்லாம் கிடைக்கிறதே என்று நாங்கள் வருந்த வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்தை மேற்பார்வையிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை நீங்கள் அங்கே நியமிக்க வேண்டும். அவர்களுக்கு முழுமையான அதிகாரத்தைத் தரவேண்டும். இல்லையென்றால் அந்தப் பணம் சிதறுண்டு போகும் என்பதனை நான் இங்கே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் பேசுவதற்கு முன்பு என்னிடம் ஒரு குறிப்புக் கொடுத்தார்கள். விளவன்கோட்டிலுள்ள முந்துறை ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள வேலைவாய்ப்புகளையெல்லாம் கொடுப்பதற்கு அங்கேயிருக்கிற பி.டி.ஓ., 20 சதவீதம் கேட்கிறார்; கொடுக்க மறுத்தால் வேலைகளைத் தர மறுக்கிறார் என்று அவர்கள் சொன்னார்கள். ஆதாரபூர்வமான செய்தி உங்களிடம் இருக்கிறதா என்று கேட்டேன். இருக்கிறது என்றும் சொன்னார்கள். எனக்கு அதிலே பெரிய ஆச்சரியம் என்னவென்றால் 20 சதவீதம் வாங்கிக்கொண்டு எப்படி அவரால் இந்த வேலைகளைத் தர முடிகிறது என்று தெரியவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அரசு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுத்துமூலமாக தகுந்த ஆதாரங்கள் கொடுக்கப்படுமாயின், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களைத் தனியாக அழைத்துக் கேட்டால் நான் அவரிடம் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஏனென்றால், சட்டமன்றத்திலே அவைகளைக் கொடுப்பது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நீங்கள் பேசுவது அவையிலே ரெக்கார்டு ஆகிறது. சட்டமன்றத்திலே பேசிவிட்டீர்களென்றால், அவைத் தலைவரிடம் கொடுத்துத் தான் ஆகவேண்டும் என்று விதி இருக்கிறது.

திரு. ச. அழகிரி : இப்போதே இருக்கிறது. வேண்டுமானால், அமைச்சர் அவர்கள் கேட்கிறார் என்றால் கொடுத்து விடுகிறேன். கையிலேயே வைத்திருக்கிறேன். நான் கொடுத்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரிடத்திலே தனியாகக் கொடுப்பது என்பது வேறு. நீங்கள் இங்கே ஊப்பியிருக்கும்போது, அவைத் தலைவரிடம் கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது.

திரு. ச. அழகிரி : என்னுடைய கையிலேயே இருக்கிறது. வேண்டுமானால் இப்போதே தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : ஆனரபிள் ஸ்பீக்கர் சார், ஒரு சிறிய சப்மிஷன். இப்போது ஆதாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஒரு பி.டி.ஓ. 20 சதவீதம் கமிஷன் வேண்டுமென்று கேட்டிருந்தால் அதற்கு எப்படி ஆதாரம் கொடுக்க முடியும்? எழுத்து மூலமாகக் கேட்டு இருக்கமாட்டார். இதற்கு எந்த ஆதாரமும் தர முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வது, இந்தமாதிரி ஒரு கேஸ் இருக்கிறது, அதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் குறிப்பிட்டுச் சொல்கிற காரணத்தால் அமைச்சர் அவர்கள் ஆதாரம் கேட்கிறாரே தவிர, ஜெனரலாக இந்த மாதிரிதான் நடக்கிறது என்கிற நடைமுறைகளைப் பேசிவிட்டுப் போனால் அது தவறு இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : குறிப்பாக, ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டை ஒரு பி.டி.ஓ. மேலே சொல்கிறபோது, ஒரு கமிஷனர் மேலே சொல்கிறபோது, அதை நீங்கள் Face value-ஆக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தான் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்கிறபோது ஆதாரம் கொடுக்கவேண்டுமென்றுதான் அமைச்சர் சொல்கிறார். அதற்கு ஆதாரம் கொடுத்துதானே ஆகவேண்டும்?



ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடு) குறிப்பிட்டு நீங்கள் பேசுகிறபோது ஆதாரம் இருந்தால்தான் பேசவேண்டும். ஆதாரம் இருக்காது என்று நீங்களே சொல்கிறபோது அதைப் பற்றிப் பேசக்கூடாது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. பூத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசுகிறபோது ஆதாரம் இருக்கிறது என்று சொல்லி பேசிய காரணத்தால்தான் அமைச்சர் அவர்கள் அந்த ஆதாரத்தைக் கொடுங்கள் என்று கேட்டார்கள். மேலும் ஓர் உறுப்பினர் இங்கே பேசுகிறபோது யார்மீது குற்றச்சாட்டு சொன்னாலும்கூட, உறுப்பினர்கள், ஒன்று ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும் அல்லது அந்த ஆதாரத்தை நாளைய தினம் விசாரணைக்கு வருகிறபோது பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற வகையிலேதான் சட்டமன்றத்திலே முறை நடந்துகொண்டிருக்கிறது. காரணம், ஆதாரமில்லாமல் யாரும் பாதிக்கப் பட்டுவிடக் கூடாது; அதற்கும் பாதுகாப்பு வேண்டுமென்ற காரணத்தால்தான். எனவே உறுப்பினர்கள் ஆதாரத்தைக் கொடுப்பதுதான் சரியாக இருக்கும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குற்றச்சாட்டை உறுப்பினர் அவர்கள் நேரடியாகக்கூடச் சொல்லவில்லை. இன்னொரு உறுப்பினர் சொன்னார் என்றுதான் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி டெவலப்மெண்ட் கவுன்சிலிலே தெளிவாக நானே பேசி இருக்கிறேன். There is record in the District Development Council. வேலப்பன் என்கிற பி.டி. ஓ. இப்படி வாங்கிக்கொண்டு இருக்கிறார் என்பதை நான் டைரக்டரிடம் சொல்லியிருக்கிறேன். அந்த அதிகாரியும் இங்கே இருக்கிறார்கள். நான் டெவலப்மெண்ட் கவுன்சிலில் சொல்லியிருக்கிறேன். நான் பேசவேண்டிய நேரத்தில் எல்லாவற்றையும் பேச நேரமில்லாத காரணத்தால் உறுப்பினர் மூலம் சொல்லியிருக்கிறேன். நிச்சயமாக, நான் ஆட்சியின் மீது குற்றம் சொல்லவில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ், நீங்கள் விளக்கம் சொல்வதாக நினைத்துக்கொண்டு இன்னொரு குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். இந்த நாட்டில் குறிப்பிட்டு ஒரு பெயரைச் சொல்லி, ஒருவர் மீது

குற்றச்சாட்டைச் சொல்லவேண்டுமானால், முன்கூட்டியே நீங்கள் அவைத் தலைவருக்கு அந்த ஆதாரத்தைக் கொடுத்து விட்டு, அதைப்பற்றிப் பின்னர் அவையிலே எழுப்புவதுதான், அவையிலே கடந்த காலங்களில் நாம் பின்பற்றி வந்திருக்கிற முறையான மரபுகளாகும். எனவே, எடுத்த எடுப்பிலேயே எழுந்து கொண்டு ஒவ்வொருவரும் ஒரு அதிகாரியின் பெயரைச் சொல்லி, குற்றச்சாட்டுக்களைச் சொல்லிக்கொண்டு போவதற்கு விதிகளிலே வழியில்லை.

விதி 93-இல் No personal allegation of a defamatory or incriminatory nature shall be made by a member against any member or any official unless the member has given previous intimation, in writing to the Speaker என்று இருக்கிறது.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை ஏதோ எங்களுக்கு மட்டும் இருக்கிற பிரச்சினையல்ல. இங்கேயிருக்கிற எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் உள்ள பிரச்சினைதான். ஏனென்றால் எவ்வளவு திறமையாக நம்முடைய அரசினுடைய கொள்கைகளை நாம் நிறைவேற்றினாலும் கூட, அதிகார வர்க்கத்தினர் என்பவர்கள் அப்படியேதான் இருக்கிறார்கள். அவர்கள் பல ஆண்டுகளாக........

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், ஒரு குறிப்பிட்ட அதிகாரி முறைகேடாக நடந்து கொள்கிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள், அதுபற்றி எழுதி ஆதாரத்தோடு தருவீர்களேயானால், அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னார்கள். ஆகவே, அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு ஆளாகின்ற அத்தகைய அதிகாரிகளிடத்திலே, அவர் கையூட்டு கேட்டார். அதற்கு ஒருவரிடத்திலே கேட்டார் என்று அவர் எழுதிக் கொடுத்த புகார் உங்களிடத்தில் இருக்கும். அப்படிப்பட்ட ஆதாரங்களை வைத்துத்தான் விசாரிக்க முடியும். இல்லாவிட்டால், ''நீங்கள் கையூட்டு கேட்டீர்களா?'' என்றால், ஒரே வரியிலே, ''நான் ஒன்றும் அப்படிக் கேட்கவில்லை'' என்றுதான் பதில் வந்துவிடும். ஆகவே, விசாரிக்க வேண்டுமென்றால், அதில் பாதிக்கப்பட்டவர்களாவது எழுதித் தர வேண்டும். அதை வைத்துக்கொண்டு விசாரிக்கும்



பொழுதும், விசாரித்து அதிலே உண்மை இருக்குமேயானால் நடவடிக்கை எடுப்பேன் என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, ' ட விட்னஸ் ' வேண்டுமென்று இப்பொழுது சொல்லவில்லை. ஆகவே, இந்தக் குற்றச்சாட்டின் மீது விசாரிக்க வேண்டும், அதை மட்டும்தான் அவர்களிடத்திலே தனியாகவும் தரலாம்; அவருடைய அறையிலேயும் போய்த் தரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி அவர்கள், வேகமாக முடியுங்கள். இந்தப் பிரச்சினையோடு முடியுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சருடைய விளக்கத்தை ஏற்றுக் கொள்கிறேம்.

அடுத்ததாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசு அதிகாரிகளிடம் சென்று சில குறைகளைக் கேட்கிற பொழுது, அவர்கள் சங்கங்கள் என்ற பெயரால் கடுமையான சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

உதாரணமாக, புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய சில கோரிக்கைகளை வலியுறுத்திச் சென்றபொழுது அரசு ஊழியர்கள் பெரிய ஆர்ப்பாட்டமே செய்து, அந்தச் சட்டமன்ற உறுப்பினரைச் செயல்பட முடியாத ஒரு நிலைக்குக் கொண்டு வந்த நிலைமையை இந்த மன்றத்திற்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும், அதன்பிறகு அரசு அலுவலகங்களுக்குச் சென்று சில கேள்விகளையே கேட்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவைகளையும் அரசு கவனத்திற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திலே சென்ற ஆண்டு— எஸ்.சி., எஸ்.டி, மக்களுக்கு நாம் நபர்வாரியாகத்தான் பணத்தை ஒதுக்கினோம். அப்படி ஒதுக்குகிறபொழுது, சென்ற ஆண்டு 20 ரூபாய் 39 காசு ஒரு நபருக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு நாம் 19 ரூபாய் 18 காசுதான் ஒதுக்கியிருக்கிறோம்.

அதேபோல, ஓ. சி. மக்களுக்கு, சென்ற ஆண்டு அதற்கு 4 ரூபாய் 69 பைசா ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த முறை 3 ரூபாய் 83 பைசா ஒதுக்கியிருக்கிறோம்.

[திரு. ச. அழகிரி] [1991 செப்டம்பர் 17

எனவே, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திலே நிதி ஒதுக்கீட்டை நாம் குறைப்போமேயானால் வளர்ச்சித் திட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நான் தன்னிறைவுத் திட்டத்தை வைத்திருந்தாலும்கூட, வழக்கமாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தினுடைய நிதி ஒதுக்கீடு குறையக் கூடாது. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அந்த நிதி ஒதுக்கீடு குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதனை நான் இங்கே கூறிக்கொண்டு, இந்த விவாதத்தின் மீது பேசுவதற்கு எனக்கு அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி அவர்கள்.

*திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், கழகத்தின் கண்கண்ட தெய்வம், என்னுடைய குடும்பத்தின் குலதெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர், பொன்மனச்செல்வி, புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த குத்தாலம் தொகுதி மக்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைச் கூறி, என் உரையைத் தொடங்குகிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நகராட்சி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற மக்கள், நகர்ப்புற மக்களுடைய அன்றாட வாழ்க்கையின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் உள்ளாட்சி நிர்வாகம் முதலிடம் வகிக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அதேபோல் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் இந்தத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் அவர்கள், இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கக்கூடிய வகையில், இந்தத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்ற ஆவலோடு இருப்பதையும், அது மட்டுமல்லாமல் பல சீர்திருத்தங்களைச் செய்வதன் மூலம், இதய தெய்வம் புரட்சித் தலைவி



1991 செப்டம்பர் 17] [திரு. எஸ். ஆசைமணி]

யினுடைய திட்டங்களின் பயன்கள் கிராம மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதிலே குறியாக இருப்பதையும், அவர் இன்றையதினம் இந்த மாமன்றத்தின் முன் வைத்துள்ள மானியக் கோரிக்கைகள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

கடந்த இரண்டு ஆண்டுக் காலம் தமிழகத்தினுடைய இருண்ட காலம் என்று கூறுகின்ற அளவிற்கு, முந்தைய கட்சியினர் தெரு விளக்குகளைப் பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்படாமல் இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் சோலைவனமாகக் காட்சியளித்த தமிழகம் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் குடிநீர்ப் பஞ்சத்தால் பாலைவனமாக்கப்பட்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, தமிழகத்திலே கவ்வியிருந்த இருளைப் புதிய விளக்குகள் பொருத்தியதன் மூலம் விலக்கி, குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கி, மீண்டும் தமிழகத்தைச் சோலைவனமாக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிற இந்த அரசை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையிலே, ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரிலே வழங்கப்படும் என்று கூறியதை இன்றைய தினம் செய்து காட்டியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-40

சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று நாடகமாடியவர்களை மக்கள் மன்றத்தில் இருந்து அப்புறப்படுத்தியுள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், செய்வதையே சொல்வோம் என்பதையே தாரக மந்திரமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலமாக இன்றைய தினம் கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்களின் அன்றாடப் பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினை வெகுவாகத் தீர்க்கப்பட உள்ளது.

தெரு விளக்குகள், கிராமச் சாலைகள் மேம்பாடு போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட இருக்கின்றன. பல்வேறு தொடக்கப் பள்ளிகளில் வகுப்புகள் மரத்தடிகளிலே நடைபெறுகின்ற நிலைமை மாறி, புதிய கட்டிடங்கள் உருவாக இருக்கின்றன. அதேபோல், சத்துணவு மையங்களுக்குத் தேவையான பாதுகாப்பான கட்டிடங்கள் உருவாக இருக்கின்றன. பாசன ஏரிகள் புதுப்பிக்கப்பட உள்ளன. கிராம மக்கள் மாலைப் பொழுதை களிப்புடன் கழிக்க வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட உள்ளன. சுருங்கச் சொன்னால், கிராமங்கள் மேம்பாடு அடைய உள்ளன. இதற்காக

[திரு. எஸ். ஆசைமணி] [1991 செப்டம்பர் 17

இந்த மாபெரும் திட்டத்திற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு, நானும் ஒரு கிராமத்திலே பிறந்தவன் என்ற முறையில், கிராமத்திலே வளர்ந்தவன் என்ற வகையிலே, கிராமப்புற மக்களின் அடிப்படை தேவைகளைப் புரிந்தவன் என்ற அடிப்படையில், கிராம மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவன் என்ற ரீதியில், கிராமப்புற மக்களின் கோடான கோடி நன்றிகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளூர் சாலைகளைப் பராமரிக்க நிதி ஒதுக்கீட்டை ரூ. 5.32 கோடியிலிருந்து ரூ. 9 கோடியாக உயர்த்தியுள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறுகின்ற அதே நேரத்தில், ஒரு வேண்டுகோளையும் தஞ்சை மாவட்ட மக்களின் சார்பாக வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். தஞ்சை மாவட்டம் மலைகள் இல்லாத மாவட்டம். சாலைகள் சீரமைக்கத் தேவையான கருங்கல் ஜல்லி, அடுத்த மாவட்டமான திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சி, கரூர் ஆகிய இடங்களில் இருந்து வர வேண்டியுள்ளது. மலைகள் அமைந்துள்ள மாவட்டங்களில் 1 லோடு கருங்கல் ஜல்லியின் அடக்க விலை ரூ. 1,000 என்றால், எங்கள் மாவட்டத்தில் அதன் அடக்க விலை ரூ. 2,000 ஆகி விடுகிறது. எனவே, ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு நிதி ஒதுக்குப்போது, கருங்கல் ஜல்லியின் விலையை கணக்கிலே கொண்டு, எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

அதேபோல, கைபம்புகள், விசைப் பம்புகள் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டை 3 1/4 கோடியிலிருந்து 3 கோடியாக உயர்த்தித் தந்துள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் கோடையில், நீர் மட்டம் வெகுவாகக் கீழ் இறங்கி விடுவதால், கை பம்புகளும், விசைப் பம்புகளும் பெரிதாகப் பாதிக்கப்படுகின்றன. எனவே, இந்தத் திட்டத்திற்கும் எங்கள் மாவட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கித் தர வேண்டுகிறேன். முந்தைய ஆட்சியாளர்கள், தங்கள் இயக்கத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்ததால் ஊராட்சிகளுக்குச் சொந்தமான கைபம்புகள் காணாமல் போய்விட்டன; திருட்டுப் போய் விட்டன என்ற பொய்க் கணக்கை எழுத வைத்து, அப்படிப்பட்ட பம்புகளை எல்லாம் அவர்கள் வீட்டுக் கொல்லையிலே சொந்த உபயோகத்திற்கும், அவர்கள் கட்சிக் கொடிமரம் ஏற்றுவதற்கும்



1991 செப்டம்பர் 17] [திரு. எஸ். ஆசைமணி]

பயன்படுத்தியுள்ளதைக் கண்டறிந்து, தக்க அதிகாரிகள் மூலம் விசாரணை செய்து, அப்படிப்பட்ட கைபம்புகளை கைப்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வாக அமைப்பைப் பொறுத்த வரையில், 1960-ல் என்னென்ன அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்களோ, அதே முறையில்தான் அலுவலர்கள் இயங்கி கொண்டிருக்கிறார்கள். ஆனால், பணிகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. வளர்ச்சித் திட்டங்கள், அதிகமாக உள்ளன. நிதி ஆதாரங்கள் பெருகி உள்ளன. வேண்டுமானால், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற, மேனேஜர் கூடுதல் இணையர் போன்ற ஓரிரு புதிய பதவிகள் உருவாகியிருந்தாலும் மேலும் தேவையான அளவிற்கு இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள், தட்டச்சர்கள் ஆகிய பதவிகள் கூடுதலாக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி மன்ற நிர்வாகத்திற்குட்பட்ட மின் விளக்குகள் சரி செய்தல், குடிநீர் பம்புகள் பராமரித்தல் போன்ற பணிகள் பஞ்சாயத்து எழுத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதை மாற்றி, கிராம நல அலுவலர்களிடம் (ஆர்.டபிள்யூ.ஓ.) ஒப்படைக்க வேண்டுகிறேன். தமிழகத்தில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள படித்த இளைஞர்களைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல், முந்தைய அரசு தங்கள் இயக்கத்தினர் என்பதற்காக 25,000 பேரைத் தேர்ந்தெடுத்து, தங்கள் இயக்கப் பணிகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி, அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறி, அந்தப் பணியாளர்கள் வேலை பார்த்த நேரத்தில் அவர்கள் மூலம் மனு வாங்கச் செய்து தேர்வு செய்த நபர்களுக்கு நடப்பு ஆண்டில் ஐ.ஆர்.டி.பி. கடன் கொடுக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நபர்களின் பட்டியலையும், அவர்கள் மூலம் தெரிவு செய்த டிரைசம் பட்டியலையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளிலே பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு 1991–92 ஆம் ஆண்டிலே 1,000 தொகுப்பு வீடுகள் கட்டப்பட திட்டமிட்டுள்ளதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் பேரூராட்சிகள், நகராட்சிகளில் பல ஆண்டுகளாக வீட்டுவரி உயர்த்தப்படாமல் இருப்பதை மாற்றி, உடன் நியாயமான வீட்டு வரி வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். அதிகமான ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சுடுகாட்டுக்குச் செல்லும் சரியான பாதை இல்லாத சூழ்நிலை

நிலவுகிறது. இந்த நிலை தமிழகம் பூராவும் உள்ளது. தமிழகத்தின் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை தங்கள் எதிர்கால வாழ்வின் ஒளி விளக்காக கருதிக் கொண்டிருக்கிறார்கள். சாதிப் பெயரைச் சொல்லி எல்லாம் இந்த நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது என்ற கருத்து, என்ற பாடம், நடந்து முடிந்த தேர்தல் மூலமாக தெளிவாக்கப்பட்டுள்ளது. எனவே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சுடுகாடு சாலைகளை செப்பனிடவும், சுடுகாடுகளில் ஷெட்டுகளை அமைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக் கொள்வதெல்லாம் —கிராமப்புறங்களிலே சமுதாய கிணறுகளை, சமுதாய போர் வெல்களை அமைத்து, அவைகளுக்குச் சலுகை முறையிலே, மின் இணைப்பு வழங்கி, அதன் மூலம் கிராமங்களிலே கோடைக் காலங்களிலே நீர்நிலைகளை—குளம், குட்டைகளை நிரப்பிக் கொள்ள வாய்ப்பளியுங்கள்.

முற்பகல் 10–45

அவைகளையும் அந்தந்த கிராம நிர்வாகத்திடம் ஒப்படையுங்கள். இதன் மூலம் கிராமப்புற மக்களின் குடிநீர்ப் பஞ்சம், கால் நடைகள் குடிக்கத் தண்ணீர், நீர் நிலைகள், குளம் குட்டைகளில் மீன் வளர்ப்பு போன்றவைகள் சீரமைக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம் வருகின்ற வருமானம் மேற்படி சமுதாய போர்வெல்களை பராமரிக்க உதவும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியில் குத்தாலம் ஒன்றியத்தில் கோமல் ஊராட்சி 8,000 வாக்காளர்களை, 12,000 ஜனத் தொகையைக் கொண்ட ஊராட்சி. இந்த ஊராட்சியைப் பேரூராட்சியாக உயர்த்த ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேரவைத் தலைவர் மூலம் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் எனது தொகுதியில் குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சியாக உள்ளது. அங்கே ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். ஆனால் பேரூராட்சிகளுக்கு அந்த நிதியிலிருந்து தொகை வழங்குவதாகத்



தெரியவில்லை. எனவே, பேரூராட்சிகளுக்கும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை விரிவுபடுத்தி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

பேரூராட்சிகளுக்குப், நகராட்சிகளுக்குப் இருப்பதைப்போல் ஒரு நிதிக் காப்பரேஷன் துவக்கி வளர்ச்சித் திட்டங்கள் நடைபெற ஆவன புரிய வேண்டுகிறேன்.

நாட்டிலே முதன் முறையாக சாதி, சமயபாகுபாடில்லாத சமுதாயம் உருவாக வேண்டுமென்ற எண்ணத்திலே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள பல்வேறு வகுப்பைச் சார்ந்த மக்கள் ஒன்றாக, ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதற்காகவும், அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் பர்கூரிலே ஒரு மாபெரும் திட்டத்தைத் துவக்கி, இந்தியாவிற்கே ஒரு முன் உதாரணமாகத் திகழும் இதய தெய்வத்திற்கு நன்றி கூறி இத்திட்டத்தைப் படிப்படியாக தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, எங்கள் தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, நாகப்பட்டிணத்தைத் தலைநகராகக் கொண்டு காயிதே மில்லத் மாவட்டம் உருவாக்கித் தந்திருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஊராட்சி வளர்ச்சியினுடைய மானியக் கோரிக்கையின் மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். பொதுவாக, உள்ளாட்சிகளுடைய அமைப்புகள் என்பது, நேரிடையாக அரசு பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருந்த போதிலும், சாதாரண மக்களுடைய, நகர மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு இயந்திரப் பணி என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த போதிலும்கூட மக்களுடைய அத்தியாவசியமான தேவைகளை, குடிப்பதற்குத் தண்ணீரும், நடப்பதற்கு நல்ல பாதைகளும், மின் விளக்குகளும் வேண்டும் என்பதுதான் மக்களுடைய வாழ்க்கையிலே அன்றாடம் தென்படும் சமூகப் பணியாகும். ஆனால், அந்த அமைப்புகளுடைய நிலைகளை நாம் கொஞ்சம் கூர்ந்து ஆராய வேண்டும். மத்திய அரசாக, மாநில அரசாக இருந்தாலும், நல்ல பெயரைப் பெற

[திரு. ஜி. பழனிசாமி] [1991 செப்டம்பர் 17

வேண்டும் என்று சொன்னால், உள்ளாட்சி அமைப்புகளுடைய
நிர்வாகம்தான் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். அப்படி
இருந்த போதிலும், மக்களுடைய பிரச்சினைகளை இந்த அரசு
முறையாகக் கவனிக்கிறது. முறையாகச் செயலாற்றுகிறது. குடிப்
பதற்குத் தண்ணீர் கூடக் கொடுக்கிறது என்ற நிலையை நாட்டு
மக்கள் உணர முடியும். அந்த வகையிலேதான், தமிழகத்திலே
சமீப காலமாக ஒரு பதின்மூன்று ஆண்டுகாலம் உள்ளாட்சி
அமைப்புகளுக்கான தேர்தல் நடத்தப்படாமல் இருந்து, சமீபத்
திலே 5 ஆண்டுகளுக்கு முன்பு அந்தத் தேர்தல் நடந்து முடிந்தது.
நடந்து முடிந்த அந்த உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்த
லிலேதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியம்,
பேரூராட்சி, நகரியம் போன்றவைகள் அந்தப் பகுதி மக்களுக்கான
தேவைகளைச் செய்ய முடிந்தது. ஆனால், பிறகு நம்முடைய
தமிழக அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை அறி
வித்து இருந்தது. ஆனால் அதற்குப் பின்னால் தமிழகத்திற்குக்
கிடைக்க வேண்டிய காவிரி நதி நீர்ப் பிரச்சினை ஏற்பட்ட
காரணத்தினாலே இடையிலே உள்ளாட்சி அமைப்புகளுடைய
தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டது. அதே போன்று, சென்னை,
மதுரை போன்ற மாநகராட்சிகளுடைய தேர்தல் தொடர்ந்து
பல ஆண்டுகளாக நடத்தப் பெறாமல் இருக்கிறது. அந்த மக்கள்
என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை. அந்த மாநக
ராட்சிகள் தனி அதிகாரிகளின் செயல்பாட்டில் நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. தேர்தல் நடைபெறாமல் இருந்து கொண்
டிருக்கிறது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்தலை
கோவை, மதுரை, சென்னை போன்ற பெரு நகரங்களிலே உள்ள
மக்கள் மறந்து விட்டார்கள். இனிமேல் நினைவு படுத்த வேண்
டும். ஆக. இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கக் கூடிய உள்ளாட்
சித்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக உள்ளாட்சி அமைப்பு
களுடைய தேர்தலை நடத்துவதற்கு மறுபரிசிலனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காலம் கடத்தி விடக்
கூடாது. இன்றைக்கு அரசு பல்வேறு நலத் திட்டங்களைக்
கொண்டு வந்திருக்கிறது.

முற்பகல் 10-50

குறிப்பாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, ஒரு ஊராட்சி ஒன்றி
யத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்ற திட்டத்தைக் கொண்டு வந்
திருக்கிறார்கள். பொதுவாக நிதிநிலை அறிக்கையிலே அறிவித்
திருக்கிறபோது 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 192 கோடி
ரூபாய் ஆக 6 மாதத்திற்குள்ள நிதிநியை மட்டும் இன்றைய
தினம் கொண்டுவந்திருக்கிறார்கள். அது 6 மாதமாக இருந்தா
லும் அல்லது ஒரு வருடமாக இருந்தாலும் இதிலே பாகுபாடு
பார்க்காமல் இந்த ஒரு கோடி ரூபாயை இந்த ஆண்டுக்கு, நடப்
பாண்டுக்கு பயன்படுத்தக்கூடிய வகையில் கிராமப்புறத்திலு
டைய மேம்பாட்டுத் திட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டும்.
இன்றைக்கு பல்வேறு திட்டங்களுக்கு இந்த அரசு மூலமாக அறி



1991 செப்டம்பர் 17] [திரு. ஜி. பழனிசாமி]

அறிவித்திருந்தபோதிலும்கூட கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய கிராமப்புறச் சாலைகள் எப்படி இருக்கின்றன என்றால் தார்ச் சாலைகள் எல்லாம் ஜல்லி சாலைகளாக மாறி இருக்கின்றன. ஜல்லி சாலைகள் எல்லாம் மண் சாலைகளாக மாறி இருக்கின்றன. மண் சாலைகள் எல்லாம் இருக்கின்ற இடம் தெரியாமல் போய் இருக்கின்றன. மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஓட்டுப்போட்டு சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய வாக்காளப் பெரு மக்கள், அரசியல் பாகுபாடு இன்றி யார் கிராமப்புறங்களுக்குச் சென்றாலும் அவர்கள் கேட்பதெல்லாம் என்ன? எங்களுக்கு மாடி வீடு கட்டித் தாருங்கள், அல்லது ஓட்டு வீடு அமைத்துத் தாருங்கள், எங்களுக்கு லோன் கொடுங்கள் என்று கேட்பதற்கு மாறாக இந்தச் சாலையைப் பாருங்கள், எங்களுக்குக் குடிநீர் இல்லை பாருங்கள், என்று இப்படிப்பட்ட சாதாரணஅத்தியாவசிய மான தேவைகளுக்கான குரல்தான் கிராமப்புற மக்களிடமிருந்து சட்டமன்ற உறுப்பினர்களின் காதில் ஒலிக்கிறதே தவிர வேறல்ல எனவே இதிலே மேற்கொண்டு செய்யவேண்டியதெல்லாம் அரசி னுடைய கடமையாக இருக்கிறது. இந்தப் பணியை இன்றையதினம் பொறுப்பேற்று உள்ள உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக செய்யவேண்டும். கிராமப் புற மக்களுடைய வாழ்க்கையோடு ஒன்றிணைந்து பழகி அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டவர்கள், அவர்கள் இந்த நேரத்தில் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்பதில் எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி. அதே நேரத்தில் அந்தப் பணிகளை அவர்கள் செய்வதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். நீங்கள் அதைச் செய்ய வேண்டுமென்றால், மக்களு டைய பிரதிநிதிகள் அந்த அமைப்புக்களில் இல்லை என்று சொன் னால், நீங்கள் எந்த ஒரு திட்டம் எடுத்தாலும் அது முழுமையாக நிறைவேறாது.

நான் அதிகாரிகளை முழுமையாகக் குற்றம் சொல்லவில்லை. அதிகாரிகளைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய தவறுகள் நிறைய இடத்தில் இருக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறாமல் இருந்த நேரங்களில் ஆங்காங்கே கிராமப்புறங்களில் போடப்பட்ட பல்வேறு அதிகாரிகள் அனேக மாக முழுமையாக அந்தப் பணிகளைச் செய்ய முடியாமல் பல இலட்சக் கணக்கான ரூபாயை மோசடி செய்த நிலைமைகளை எல்லாம் நம்மாலே காண முடிகிறது. உள்ளாட்சி அமைப்புகள் பல்வேறு நஷ்டத்திற்கு ஆளாயின. இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்பட்டு இருந் தது. ஆகவே உடனடியாக இன்றைக்கு உள்ளாட்சி அமைப்பி னுடைய தேர்தலை நடத்தி, இந்த நிதியாதாரங்களைக் கொடுத்து அங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களின் மேற்பார்வை யோடு அந்தப் பணிகளைச் செய்வதற்கான முயற்சிகளை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத் தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜி. பழனிசாமி] [1991 செப்டம்பர் 17

அதேபோன்று பேரூராட்சி, நகராட்சிக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால் துப்புரவுக்கான வண்டிகளைப் பொறுத்தவரையில் பல ஆண்டுக்காலம் ஆகிவிட்டன. மேலும் அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு கொடுக்கக்கூடிய சலுகைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று துப்புரவுத் தொழிலாளர்கள் பயன்படுத்தக்கூடிய சாக்கடை வண்டிகள் எல்லாம் பல ஆண்டுகளாகப் புதுப்பிக்கப்படாமல் இருக்கின்றன. எனவே, அதற்கெல்லாம் கொஞ்சம் நிதி ஒதுக்கி கிராமப்புறத்தில் பேரூராட்சி, நகராட்சிகளுக்கான அந்தப் பணிகளைச் செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி ஆரம்பப்பள்ளிக் கட்டடம். கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய கட்டடங்கள் எல்லாம் இன்றைக்குச் சரியான கீற்றுக் கொட்டகைகூட இல்லாமல், தளங்கள் இல்லாமல் இருப்பதால் கிராமப்புறத்தில் ஆரம்பப்பள்ளியில் படிக்கக்கூடிய குழந்தைகளின் கல்வித் தரம் என்பது எடுத்த எடுப்பிலேயே வளர்ச்சி குன்றிவிடுகிறது. எனவே, அந்தப் பள்ளிகளை ஒழுங்கு படுத்த தனியாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டும்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியையெல்லாம் பல்வேறு செலவினங்களுக்கு எடுத்துவிடுகிறார்கள். அனேகமாக என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தில் கூட, அதாவது முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 2,000 ரூபாய்தான் கல்விக்காக இருக்கிறது. கோட்டூரில் 80,000 ரூபாய் இருக்கிறது. திருத்துறைப்பூண்டியில் ஒரு இலட்சம் இருக்கிறது. மிகக் குறைவான பணம் இருக்கிறது. அந்தப் பணம் போதவில்லை. எனவே கல்விக்காக ஒதுக்கக்கூடிய பணத்தை அதற்காக மட்டுமே செலவழிக்க வேண்டுமே தவிர அந்தப் பணத்திலிருந்து வேறு எதற்கும் ஈடு செய்யக்கூடாது என்பதில் அரசு உறுதியாக இருக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று வயது வந்த இளைஞர்களுக்கு இன்றைக்கு பயிற்சி அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. மேற்கொண்டும் பணி பயிற்சி அளிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்கள், பெண்களுக்கு என்ன மாற்று வேலைத் திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே புதிதாக இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதை விட ஏற்கெனவே பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கக் கூடியவர்களுக்கு வேலைக்கு நாம் உத்திரவாதம் செய்ய வேண்டும். இல்லை என்றால் அவர்களுக்கு நிதி



1991 செப்டம்பர் 17] [திரு. ஜி. பழனிசாமி]

ஆதாரம் கொடுக்க வேண்டும். நிதியை மட்டும் கொடுத்தால் போதாது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அந்த நிதி கொடுக்கிறபோது அவர்கள் அதில் சுய தொழில் செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

முற்பகல் 10-55

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அப்போதுதான் நம்முடைய சுய தொழில் மூலமாக அவர்களை பாதுகாக்கமுடியும். அந்த தொழிலுக்கு ஒரு மரியாதை கிடைக்கும். அவர்கள் வாங்கக்கூடிய பணத்தை தங்களுடைய தொழிலில் ஈடுபடுத்துவதற்கு நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். அந்த வகையிலே அவர்களுக்கு பயிற்சியை மட்டும் கொடுக்கக் கூடாது, நிதி ஆதாரத்தையும் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று மத்திய அரசும் மாநில அரசும் 50 சதவிகிதம் 50 சதவிகிதம் என்ற விகிதத்தில் இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. லோன் வழங்கக்கூடிய திட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கின்றன.

அதேபோல அநேகமாக கிராமப்புறங்களில் ஊராட்சி ஒன்றியங்களிலே ஒவ்வொரு இடங்களில் ஒரு தெருவிலே அல்லது 10 தெருவிலே இரண்டு பேர்களுக்கு இப்படிக் கொடுக்கப்பட்டு ஊரிலே மிகப் பெரிய களங்கத்தையே உண்டுபண்ணுகிறார்களே தவிர அநேகமாக அதன் மூலமாக எந்த ஊர் மக்களுக்கும் நன்மைகள் கிடையாது. இது யதார்த்தமான நிலைமை. ஒரு ஊரிலே எல்லாமே வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கக்கூடிய மக்கள்தான். அந்த இடத்திலே இரண்டு பேர்களுக்கு நான் உங்களுக்கு லோன் போட்டுத் தருகிறேன் என்று பார்ம்ஸ் கொடுத்துவிட்டால் போதும், அந்த ஊர்க்காரர்களே, சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் யாரையும் ஊருக்குள்ளே நுழையவிடமாட்டார்கள். ஆகவே, ஒவ்வொரு கிராமமாக தத்து எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு ஊராட்சி ஒன்றியத்தை தத்து எடுத்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் ஒரு ஊராட்சியை தத்து எடுத்துக் கொண்டு அங்கே இருக்கக்கூடிய வறுமைக் கோட்டுக்கு கீழ் எவ்வளவு பேர்கள் வாழ்கிறார்களோ அவர்களுக்கு இரண்டு காலத்திற்குள் கொடுத்து முடியுங்கள். அப்படி ஏதாவது பார்த்து செய்யுங்கள். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள் இப்போது போய் நீங்கள் மேற்கொள்ளுங்கள். அது கொஞ்சம் பிரச்சினையைக் குறைக்க முடியும். கொஞ்சம் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அந்த வகையிலேதான் செய்ய வேண்டும்.

தொகுப்பு வீடுகளைப் பொறுத்த மட்டில், அநேகமாக ஏற்கெனவே ஆயிரம் ரூபாய்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் இன்றைய தினத்திலே 14,500 ரூபாய்க்கு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக ஊராட்சி ஒன்றியத் தலைவர் நிர்வாகம் எங்கு ஒழுங்காக செயல்படுத்தப்பட்டு இருக்கிறதோ அங்கே எல்லாம் திறமையான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. எங்களுடைய ஊராட்சி ஒன்றியத்தில் எங்களுடைய சேர்மேன் அவர்கள் திறமையாக செய்ததன் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கக்கூடிய நிதியை தமிழகத்திலே தஞ்சை மாவட்டத்தில் ஒரு நல்ல சிறந்த ஊராட்சி ஒன்றியமாக திருத்துறைப்பூண்டியில் செயல்படுத்தியிருக்கிறோம்.

அதே நேரத்திலே வீடுகளை நல்ல முறையிலேயும் கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, தொகுப்பு வீடு என்பதிலே மாற்றம் இல்லாமல், அதே அடிப்படையில் இன்றைக்கு இருக்கின்ற விலைவாசிக்கு ஏற்ற வகையிலே நீங்கள் அதற்குக் கொஞ்சம் பணத்தைக் கூட்டிக் கொடுக்க முடியும். கொடுத்து நல்ல விதமாகக் கட்டிக் கொடுங்கள். இன்னொரு தெருவுக்கு இன்னும் ஒரு ஆண்டு காலத்திலாவது கட்டிக் கொடுங்கள். ஆக எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக பணத்தைக் குறைத்து மோசமான வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டாம். அதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை போன்றுதான் இன்றைக்கு இந்த சாக்கடை வசதிகள். நீங்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது, அநேகமாக தமிழகம் முழுமையும் பொதுக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. அநேகமாக இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். பல கோடிகணக்கான ரூபாய்கள் நம்முடைய அரசினுடைய பணம் செலவு செய்து கழிப்பிடம் கட்டப்பட்டது. ஆனால் அந்தக் கழிப்பிடம் கட்டப்பட்ட இடங்களிலே எங்காவது தண்ணீர் எடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறதா ? பக்கத்திலே குளங்கள் இருக்கிறதா? குட்டை இருக்கிறதா என்றால் இல்லை. அடிப்பம்புக்காவது அங்கே தண்ணீர் இருக்கிறதா என்று யாரும் பார்க்கவில்லை. அநேகமாக எங்கெங்கோ திடலிலே எல்லாம் கொண்டுபோய்க் கட்டிக்கொடுத்து ஒருவர் கூட பயன்படுத்த முடியாத அளவுக்கு இருக்கிறன. பல கோடிக்கணக்கான ரூபாய்கள் தமிழக அரசுக்கு நஷ்டம் வந்தது. அதன் மூலமாக எந்த ஒரு மக்களும் பயன்பெறமுடியவில்லை. அது போன்று அதிகாரிகளுடைய கருத்துப்படி, அவர்கள் நினைத்த



படி, உங்களுடைய அதிகாரிகள் மிகத் திறமையானவர்கள், அவர்கள் சொல்கிறபடியெல்லாம் அரசு இயங்குகிறது, செய்கிறது. ஆனால் அவர்கள் எல்லாம் திரும்பச் சொல்கிறார்கள். திட்டம் சரியில்லை என்று சொல்கிறார்கள். அதுபோன்று எங்கெங்கோ கட்டி வீணாகப் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் இன்றைய தினத்திலே சேதமாகியிருக்கிறது. அந்தத் திட்டங்களை, மக்கள் பயன்படுத்த முடியாத திட்டங்களை நீங்கள் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் சொல்கிறபடியெல்லாம் அரசு இயங்குகிறது என்று ஒரு வார்த்தையைச் சொல்கிறார்கள். அது கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்களுடைய அனுபவத்தைச் சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். இனி மேல் வருகின்ற அரசாங்கம் நிச்சயமாக அப்படி இருக்காது. அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி இங்கே இருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் நன்கு தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழிப்பிடங்கள் கட்டுவது என்பது இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றிலேதான் செய்தோம். நாம் அதை செய்ததற்கே காரணம், கொள்ளாமுடி என்ற இடத்திலே, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஒரு பகுதியிலே நெசவாளர் பெண்மணிகள் வந்து எங்களுக்கு மறைவிடம் இல்லை மானத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை, ஆகவே கழிப்பிடங்கள் வேண்டும் என்று கேட்டார்கள். புரட்சித்தலைவர் அவர்கள் அரும்பாடுபட்டு பெரு நிதி ஒதுக்கச் செய்தார்கள். அந்த நிதியில் எங்கெங்கோ கட்டி இருக்கிறார்களே என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஒன்றுமில்லை. ஒரு சொம்பு தண்ணீரை கூடவே எடுத்துக்கொண்டு போக வேண்டும். அவ்வளவுதான். அது இல்லை. தண்ணீரை அங்கே கொண்டு வந்து ஊற்றவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படி நினைக்கின்றார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. திட்டங்களைக் குறை கூறுவதை விட்டுவிட்டு நல்லது வேறு ஏதாவது சொல்லலாம்.

முற்பகல் 11.00

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தைக்குறை கூறவில்லை. மீண்டும் இந்த அரசு செய்யக்கூடிய திட்டங்களையும் அதுமாதிரி செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்னுடைய விருப்பத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால் சாதாரண கிராமத்தில் இருக்கிற பொது லெட்ரினை பயன்படுத்தும்போது, துப்புரவுத் தொழிலாளி இல்லாமல் நீண்ட காலமாக அது இருந்தால் எப்படி சுத்தமாக இருக்க முடியும்? ஒரு வீட்டிலே கூட துப்புரவுத் தொழிலாளி சுத்தப்படுத்தவில்லையென்றால் மறுநாள் லெட்ரினுக்குப் போக முடியாது. பொதுக் கழிப்பிடங்களை கட்டும்போது அதைப்பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். அதிகாரிகள் சொல்வதை எல்லாம் இன்றைய தினம் ஆட்சியாளர்கள் கேட்பது இல்லை என்றார்கள். உண்மையிலேயே அதிகாரிகளுடைய ஆலோசனையின் பேரில்தான் மக்கள் நலப் பணியாளர்கள் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்டார்கள். அதிலே பல பலவீனங்கள், அப்படிப் போட்டதிலே சில தவறுகள் இருக்கின்றன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இல்லை என்று சொல்ல முடியாதுதான். ஆனால் அதிகாரிகள் சொன்ன திட்டத்தின் அடிப்படையில்தான் அந்த அரசு அதனை ஏற்றுக் கொண்டது. இன்றைய தினத்திலே அது தேவையில்லை என்றும் அரசு அதிகாரிகள் சொல்லியிருக்கிறதன்பேரில்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி இல்லையென்று யாரும் சொல்ல முடியாது. ஆகவே, ஒட்டுமொத்தமாக தி.மு.க.வால் நியமிக்கப்பட்டவர்கள் என்று சொல்லி, மக்கள் நலப் பணியாளர்களை முழுமையாக நீக்குவது என்பது சரியல்ல. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள். பல பேர் மக்கள் நலப் பணியாளர்களாக அதிலே இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல்வேறு திட்டங்களை இந்த அரசு கொண்டு வர வேண்டும். இப்பொழுதுகூட எல்லோரும் கட்டாயமாக கல்வி கற்க வேண்டுமென்பதற்காக....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ்.எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது மக்கள் நலப் பணியாளர்களாக அனைவரும் பொதுவாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் ஒவ்வொரு மக்கள் நலப் பணியாளர்களும் தேர்தல் சமயத்திலே தி.மு.க.



வினுடைய உதயசூரியன் சின்னத்தைப் போட்டு—எங்கள் தொகுதிக்கு வந்தால் பார்க்கலாம்—தங்களுடைய பெயரைக் கூட எழுதியிருக்கிறார்கள். மக்கள் நலப் பணியாளர்கள் சங்கம், அப்படி என்று போட்டு, பெயரைக் கூட குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள். அவர்கள் மக்கள் நலப் பணியாளர்களாக, அரசு ஊழியத்திற்காக சேர்ந்தார்களா அல்லது ஒரு கட்சிக்காக பணியாற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார்களா என்பதைப்பற்றி இங்கே உறுப்பினர் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : தஞ்சை மாவட்டத்தில் கூட சிறப்பு நிதி என்று சொல்கிற திட்டத்திலே 27 கோடி ரூபாயை மக்கள் நலப் பணியாளர்கள் வசூல் செய்தார்கள். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அவர்கள் 9 கோடி ரூபாய் அதிகமாக நிதி வசூல் செய்திருக்கிறார்கள். அது இல்லையென்று சொல்ல முடியாது. தவறு நடந்திருக்கிறது. நானே ஒத்துக்கொள்கிறேன் நியமித்ததிலே குற்றங்குறைகள் இருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஒட்டுமொத்தமாக முடிவு செய்வது சரியல்ல. இப்போது கூட கட்டாயக் கல்வி சொடுக்க வேண்டும் என்பதற்காக, 10 குழந்தைகளுக்கு படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்காக 1,000 ரூபாய் தொகுப்பு ஊதியத்திற்கு நியமனம் செய்யப் போகிறீர்கள். இன்னொரு அரசு வருகிறபோது அ.இ.அ.தி.மு.க. அரசால் நியமிக்கப்பட்டவர்கள், ஆகவே இவர்களை நீக்குவது என்று சொன்னால், படித்த இளைஞர்களுடைய வாழ்க்கை வீணாகக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

திரு. கே. சி. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு. செல்வராஜ், நீங்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்திலே, கட்சியில் உறுப்பினர்களாக இருந்தவர்களை மட்டும்தான் தேர்வு செய்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், நிதி ஆதாரங்களை வசூலிப்பதற்கு பஞ்சாயத்து அசிஸ்டெண்ட் என்ற பதவி இருக்கிறது. அவர்கள் மூலம் வசூல் செய்யலாம் என்பதையும் இந்தப் பேரவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : நமது அரசு கூட இன்றைக்கு கட்டாயக் கல்விக்காக பல்வேறு இளைஞர்களை நியமிக்க இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் வேலைவாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுத்தால்தான் பிறகு இன்னொரு அரசு வந்தாலும்கூட இவர்கள் எல்லாம் வீதியிலே சென்று போராட்டம் நடத்தாமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே ஒரு அரசு வரும்போது நியமிப்பது, இன்னொரு அரசு வந்து அவர்களை நீக்குவது என்பது சரியல்ல......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சுட்டிக் காட்டியபோது இங்கே மக்கள் நலப் பணியாளர்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக தி.மு.க. ஆட்சியில் மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள், தி.மு.க.-வை ஊக்குவிக்கின்ற வகையில் தி.மு.க.-வைச் சார்ந்தவர்கள் அத்தனை பேரும்தான் நியமிக்கப்பட்டு, அவர்களும் தி.மு.க.-வுக்காக வேலை செய்து வந்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் அங்கே இருக்கின்ற பேரூராட்சி, ஊராட்சி, நகராட்சி மன்றத் தலைவர்களை எல்லாம் கண்காணிப்பதற்காக அவர்களைப் போட்டிருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை விட்டுவிட்டு, இவர்கள் மூலம் அவர்கள் கண்காணிக்கப்பட்ட காரணத்தினால்தான் இந்த அரசு இத்தகைய நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : அதிலேயே நான் பேசிக் கொண்டிருந்தால் என் பேச்சு திசை மாறிவிடும். இப்போதே திசை மாறி எங்கோ போய்விட்டது. பஞ்சாயத்து எழுத்தாளர்கள் 400 ரூபாய் சம்பளத்திலே 10, 15 ஆண்டுக்காலம் தொடர்ந்து பணியாற்றி வந்தார்கள். அவர்கள் சம்பளம் மிகவும் குறைவாக இருந்தது. ஏற்கெனவே முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள், இவர்களை அரசு ஊழியர்களாக இணைத்துக் கொண்டார்கள். இன்னும் அவர்களில் 1005 பேர் பாக்கியிருக்கிறார்கள். அவர்களையும் அரசு ஊழியர்களாக எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு அடிப்படையான ஊதியத்தை வழங்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-05

அடுத்து என்னுடைய தொகுதியில் இருக்கிற திருத்துறைப்பூண்டி பேரூராட்சி பற்றி கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடுகிறபோது. பரிசீலிக்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு, திருத்துறைப்பூண்டி பேரூராட்சியைக் கட்டாயமாக, இந்த அவையிலேயே, நகராட்சியாக



அறிவிக்க வேண்டும். நீண்ட காலமாக இருக்கும் பிரச்சினை அது. திருத்துறைப்பூண்டி மக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல், சாக்கடை இல்லாமல், பல்வேறு தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால், அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்கி, அங்கே நல்ல பல திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்திருக்கிற துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. தாமோதரன் அவர்கள்.

* திரு. சி. தாமோதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம் மாமன்றத்திலே இந்த விவாதத்தின்மீது பங்கெடுத்துப் பேசும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த நமது மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களை வணங்கி நான் எனது கன்னி உரையை துவங்குகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்து, இந்தத் தமிழகத்திலே வாழ்கின்ற கிராம மக்கள், ஏழை எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில், அவர்களின் நல்வாழ்வை மேம்பாடு அடையச் செய்யும் விதத்தில் நிதிநிலை அறிக்கையிலே இப்படி ஒரு சிறப்பான அம்சத்தை உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் வழங்கிய நமது புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் தமிழகத்தின் கோடான கோடி இதயங்களில் கோடியைக் கொடுத்து மீண்டும் குடி புகுந்திருக்கிறார் என்று சொன்னால் அது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் ஓர் அரசு எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, அந்த அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் என்ன என்பதை மக்கள் வெகு விரைவில் உணரக்கூடிய, தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு திட்டமாக இந்த ஒரு கோடி ரூபாய் திட்டம் இருக்கிறது. இந்த ஒரு கோடி ரூபாயை ஊராட்சி ஒன்றியங்கள் நல்லமுறையில் பயன்படுத்தி, அதன் அடிப்படையிலே ஊராட்சி மன்றங்களுக்கு-கிராமங்களுக்குக் குடிநீர் வசதி, சாலை வசதி மற்றும் பள்ளிக் கட்டிடங்கள்—இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் இந்த அரசாங்கம் செய்யக் காத்திருக்கிறது. நடைமுறைப்படுத்

இருக்கிறது என்பதை நினைத்து நான் எனது நெல்லிக்குப்பம் தொகுதிவாழ் கிராம மக்களின் சார்பாக இந்த அரசுக்கு மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது குடிநீர் பிரச்சினையிலே அதிக கவனம் செலுத்த வேண்டியவைகளாக இருக்கின்றன. தற்போது அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்தாய்வைக் கொண்டு அங்கே 1991–92ஆம் ஆண்டுக்கான குடிநீர் ஆதாரங்களை உருவாக்குவது சம்பந்தமாக இந்த அரசாங்கம் கலந்து ஆலோசிக்க வேண்டும். அப்படிப்பட்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்று இந்தத் தருணத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே குடிநீர் பராமரிப்புக்காக ஏகப்பட்ட பொருள்களை, உதிரி பாகங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு வாங்கும்போது ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற அதிகாரிகள் எந்தவிதமான பாதிப்புக்கும் ஆளாகாத வகையில், தவறுகளுக்கு இடம் தராத வகையில் அரசாங்கமே அந்தப் பொருள்களை உற்பத்தி செய்யும் ஸ்தலத்திலேயே முறைப்படி பெற்று, அதை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கோரிக்கையின் அடிப்படையில் கொடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதை அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

அடுத்தது குடிநீர்ப் பிரச்சினை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின மூலமாகத் திட்டமிடப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்படுகிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மற்ற கைப்பம்புகள் அனைத்தும் பராமரிக்கப் படுகிற பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடப்படுகிறது. அப்படி விடப்படுகிறபோது ஏற்படுகின்ற பழுதுகளை கண்கா ணித்து உடனுக்குடன் செய்திட ஊராட்சி ஒன்றியங்களில் நியமிக்கப்பட்டிருக்கிற பிட்டர் ஒரே ஒருவர்தான் இருக்கிறார். மேலும் இன்னொருவரை சேர்த்து 2 பிட்டர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் நியமித்தால் அங்கு ஏற்படுகின்ற பழுதுகளை நீக்குவதில் காலதாமதம் இருக்காது என்பதால் அதற்கு சரியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெருவிளக்குகள் என்று வருகிறபோது, ஒரு வருடத்திற்கு இரண்டு முறைதான குழல் மின் விளக்குகள் வாங்க அனுமதிக் கப்படுகிறது. அப்படி வாங்கிப் பொருத்தப்படுகிற குழல் மின் விளக்குகள், போட்ட உடனயே உயர் மின் அழுத்தத்



தாலும் குறைந்த மின் அழுத்தத்தாலும் பழுதுபட்டுப் போகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கப்படுகிற குழல் மின் விளக்குகள் 17 ரூபாய்க்குத்தான் வாங்கப்படுகிறது. ஆனால் வெளி மார்க்கெட்டில் ஒரு குழல் மின் விளக்கு ரூ. 34-க்கு நல்ல முறையில் கிடைக்கிறது. இப்படி விலை குறைவாக இருக்கிறது என்ற அடிப்படையில் தரம் தாழ்ந்த குழல் மின் விளக்குகளை வாங்குவதன் மூலம் இராமங்களிலே விளக்கு எரியவில்லை என்ற பிரச்சினை அதிகமாக எழுகிறது. எனவே அவற்றை சரியாக நிவர்த்தி செய்யும் விதத்தில் தரம் வாய்ந்த மின் விளக்குகளை அரசாங்கமே நேரடியாகப் பெற்று கோரிக்கையின் அடிப்படை யில் மாவட்ட ஆட்சித் தலைமைக்குக் கொடுத்து அதை ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் பற்றி சொல்ல வேண்டுமானால், நெல்லிக்குப்பம் நகராட்சியில் போதிய வருவாய் இல்லை. 100 ஆண்டுகளுக்கு முன்பு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட ஈ.ஐ.டி. சர்க்கரை ஆலையைக் கொண்டு அது நகராட்சியாக அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அதைச் சுற்றிலும் கிராமங்களாகத்தான் இருக்கின்றன. எனவே அவற்றின் வருவாயைப் பெருக்கிட இந்த அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த நகராட்சி இப்போது பரிந்துரை செய்திருக்கிற நகரப் பேருந்து நிலையத்தை அமைத்துத் தருமாறும், எனது தொகுதியில் இருக்கிற திருவந்திபுரம் ஊராட்சியில் அமைந்திருக்கிற பாடல் பெற்ற ஸ்தலமாகிய அருள்மிகு தேவநாதசுவாமி ஆலயத்தை சுற்றுலா மையமாக அறிவித்து அந்த ஊராட்சிக்கும் நிதி வருவாயைப் பெருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் தேர்தல் கள் நடைபெறும் காலங்களில் மூன்றடுக்கு முறையைச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், மாவட்ட வளர்ச்சி மன்றம் என்ற மூன்றடுக்கு முறையைத் தேர்தல் நடத்தும் காலங்களிலே கொண்டு வர அரசு முன்வரவேண்டுமென்றும் அந்த அடிப்படையில் தேர்தலை நடத்தி அதிகாரப் பரவல் முறையாகக் கிடைத்திட இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

[1991 செப்டம்பர் 17

*திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற வளர்ச்சி மானியத்தில் 'கோயம்புத்தூர் மாநகராட்சியின் வளர்ச்சிக்காக உரை நிகழ்த்த வாய்ப்புக் கொடுத்தமைக்கு மிக்க நன்றி. மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கோவை நகராட்சியை 1981-ம் வருடம் மே மாதம் 1-ம் நாள் மாநகராட்சியாக மாற்றினார்கள். அதற்குப் பிறகு தேர்தலே நடத்தப்படவில்லை. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அதிகாரிகளே செயல்பட்டு வருவதால் இருக்கிற குறைபாடுகளை அரசிடம் எடுத்துச் சொல்ல முடியவில்லை. அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒரு சில பகுதிகள் இன்னமும் கிராமங்களைப் போலத்தான் இருக்கின்றன. காரணம் மாநகராட்சிக்கு, சிங்காநல்லூர் நகராட்சி, கணபதி, சாயிபாபா காலனி, கவுண்டம்பாளையம், பாப்பநாய்க்கன்பாளையம், புதூர், சிரநாய்க்கன் பாளையம் டவுன் பஞ்சாயத்து போன்ற பகுதிகளை இணைத்துள்ளார்கள். அந்தப் பகுதிகளை இணைத்த பிறகு முழுமையாக திட்டம் போட்டு வருடாவருடம் அந்தப் பகுதிகளை புதுப்பித்து வளர்ச்சித் திட்டங்கள் வகுத்து செயல்படாமல் மக்களின் அன்றாடப் பணிகள் பாதிக்கும் விதத்தில் இன்னமும் நிறைய குறைபாடுகள் உள்ளன. எந்தவொரு முன்னேற்றமும் மாற்றமும் இல்லாமல் இருப்பதால் அரசு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மானியமாகவும் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு நிதியும் அதிகமாக இந்த பட்ஜெட்டில் ஒதுக்காதது மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும்.

முற்பகல் 11-15

மாநகராட்சியிலுள்ள கழிவுப் பொருட்கள், குப்பைகளைக் கொட்ட குப்பைத் தொட்டிகள் கிடையாது. குப்பைகளை ரோட்டிலேயே கொட்டுவதால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. குப்பைகளை எடுத்துச்செல்ல போதுமான வாகன வசதி இல்லாமல் உள்ளது. பழைய காலத்தில் உள்ள மாட்டு வண்டிகளில் குப்பைகளை எடுத்துச் செல்கின்றனர். ஒரு நாள் முழுவதும் ஒரு இடத்திற்கு ஒரே ஒரு வண்டிதான் எடுத்துச் செல்கிறார்கள். மாநகராட்சியின் முக்கிய இடங்களில், உட்பகுதிகளில் பெரிய குப்பைத் தொட்டிகளை வைக்க வேண்டும். குப்பைகளை எடுத்துச்செல்ல லாரி போன்ற வாகன வசதிகள் குறைவாக உள்ள காரணத்தால், துப்புரவுப் பணியாளர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். குப்பை எடுக்கும் பிரச்சினையில், முக்கியமாக மாநகராட்சியில் வாகன வசதிகளையும் துப்புரவுப் பணியாளர்களையும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குப்பைகளை நகரத்தின் மையப் பகுதியான ராலி ரோடு, சுப்பிரமணியபுரம் பகுதியில் சுமார் 15 ஏக்கருக்கு



19( . செப்டம்பர் 17] [திரு. கே. செல்வராஜ்]

மேலுள்ள பகுதியில் கொட்டிக் கொண்டு இருக்கிறார்கள். குப்பைகளை வீணாக நகரத்தின் மையப் பகுதியிலே கொட்டுவதால், அந்த இடத்தைச் சுற்றியுள்ள இடங்களில் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. பொது மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆதலால் அங்குள்ள குப்பைகளை சுத்தம் செய்து ஒதுக்குப்புறமாக வேறு இடத்திற்கு மாற்றித் தந்தால், அந்த இடத்தை மாநகராட்சியின் வேறு ஏதாவது பணிகளுக்குச் செயல்படுத்த உதவியாக இருக்குமெனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சிப் பள்ளிக்கூடங்களின் கட்டிடங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டது. அவை பழைய கட்டிடங்கள்' இடிந்து விழும் நிலையில் ஓட்டுக் கூரைகள் பிரிந்து, ஓடுகள் விழுந்தும் உள்ளன. மழைக் காலங்களில் மழைநீர் வகுப்பறைகளில் தேங்கி இருக்கிறது. காம்பவுண்ட் சுவர் இடிந்து இருக்கிறது. இரவு நேரக் காவலர்கள் இல்லாத, கேட் இல்லாத சில பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அங்கு....சபையில் சொல்ல முடியாத தவறான செயல்கள் நடக்கின்றன. மாணவர்கள் உட்கார்ந்து படிக்க பெஞ்ச், டேபின் கூட இல்லாமல் பள்ளிகள் இருக்கின்றன. எழுதுகின்ற கரும் பலகைகள் உடைந்து விட்டால் அவைகளை மாற்றுவது கூடக் கிடையாது. அந்த உடைந்த பலகைகளில்தான் எழுதுகிறார்கள். அங்கு குடிநீர் கூட வைக்காததால், மாணவர்கள் வெளியே வந்து அருகிலுள்ள வீடுகளில் குடிநீர் வாங்கி அருந்த வேண்டிய நிலை உள்ளது. எனவே அரசு, உடனடியாக மாநகராட்சிப் பள்ளிக் கூடங்களுக்கு கட்டிடங்களைப் புதுப்பிக்கவும், வகுப்பறைகளில் புதிய நாற்காலி, மேஜைகள், எழுது பொருள்கள் வைக்கவும் அதிக நிதி ஒதுக்கித் தர வேண்டுகிறேன்.

மாநகராட்சியிலுள்ள அனைத்து ரோடுகளிலும் குறுக்கும் நெடுக்குமாக ஒரு சிலர் ஆக்கிரமித்துக்கொண்டு, மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் ஒருசிலர் அந்த இடத்தைக் கையகப்படுத்திக்கொண்டு பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் விதத்திலும், சாலைகளைப் பராமரிக்க முடியாமலும் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். அந்த இடங்களை மீட்டால் கோடிக்கணக்கான சொத்துக்கள் மாநகராட்சிக்குச் சொந்தமாகும். மாநகராட்சி அந்த இடங்களில் வாணிபக் கூடங்கள் கட்டினால் மாநகராட்சிக்கு வருமானம் பெருகும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சியிலுள்ள சுகாதார மருத்துவமனைகளைப் புதுப்பித்துத் தர வேண்டுகிறேன். வார்டு வாரியாக, ஒவ்வொரு வார்டுக்கு ஒரு மருத்துவமனை அமைத்துத்தர வேண்டுகிறேன். ஒவ்வொரு வார்டிலும் சுமார் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் பேர் வரை இருக்கிறார்கள்.

[திரு. கே. செல்வராஜ்] [1991 செப்டம்பர் 17

மாநகராட்சியில் 20 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள விடுகளுக்கு இன்னும் பட்டா கொடுக்கப்படவில்லை. குறிப்பாக அரசு ஊழியர்கள் இருக்கும் சி.எம்.எஸ். காலனியில் உள்ள 700 விடுகளுக்கும், செம்பட்டி காலனிப் பகுதியில் 2,000 விடுகளுக்கும், அருணாசலம் சாலைப் பகுதியில் 105 விடுகளுக்கும், தடாகம் சாலை, அரிசனக் காலனி—இப்பகுதியில் கூடை முடையும் தொழில் செய்வோர் சுமார் 1,000 பேர் வசிக்கும் விடுகளுக்கும், செல்வபுரம் ஏரிமேடு பகுதியில் சுமார் 3,000 விடுகளுக்கும் பட்டா கொடுத்து உதவ வேண்டுகிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் செட்டி வீதி, பேரூர் சாலை, மாநகராட்சிக்கு உட்பட்ட அரசு அறநிலையத் துறையைச் சார்ந்த இடங்களில் சுமாார் 1,500 விடுகள் கட்டி 25 ஆண்டுக் காலமாக வசித்து வருகிறார்கள்; வாடகையும் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு குடிநீர், வீட்டு வசதி, மின் விளக்கு, தெரு விளக்கு, கழிவுநீர் வாய்க்கால், சாலை வசதி போன்ற எதுவுமே இல்லை. காரணம், தனியார் இடத்தில் மாநகராட்சி வசதிகள் செய்ய சட்டம் இல்லை. அந்த இடத்தை மாநகராட்சிக்குக் கொடுத்தால்தான் வசதிகளைச் செய்ய முடியும் என்று கூறுகிறார்கள். ஆதலால், அரசு அதைப் பரிசீலனை செய்து அந்த இடங்களில் 30 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் அவர்களுக்கு நிரந்தரம் செய்து கொடுக்க அரசு ஒரு விலையை நிர்ணயித்து அவர்களுக்கு சொந்தம் செய்து கொடுத்தால் மீண்டும் அந்த இடத்தில் அவர்களுக்கு சுகாதார வசதி, கழிவுநீர் வாய்க்கால் வசதி, தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சிப் பகுதியிலுள்ள பால் விநியோக மையம்—மில்க் பூத்-களில் படித்த வேலை இல்லாத பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோர்களுக்கு வாழ்வு அளிக்கும் விதத்தில் மில்க் பூத்-களை அவர்களுக்கே கொடுத்தால் அவர்களுக்கு ஒரு வாழ்வு கிடைக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாநகரம் இன்று இந்தியாவிலேயே வளர்ந்து வரும் ஒரு மாநகரமாகும். அங்கே வாணிபம் செய்பவர்களை எல்லாம் ஒரே இடத்தில் பொருட்களை விற்கும் விதத்தில் ஒரு பெரிய வாணிப மையத்தை அமைத்து, அடுக்குமாடிகள் கொண்ட ஒரு கட்டிடம் கட்டினால், அதன் மூலம் மாநகராட்சிக்கு வருமானம் கிடைக்கும்; அந்நகரத்திற்கும் ஒரு நல்ல முன்னேற்றமாகவும் அமையும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சியிலுள்ள ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒரு கழிப்பிடம் அமைக்க வேண்டும். துப்புரவுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித் தர வேண்டும். மாநகராட்சிப் பணிகள்



1991 செப்டம்பர் 17] [திரு. கே. செல்வராஜ்]

திட்டங்கள் குறித்து மாதம் ஒரு முறை கூடும் கவுன்சில் கூட்டத்துக்கு அரசு அதிகாரிகளே கலந்துகொண்டு நடத்துகிறார்கள். அங்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லை. என்னென்ன பணிகள் உடனே செய்ய வேண்டும்; எவையெவைகளைத் தீவிரப்படுத்த வேண்டுமெனத் தீர்மானிப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் அங்கே இல்லாததால் மாநகராட்சிக்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும், மாநகராட்சி கவுன்சில் கூட்டத்திற்கு அழைக்க வேண்டும். அப்போது தான் மாநகராட்சியிலுள்ள குறைபாடுகளை தெரிவிக்க முடியும். மாநகராட்சிப் பணிகள், திட்டங்கள் தெரியவும் வசதியாக இருக்கும். ஆக, உடனடியாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாநகராட்சி கவுன்சில் கூட்டத்துக்கு சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன். எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

11-20 முற்பகல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பே. தர்மலிங்கம் அவர்கள்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டப் பேரவை உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'பேரவைத் தலைவர் அவர்களே' என்று அழைத்து விட்டு நேரடியாக விஷயத்திற்கு வர வேண்டும்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாமானியனான என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி இந்த மாமன்றத்தில் அமரச் செய்த, என்னை வாழவைத்த தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், எனது இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களே, தங்களின் பொன்மலர் பாதங்களில் என்னுடைய சார்பிலும், பாளையங்கோட்டை தொகுதி மக்களின் சார்பிலும், இதயபூர்வமான நன்றியினை காணிக்கையாக்கிக் கொள்கிறேன். எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த பாளையங்கோட்டை தொகுதி வாக்காளர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. பே. தர்மலிங்கம்] [1991 செப்டம்பர் 17

1991-92 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் வரவு-செலவுத் திட்டம் நாட்டு மக்களால் பாராட்டி, வாழ்த்தி, வரவேற்கப்பட்டுள்ளது. இதில் நகராட்சி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புற, நகர்ப்புற மக்கள் வாழ்க்கையின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய அளவில் முக்கிய பங்கு உள்ளாட்சி நிர்வாகத்திற்கு இருக்கிறது என்பதையும், மக்களுடைய பொருளாதார, சுகாதார வளர்ச்சியை மேம்படுத்த இந்த உள்ளாட்சித் துறை பெரும்பங்கு வகிக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல நல்ல திட்டங்கள் இதில் சொல்லப்பட்டுள்ளவ. ஒருங்கிணைந்த மற்றும் குறைந்த அளவிலான கழிப்பிடம் கட்டுதல், துப்புறவுப் பணியாளர் புனர்வாழ்வுத் திட்டம், குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், விற்பனை வரி மீது விதிக்கப்படும் மேல் வரியினை நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்தல், எழில்மிகு சென்னை 2,000 திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் ஆகிய பொன்னான திட்டங்கள் நமது புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் நிச்சயம் ஒரு புதிய மறுமலர்ச்சியை உள்ளாட்சித் துறையில் ஏற்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் நகர்ப்புற வறுமையை ஒழிக்க முடியும் என நம்புகிறேன். துப்புறவுப் பணியாளர் புனர்வாழ்வுத் திட்டத்தை நோக்கும்போது, இங்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். துப்புறவுப் பணியாளர் எண்ணிக்கையை அதிகரித்துத் தர வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழை துப்புறவுப் பணியாளர்கள் இரண்டு முறை மஸ்டர் ரோல் கையெழுத்திட்டால் போதும் என இருந்த விதியைக் கடந்த தி.மு.க. ஆட்சி மாற்றியமைத்து, நான்கு முறை மஸ்டர் ரோல் கையெழுத்திட வேண்டும் என ஒரு புதிய விதியை ஏற்படுத்தியது. இது அவர்களது மாமூல் வாழ்க்கையைப் பாதிக்கிறது. எனவே புரட்சித் தலைவி அவர்களின் இந்தப் புனித அரசு இதை மாற்றித் தந்து மீண்டும் பழையபடி இரண்டு முறை கையெழுத்து இடும்படி செய்து தர அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

வெள்ளையர் ஆட்சியிலிருந்த புரட்சித் தலைவர் ஆட்சி வரை 60 ஆண்டுகளாக நகராட்சிகளில் பணிபுரியும் சுகாதாரத் துறை ஊழியர்கள் நகராட்சி சுகாதார அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்தனர். ஆனால் தி.மு.க. அரசு 1990-ல் தமிழ்நாடு பொது சுகாதாரத் துறைச் சட்டம் 1939-ஐ திருத்தம் செய்து, சுகாதாரத் துறைப் பணியாளர்களை கட்டுப்படுத்துதல், மேற்பார்வையிடுதல், நிர்வாகம் செய்தல் போன்றவற்றை



161493

1991 செப்டம்பர் 17] [திரு. பே. தர்மலிங்கம்]

சுகாதார அதிகாரியிடமிருந்து எடுத்து நகராட்சி ஆணையரின் வசம் கொடுத்துள்ளது. இதனால் நகராட்சிகளில் சுகாதாரம் மற்றும் மருத்துவம் சம்பந்தப்பட்ட பணிகள் தற்போது மிகவும் பாதிப்பு அடைந்துள்ளது. பொதுச் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பணிகளை மருத்துவப் பட்டம் பெற்ற ஹெல்த் ஆபீசர்கள் வசம் கொடுத்தால் தான் பொதுச் சுகாதாரப்பணிகள் சீரடையும். மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத்தில் பயிற்சியில்லாத நகராட்சி ஆணையர்களால் பெரிய நகராட்சிகளில் பொது சுகாதாரப் பணிகளை மேற்பார்வையிட முடியாது. எனவே, தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத் திருத்தம் எண். 25/1990-ஐ அரசு திரும்பப் பெற்று மீண்டும் சுகாதாரத் துறை ஊழியர்கள் ஹெல்த் ஆபீசர்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர நடவடிக்கையெடுக்க வெண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள பாளையங்கோட்டை நகராட்சியில் கடந்த தி.மு.க. ஆட்சியில் அருவருக்கத் தக்க வகையில் நடைபெற்ற ஊழலை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் விசாரிக்க உத்தரவிட வேண்டுகிறேன்.

தற்போது பாளையங்கோட்டை நகராட்சியில் கட்டப்பட்டு வருகிற நகராட்சி திருமண மண்டபத்தை துரிதமாகக் கட்டி முடித்து, அந்த மண்டபத்துக்கு அமரர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களது பெயரை வைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-25

எனது தொகுதியில் உள்ள கொக்கிர குளத்தில் நீச்சல் குளம் ஒன்று அமைத்துத் தர வேண்டுகிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சி பொதுமக்கள் வரிப் பணத்தை வங்கிகளில் கட்டவேண்டும் என ஒரு புதிய விதியை ஏற்படுத்தியுள்ளது. இது மக்களுக்கு மிகவும் கடினமாய் இருக்கின்ற காரணத்தினால், நமது புரட்சித் தலைவர் ஆட்சியில் இருந்த பழைய முறைப்படி இதை மாற்றித் தந்து வரிப் பணத்தை நகராட்சி அலுவலகங்களிலேயே கட்டலாம் என மாண்புமிகு முதலமைச்சர் நமது புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட வேண்டுமென அன்புடன் வேண்டுகிறேன்.

கெட்டுப் போய்க் கொண்டு இருக்கிற இளைய சமுதாயத்தைக் காப்பாற்றும் பொருட்டு சுவர்களில், ஆபாச சுவரொட்டிகள் ஒட்டுவதை, நகராட்சி, மாநகராட்சி தடை விதிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பே. தர்மலிங்கம்] [1991 செப்டம்பர் 17

பொதுவாக நகராட்சி மின் கம்பங்களில் போடும் விளக்குகள் அடிக்கடி பியூஸ் ஆகின்றன. அவற்றைச் சரிவர நகராட்சி யால் பழுது பார்க்க முடியவில்லை. எனவே முன்பு இருந்ததைப் போலவே இந்தப் பணியை மின் வாரியத்திடமே நகராட்சி ஒப்படைக்க வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் உள்ள தியாகராஜநகர் பகுதிக்கு 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள 'திருமலை கொழுந்துபுரம்' கிராமத்தில் தாமிரபரணி ஆற்றில் தனியாக ஒரு பம்பிங் ஸ்டேசன் வைத்து குடிநீர் வழங்குவதற்காக ஒரு திட்டம் இருந்தது. கடந்த கால ஆட்சியில் இந்தத் திட்டம் கிடப்பில் போடப் பட்டது. தற்போது புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் இத் திட்டத்தை போர்க்கால நடவடிக்கை எடுத்து அந்த மக்களுக்கு குடிநீர் வழங்க செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பாளையங்கோட்டை, 'தென்னகத்தின் ஆக்ஸ்போர்ட்' என வழங்கப்படும் நகரமாகும். இங்கு குடியிருப்புக் காலனிகள் அன்றாடம் வந்த வண்ணமாக உள்ளன. குறிப்பாக அரசு அலுவலர் காலனிகள் நான்கு, பாரத வங்கி அலுவலர்கள், ஊழி யர்கள் காலனி ஐந்து, எல்.ஐ.சி. காலனி, டெலிபோன் காலனி மின் வாரிய ஊழியர்கள் காலனி, மத்திய அரசு அலுவலர் காலனி, கனரா வங்கி அலுவலர் காலனி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 4 காலனிகள் என்று பல காலனிகளைக் கட்டி யுள்ளன. கிட்டத்தட்ட 10 ஆயிரம் குடியிருப்புகள் உள்ளன. மேற்கண்ட இடங்களுக்கெல்லாம் குடி தண்ணீர் வசதி இல்லை. எனவே பாளையங்கோட்டை நகராட்சிக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் கூடுதல் குடிநீர்த் திட்டம் ஒன்று தயார் செய்து செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

இந்திய நாடு சுதந்திரம் பெற்று 44 ஆண்டுகள் ஆகியும், சிறுபான்மை இன இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் மேலப் பாளையம் நகராட்சி எந்தவித முன்னேற்றமும் ஏற்படாமல், மிகவும் மோசமான, பின்தங்கிய ஒரு நிலையில் இருக்கிறது. அடிப்படை வசதியான குடிதண்ணீர் வசதியே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது மிகவும் நலிந்த ஒரு நகராட்சியாக இருக்கிறது. மின் விளக்கு வசதி இல்லை. எனவே மேலப் பாளையம் நகராட்சிக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலப்பாளையம் நகராட்சியின் ஏழ்மை நிலையை மனதிற் கொண்டு, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்



1991 செப்டம்பர் 17] [திரு. பே. தர்மலிங்கம்]

தாய் உள்ளத்தோடு அதிக நிதியை இந்த மேலப்பாளையம் நகராட்சிக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப் பாளையம் நகராட்சிகளை இணைத்து, இதை ஒரு மாநகராட்சி யாக உயர்த்தித் தரும்படி மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொண்டு, இத்துடன் எனக்குக் கருத்துக்களைச் சொல்ல, வாய்ப்பு அளித்தமைக்கு மீண்டும் நன்றி கூறி என் உரையினை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. எம். சுப்பிரமணியன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொற்கால ஆட்சியை, புரட்சி கர எண்ணத்துடன் பல முற்போக்குத் திட்டங்களைப் போட்டு புரட்சித் தலைவரின் வழியிலே ஆட்சி செய்து கொண்டு இருக்கிற ஏங்களின் இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை நான் வணங்குகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டமான பசும்பொன் மாவட்டம் பிற்படுத்தப்பட்ட மாவட்டம் மட்டுமல்ல, ரொம்பவும் வறட்சிக்குப் பெயர் போன மாவட்டமாகும். அங்கே குடிப்பதற்குத் தண்ணீர் கிடைப்ப தில்லை. அப்படிக் கிடைத்தாலும், கிடைக்கிற இடங்களிலே உப்பு நீராக இருக்கிறது. அந்த உப்பு நீர் கூட வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறைகின்ற காரணத்தால் ஏற்கனவே போடப்பட்ட ஆழ் குழாய்க் கிணறுகள் சீர்கெட்டுப் போகிற நிலைமை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மாற்றாக என்னுடைய யோசனை யாகச் சொல்வது, புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத் திலே பல கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்து, அதை அமுல்படுத்திய காரணத்தாலேதான், இந்த உப்பு நீர் இருக்கின்ற இடங்களிலே நன்னீர் கிடைக்கின்ற வழிவகை செய் யப்பட்டது என்பதை நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஆரம்பிக்கிற போது, ஒரேயிடத்திலே பல கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று கிணறுகளைப் போடுகிறபோது, அந்தப் பகுதியிலே உள்ள நிலத்தடி நீர் ரொம்பவும் கீழே போகின்ற நிலைமை ஏற்படுவதினால், அந்தப் பகுதியிலே உள்ள மக்க ளுடைய எதிர்ப்பையும் அவர்களுடைய கொதிப்பையும் ஏற்படுத்துகிறது என்பதை நான் நினைவு படுத்த விரும்பு கிறேன்.

[திரு. வ. மு. சுப்பிரமணியம்] [1991 செப்டம்பர் 17

நான் சார்ந்திருக்கிற மானாமதுரைத் தொகுதியிலே
வைகை ஆறு போகிறது. அங்கே குடிநீர் கிடைக்கவில்லை என்
பதை நான் மறுக்கவில்லை. பல ஊர்களுக்கு, அருப்புக்
கோட்டைக்கும் சரி, சிவகெங்கைக்கும் சரி, மதுரை மாநகராட்
சிக்கும் சரி, கடலாடிக்கும் சரி, இப்படிப்பட்ட பல ஊர்களுக்கு
ஓரேயிடத்திலே இருந்து ஆழ்குழாய்க் கிணறுகளை எடுத்து,
ராட்சச கிணறுகளைப் போடுகிற காரணத்தால், சோலைவன
மாக இருந்த இடமெல்லாம் இன்று பாலைவனமாக மாறி,
எங்களுக்கும் அங்கே குடிக்கின்ற தண்ணீர் இல்லாமல் போய்
விடுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

இப்போது திருப்புவனம் பேரூராட்சி உள்ளது அது 50,000
ஜனத் தொகை கொண்ட ஒரு பெரிய ஊர். அந்த ஊரில்,
இன்றைக்கு குடிநீர் தட்டுப்பாடு இருந்து கொண்டிருக்கிறது.
அதற்குக் காரணம் இன்றைக்கு அருகாமையில் சில கிலோ
மீட்டர் பக்கத்திலுள்ள அருப்புக்கோட்டைக்குப் பெரிய ராட்சச
கிணறுகள் மூலம் எடுத்துச் செல்கின்ற காரணத்தால் இப்போது
திருப்புவனம் நகருக்கு தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு அங்கே
தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அமைச்சர்
அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் திட்
டங்கள் தீட்டுகின்ற போது எதிர்நோக்கியிருக்கின்ற இடத்திலே
உள்ள வளத்தை பாதுகாக்கின்ற முறையில் அந்த எதிர்நோக்குத்
திட்டங்களைச் செய்ய வேண்டுமேயொழிய, இருக்கின்ற வளங்
களைச் சுரண்டி விட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு இக்கட்
டான சூழ்நிலையை உருவாக்கக் கூடாது என்பதனை நான் மெத்த
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள்
கிராமத்திலேயிருந்து வந்தவர். ஆகையால் இந்தத்
திட்டங்களையெல்லாம் எப்படி செயல் படுத்த வேண்டுமென்று
அவர் நன்றாக அறிந்திருப்பார் என்பதையும், எதிர் நோக்கு
கின்ற திட்டங்களை நினைக்கின்ற நேரத்தில் அந்தக் குறைகளை
யெல்லாம் தவிர்ப்பார் என்றும் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

அதே போன்று மோட்டார் கைப் பம்புகள், விசைப் பம்புகள்
கிராமப் புறங்களிலே போடுகின்றபோது குடிநீர் வடிகால் வாரி
யத்திலே அந்த விசைப் பம்புகள், கைப் பம்புகளுக்குமான குழாய்
கள் போடப்படுகின்றன. அவர்கள் யாரையும் வந்து கலக்கா
மலே தண்ணீர் மட்டம் பார்த்து விட்டு அந்த ஆழ்துளைக்
கிணறுகளைப் போடுகின்றார்கள். அப்படி போடப்படுகின்ற
போது சில சமயங்களிலே அந்தக் கருவிகள் அக்ரோ வேளாண்மைத்
துறையில் செய்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்தி



1991 செப்டம்பர் 17] [திரு. வ. மு. சுப்பிரமணியம்]

லேயும் செய்கிறார்கள். என்ஜின் பற்றாக்குறை காரணமாக
'காண்டிராக்ட் குத்தகை முறைக்கு விட்டு அவர்கள் இந்தத்
துளைக் கிணறுகளைப் போடும்போது அரசாங்கம் குறிப்பிடுகிற
அளவிற்கு இந்தத் துளைக் கிணறுகளைப் போடுவதில்லை. அவர்
கள் 120 அடி போட வேண்டுமென்று சொன்னால், 100 அடி
போட்டு, தண்ணீர் மட்டம் பார்த்து விட்டால் போதும் என்று
பம்பைப் பொருத்தி விடுகிறார்கள். அது ஒரு வருடத்திற்
குக் கூட அந்த வேலை செய்வதில்லை. காரணம் வறட்சியின்
காரணமாக நிலத்தடி நீர் கீழே போய்விடுகின்ற காரணத்தால்
மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டியும், விசைப்
பம்புகள் போட்டும், அவை பயனற்ற சூழ்நிலையில் இருக்கின்ற
காரணத்தால் துளைக் கிணறுகளுடைய ஆழம் 10 ஆண்டுக்
காலத்திற்கு இருக்கும்படி செய்ய வேண்டும். எதிர் நோக்கு
கின்ற ஒரு திட்டமாக செய்ய வேண்டும். பொது மக்களே
முன் நின்று பார்த்து, உண்மையிலே 120 அடி போடுகிறார்
களா என்று பார்க்கும் போது கூட அவர்களையும் ஏமாற்றி
விட்டுச் செய்கிறார்கள். டேப்பை உள்ளே நுழைத்துவிட்டு
60 அடிக்குப் போட்டுவிட்டு, துணி டேப்பாக இருக்கின்ற
காரணத்தால் அதைத் தொங்க வைத்து விட்டு பார்த்தீர்களா
120 அடி போட்டு விட்டோம் என்று அவர்களையும் ஏமாற்றி
விட்டுச் செல்கிறார்கள். இதைக் கண்காணிப்பதற்காக ஒரு
குழு ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனென்று சொன்
னால், கோடிக் கணக்கான ரூபாய்க்கான திட்டங்களை, நாம்
ஊரக வளர்ச்சித் திட்டங்களை கிராமப் புறங்களுக்குச் சேர்க்
கின்றோம். கிராமங்கள் தான் இந்தியாவின் உயிர் நாடி என்று
சொல்லுகின்றோம். புரட்சித் தலைவருடைய ஆட்சி அந்த
அளவிற்கு நிலைத்து நின்றதற்கு அவருடைய ஆட்சி செம்மை
யாக செயல்பட்டதன் காரணமே அவருடைய அடிப்படையான
திட்டங்களான, மின் விளக்கு வசதித் திட்டம், சாலை மற்றும்
சத்துணவுத் திட்டங்கள் ஆகிய காரணத்தினால் அவருடைய
ஆட்சி பெருமை கொள்ளத்தக்க அளவிற்கு இருந்தது. இன்
றைக்கும் அந்த அளவிற்கு இருக்கிறது. இந்தத் திட்டங்கள்
நிறைவேற்றப் படுகின்ற நிலையிலே உண்மையிலே பெரும்பாலான
கிராமப் புறங்கள் நல்ல நிலையில் இருந்தால்தான் மக்க
ளுடைய வாழ்வு மலர்ந்தால்தான் இந்த ஆட்சியும் நீண்ட நாட்
களுக்கு இருக்க முடியும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்றபொழுது
நடைமுறையில் இருக்கின்ற சில சிக்கல்களை தவிர்க்க வேண்டும்.

இப்போது குடிநீர் குழாய்களைப் போடும்போது உப்பு நீராக
இருப்பதால் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், குழாய்
களைப் போட்டால் பயனில்லாமல் போய்விடும் என்று நினைக்
கிறார்கள். குடிநீர் வாரியத்திலிருந்து போடுகின்றவர்கள் இது

[திரு. வ. மு. சுப்பிரமணியம்] [1991 செப்டம்பர் 17

நன்னீரா அல்லது உப்பு நீரா என்று அவர்கள் கண்டு கொள்ள
முடியவில்லை. அது உப்பு நீராக இருக்கின்ற காரணத்தினால்
கிராம மக்கள் குழாய்களை பதிக்க அனுமதிப்பதில்லை. கார
ணம் மீண்டும் ஒரு குழாய் அமைத்து, நல்ல தண்ணீர் தமக்குக்
கிடைக்காத வாய்ப்பு ஏற்பட்டுவிடுமோ என்று அச்சப்படுவதால்
அந்தக் குழாய்களை அமைக்க வருகின்றவர்களை விரட்டிவிடு
கிறார்கள். ஆகையால் இதையெல்லாம் தவிர்க்க வேண்டும்.

இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து
ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் பலதுறைகளில் விரிவாக்க
அலுவலர்கள் இருக்கிறார்கள். ஆனால் அடிப்படை திட்ட
மான மின் விளக்கு வசதிக்காகவும், குடிநீர் விநியோகத்திற்காக
வும் விரிவாக்க அலுவலர்கள் என்று எந்த பஞ்சாயத்து யூன்றி
யத்திலும் யாரும் கிடையாது. ஆனால் மற்ற துறைகளிலே
எல்லாம் இருக்கிறது. இந்த இரண்டுமே முக்கியமான துறைகள்.
அதற்காக விரிவாக்க அலுவலர்கள் இருந்தால் ஒரு கூட்டு முயற்சி,
கூட்டுறவு முயற்சியில் திட்டங்களை சீரமைப்பதற்கும், விரிவு
படுத்துவதற்கும் நலமாக இருக்கும். இப்போது நடைபெறு
கின்ற நடைமுறையில் மின் விளக்குகள் போடுவதற்கு மின் துறை
யில் ஒயர்மென்கள் இருக்கிறார்கள். அந்த ஒயர்மென்களைத்
தேடுவது என்பது மிகவும் சிக்கலாக இருக்கிறது. அவர்கள்
குறிப்பிட்ட காலத்திற்குள்ளே வந்து போடுவதில்லை. அதன்
காரணமாக பல விளக்குகள் எரிவதில்லை. விளக்குகளும்
கெட்டுப் போய் விடுகின்றன. இதை சீரமைப்பதற்கு மின் வாரி
யமும் அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும் ஒருங்கிணைந்து
செயல்பட்டால் தான் அதையெல்லாம் தவிர்க்க முடியும். ஆகை
யால் தான் அவர்கள் மாதம் ஒரு முறை ஒருங்கிணைப்புக் கூட்
டத்தைப் போட்டு, ஒழுங்கு படுத்தி, சீர் செய்தால் தான் இப்படிப்
பட்ட நிலைமைகளை நாம் தவிர்க்க முடியும் என்று கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

முற்பகல் 11.35

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன. இந்த விசைப்
பம்புகளை, மோட்டார்களை பழுது பார்ப்பதற்கு ஒப்பந்தக்காரர்
களுக்கு கொடுக்கப்படுகிறது. அப்படி ஒப்பந்தக்காரர்களுக்கு
கொடுக்கும்போது அவர்கள் மாதக் கணக்கிலே பழுது பார்க்கப்
படுவதாகச் சொல்லிக் கொண்டு இருந்து விட்டு கடைசியில் மோட்
டாரைக் கூட பொருத்தாமல் போய்விடுகின்றனர். அதில்
இது வரை குடிநீர் பருகி பழக்கப்பட்டவர்கள் திடுதிப்பென்று
குடிநீர் பிரச்சினை வருகிற காரணத்தால் அவர்கள் மிகவும்
அல்லோலப்படுகிறார்கள். ஆகவே துறையே முன் நின்று
அந்த விசைப் பம்புகளையும் மின் மோட்டார்களையும் பழுது



1991 செப்டம்பர் 17] [திரு. வ. மு. சுப்பிரமணியம்]

பார்ப்பதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு
வாய்ப்பு அளித்த துணைத்தலைவருக்கு நன்றி கூறி விடைபெறு
கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத்தலைவர்
அவர்களே, உடனடியாக உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல்
நடத்தப்படும் என்று தேர்தல் வாக்குறுதி தந்து ஆளும் கட்சியாக
பொறுப்பு ஏற்றது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்
றக் கழகம். ஆட்சிக்கு வந்த உடனே உள்ளாட்சி மன்றத்
தேர்தலுக்கான அறிவிப்பும் வந்தது.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : லாபியிலே
இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அவையின் நடவடிக்கை
களுக்கு இடையூறாக இல்லாமல் அமைதி காக்குமாறு கேட்டுக்
கொள்கிறேன். திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : அவசர அவசரமாக உயர்நீதி
மன்றத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தாய்மார்களுக்கும் என
ஒதுக்கீடு தந்ததை எதிர்த்து தொடுத்த வழக்கை திரும்பப் பெற்
றார்கள். நாங்கள் உடனடியாக தேர்தல் நடத்தப்படும் என்று
நம்பினோம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்
திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களும் சென்ற இடமெல்லாம்
உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படும் என்று சொல்லி வந்தார்கள்.
என் நினைவு சரியாக இருக்குமானால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித்
தலைவர் கூட கேட்டுக் கொண்டார் 'இப்போதுதானே சட்ட
மன்றத் தேர்தல்கள் எல்லாம் நடைபெற்றன. கொஞ்சம்
இந்த தேர்தல்களை தள்ளி வைக்கலாமே என்று' கேட்டார்.
அது கூட முடியாது என்று அரசாங்கத்தின் தரப்பிலே அறிவிக்கப்
பட்டது. நாங்களெல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்கான
தேர்தல்கள் உடனடியாக நடைபெறும் என்று நம்பினோம்.
ஆனால் தேர்தல்களுக்கு சில தினங்களுக்கு முன்னால் உள்ளாட்சி
தேர்தல் தள்ளி போடப்பட்டு விட்டது என்ற அறிவிப்பு வந்தது.
அந்த அறிவிப்பு வந்த அதே நாளிலே தான் மாண்புமிகு உள்
ளாட்சித் துறை அமைச்சரின் "கட்டாயம் தேர்தல் நடத்தப்
படும்" என்று அறிவிப்பும் இருந்தது. ஒரே பத்திரிக்கையிலே
இரண்டு அறிவிப்புகளும் வந்தது எங்களுக்கு அதிர்ச்சியையும்,
வியப்பையும் தந்தது. அது மட்டும் அல்ல, அதற்கு சொல்லப்
பட்ட காரணம் காவிரி நீர்ப் பிரச்சினையில் ஏற்பட்டிருக்கிற
கலவர சூழ்நிலையின் காரணமாக உள்ளாட்சி மன்ற தேர்தல்
கள் தேதி தள்ளி வைக்கப்பட்டன என்று அறிவிப்பு இருந்தது.

ஆனால் காவிரியைப் பற்றி அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த கருத்தோடு இருக்கிறபோது என்ன கலவர சூழ்நிலை தமிழ் நாட்டிலே என்று எங்களுக்குப் புரியவில்லை. அதற்கும் மேலாக சட்டமன்றத்திற்கான இடைத் தேர்தல்கள் நான்கு இடங்களில் நடைபெற்றன என்பதைப் பார்க்கிற போது அத்தகைய சூழ்நிலை இல்லை. வேண்டுமென்றே சொல்லப்பட்டது தான் இது என்று மக்கள் கருதினார்கள். அதில் உண்மையான காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கான உண்மையான காரணத்தை சொல்லாததன் காரணமாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தை கற்பனை செய்து கொண்டார்களே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அன்றைய சூழ்நிலை என்ன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இருந்தாலும் இந்த அவையிலே அதை தெரிந்த மாதிரி காட்டிக்கொள்ள முடியாது என்பது எனக்குத் தெரியும். அன்றைக்கு என்ன சூழ்நிலை ஏற்பட்டது என்று சொன்னால் உள்ளாட்சி தேர்தலை நடத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தான் அன்றைக்கு, அனைத்திந்திய அண்ணா தி. மு. க.-வின் பொதுச் செயலாளராகவும், தமிழகத்தினுடைய முதல்வராகவும் இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் அந்த நடவடிக்கையை எடுத்தார்கள். ஆனால் தமிழகத்திலே மிக அத்தியாவசியமான ஒரு பிரச்சினை ஏற்பட்டது. காவிரி பிரச்சினை என்பது இந்திய துணைக் கண்டத்திலே மற்றவர்களுக்கு அது பெரிய பிரச்சினையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்த வரையில் அது உயிர் பிரச்சினையாக இருந்த காரணத்தால், அதில் ஒருமித்த கருத்தோடு அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இருந்து ஒரே குரலில் நாம் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்ட காரணத்தால் அன்றைக்கு அது தள்ளி வைக்கப்பட்டது. அதிலே ஒன்றைச் சொன்னார்கள். இடைத் தேர்தல் 4 இடங்களிலே நடந்ததே இதை நடத்துவதற்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று சொன்னார்கள். அவரே சொன்னார்— நான்கே இடம் அது. எனவே அந்த 4 இடத்திலே பெரிய பிரச்சினைகள் உருவாவதன் காரணமாக நமக்குள்ளே பெரிய பிளவு ஒன்றும் ஏற்பட்டு விடாது. ஆனால் ஒவ்வொரு கிராமத்திலேயும் லட்சக் கணக்கான பேர் போட்டி போடுகிற ஒரு சூழ்நிலை. உள்ளாட்சி தேர்தல் என்பது ஒருவர் இருவர் அல்ல. இலட்சக் கணக்கான பேர் போட்டி இடுகிற ஒரு தேர்தலிலே



கருத்து வேறுபாடு வந்து பிரச்சினைகள் ஏற்படுமானால் இதற்கு முக்கியத்துவம் இல்லாமல் நாம் பிரிந்து நின்று விடுவோமோ என்ற காரணத்திற்காகத்தான் அந்த உயிர் பிரச்சினைக்காக இந்த தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது. வேறு எந்த உள்நோக்கமும் இல்லை என்று சொல்லுகிற காரணத்தை அவர் ஏற்றுக்கொள்வார் என்று கருதுகிறேன்.

முற்பகல் 11-40

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு உள்நோக்கம் இருக்கிறது. அதனாலே தேர்தல்களை தள்ளி வைத்தார்கள் என்று நான் சொல்லவில்லை. அந்தத் தேர்தலை தள்ளி வைப்பதற்கு காட்டப்பட்ட காரணம் சரியான காரணம் அல்ல என்று தான் நான் சொன்னேன். அதற்கு காரணம் காவேரி பிரச்சினையிலே அனைத்து தரப்பாரும் சேர்ந்து முழு கதவடைப்பு நடத்தியிருக்கிறோம். என்ன வேண்டுமானாலும் நாடு அதற்கு செய்யத் தயாராக இருக்கிறது. நாட்டில் உள்ள மக்கள் பிளவுபடக்கூடிய சூழ்நிலையே இல்லை. ஆனாலும் அந்தக் காரணம் தெரிவிக்கப்பட்டது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்பது தான் உண்மையான கருத்து. மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்களுக்கும் அது தெரியாதது அல்ல. தேர்தல்களை தள்ளி வைப்பதற்கு காரணங்களை கண்டு பிடிப்பது வழக்கம் என்பதை அவரும் நன்கு அறிவார்கள் என்பதை நான் அறிவேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அவர் இருக்கின்றபோது நன்றாகவே காரணங்களை கண்டு பிடித்துக்கொண்டு இருந்தார்கள். எனவே இப்பொழுது நாங்கள் அப்படி காரணத்தைக் கண்டுபிடிக்கவில்லை. நாங்கள் சொல்வது எல்லாம் இலட்சக்கணக்கான பேர்கள் போட்டியிடுகிறார்கள். தேர்தலிலே வேட்பாளர்கள் என்று சொன்னால், சட்டமன்றத் தேர்தல் என்று சொன்னால் 234 பேர்கள். ஆனால் உள்ளாட்சித் தேர்தல் என்று சொல்கின்றபோது கணக்கில் அடங்காத அளவுக்கு போட்டியிடுகிறார்கள். அப்படி போட்டியிடுகின்றபோது கட்சியிலே தனியாக பிரிந்து நின்று பெரிய ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையிலே தான் ஒவ்வொரு தேர்தலிலும் நடப்பதை நாம் பார்க்கிறோம். ஒவ்வொரு கட்சியின் மீதும் இன்னொரு கட்சி பலவிதமான கருத்துக்களைச் சொல்வதை நாம் பார்க்கிறோம். எனவே அதன் காரணமாக ஏதாவது பிளவு வந்து விடக்கூடாதே ; நாம் காவேரிப் பிரச்சினையில் எல்லோரும் ஒன்றாக இருந்தோம் என்பதிலே எங்களுக்கும் கருத்து வேறுபாடு இல்லை. வேறு எந்தக் காரணமும் இல்லை. இந்தக் காரணத்திற்காகத் தான் அன்றைக்கு தள்ளி வைக்கப்பட்டதே ஒழிய வேறு எந்தக் காரணமும் அல்ல. அவர்கள் அதைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லை.

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி பிரச்சினையில் தமிழ்நாடு ஒத்த கருத்திலே இருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்சினைக்கு எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். தேர்தல் நடத்துவதினாலே அந்தப் பிரச்சினை பாதிக்கப்படும் என்று சொல்வது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதைப் போல இருக்கிறது என்பது தான் என்னுடைய கருத்து. இப்போது கூட ஒன்றும் குடி மூழ்கிப்போய்விடவில்லை. இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்து உடனடியாகத் தேர்தலை நடத்தலாம். ஏனென்றால் இந்த ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படுவது மிக மிக முக்கியம். அந்தத் தேர்தல்கள் நடத்தப்படாத காரணத்தினால் இன்றைக்கு பல்வேறு சூழ்நிலைகள் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சான்றாக சொல்லப் போனால் இந்த சட்டமன்றத்தினுடைய உரிமைகள் இந்த சட்ட மன்றத்தின் மூலம் உள்ளாட்சி மன்றங்களை நிர்வகிக்க வேண்டிய நம்முடைய அதிகாரங்கள், பாராளுமன்றத்தின் அரசியல் சட்ட திருத்தத்தின் மூலம் பறிக்கப்படுகின்றன. அதற்கான சட்ட மசோதா நேற்றையதினம் பாராளுமன்றத்திலே அறிமுகமாகி இருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாம் செய்யத் தவறியது என்ற காரணத்தைக் காட்டி இதனாலே குறை ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக நம்முடைய மன்றத்திற்குரிய அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. அதை பார்த்துக்கொண்டு நாம் சும்மா இருக்கலாமா என்பது தான் என்னுடைய கேள்வி. இந்திய அரசியல் சட்டத்தில் 72-ஆவது திருத்தமும், 73-ஆவது திருத்தமும் நேற்றையதினம் பாராளுமன்றத்திலே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்த அரசியல் சட்ட திருத்தம் பஞ்சாயத்துக்களை நிர்வகிப்பதற்கும், நகராட்சிகளை நிர்வகிப்பதற்கும் வழிவகை செய்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற அரசியல் சட்ட அமைப்பில், அமைப்பு ரீதியாக உள்ளாட்சி மன்றங்கள் முழுக்க முழுக்க மாநில சட்ட மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டவை. மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்டவை. பேஸிக் ஸ்ட்ரக்ச்சர்—அடிப்படை அமைப்பையே மாற்றக்கூடாது என்று வாதாடி வருகிறோம் நாம். ஆனால் இன்றையதினம் அரசியல் சட்டத்தைத் திருத்தி —ஏனென்றால் அரசியல் சட்டத்தில் ஏற்கனவே வழி செய்யப்படவில்லை. அரசியல் சட்டத்தை திருத்தி—இந்த உரிமைகளை இந்திய அரசு பறித்துக்கொள்கின்ற வகையில் பாராளுமன்றத்தில் சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே கூட ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தர தாஸ் : தலைவர் அவர்களே, மத்திய அரசு பறிக்கிறது என்று சொல்கின்ற வார்த்தை சரியாக இருக்காது. ஏனென்று சொன்னால் அந்த மசோதாவினிலே தமக்குத்



தான் அதிகாரங்கள் இருக்கின்றன. அதனுடைய தேர்தலை பற்றித்தான் இருக்கிறதே தவிர அதிகாரங்களை பறிக்கிறது என்று சொல்கின்ற வார்த்தை அவைக் குறிப்பிலே சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் கருத்தைச் சொல்கிறார்கள். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இருப்பதை எடுத்துக் கொள்கின்றபோது என்ன வார்த்தையை போட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களேயானால் அந்த வார்த்தையைப் போட்டுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். இருப்பதை எடுத்துக்கொள்வது, பறிப்பது என்று தான் தமிழிலே சொல்வது. அது ஒன்றும் தவறான வார்த்தை அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தர தாஸ் : துணைத் தலைவர் அவர்களே, பறிக்கவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. மத்திய அரசு பறிக்கவில்லை.

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் சட்டத்தில் 72-ஆவது திருத்தம் எதெதற்கு வகை செய்கிறது தெரியுமா? பஞ்சாயத்து சட்டத்தில் கிராம சபை அமைக்க வகை செய்கிறது. இது அதிகாரத்தை பறிப்பது இல்லையா? நேரடி தேர்தல் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் நடத்தப்பெற வேண்டும் என்ற அதிகாரத்தை அவர்கள் எடுத்துக் கொள்கின்றார்கள்.

முற்பகல் 11-45

இதை நாம் ஏற்கனவே இங்கே நடைமுறைப்படுத்தி இருக்கி றோமே. அதை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன? தாழ்த்தப்பட்டவர்களுக்கும், தாய்மார்களுக்கும் ஒதுக்கீடு தரவேண்டும். அதற்கு என்ன இந்த மன்றம் ஆட்சேபனை செய் கிறதா? 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்; பஞ்சாயத்து கலைக்கப்பட்டால் 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண் டும். அதை மத்திய அரசினுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு இருக்கிற தேர்தல் கமிஷன், இங்கே மாநிலத்தில் இருக்கக்கூடிய தலைமை தேர்தல் அதிகாரி அவர்கள் நடத்துவார்கள். இதற்கு எல்லாம் என்ன பொருள்?

அதோடு மட்டுமல்லாமல் மாநில சட்டமன்றத்திற்கு நிதி
கமிஷன், இந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்
வதற்காக நிதிக் குழுவை நியமிக்க வேண்டுமென்று தாக்கீது
பிறப்பிப்பதற்கும் அந்த அரசியல் சட்டத் திருத்தத்திலே வழி
வகை செய்யப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்கள் பொருளா
தார வளர்ச்சிக்கான திட்டங்களைப் போட்டாலும் அந்த திட்டத்
தில் சமூக நீதி நிறைவேற்றவேண்டும் என்றாலும் அந்தத் திட்டங்
களை செயல் படுத்துகின்ற முறையிலேயும் எல்லாம் மத்திய அரசு
அதாவது இந்திய அரசியல் சட்டத் திருத்தத்தின்படி மாநில
அரசுக்கு அல்லது மாநில சட்டமன்றத்திற்கு அவர்கள் வழிவகை
களை பிறப்பிக்க முடியும். ஊராட்சி தேர்தலுக்காக மாநில தேர்
தல் அதிகாரியின் மூலம் தேர்தல் நடத்துவது சட்டப்
பேரவைக்கு இருக்கின்ற அதிகாரத்தை இது பறிக்கிறதா ?
இல்லையா? என்பதை இந்த மன்றம் நன்கு உணர வேண்டும்.

இந்திய அரசு பலம் வாய்ந்த அரசாக இருக்க வேண்டும்.
ஏற்றுக்கொள்கிறோம். பாதுகாப்பு, வெளியுறவு, அன்னிய செலா
வணி, பொருளாதாரம் இவற்றையெல்லாம் கட்டிக் காப்பாற்று
கின்ற ஒரு பலம் வாய்ந்த அரசாக இருக்க வேண்டும். ஆனால்
பஞ்சாயத்தை நடத்துவதற்காக அவர்கள் வரவேண்டுமா. காலம்
காலமாக மக்கள் ஆட்சி முறை அமல்படுத்திய ; சோழர் காலத்
திலிருந்து அமல்படுத்திய ; தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு
இருக்கின்ற அரசு ஆனாலும் சரி, அல்லது இந்த சட்டமன்றம்
ஆனாலும் சரி, ஊராட்சி மன்றங்களை நிர்வகிப்பதற்குக்கூட அரு
கதை இல்லையா என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப்
பார்க்கவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் யார்
பேசப் போகிறீர்கள். ஒரே நேரத்தில் எல்லோருமே எழுந்து நிற்கி
றீர்கள். தலைவர் பேசட்டும். உறுப்பினர்கள் அனைவரும் தயவு
செய்து அமருங்கள். உங்களுடைய கட்சித் தலைவர் இங்கே இருக்
கிறார். யாராவது ஒருவர் பேசுங்கள்.

திரு. மா. சுந்தர தாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இது நம்முடைய தமிழகத்திற்கு மட்டும்
அல்ல. அகில இந்திய அளவிலே பஞ்சாயத்துக்களை நடத்த வேண்
டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு மசோதா. ஆனால்
தமிழகத்தை பொறுத்த வரையில் இது நம்முடைய அதிகாரத்தைப்
பறிப்பது அல்ல. இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலத்
திற்கும் சேர்த்து தான் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்
கிறார்கள். 5 ஆண்டுகளுக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்
கின்ற அந்த காரணத்தைத் தவிர நம்முடைய அதிகாரத்தை எடுப்
பதற்காக அல்ல. ஆகவே அந்த எண்ணத்தில் இந்த அவையில்



சொல்லக்கூடாது. அது தெரியாதது அல்ல. தவறான கருத்தை
இந்த அவையில் சொல்லக்கூடாது என்று சொல்லக் கடமைப்பட்
டிருக்கிறேன். அது கூட தேர்தல் நடத்துவதற்கு மட்டும் தான்.
எந்த அதிகாரத்தையும் மத்திய அரசு எடுக்கவில்லை. எல்
லோருக்கும் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் போது
அந்த முறையில் எந்த அதிகாரத்தையும் பறிக்கவில்லை. தேர்தல்
நடத்துவதற்கு மட்டும்தான் சொல்லுகிறார்கள் நாம்
5 ஆண்டுகளில் தேர்தலை நடத்தியிருக்கிறோமா? தமிழகத்தில்
மட்டும் அல்ல. இந்தியா முழுவதிலும் நடத்தவில்லை. காங்கிரஸ்
ஆளும் சில மாநிலங்களில் கூட தேர்தல் நடத்தவில்லை. கேரளா
வில் கூட இப்போது தான் தேர்தல் நடத்தியிருக்கிறார்கள். பல்
வேறு மாநிலங்களில் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் கூட தேர்தல்
நடத்தப்படவில்லை. ஆகவே இந்த சட்டம் வந்து எல்லா மாநிலத்
திற்கும் சேர்த்து தானே தவிர தமிழகத்திற்கு மட்டும் அல்ல
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி.)

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களுடைய தேர்
தல்கள் பல மாநிலங்களில் நடத்தப்பட வேண்டும் என்ற
காரணத்திற்காகத்தான் இப்போது இந்த மசோதாவைக் கொண்டு
வந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் பல மாநிலங்களுக்கு
மத்திய அரசிடமிருந்து தான் நிதி ஒதுக்கீடுகள் உள்ளாட்சிகளுக்கு
ஒதுக்கப்படுகின்றது. அந்த உள்ளாட்சிகளுக்கு ஒதுக்குகின்ற நிதி
களை ஒழுங்காக மக்களுக்கு போய் சேர வேண்டும் என்பதற்கா
கவும் தேர்தல் நிச்சயம் அவசியம் என்ற காரணத்திற்காகவும்தான்
இப்படி மசோதாவை மத்திய அரசு போடுகிறதே தவிர மாநில
அரசினுடைய உரிமைகளைப் பறிக்க வேண்டும் என்ற காரணத்
திற்காக இந்த மசோதா போடப்படவில்லை என்பதை
இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு எங்கேயோ வானத்தி
லிருந்து நிதி வந்து குவிந்து விடுவது அல்ல. எல்லா மாநில
மக்களும் சேர்ந்து அளிக்கிற வரிப் பணம் தான் மத்திய அரசில்
இருக்கிற நிதி. ஆகவே, அது மாநிலங்களுக்கு வருகிறது.
இன்னும் சொல்லப்போனால் நியாயமாக வரவேண்டிய அளவுக்கு
வரவில்லையே என்பதுதான் மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய
குறை.

மற்றொரு கருத்தைச் சொன்னார்கள். இங்கே தமிழ்நாட்டுக்கு
மட்டும் அல்ல எல்லா மாநிலங்களுக்கும் என்று. நான் ஏற்றுக்
கொள்கிறேன். தமிழ்நாட்டுக்கு மட்டும் என்று நான் சொல்ல

வில்லை. அதாவது என் தலையை மட்டும் மொட்டை அடிக்க
வில்லை. எல்லோர் தலையையும் மொட்டை அடிக்கின்ற
திருப்பதி என்று சொல்கிறார்கள். நான் அதை மனமார
ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இதில் இருக்கின்ற பிரச்சினை
என்ன? ஊராட்சி மன்றங்களை, ஊராட்சி ஒன்றியங்களை,
நகராட்சி மன்றங்களை, மாநகராட்சிகளை இதுவரையில் நடத்தக்
கூடிய பொறுப்பு மாநிலங்களுக்கு இருந்தது. அவர்கள் தவறு
செய்தால் அதைத் திருத்துங்கள். அவர்கள், நாம் எதிர்பார்த்த
அளவிற்கு நிர்வகிக்கவில்லையென்றால், அவர்களை அழைத்து
அதற்கு என்ன காரணம், காரியம் என்று கேட்டு, அதைத் திருத்
துங்கள். மாணவன் சரியாகப் பரிட்சை எழுதவில்லையென்றால்
சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர் சரியாகச் சொல்லிக் கொடுக்
காமல் இருக்கலாம் அல்லது மாணவன் கூட ஒருவேளை சரியாகப்
படிக்காமல் இருக்கலாம். அதற்காக ஆசிரியரே உட்கார்ந்து
பரிட்சை எழுதலாமா. ஒரு மாநிலம் தேர்தல்களை நடத்தவில்லை
என்றோ அல்லது தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு தரவில்லை
என்றோ அல்லது தாய்மார்களுக்கு ஒதுக்கீடு, தரவில்லை என்றோ
அல்லது போதிய நிதியாதாரங்களைத் தரவில்லை என்றோ
சொன்னால் அதை இந்திய அரசே எடுத்துக்கொள்ளலாமா?
அப்படி என்ன பஞ்சாயத்துக்களை மாநிலங்கள் பட்டினி போட்டு
விட்டன. ஆகவே, இதையெல்லாம் எண்ணிப்பார்க்கின்றபோது,
இந்த உள்ளாட்சி மன்றங்களை நிர்வகிப்பதற்கு, உள்ளாட்சி
மன்றங்களை நல்லமுறையிலே நடத்துவதற்கு, இன்னும் சொல்லப்
போனால் ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கக்கூடிய தனித் தன்
மைகளைக் காப்பாற்றுவதற்கு என்று இந்திய அரசியல் சட்டத்தை
உருவாக்கிய கர்த்தாக்களே என்ன சொன்னார்கள் என்றால்,
இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய அந்த மேதைகளே
இவைகளையெல்லாம் மாநிலத்திற்கே இருக்கவேண்டுமென்று
சொல்கிறபோது, இப்போது புதிதாக வந்து நுழைகின்ற காரணத்
தினால், நாளைக்கு ஒரு பஞ்சாயத்து கலைக்கப்பட்டு அதற்கு
தேர்தல் நடத்துவதற்கு என்றாலும் கூட மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சருக்கு அதிகாரம் இருக்குமா என்று எங்களுக்குச்
சந்தேகமாக இருக்கிறது ...... (மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர்கள் கவனிக்க வேண்டும். உறுப்பினர்கள்
அத்தனை பேரும் எழுந்து நிற்கிறார்கள். பொறுப்பாளர்கள்
ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

திரு. மா. சுந்தர தாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரை
யிலே மாண்புமிகு ]உறுப்பினர் அவர்களுக்கு விளக்கம் வேண்டும்



என்று சொன்னால், அவருடைய கட்சியிலே அங்கே எம்.பி.-க்கள்
இல்லையென்று சொன்னாலும் வேறு யாரிடமாவது சொல்லி
யாவது பாராளுமன்றத்திலே இதுபற்றி பேசட்டும். பிரச்சினை
இல்லை. அதற்குத் தகுந்த பதில் அளிப்பதற்கு அமைச்சர்கள்
அங்கே தயாராக இருக்கிறார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்த
வரையிலே, இங்கே அதற்கு பதில் சொல்வதற்கு, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற நிலைமைகளைத்தான்
பேச முடியுமே தவிர, டெல்லியைப்பற்றிப் பேச முடியாது. ஆகை
யால், மாண்புமிகு உறுப்பினருக்கு விளக்கம் தேவைப்பட்டால்
தங்கள் கட்சியிலே எம்.பி. இல்லையென்று சொன்னால், யாரிட
மாவது சொல்லி, டெல்லியிலே, பாராளுமன்றத்திலே பேசி அதற்கு
பதில் வாங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் நலன்
காப்பதிலேயும், தமிழ் நாட்டு உரிமைகளைக் காப்பதிலேயும்
இன்றைய மாண்புமிகு முதலமைச்சர், நம்முடைய இதய
தெய்வம், புரட்சித் தலைவிக்கு ஈடு இணையானவர்கள் இந்தியத்
துணைக்கண்டத்திலேயே இல்லாத காரணத்தினாலே (மேசையை
தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுககு அதிகாரம்
பறிக்கப்படும் என்ற அச்சம் தேவையில்லை என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய
கொள்கை கூட டீ சென்ட்ரலைசேஷன் ஆஃப் பவர்ஸ்—தான்.
அதிகாரங்கள் மத்தியிலே குவிந்திருக்க வேண்டுமென்பதில் எங்
களுக்கும் ஆட்சேபனை இருக்கிறது. குறிப்பாக காவிரி நீரிலே
நாம் இணைந்து நிற்கின்றோம். மாநிலங்களினுடைய வளர்ச்சி
பாதிக்கிறது என்றால் அதற்குக் காரணம், மைய அரசு கையிலே
குவிந்திருக்கிற அதிகாரங்கள் என்று சொன்னால், அதை அன்னை
இந்திராகாந்தி அவர்கள்கூட உணர்ந்துதான், சர்க்காரியா
கமிஷனை, இன்டர்-ஸ்டேட் விவகாரங்களுக்காக நியமித்தார்கள்.
அதிலெல்லாம் ஆட்சேபனை கிடையாது. ஆனால் மாண்புமிகு
உறுப்பினர் பண்ருட்டி அவர்கள் மறைந்த எங்களுடைய
தலைவர், பாரதப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி அவர்
களிடம் செல்லப் பிள்ளையாக இருந்து, சோட்டா இராமச்
சந்திரனாக இருந்தபோதெல்லாம் இந்தப் பிரச்சினையை அவர்
கள் எழுப்பவே இல்லை. இப்போது சொல்கின்றார்கள், 'காட்
கில்' ஃபார்முலாவின்படிதான் நிதியை ஒதுக்கித் தருகின்றார்கள்.
மைய அரசு தன்னுடைய பணத்தை மாநிலங்களுக்கு ஒதுக்கித்

தருகிறது. அந்த 'காட்கில்' ஃபார்முலாவிலே கைவைத்து மாற்றியபொழுது, வி. பி. சிங் அவர்கள் மாற்றியபொழுது வாய் திறக்காதவர்கள், மௌனமாக இருந்தவர்கள். மாநிலங்கள் பாதிக்கிறது என்று சொல்லாமல் இருந்தவர்களெல்லாம் இன்றைக்கு சட்டமன்றத்திற்குள்ளே இடங்கள் மாறி இருக்கிறது ; அப்போசிஷனிலே இருக்கின்றோம் என்பதற்காக ஒன்றைப் பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தோடு மட்டுமல்ல, இப்போதுதான் அவர்கள் கேட்டார்கள், உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும், ஏன் மாற்றிவைத்தீர்கள் என்று. இதை கான்ஸ்டிடியூஷன்படி அரசியல் சாசன ரீதியாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை எலக்ஷன் கமிஷன் நடத்தும் என்று சொன்னால், இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டு இருக்கவே வேண்டியதில்லை. ஒருபுறம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து ஏன் நடத்தவில்லை என்று கேட்கிறார்கள் ; மற்றொருபுறம் இப்படி ஒரு மசோதா எதற்கு என்றும் கேட்கிறார்கள் ; அதனால் இது தேவையில்லாதது. நீங்கள் இருக்கின்ற இடம் மாறிவிட்டதற்காக வார்த்தைகளும் மாறிவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் எங்களுக்கெல்லாம் மூத்த உறுப்பினர் என்கிற வகையிலே எங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டுமென்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு பண்ருட்டி அவர்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் ராஜிவ்காந்தி அவர்களுக்கு நான் நெருங்கிய நண்பன் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நான் நெருக்கமாக இருகிறபொழுதெல்லாம் அவர், இதைப் போலஎல்லாம் கொண்டுவரவில்லை என்பதையும் இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இடம் மாறியதனால், (குறுக்கீடு) இருங்கள், இருங்கள்—நான் இப்படிப் பேசுகிறேன் என்று சொல்கிறார். அதுவும், தவறு. இது ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல. இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கலாம். நாளைக்கு இன்னொரு இயக்கம் ஆட்சிக்கு வரலாம்.

முற்பகல் 11-55

நான் சொல்வது, இந்த மன்றம் இதுவரையில் நிர்வகித்து வந்த அதிகாரங்கள் பறிக்கப்படுவதற்கான—அதாவது, பறிக்கப்படுவது என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், எடுத்துக் கொள்ளப்படுவதற்கான சூழ்நிலை இருக்கிறது. இது தேவையற்றது. இந்தத் தேர்தல் நடத்தவில்லை என்றால், தேர்தல்



நடத்தச் சொல்லி மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்கின்றோம். கேட்கத்தான் வேண்டுமே தவிர, அதற்காக அந்த அதிகாரத்தை எடுத்துக் கொள்வது என்ன நியாயம் என்றுதான் நான் இந்தப் பிரச்சினையை எழுப்பினேனே தவிர வேறு அல்ல.

ஆகையினாலே, மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுகிறது" என்கிற கதையாக, நீங்கள் தேர்தல் நடத்தவில்லையென்றால், இன்னும் என்னென்ன அதிகாரங்களெல்லாம் பறிபோகுமோ ? அதையெல்லாம் எண்ணிப் பார்த்து, உடனடியாக உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துங்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். உள்ளாட்சி மன்றங்களுக்கு (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துகிறபொழுது (குறுக்கீடு) என்ன, பழமொழி கூடவா சொல்லக் கூடாது ? சரி, வேறு ஏதாவது ஓர் பழமொழி சொல்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : எக்ஸ்பஞ்ச் செய்யச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, நீங்களாகவே வலிந்து பொருள் கொள்வது அவ்வளவு சரியாக இருக்காது. (குறுக்கீடு) It is not unparliamentary.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மத்திய அரசுதான் ஓநாயா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள்தான் அப்படிக் கற்பனை செய்து கொள்கிறீர்கள். அவர் அப்படி நேரடியாகப் பேசவில்லை. நீங்கள் வலிந்து பொருள் கொண்டு, இப்படி விவாதம் செய்வது சரியல்ல. நீங்கள் வேண்டுமானால் நீங்கள் பேசும் பொழுது அந்தக் கருத்தை மறுத்துப் பேசுங்கள். தயவு செய்து அமருங்கள். திரு. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பல மிருகங்களைப் பற்றி நாம் உதாரணத்திற்குச் சொல்வது வாடிக்கை. அவர்களே சொல்லியிருக்கிறார்கள். பலமுறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இந்த பஞ்சாயத்து ஆக்ட் முனிசிபல் ஆக்டில் என்னென்ன கருத்துக்கள் வரப் போகின்றன என்பது நமக்கு— இந்தப் பேரவைக்குத் தெரியாது என்ற காரணத் தாலே இதுபற்றி விவாதங்களை மீண்டும் ஒரு முறை வைத்துக் கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரே நிமிஷத்திலே நான் முடித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நன்றி.

திரு. ச. இராமச்சந்திரன் : பேரறிஞர் அண்ணா அவர்கள் உள்ளாட்சி மன்றங்களைப் பற்றி ஒன்றைச் சொன்னார்கள். " உள்ளாட்சி மன்றங்கள் நிர்வாகம் செய்பவை. அங்கு அரசியலுக்கு இடமில்லை. ஆகவே, குடிநீர் வசதி செய்வதும், சாலைகள் போடுவதும் தெரு விளக்குகள் பராமரிப்பதும், பொது நல வேலை செய்வதும் என்று இருக்கின்ற காரணத் தினாலே, எந்த அளவிற்கு அரசியலை உள்ளாட்சி மன்றங் களில் குறைத்துக் கொள்கிறோமோ அது நல்லது " என்று சொன்னார்கள்.

இன்னும் சொல்லப்போனால், உள்ளாட்சி மன்றங்களுக் கான தேர்தல்கள் நடைபெறுகிறபொழுது அரசியல் கட்சி ரீதியிலேயே போட்டியிட்டு நாம் மக்களைப் பிரிக்க வேண்டிய தில்லை என்பதையும் வற்புறுத்தினார்கள். ஆனால் அது ஒரு காலத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இன்று அரசியல் ரீதியாக ஊராட்சி மன்றம் வரை போட்டியிடுவதற்கான சூழ் நிலை இருக்கிறது. அரசியல் ரீதியாகப் போட்டி என்று வந்தால், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால், அதே நேரத்தில், உள்ளாட்சி மன்றங்களின் தேர்தலில் அரசியலைப் புகுத்த வேண்டுமா என்பதைப் பற்றி அரசு மீண்டும் அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். தேவைப்பட்டால் அனைத்துக் கட்சித் தலைவர்களையுப் கலந்து கொண்டு—அவை கொள்கை வழி சட்டங்கள் இயற்று கின்ற மன்றங்கள், அல்ல, ஆகையினாலே அங்கே கட்



சார்பற்ற முறையில் தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆர். டி. அரங்கநாதன்.

திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் போன்ற சாமானியர்களையெல்லாம் இந்த மன்றத்திலே இடம்பெற வைத்து, மக்கள் தொண்டில் ஈடு படுகின்ற நேரத்திலே தூய்மையுடனும், நேர்மையான வழியில் நாணயத்துடன் பணியாற்றிட ஆக்கமும் ஊக்கமும் தந்து, எங்களை வழி நடத்துகின்ற எங்களின் பாசமிகு தலைவி என் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வரவர்களின் பாதமலர்களைத் தொட்டு வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

குறிப்பாக, என்னுடைய விருத்தாசலம் நகருக்கு மத்திய ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விருத்தாசலம் நகருக்கு ரூபாய் ஒரு கோடியே இருபது இலட்சத்தை வாரி வழங்கிய வள்ளலின் வாரிசு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் உளமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

நண்பகல் 12-00

எனது தொகுதியில் உள்ளடங்கிய விருத்தாசலம் கடந்த 17—1—1970 முதல் நகராட்சியாக அமைக்கப்பட்டு 24·24 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட நகராட்சி யாக இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கின்ற நடப் பாண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 52,376 பேர் வாழ்கின்ற இந்த நகராட்சிக்கு நாள் ஒன்றுக்கு பல் வேறு பகுதிகளிலிருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். விருத்தாசலம் "காசி யை விட வீசம் அதிகம்" என்று சொல்லக்கூடிய அளவிற்கு மிகவும் புண்ணிய ஸ்தலமாகும்.

தென்னாற்காடு மாவட்டத்திலே, மிகவும் பிற்படுத்தப்பட்டப் பகுதியாக உள்ளதாலும், இந்த நகரைச் சுற்றியுள்ள சுமார் 168 கிராமங்களிலிருந்தும் தங்களது அத்தியாவசியத் தேவைக்கு, விருத்தாசலம் நகருக்கு நாள்தோறும் மக்கள் வந்து செல்வது மிக அவசியத் தேவையாக உள்ளது. மேலும் ஐநூறுக்கும் மேற்பட்ட பேருந்துகள் இந்த நகரை மையமாகக் கொண்டு வந்து போய்க் கொண்டிருப்பதால், போக்குவரத்து நெரிசல், தவிர்க்க முடியாத நிலையாக உள்ளது. இதனால், ஒரு வழிச்சாலையை மாற்றி, நகரின் புறவழிச்சாலையை அமைத்துக் கொடுக்க இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தனி ஒரு மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை நகராட்சிகள் மூலமாகவே பெற வேண்டியுள்ளதால், நகராட்சி நிர்வாகம் செம்மையாகவும், விரைவாகவும் செயல்பட்டால்தான், அரசால் அறிவிக்கப்படுகிற சலுகைகள் அனைத்தும் பொது மக்களுக்கு முறையாகப் போய்ச் சேரும். ஆனால், விருத்தாசலம் நகராட்சி, பேரூராட்சியாக இருந்து, நகராட்சியாக உயர்த்தப்பட்ட நாள் முதல், மூன்றாம் நிலை நகராட்சியிலுள்ள அலுவலர்களே தற்போது இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்வு பெற்றும் பணியாற்ற வேண்டிய நிலை உள்ளது. இதனால், அன்றாடப் பணிகளோடு பல்வேறு திட்டப் பணிகளையும் செய்து முடிக்க, தேவையற்ற காலதாமதங்கள் ஏற்படுகிறது. எனவே, அரசு ஆணைகளின்படி இரண்டாம் நிலை நகராட்சி அந்தஸ்திற்கேற்றபடி அலுவலர்களின் பணியிடங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் Creation of posts in all categories—நகராட்சி அலுவலர்கள் அரசு அலுவலர்களாக முந்தைய அரசால் அறிவிக்கப்பட்டிருந்தும் கருவூலம் மூலம் ஊதியம் வழங்கப்படவில்லை. நகராட்சி அலுவலர்களுக்கு கருவூலம் மூலம் ஊதியம் கிடைக்க நமது அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட பள்ளி சத்துணவு திட்டத்திற்கு ஒவ்வொரு நகராட்சியிலும், ஒரு சத்துணவு கணக்காளர் மற்றும் உதவியாளர் பதவியை ஏற்படுத்தி, சத்துணவு திட்டம் சம்பந்தமான பராமரிப்பு பணிகளை மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இத் திட்டத்தில் உள்ள சத்துணவு கணக்கர் மற்றும் உதவியாளர் பதவிகளை 1—10—1991 முதல் கல்வித் துறையோடு சேர்க்கப்போவதாக தெரிய





வருகிறது. அவ்வாறு எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு நகராட்சியிலும் ஒரு கணக்கர் மற்றும் உதவியாளர் பணியிடம் வீதம், சுமார் 106 நகராட்சிகளிலும் 106 பணியிடங்களை நகராட்சிகள் இழக்க நேரிடும். இதனால் பல ஆண்டுகளாகவே பதவி உயர்வு இல்லாமல் ஆங்காங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படும். எனவே, தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், பள்ளி சத்துணவு பராமரிப்புப் பணியை தற்போதுள்ளபடி நகராட்சிகளே தொடர்ந்து செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுகிறேன்.

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குள் சுமார் ஆயிரம் தெரு விளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. எரியாத தெரு விளக்குகளை உடனுக்குடன் எரியவிட நகராட்சிக்கு தகவல் கொடுக்கும்போது, மின்சாரத்தை மின்வாரிய அலுவலர்களால் தடைசெய்து கொடுத்த பின்னரேதான், நகராட்சிப் பணியாளர்களால் எரியாத விளக்குகளை மாற்றி, குறைகளை நிவர்த்தி செய்யும் வேலையில் ஈடுபட வேண்டியுள்ளது. இதனால், தேவையற்ற காலதாமதமும் ஏற்படுகிறது. தெரு விளக்குகள் பராமரிப்பு வேலையை முன்பு இருந்தது போலவே மின்வாரியத்திடமே இருக்குமேயானால், இத்தகைய காலதாமதங்கள் ஏற்படாது. பொது மக்களுக்கும் தெருவிளக்குகள் எரியவில்லை என்கிற குறையும் இருக்காது. எனவே, தெருவிளக்குகள் பராமரிப்பு வேலையை மின்சார வாரியத்திடமே மீண்டும் ஒப்படைத்து, பராமரிப்புப் பணிகளைச் செவ்வனே செய்வதற்கு ஆவன செய்ய, தமிழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது மொத்தம் 8 இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சுமார் 93.8 குதிரை வேகம் உள்ள மின் மோட்டார்களைக் கொண்டு, நாளொன்றுக்கு 10 லட்சத்து 30 ஆயிரம் லிட்டர் தண்ணீரை சுமார் 145 பொதுக் குழாய்கள் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 52 ஆயிரம் மக்கள் தொகைக்கு மேல் வாழ்கின்ற இந்த நகராட்சியில் தற்போதுள்ள குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குவது பற்றாக்குறையாக இருந்து வருகிறது.

பிற்பகல் 12-05

சராசரியாக நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 75 லிட்டருக்குக் குறையாமல் குடிநீர் சப்ளை செய்தால்தான், குடிநீர் தேவையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்ததாக மனநிறைவு

[திரு. ஆர். டி. அரங்கநாதன்] [1991 செப்டம்பர் 17

ஏற்படும் என்கிற அளவில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கு
வதற்காக மேலும் புதிய குடிநீர்த் திட்டங்களைப் போர்க்
கால அடிப்படையில் பொது மக்களின் நலன் கருதி ஏற்படுத்
திக் கொடுக்க ''அன்னமிட்டகையின் அன்னை'' மாண்புமிகு
முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விருத்தாசலம் நகரில் சிமெண்ட் சாலை, தார்
சாலை, கருங்கல் ஜல்லி சாலை, செம்புறாங்கல் சாலை மற்
றும் கிராவல் சாலைகள் போன்று சுமார் 35 கிலோமீட்டர்
தூரத்திற்கு சாலைகள் நகராட்சியால் பராமரிக்கப்பட
வேண்டியுள்ளது. பேருந்து போக்குவரத்துகளாலும், மாட்டு
வண்டிகள் மற்றும் இதர போக்குவரத்து வாகனங்களாலும்
சாலைகள் அடிக்கடி சிரழிந்து குண்டும், குழியுமாக உள்ளது.
சாலை பராமரிப்பு வேலை செய்வதற்குத் தேவையான சாலைப்
பணியாளர்கள், (காங்க் கூலிகள்) இல்லாததாலும், பெரும்பா
லான நகராட்சிகள் போதிய நிதி வசதியின்றி நலிவுற்ற
நிலையில் உள்ளதாலும், சாலைப் பராமரிப்புக்காக முழு
மான்ய அடிப்படையில் நகராட்சிகளுக்கு தொகைகள் வழங்
கிடவும், சாலைப் பணியாளர்கள் ஏற்படுத்தவும் வள்ளலின்
வாரிசு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டு
கிறேன்.

என்னுடைய விருக்தாசலம் தொகுதியில்
விருத்தாசலம் நகரில் இருக்கின்ற தினசரி காய்கறி மார்க்
கெட் விருத்தகிரிஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான இடத்
தில் வாடகைக்கு இடம் பெற்று கீற்றுக் கொட்டகையில்
போதிய பாதுகாப்ப இல்லாமலும், சுகாதார வசதிகள் ஏதும்
இல்லாமல் இயங்கி வருகிறது. மழைக் காலங்களில் பொது
மக்கள் இந்த மார்க்கெட்டில் காய்கறி வாங்கச் செல்வது
மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏனெனில், தற்போது காய்
கறி மார்க்கெட் இருக்கும் இடம் மிகவும் பள்ளமான இடத்
தில் இருக்கிறது. எனவே, அந்த இடத்தை ஆலயத்திடமிருந்து
நிரந்தரமாகப் பெற்று, காய்கறி மார்க்கெட்டை கட்டிடங்
களாகக் கட்டினால் வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும்
பெரிதும் பயன்தரக் கூடியதாக இருக்கும். எனவே,
மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு அங்கே கட்
டப்படுகின்ற காய்கறி மார்க்கெட் அமைப்பை மாற்றி நக
ரங்களில் இருக்கின்ற காய்கறி மார்க்கெட்போல் அமைத்து,
மாண்புமிகு இதய தெய்வம் புரட்சிக் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் பெயரில், எம்.ஜி.ஆர். தினசரி காய்கறி அங்காடி
என்று பெயர் வைத்து வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.
(மணியடிக்கப் பெற்றது).



1991 செப்டம்பர் 17] [திரு. ஆர். டி. அரங்கநாதன்]

மேலும், விருத்தாசலம் நகரில் சுமார் 55,000 மக்கள்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு இந்துக்களுக்கென்று
இருப்பது ஒரே ஒரு சுடுகாடுதான். அதுவும் நகரின் மையப்
பகுதியிலிருந்து மூன்று அல்லது நான்கு கிலோமீட்டர் தூரத்
தில் உள்ளது. இந்நிலையில் இறந்தவர்களின் சடலங்களைச்
சுமந்து செல்லும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மிகவும்
அச்சப்படுகிறார்கள். நகரை இரண்டாகப் பிரிக்கும்
மணிமுத்தாறின் கிழக்குப் பகுதியில் புதியதாக ஒரு சுடுகாடு ஒன்று
அமைப்பதற்காக திட்ட முன் மொழிவுகள் தயாரிக்கப்பட்டு
தற்போது உறக்க நிலையில் உள்ளது. மேற்படி திட்டத்தை
மீண்டும் செயல்படுத்தி புதிய சுடுகாடு அமைத்து அதில் தேவை
யான அத்தியாவசிய வசதிகளுடன் ஏற்படுத்துவதோடு தற்
போது இருந்துவரும் பழைய சுடுகாட்டையும் சுற்றி மதில்
சுவர் எழுப்பி சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்புடன்
வேண்டுகிறேன்.

விருத்தாசலம் நகராட்சியின் வருவாயைப் பெருக்கு
வதற்கு முழு மான்ய அடிப்படையில் திரையரங்கு மற்றும்
விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று
மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன். மேலும்...................... (மணியடிக்
கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சம்பத்
அவர்கள்.

திரு. எ. சம்பத் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, உள்ளாட்சி துறையின் மானியக்
கோரிக்கையின் கீழ் பேசுவதற்கு முன்னாலே என் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வேண்டு
கோளை விடுக்கிறேன். இப்பொழுது புரட்சித் தலைவி அவர்
களுடைய ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றி
யத்திற்கும் ஒரு கோடி என்ற திட்டத்தினை அறிவித்திருக்
கிறார்கள். அதற்கு மட்டற்ற மகிழ்ச்சி. அனைத்து மக்களா
லும் பாராட்டக் கூடிய ஒரு திட்டம். அந்தத் திட்டத்தை
எப்படிச் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கம் தான் இன்
றுள்ள நிலை. குறிப்பாக ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய்
என்ற திட்டம் இருந்தாலும், அதை முன்பிருந்த புரட்சித்
தலைவர் அவர்களுடைய ஆட்சியில் 'டாஸ்க் போர்ஸ்' என்ற
ஒரு கமிட்டி இருந்தது. அதை மக்கள் பிரதிநிதியாகக் கருதி,
அந்தக் கமிட்டியில் சட்டமன்ற உறுப்பினர்கள் மெம்பர்களாக
இருந்தார்கள். இன்றைய தினம் அப்படி ஒரு சட்டமன்ற உறுப்
பினர் அந்தக் கமிட்டியில் இருப்பதாகத் தெரியவில்லை. அங்

[திரு. எ. சம்பத்] [1991 செப்டம்பர் 17

குள்ள திட்ட அலுவலர்களும், ஆணையாளர்களும் எங்களைக்
கலந்தாலோசிக்க வேண்டுமென்ற எண்ணமில்லாமல்
இறார்கள். அதற்காக, குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டு
மென்று சொன்னால்..................

பிற்பகல் 12-10

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்ட
தலைவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களைக்
ஆலோசித்துத்தான் ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு முடிவு
களை எடுக்கச் சொல்லி ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக
அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்
கிறேன். அப்படி ஏதாவது அதிகாரிகள் கேட்கவில்லை என்று
சொன்னால் அந்த அதிகாரிகளைப் பற்றி எங்களிடத்தில் தெரி
விக்கப்படுமேயானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி).

திரு. எ. சம்பத் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது
மிகவும் சந்தோஷமான ஒரு விஷயம்தான். இருந்தாலும் இன்
னொன்றையும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள்
சொன்னார்கள். அந்த அடிப்படையிலே சில ஆணையாளர்கள்
கேட்கிறார்கள். ஆனால் ஆங்காங்கே என்னுடைய வடாற்
காடு—அம்பேத்கார் மாவட்டத்தில்..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறிப்பிட்டுச்
சொன்னால் அரசு கவனிப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி
இருக்கிறார்கள். எனவே அதை விட்டு அடுத்த விஷயத்திற்குச்
செல்லுங்கள். திரு. எ. சம்பத்.

திரு. எ. சம்பத் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, என்னுடைய வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு
உட்பட்ட ஆலங்காயம் என்ற ஊராட்சி இருக்கிறது. மாதனூர்
ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. மாதனூர் ஊராட்சி ஒன்றியத்
தில் நாங்குனேரி என்ற மலைப்பிரதேசமான பஞ்சாயத்து
இருக்கிறது. அந்த பிரதேசத்தில் அங்கே உள்ள ஊராட்சியில்
இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்திற்கு 10 வீடு
தந்தார்கள். அடுத்த பத்து வீட்டுக்கு, மலைஜாதி மக்கள் இருக்
கிறார்கள் என்று சொல்லி சேக்கத்துறை என்ற கிராமத்திற்கு



1991 செப்டம்பர் 17] [திரு. எ. சம்பத்]

தாருங்கள் என்று நான் கூறினேன். அதற்கு அந்த ஆணையாளர்
அவர்கள் அந்த கிராமம் பற்றி முடிவு செய்துவிட்டோம் என்று
சொன்னார்கள். மீண்டும் கூட நான் அந்த ஆணையாளரைக்
கேட்டேன். இன்னும் அவர்கள் முடிவு செய்யவில்லை. அவர்கள்
நினைத்த நாங்குனேரி என்ற கிராமத்திற்கே ஒதுக்கிவிட்டார்
கள். அதேபோல் இன்னொன்றையும் நான் சொல்கிறேன்.
வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியினுள் அடங்கிய ஆலங்
காயம் என்ற பேரூராட்சி இருக்கிறது. நான் ஆலங்காயம்
பேரூராட்சி அலுவலரிடத்திலே சென்று பேசினேன். ஜவஹர்
வேலைவாய்ப்புத் திட்டத்தில் பணம் தருகிறீர்கள். இந்தப்
பணத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் சட்டமன்ற உறுப்
பினர்கள் சட்டமன்றத்தில் இருக்கும்போது அவர்கள்
மாவட்ட அளவில் திட்டத்தைப் போட்டு விட்டார்கள். இருந்
தாலும் பரவாயில்லை. மக்கள் விகிதாச்சார அடிப்படையில்
கொடுக்கக்கூடிய பணத்தையாவது நீங்கள் அந்தந்தப் பகுதி
மக்களுக்காகச் செலவிட வேண்டும், குடிநீர்ப் பிரச்சினை
மிக அதிகமாக இருக்கிறது. அந்த தண்ணீர்ப் பிரச்சினைக்காக
அந்தப் பணத்தை ஒதுக்க வேண்டும் என்று சொன்னேன்.
அவர்கள் சொல்கிறார்கள் நாங்கள் ஏற்கெனவே திட்ட அலு
வலரிடத்திலே முடிவு செய்துவிட்டோம். நாங்கள் எல்லோ
ரும் ட்ரெய்னேஜ் தான் கட்டுவோம் என்று சொல்கிறார்கள்.
அப்படி டிரெய்னேஜ் கட்டி விட்டால் அங்கேயுள்ள பணத்தைக்
கொண்டு ஒரு போர் வெல் போடுவதற்கோ அல்லது ஆழ்
துளைக் கிணறு போடுவதற்கோ கூட வாய்ப்பில்லை. எனவே
அதை உடனடியாக அமைச்சர் அவர்கள் அவர்களிடத்திலே
சொல்வார்கள் என்று நான் கருதுகிறேன். அதே நேரத்தில்
அந்தப் பணத்தைத் தண்ணீருக்காகப் பயன்படுத்தினால் மிக
நன்றாக இருக்கும். அங்கே மிக அதிகமாகத் தண்ணீர் பிரச்
சினை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நான் டாஸ்க் போர்ஸ் என்று சொல்வதற்குக்
காரணம் என்ன என்பதைச் சொல்கிறேன். முன்பெல்லாம்
அவர்கள் அழைத்து கூட்டமாகக் கூடி இந்தப் பணத்தை நாம்
என்ன செய்யவேண்டும். இந்தப் பணத்தை இதற்காக ஒதுக்க
வேண்டும் என்று சொல்லி சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே
கையொப்பம் வாங்குவார்கள் அப்போது அந்தத் திட்டத்திற்கு
இந்தப் பணத்தைச் செலவு செய்தால் நன்றாக இருக்கும்
என்று கலந்தாலோசித்துத்தான் முடிவு செய்தார்கள். அந்த
முடிவு இப்போது இல்லை. அதற்கு மாறாக அவர்கள் சொல்
கிறார்கள். சில ஆணையாளர்கள் கூட—ஐ.ஆர்.டீ.பி. என்ற
திட்டத்தை நீங்கள் தந்திருக்கிறீர்கள். அது வறுமைக் கோட்
டுக்குக் கீழே உள்ள ஏழை மக்களுக்குக் கிடைக்கவேண்டும்
என்று. அந்தத் திட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்

[திரு. எ. சம்பத்] [1991 செப்டம்பர் 17

தாலும் கூட தனியாக ஒரு கமிட்டி என்று சொல்லி சில ஆணை
யாளர்கள் அங்கே கிராமத்தில் உள்ள வயதானவர்களாக
யார் இருக்கிறார்களோ அவர்களிடத்தில் தான் நாங்கள்
கையொப்பம் வாங்குவோம் என்று சொல்கிறார்கள். எனவே
சட்டமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் போடுவதில்லை.
வயதானவர்களை வைத்துத்தான் அதாவது சட்டமன்ற உறுப்
பினர்களை விட்டு விட்டு அவர்கள் கையொப்பம் வாங்கிக்
கொண்டு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தைப் பொறுத்தவரையில்
அவர்களாகவே கொடுத்து விடுகிறார்கள். இதையும் நான்
அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டு
இருக்கிறேன். அதேபோல் முன்பிருந்த புரட்சித் தலைவர்
ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டது போல் டாஸ்க் ஃபோர்ஸ்
கமிட்டி என்று வைத்து அந்த கமிட்டியில் ஒரு சட்டமன்ற
உறுப்பினர் தலைவராகவும், அங்கேயுள்ள ஆணையாளர்கள்
எல்லாம் உறுப்பினர்களாகவும் மற்ற தாசில்தார்கள் எல்
லோரும் உறுப்பினர்களாகவும் ஆகின்ற வகையிலே அந்த
கமிட்டியினை உருவாக்கவேண்டும் என்று நான் என்னுடைய
வேண்டுகோளாக அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதே போல நகராட்சிகளில் முன்பு ஒரு சைக்கிள் ஸ்டேண்ட்,
கழிப்பிடம் என்று இருந்தால், அது நகராட்சி மூலமாக
டெண்டர் கால் பார் செய்வார்கள். அதன் மூலமாக லட்சக்
கணக்கான ரூபாய் நகராட்சிக்கு வருவாயாக இருக்கும். அப்
போது இருந்த தி.மு.க. அரசு அவர்கள் நகராட்சியை எடுத்து
நடத்தவேண்டும் என்ற உள்நோக்கத்தோடு, ஏறத்தாழ குறிப்
பாக அதை சொல்லவேண்டுமென்று சொன்னால், ஆம்பூர்
நகரம் என்று எடுத்துக் கொண்டால், ஒரு வருடத்திற்கு
ஒரு லட்சம் ரூபாய்க்கு மேலே டெண்டர் இதற்கு முன்பு
விட்டிருந்தார்கள். இப்போது ஒரு என். எம். ஆர். என்ற
அடிப்படையிலே வைத்துக் கொண்டு, 30 ரூபாய், 40 ரூபாய்
என்றுதான் ஒரு நாளைக்கு வசூல் செய்கிறார்கள். அதை
உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து,
பழைய முறையிலே டெண்டர் கால் பார் செய்து செய்
தோம் என்று சொன்னால் வருடத்திற்கு ஒரு லட்சம்
ரூபாய்க்கும் அதிகமான அளவுக்கு கிடைக்கும். அப்படி ஒவ்
வொரு நகராட்சிக்கும் கிடைக்கும் என்பது என்னுடைய பணி
வான வேண்டுகோளாக எடுத்து வைக்கிறேன். (மணி அடிக்கப்
பெற்றது) அதே போல குடிநீர் வடிகால் வாரியம் என்று ஒவ்
வொரு மாவட்டத்திலேயும் இருந்து கொண்டிருக்கிறது.

விவசாயத் துறை என்று எடுத்துக் கொண்டால், விவ
சாயத்துறைக்கு நாம் ஒப்படைத்து விட்டோம்.
என்று சொன்னால் பள்ளித் துறைக்கு நாம் ஒப்படைத்து விட் பள்ளிகள்



1991 செப்டம்பர் 17] [திரு. எ. சம்பத்]

டோம். குடிநீர் வடிகால் வாரியம் மட்டும் நமது ஒன்றியத்திற்கும் நகராட்சிக்கும் தரவேண்டும். நகராட்சிக்கே தந்தால்தான் அங்கேயுள்ள நிலையை ஆராய்ந்து அறிந்து ஆங்காங்குள்ள நகராட்சி பொறுப்பாளர்களும், ஊராட்சி பொறுப்பாளர்களும் தேவையை உடனடியாகப் பூர்த்தி செய்வதற்கு மிக வாய்ப்பாக இருக்கும். அந்த அடிப்படையிலே இந்த குடிநீர் வடிகால் வாரியம் ஒன்று சொல்லிவிடுகிறார்கள். நாம் தண்ணீர் இல்லை என்று சொல்லி வடிகால் வாரியத்தில் மனுக்களைக் கொடுத்தால் அவர்கள் தமிழகம் முழுவதையும் பார்ப்பதனால், அதன் காரணமாக அவர்கள் காரியங்களைச் செய்வதற்கு கால தாமதம் ஆகிறது. அதை உடனடியாக உள்ளாட்சித் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு நகராட்சிக்கு என்று அந்தப் பணத்தை ஒதுக்கித் தந்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதோடு இப்போது தண்ணீருக்கு நகராட்சியில் லிட்டர் கணக்கிலே ஒரு வாகனத்திற்கு ரூ. 290 என்று ஆகிறது. லாரியில் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அந்தத் தண்ணீர் நிரந்தரமான முறையில் கொடுப்பதற்கு வசதியாகவும் இல்லை. அதில் நாம் அதிகமான பணம் செலவிடுகிறோம். அதற்கு மாற்றாக ஆழ்துளை கிணறுகளை போட்டு கம்ப்ரஷர் என்று சொல்லக்கூடியதை அமைத்து ஒரு 30 ஆயிரம் ரூபாய் அளவுக்கு செலவு செய்து அமைத்தால் ஒரு நாளைக்கு ஒரு லட்சம் லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. அதற்கு ரூ. 30 ஆயிரத்திலிருந்து ரூ. 35 ஆயிரம் வரைதான் செலவு இருக்கிறது. அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, அதற்கேற்ப உதவுமாறு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதோடு குடிநீர் வட்டிகால் வாரியத்தில் தண்ணீரை இறைப்பதற்காக ரூ. 60 தருகிறார்கள். பஞ்சாயத்திலே, அந்த 60 ரூபாயை வைத்து அவர்கள் சரியான முறையில் சிறப்பான முறையில் செய்வதில்லை. எங்கே தண்ணீர் போகிறது என்றும் பார்ப்பதில்லை. குறைந்தபட்சம் 150 ரூபாயாவது நிதிக்கு ஏற்ப ஒதுக்கி நீங்கள் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன். அவர்களுக்கு அது உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அத்தோடு நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அவர்களைப் பற்றி அரசு அறிவித்தது. அவர்களை இதுவரை அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொண்டு இன்னும் அவர்களுக்கு சம்பளம் தரப்படவில்லை. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதோடு இந்த டாஸ்க் போர்ஸ் கமிட்டியை அமைச்சர் அவர்கள் அத்தியாவசியமாக கருதி, எங்கள் பகுதியில் எல்லாம், அதை கமிட்டி என்று சொல்லுகிற அளவுக்குக் கூட நாங்கள் கிராமத்தில் இருப்பதில்லை. அவர்களாகவே முடிவு எடுக்கிறார்கள். அந்த அடிப்படையில் உடனடியாக அவைகளை நிறுவி, டாஸ்க் போர்ஸ் கமிட்டியை ஆரம்பித்து, அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை அதிலே தலைவர்களாக இருக்க ஏற்பாடு செய்து உதவுமாறு கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சை தொடங்குவதற்கு முன்னால் மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் பேசியதற்கு நான் பதில் சொல்ல கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டும். மாதனூர் ஒன்றியத்தில் அணைக்கட்டு தொகுதிக்கு 13 ஊராட்சிகளும், பேரணாம்பட்டு தொகுதிக்கு 14 ஊராட்சிகளும், வாணியம்பாடி தொகுதிக்கு 8 ஊராட்சிகளும் இருக்கின்றன. அந்த ஒன்றியத்தில் 120 தொகுப்பு வீடுகள் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகம் அதிகமாக இருப்பதால் 50 வீடுகளை ஒதுக்கித் தந்தார்கள் அரசு அதிகாரிகள். அதன்பிறகு பேரவையில் உறுப்பினர் அண்ணன் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் அந்த அதிகாரிகள் என்னிடத்தில் கூறினார்கள். நான் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு அண்ணன் கேட்டதனால் தாராளமாக கொடுத்துவிடலாம் என்று என்னுடைய தொகுதியில் குப்பம்பட்டு என்ற ஊராட்சிக்கு கொடுத்த 10 வீடுகளை மனமுவந்து கொடுத்த அந்த வீடுகள் அந்த மலைவாழ் மக்களின் கிராமமான நாய்க்கினேரி என்ற கிராமத்திற்கு ஒதுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் அணைக்கட்டு தொகுதியான ஜவ்வாது மலை சாரலிலிருந்து வேலைமா நகர் வரை என்னை அடையாளம் காட்டி சென்ற, ஏழைகளின் இறைவன், எண்ணற்ற மக்களின் தலைவன், நம்மை எல்லாம் ஆளாக்கிவிட்ட தங்கத் தலைவன், தவப் புதல்வன், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு என் இதயம் கனிந்த அஞ்சலியை செலுத்தி, எங்கோ விவசாயம் செய்து கொண்



டிருந்த என்னை இந்த நாட்டுக்கு அடையாளம் காட்டப் பெற்று இந்தப் புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வர வழி வகுத்த எங்கள் கழக காவல் தெய்வம் தமிழகத்தின் விடிவெள்ளி எங்கள் குல தெய்வம், வரலாற்றின் பொன் எழுத்தால் பொறிக்கப்போகும் புரட்சித் தலைவி அவர்கள், மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் அவர்களின் பொற்பாதங்களை நோக்கி என் சிரம் தாழ்ந்த வணக்கத்தையும் நன்றியையும் காணிக்கையாக்குகின்றேன்.

அடுத்து, அணைக்கட்டு தொகுதியில் சிங்கமாக இருந்தவர்களையெல்லாம் சுண்டெலியாக்கிவிட்டு, யானையாக இருந்தவர்களையெல்லாம் பூனையாக்கிவிட்டதோடல்லாமல், ஜாமீன் இழக்கச் செய்து, இதுநாள்வரை இல்லாத அளவுக்கு பெருவாரியாக வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்த அந்த பெருமனம் படைத்த நல்லோர்க்கு நன்றி கலந்த வணக்கத்தை நான் காணிக்கையாக்கி என் பேச்சை தொடர்கிறேன்.

என் அணைக்கட்டு தொகுதி ஏறக்குறைய 100 கிலோ மீட்டர் பரப்பு உள்ளதும், 73 ஊராட்சிகள் உள்ளடங்கியதும், இதில் சுமார் 300 கிராமங்களிலும்—சாதாரணமாக கிராமங்களாக உள்ள அத்தனை கிராமங்களிலும் இன்றைய சூழ்நிலையில் குடிநீர் பிரச்சினை அதிகமாக உள்ளது. இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக போக்கவும், எங்கள் பகுதியின் விவசாய பெருங்குடி மக்கள், நீண்ட நாட்களாக கோரி வரும் மேலரசம்பட்டு நீர்த்தேக்க அணைக்கட்டு அதாவது உத்தரகாவேரி அல்லது புண்ணிய தீர்த்த நதி என்று அழைக்கப்படும் காட்டாற்றை அணைக் கட்டினால் 50 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெருகுவதோடு 95 கிலோமீட்டர் தூரம், வற்றாத நிலத்தடி நீர் கிடைக்குமென விவசாய பொறியியல் துறை வல்லுநர்கள் கூறியுள்ளார்கள்.

இதனால் இந்த நல்லதொரு திட்டத்தைச் செயல்படுத்திட வேண்டுமென நம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் இரண்டு முறை நாங்கள் இங்கேயுள்ள அமைச்சர்களையும் ஒரு முறை விவசாய உயர் மட்ட குழுத் தலைவர் அவர்களையும் அழைத்துச் சென்று, அவர்களும் பார்வையிட்டு அந்த அணைக்கட்டை கட்ட வேண்டுமென அவர்களும் பரிந்துரை செய்திருந்தார்கள்.

பிற்பகல் 12-25

இந்த நிலையிலே இடையிலே வந்த அரசு இந்தத் திட்டத்தை திரும்பிக் கூட பார்க்காமல் கிடப்பிலே போட்டு விட்டது. இன்றைய தாயுள்ளம் படைத்த தமிழக அரசு எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான மேலரசன்பட்டு அணையைக்

கட்டிக் கொடுத்து விவசாயிகளின் இன்னல்களைப் போக்கிடவும் அதே நேரத்தில் நிரந்தரமாகக் குடிநீர் பிரச்சினையை ஏறக் குறைய 100 சதுரகிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள மக்களுக்கு போக்கிடவும் முடியும் என்பதைத் தெரிவித்து, இதற்கு ஆவன செய்யும்படி மாண்புமிகு தமிழக முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி எந்தவிதமான தொழில் வளர்ச்சியும் இல்லாத, பொருளாதார வளர்ச்சி இல்லாத பின் தங்கிய பகுதியாகும். இந்த நிலையைப் போக்க எங்கள் தொகுதியில் தென்பகுதியில் உள்ள அத்திக்குப்பம் கிராமம், புலன் எண் 136-ல் 219 ஏக்கர் பரப்புள்ள புறம்போக்கு நிலம், நல்ல மண் வளம் பொருந்திய இடம் உள்ளது. அந்த இடத்தில் ஒரு விவசாயப் பண்ணையோ அல்லது கால்நடைப் பண்ணையோ ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) இன்னும் பாதி கூட முடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் மானியம் பாதி இருக்கிறது. ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. கி. தர்மலிங்கம் : அடுத்து குறிப்பாக சிலவற்றை மட்டும் கூறிக்கொள்கிறேன். நகர்ப் புறத்திலே இருக்கும் மக்கள் பெருக்கத்தை மேலும் மேலும் மேம்படுத்தும் அளவில் எந்த ஒரு அரசும் அந்தப் பகுதியிலே வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டுகிறார்கள். அப்படி குடிபெயர்வதைத் தவிர்த்து, பேரூராட்சி இருக்கும் இடங்களில், குறிப்பாக அரசு அலுவலர்கள் நிறைய இருக்கும் இடங்களில்-அதாவது வனஇலாகா அலுவலகம், மேல்நிலைப்பள்ளி, பேரூராட்சி அலுவலகம், மற்ற அரசுத் துறை அலுவலகங்கள் எல்லாவற்றிலும் சேர்த்து 100 பேர்கள் இருக்கும் இடத்தில் வீட்டு வசதி வாரியத்தைத் தொடங்கி, எல்லோருக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய பகுதியில் குறிப்பாக பிற்பட்ட சமுதாயத்தினரும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரும் அதிகம் இருப்பதால், அணைக்கட்டு என்ற இடத்தில் காவல் நிலையம் ஒன்றைப் புதிதாகத் துவக்கி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி இந்த சமூக மக்களினுடைய ஒற்றுமைக்கு ஊன்றுகோலாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிறைய மானியங்கள் இருக்கின்றன. பிறகு சொல்லலாம். தயவு செய்து அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ்.



டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் பற்றிய கொள்கைக் குறிப்புகளின் மீது நடைபெறும் விவாதத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தில் நான் கலந்து கொள்வதற்கு முன்பாக, நல்ல பல திட்டங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணமும், ஆவலும் இருப்பதாகக் குறிப்பிட்டிருப்பதற்காக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இவைகளை எல்லாம் நடைமுறைப் படுத்துவதற்காக உள்ள ஜனநாயக அமைப்புகளில்— நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் தேர்தல்கள் நடைபெறாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். காவிரி நீர் பிரச்சினையை வைத்து தேர்தல்களைத் தள்ளி வைத்திருக்கிறீர்கள். எப்போது அந்தப் பிரச்சினை தீர்ந்து, இந்தத் தேர்தலை நடத்தப் போகிறீர்கள் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே மரியாதைக்குரிய அமைச்சரவர்கள் இதிலே தனிக் கவலம் செலுத்தி, ஊராட்சி மன்றங்களின் தேர்தல்களை நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உங்கள் முன்னாலே சில குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முதலாவதாக வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக நகராட்சிகளுக்குச் சொந்தமான கட்டிடங்களில் வாடகைக்கு இருக்கிறவர்களுக்கு அதிகாரிகள் அவர்களுக்குத் தோன்றுகிறபடி வாடகை விதிக்கிறார்கள். இல்லையென்று சொன்னால் அதை இன்னொரு நபருக்குக் கொடுத்து விட்டு, பணத்தைப் பெற்றுக் கொண்டு, அங்கேயிருந்து போய் விடுகிறார்கள். நகராட்சி ஆணையாளர் அவர்களை காலி செய்ய வேண்டுமென்று சொல்லும்போது அதை மறுப்பதோடு, கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கி, அதன்மூலம் நகராட்சிக்கு வரவேண்டிய பணம் வராமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. எனவே குத்தகைக்கு, வாடகைக்கு கொடுக்கும் நேரத்தில் பதிவு சான்றிதழ்கள் மூலம், இவர்தான் இந்தக் கடையை எடுத்திருக்கிறார், இவர்தான் பயன்படுத்தவேண்டும், இல்லை என்றால் நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பித்தால் நிர்வாகத்திற்கு வரும் பண இழப்பு மற்றும் நீதி மன்றத்திற்குச் செல்வதைத் தவிர்க்க முடியும் என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1991 செப்டம்பர் 17

அதேபோல பெருவாரியான நகராட்சிகளில் குடிநீருக்காக மீட்டர் முறை வைத்திருக்கிறார்கள். பொதுவாக பல வீடுகளுக்கு மீட்டர்கள் இல்லை, பல இடங்களில் மீட்டர்கள் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒட்டுமொத்தமாக அந்த மீட்டர் முறையை மாற்றிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தண்ணீர் வராமல் இருந்தால் குழாய்களில் ஏற்படும் காற்று அழுத்தம் காரணமாக அந்த மீட்டர் ஓடுகிற வாய்ப்பு இருக்கிறது. தாய்மார்கள் தண்ணீருக்காக குழாய்களை திறந்து, பின்னர் தண்ணீர் வராமல் போனால் அப்படியே விட்டுவிட்டு போய்விடுகிறார்கள். ஆகவே காற்றின் அழுத்தம் வருகிற நேரத்தில் மீட்டர் ஓடி, சில நேரங்களில் அதிகமான அழுத்தம் காரணமாக 200 ரூபாய்; 300 ரூபாய்; 500 ரூபாய் என்று கூட ஓடுகிறது. எனவே வீடுகளுக்கு எல்லாம் ஒரே சீராக இலக்கு நிர்ணயம் வைத்துவிட்டு, அதற்கு ஈடுகட்டும் வகையில் வணிக நிறுவனங்களுக்கு, தொழில் நிறுவனங்களுக்கு மீட்டர் பொருத்தினால் அது சிறப்பாக இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து. அதேபோல, நகராட்சிப் பகுதிகளானாலும் சரி, ஊராட்சிப் பகுதிகளானாலும் சரி, அவைகளுக்கு வாங்கக்கூடிய மின் விளக்குகள்—சோடியம் வேப்பர் விளக்குகளாக இருந்தாலும், டியூப் லைட்டுகளாக இருந்தாலும் சரி, ஐ.எஸ்.ஐ. அங்கீகாரம் பெற்ற விளக்குகளாக இருந்தால் அது மிக சிறப்பாக இருக்கும். அதேபோல நகராட்சி, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தெருக்களுக்கு பெயர்கள் வைக்கும்போது ஜாதிப் பெயர் அந்தப் பெயர்களில் தொக்கி இருக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக தியாகிகள், வீரர்கள், நல்ல அரசியல் தலைவர்களின் பெயர்களை வைப்பது சிறப்பாக இருக்கும். ஏனென்றால், நகராட்சிப் பகுதிகளிலும் சரி, ஊராட்சிப் பகுதிகளிலும் சரி, பெயர்களோடு ஜாதிப் பெயர்களையும் சேர்த்து வைப்பதால் சிக்கலும் சண்டைகளும் வீணாக ஏற்படுகிறது. எனவே உங்கள் மேலான கவனத்திற்கு அதைக் கொண்டு வந்து, தமிழகம் முழுவதும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்தப் பெயர்களில் ஜாதிப் பெயர்கள் தொக்கி நிற்காத அளவுக்கு பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

மேலும் நகராட்சிகளில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்கும் அடிப்படைப் பணியாளர்களுக்கும் மாநில அளவில் பணி மூப்பு பட்டியல் தயாரித்து அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. அதை மிக கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ச்சியாக அங்கே தேர்வுகள் நடக்காத காரணத்தால் ஒவ்வொரு நகராட்சியிலும் மக்கள் தொகை கணக்கு அடிப்படையில் பணியாளர்களை நியமிக்கப்படவில்லையென்ற



1991 செப்டம்பர் 17] [டாக்டர் தே. குமாரதாஸ்]

குறைபாடு இருக்கிறது. எனவே 15 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பை விட்டுவிட்டு, இப்போது ஒவ்வொரு நகராட்சியிலும் இருக்கிற மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் பணியாளர்களை நியமிக்கவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் பணியாற்றுகின்ற அதிகாரிகளை நாம் எப்போது போய்ப் பார்க்கச் சென்றாலும் அவர்கள் கேம்ப் போயிருக்கிறார்கள், கலெக்டரேட்டுக்கு மீட்டிங் போய் இருக்கிறார்கள் என்று இப்படிப்பட்ட பதில்கள் தான் வருகிறது. எவவே ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அவர்களது அலுவலகத்தில் மனுநீதி நாள் நடத்தப்படுகிறது. அந்த தினத்திலாவது அல்லது அதுபோன்று இன்னொரு தினத்திலாவது தான் இத்தகைய அதிகாரிகள் வெளியூரில் இருக்க வேண்டும். பாக்கியுள்ள நாட்களில் எல்லாம் அவர்கள் அலுவலகத்திலேதான் பணியில் இருக்க வேண்டுமென்ற குறிப்புகளைக் கொடுத்தால், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், பொது மக்கள் போன்றவர்கள் அதிகாரிகளைப் போய்ப் பார்க்கின்ற நேரத்தில் இந்த நாட்களில் இருக்கமாட்டார்கள், இந்த நாட்களில் இருப்பார்கள் என்ற எண்ணத்துடன் சென்று வரவும், அதன் மூலம் அதிகாரிகளைப் பார்த்து தங்களுடைய குறைகளைத் தீர்த்துக்கொள்ளவும் வாய்ப்பாக இருக்கும். எனவே இந்த நாட்களில்தான் அவர்கள் வெளியே செல்லவேண்டுமென்ற கட்டளையை அரசு பிறப்பிக்கவேண்டும். எந்த மீட்டிங் வைப்பது என்றாலும் அந்தத் தேதியில்தான் வைக்க வேண்டுமென்ற அறிவுரையை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுத்தால் அது போதுமானது. அந்த தினத்தில் மட்டும் அலவகளைப் பரிசீலித்து வைக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அதேபோல், ஊராட்சி ஒன்றியங்களில் 31–12–1990 வரை சுமார் 30 ஆண்டுகளாக 3,500 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் முன்னாள் கர்ணம் முன்னாள் கிராம அதிகாரிகள் போன்றவர்களையும் அந்த கேட்டகிரியில் சேர்த்திருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது, கிட்டத்தட்ட 11 ஆயிரம் பேர் அங்கே பணியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மாத ஊதியமாக 400 ரூபாய் கொடுத்து வருகிறார்கள். ஆக இந்த 11 ஆயிரம் பேருக்கும் ரூ. 400 ஊதியம் என்று சொன்னால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கும் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். அதேபோல இவர்கள்தான் ஊராட்சியானாலும் சரி, நகராட்சிகளானாலும் சரி, அவைகளுக்கு பணத்தைச் சேகரித்து தருபவர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக வீட்டுவரி, தொழில்வரி, வங்கிவரி, தண்ணீர் வரி போன்றவைகளை பிரித்து அலுவலகங்களில் கொண்டுவந்து சேர்ப்பவர்கள் இப்படிப்பட்டவர்கள்தான் என்

பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்வதோடு அதிகமான ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றவர்களை ஊரக வளர்ச்சித் துறை அலகில் எடுத்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல் எஸ்.எஸ்.எல்.சி.-க்குக் குறைவாக உள்ள அனைத்து ஊரக வளர்ச்சி உதவியாளர்களையும் முழு நேர அரசு ஊழியர்களாக ஆக்கி, பேரூராட்சியில் வரி தண்டல் செய்பவர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதுபோல் 15—9—1989 முதல் நகராட்சி மற்றும் நகரியங்களில் பணி புரியும் அனைத்து ஊழியர்களையும், சுகாதார ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக அறிவித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து க்ஷேம நிதி, எல்.ஐ.சி. போன்றவைகளைப் பிடித்தம் செய்ய வேண்டுமென்று சொல்லி அரசு ஆணையாளர் உத்திரவு போட்டு இருக்கிறார்கள். இருந்தாலும் பெரும்பாலான நகராட்சி ஆணையாளர்கள் அதை உதாசீனப்படுத்துகின்ற வகையில் நடந்து வருகிறார்கள். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அரசு ஆணையில் பிறப்பிக்கப் பட்டுள்ளபடி, அரசு நிதியிலிருந்து அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கான உத்திரவையும் நீங்கள் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரைக்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்பட்ட பிறகும் கூட அதிலே பணியாற்றுகிற ஊழியர்கள் ஏனோ தானோ என்று சொல்லி ஒழுங்காக தண்ணீரை விநியோகிக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை பெருவாரியாக இருந்துகொண்டிருக்கிறது. அப்படி அரசு இத்தனை கோடி ரூபாய் செலவு செய்த பிறகும், உதாசீனமாக இருக்கக்கூடிய பணியாளர்கள் மீது கடும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ஆழ்குழாய் கிணறுகளைப் பொறுத்தவரைக்கும் அதிகமாகவே போட்டு இருக்கிறார்கள். மக்களுடைய தண்ணீர்ப் பிரச்சினை தீர வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் அவைகளைப் போட்டு இருந்தாலும், அவைகளில் 100-க்கு 85 சதவீதம், 90 சதவீதம் என்றே சொல்லலாம், பழுதடைந்து இருக்கின்றன. அவைகளை ஊரக நல அலுவலர் மூலம் சரி செய்



வதற்கு ஒரு உத்தரவை அரசு பிறப்பித்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊரக நல அலுவலர் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அடி பைப்புகள், போர் வெல்ஸ்-ஆழ்குழாய் கிணறுகள் எத்தனை சரியாக இருக்கின்றன; எத்தனை செயல்படாமல் இருக்கின்றன என்கிற ஒரு அறிக்கையை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் (பி.டி.ஓ.) அவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் சமர்ப்பிக்க வேண்டுமென்ற வகையில் நீங்கள் ஆணை பிறப்பிப்பீர்களேயானால் அவர்கள் மூலம் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பிட்டர் அல்லது அதனைப் பழுது பார்க்கக்கூடிய அரசு ஊழியர் மூலம் அவைகளை சரி செய்ய முடியும். இல்லை என்று சொன்னால் போர் வெ இங்கே சரி இல்லை, அங்கே சரி இல்லை என்ற நிலை இருந்து கொண்டே இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : அந்தப் பிரச்சினை வந்து கொண்டிருப்பதால் அது எங்களுக்கு பெரும் சிரமமாக இருக்கிறது. எனவே அது குறித்து அரசு கவனத்திலே கொண்டு உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல என்னுடைய மாவட்டத்தில் கூட 4½ கோடி ரூபாய்க்கு எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த நேரத்தில் ஒரு குடிநீர்த் திட்டத்தை கொண்டு வந்தார். அதற்கு குழித்துறை ஆற்றுக் குடிநீர்த் திட்டம் என்று பெயர். அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 3 அல்லது 3½ கோடி ரூபாய் செலவு ஆகிவிட்டது. இருப்பினும் இப்போது அங்கே செயல்படாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அந்த ஃபங்ஷன் ஆரம்பிக்கப்படவில்லை. அரசினுடைய திட்டம் செயலிழந்து போகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசு அதில் நேரடியாகக் கவனம் செலுத்தி 4½ கோடி ரூபாய்க்கான குழித்துறை ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது). துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் மணி அடிப்பதில் டைம் போய்விடுகிறது. இரண்டு நிமிடம் கூட தாருங்கள். 'சிம்பதெட்டிக் கன்சிடரேஷன், சார்.'

அதுபோல மணப்பாறை பகுதியில் ஒரு உலக வங்கித் திட்டத்தின் கீழ் காவிரியில் இருந்து தண்ணீரை கொண்டுவந்து அங்கே ஒரு குடிநீர் திட்டம் வர வேண்டுமென்று ஒரு நிகழ்ச்சி உண்டு. அது கூட இப்போது செயல்படுத்த முடியாத சூழ்நிலையில், திட்டம் ஆரம்பிக்கப்படாத சூழ்நிலை இருப்பதாகச் சொன்னார்கள். அதையும் நீங்கள் தனியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1991 செப்டம்பர் 17

தமிழ்நாட்டில் இன்று யானைக் கால் நோயைப் பற்றி இதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது குறிப்பாக சுகாதாரக் கேடு காரணமாக பரவி வருகிறது. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங் களுக்கு ஒதுக்கப்படக்கூடிய நிதி ஒதுக்கீட்டில் அதிகம் ஒதுக்க வேண்டும். சுகாதாரக் கேடு அதிகம் இருக்கக்கூடிய பகுதிகளில் டிரெய்னேஜ் வாட்டர் போகின்ற விதத்திலும் அங்கே அசுத்த மான தண்ணீர் தேங்கி நிற்காத விதத்திலும் பார்த்துக் கொள்ள வேண்டும். யானைக்கால் நோய் பெருவாரியாக தமிழகம் முழு வதும் பல சென்டர்களில், குறிப்பாக கும்பகோணத்தில் இருக் கிறது; நாகர்கோவிலில் இருக்கிறது; நாகப்பட்டிணத்தில் இருக் கிறது; இப்படி சில பாக்கெட்டுகளில் இருக்கிறது. அந்தந்தப் பகுதிகளில் மாத்திரம் தனிக் கவனம் செலுத்தி அந்த யானைக் கால் நோய் பரவாமல், கொசுக்களை அழிக்கும் விதத்திலும், தண்ணீர் தேங்கி நிற்காத விதத்திலும் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி அமரலாம் என்று கருதுகிறேன். என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை, நெல்லை, மேலப்பாளையம் —இந்தப் பகுதி கள் மூன்றையும் சேர்த்து மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்று ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக வெகுகாலமாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த 3 நகராட்சிகளும் சேர்ந்து இருக்கிறது. தமிழ்நாட்டில் அந்தப் பகுதிதான் அப்படி இருக்கிறது என்று கருதுகிறேன். ஆக திருநெல்வேலி, மேலப் பாளையம், பாளையங்கோட்டை ஆகிய 3 நகராட்சிப் பகுதிகளை யும் சேர்த்து மாநகராட்சியாக ஆக்குகின்ற திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

அதைப்போல கிராமப்புற இளைஞர்கள் வேலை வாய்ப்புக்கு என்று ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறீர்கள். என்னுடைய பாராட்டு. அடுத்து, மீனவ இளைஞர்களுக்கு மீன் பிடிக்கவும், மீன் பதப்படுத்தவும் பயிற்சி அளிக்க ரூ. 12.47 இலட்சம் செலவு செய்யப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதற்கும் என்னுடைய பாராட்டுகள். 630 இளைஞர்கள் அதில் பயிற்சி பெற்று வெளியே வருவார்கள். ஆனால், அவர்களுக்கு தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 30 இலட்சம் ரூபாய் என்று சொன்னால் அது சரியாக இருக்குமா என்பது தான் என்னுடைய கேள்வி. ஆகவே, அந்தத் தொகையை அதிகப்படுத்தி அவர்களுக்கு உதவுகிற வகையில், துணை செய்கிற வகையில்—குறைந்தபட்சம் ஒரு நபருக்கு 20 ஆயிரம் ரூபாய் என்று கடன் கொடுத்தால்தான் சிறப்பாகச் செயல்பட முடியும் (மணியடிக்கப் பெற்றது). ஐந்து நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.



1991 செப்டம்பர் 17]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஐந்து நிமிடம் ஒதுக்க இயலாது. நீங்கள் முடிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் முன்பே உறுப்பினராக இருந்தவர். விதிமுறைகள் எல்லாம் அவருக்கு தெரியும். நான் மீண்டும் மீண்டும் மணியடிக்கச் செய்வது சரியாக இருக்காது.

டாக்டர் தே. குமாரதாஸ் : துணைத் தலைவர் அவர்களே. நாங்கள் ஒரு கட்சிக்கு ஒரு நபர் என்றுதான் வந்திருக்கிறோம், காங்கிரஸ் கட்சியை சார்ந்தவர்கள் . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. குமாரதாஸ் அவர்கள் கவனிக்க வேண்டும். அவர்கள் ஒரு கட்சியில் நான்கு பேர்கள்தான் பேசுகிறார்கள். ஆளும் கட்சியில் ஏழுபேர் இன்று பேசியிருக்கிறார்கள். நீங்கள் நான்கு பேர் பேசுகிறீர்கள். ஆனால், நீங்கள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மானியத்திலும் பேசுகிறீர்கள். நீங்களே அவையின் நேரம் முழுவதையும் எடுத்துக்கொள்ள முயற்சிப்பது சரியல்ல. அதை நான் அனுமதிப்பதும் முறையாக இருக்காது. (குறுக்கீடு). திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், டாக்டர் குமார தாஸ் அவர்கள் சொல்கிறபோது ஒரு கட்சிக்கு ஒருவர் தான் நாங்கள் வந்திருக்கிறோம் என்று அவர்களே முயற்சி செய்து ஒருவர் மட்டும் வந்ததுபோல சொல்கிறார். மக்கள் அவ்வளவு தான் வேண்டுமென்று அனுப்பி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னால் பரவாயில்லை. திரு. குமாரதாஸ் அவர்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, மக்கள் எந்த நேரமும் எந்தத் தீர்ப்பையும் அளிப்பார்கள். ஏனென்றால் கடந்த முறை 142 பேர் இருந்தவர்கள் இந்த முறை இரண்டு பேர் வந்திருக்கிறார்கள். அது இன்றைக்கு 160-ஆக இருப்பது நாளைக்கு 16-ஆக மாறக் கூடும். 60-ஆக இருப்பது ஆறாக மாறக்கூடும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர், எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுக்கு

[திரு. அழகு திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 17

ஐந்தரை கோடி தமிழ் மக்களும் ஒட்டுமொத்தமாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது போன்ற ஒருகத்தான தீர்ப்பு உலகத்தில் எந்தவொரு கட்சிக்கும் கிடைத்தது இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல எங்களுடைய இயக்கத்தை வழிநடத்துகிற புரட்சித் தலைவி அவர்களுக்கு எதிராக மக்கள் எந்தச் காலத்திலும் தீர்ப்பு அளிக்கமாட்டார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரி வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்த முறை அநேகமாக இந்த இரண்டு மூன்று இடங்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே சேர்ந்துவரும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மக்கள் முன்னால் நாம் ஆற்றுகிற பணிகளையும், நம்முடைய செயல்பாட்டையும் பொறுத்துத்தான் அடுத்த முறை மக்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும். அப்படி அளிப்பார்கள் என்பது என் நம்பிக்கை.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மக்களுக்குப் பணி செய்வதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இணையாக, எங்களை வழிநடத்துகிற இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர் களுக்கு இணையாக யாரும் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. குமாரதாஸ் அவர்கள் உடனே முடிக்க வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொண்டதைப் போல மீன் பிடிக்கிற கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சிக்கு கொடுக்கிற உதவித் தொகையை அதிகரித்து நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வேறு என்ன செய்வது (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு திரு. க. பழனிசாமி

*திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக போட்டியிடுவதற்கு வாய்ப்பளித்த நமது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர்



1991 செப்டம்பர் 17] [திரு. க. பழனிசாமி]

புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவது முறையாக என்னை வெற்றிபெறச் செய்த என்னுடைய இடப்பாடி தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகமும், மாநக ராட்சிகளும் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடுமையான நிதி நிலை நெருக்கடி இருந்தும் கூட தமிழ கத்தினுடைய ஏழையெளிய மக்கள் கிட்டத்தட்ட 70 சதவித மக்கள், கிராமப்புறங்களில் வாழ்கிற மக்களுக்கு அடிப்படை வசதி களைச் செய்து கொடுப்பதற்கு நமது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் நிதியுதவி அளித்து சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை இன்றைக்கு நமக்கெல்லாம் அளித்து இருக்கிறார்கள். குடிநீர், சாலை கள், தெரு விளக்குகள், ஆரம்பப் பள்ளிகள், மற்றும் பாசன ஏரிகள், மதிய உணவுக்கூடங்கள், டெலிவிசன்கள் போன்ற அத்தி யாவசியமான வசதிகளை எல்லாம் இந்தத் திட்டத்தின் மூல மாக செய்து கொடுக்க இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே குடிநீர் வசதியைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட 192 கோடி ரூபாயிலே, 64 கோடி ரூபாய் குடிநீருக்காக வழங்கப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் எங்கள் எடப்பாடித் தொகுதியிலே மருடஞ்சாவடி ஒன்றியமும், கொங்கனாபுரம் மற் றும் எடப்பாடி, ஆகிய இந்த மூன்று ஒன்றியங்களும், கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால்,—இதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்குள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அதோடு மட்டுமல்லாமல் 4 மாவட்டங்களுக்கு 30 கோடி ரூபாய் குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே சேலம் மாவட்டமும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்திலே குறிப்பாக, ஆதி திரா விட, மக்கள், மற்றும் அருந்ததியினர் வாழ்கின்ற பகுதிகளில் தண்ணீர் கிடைக்காமல், குடிநீர் கிடைக்காமல் பெரிதும் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களின் நலனைக் கருதி, அதிகமாக ஆழ்துளைக் கிணறுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, சேலம் மாவட்டத்தில், நெடுங்குளத்தில், இருந்து இராசிபுரம் வரையிலும் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்டு, இடையிலே, தி.மு.க. ஆட்சிக்கு வந்த காரணத்தால், அந்தத் திட்டத்தை முடக்கி வைத்து விட்டார்கள். இப்போது மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித்தலைவி அவர்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்தவுடன் இந்தத் திட்டம் துவங்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தில் என்னுடைய தொகுதியில் உள்ள பல்வேறு பகுதிகள் விடுபட்டுப் போய்விட்டன. அந்தப் பகுதிகளை எல்லாம் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதோடு நகராட்சிப் பகுதியிலே, 1, 2, 3 மற்றும் 4 வார்டுகளும், இந்தக் குடிநீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பை இழந்து இருக்கிறது. அந்தப் பகுதியையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தெருவிளக்குகள் என்று எடுத்துக் கொண்டால், கிட்டத்தட்ட பல வருடங்கள் ஆகியும் கூட இன்னும் தெரு விளக்குகள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. ஊராட்சி மன்றங்கள் எல்லாம், பணத்தைக் கட்டிப் பல ஆண்டுகள் ஆகியும் கூட, இன்னும் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. எனவே, பணம் கட்டிய குறிப்பிட்ட நாட்களுக்குள் தெரு விளக்குகளை அமைத்துத் தரவேண்டும் என்கிற வகையில் ஒரு சட்டத்தை அமைச்சர் அவர்கள் இயற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கடந்த ஆட்சிக் காலத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், தெரு விளக்குகள் அமைக்கின்றபோது, கம்பங்களுக்கு 20 ரூபாய் கட்டினால் போதும் என்ற நிலைமை இருந்தது. ஆனால், கடந்த கால ஆட்சியிலே, அதை 300 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் நலிவுற்ற ஊராட்சிகள் எல்லாம் தெரு விளக்கு வசதிகளைப் பெற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், 20 ரூபாய் கம்பத்திற்குக் கட்டினால் போதும் என்ற ஒரு நிலைமை இருந்தது. அதை மீண்டும் கொண்டு வந்து, அனைத்துப் பகுதிகளுக்கும், தெரு விளக்கு வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.





அதோடு, எனது தொகுதியிலே பணம் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், 500, 600 தெரு விளக்குகளுக்கு மேலே இன்னும் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. அதற்கு எல்லாம் மின் இணைப்புக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், தெரு விளக்குகளைப் போடுகின்ற பல்புகள், சோக்குகள், மற்றும் ஸ்டார்ட்டர்கள், எல்லாம் தரமானவையாக இல்லாத காரணத்தால், அவைகள் எல்லாம் குறுகிய காலத்தில் பியூஸ் ஆகி விடுகின்றன. ஆகவே, நல்ல, தரமான பல்புகளையும், சோக்குகளையும், ஸ்டார்ட்டர்களையும் வாங்கிக் கொடுத்து, நீண்ட காலத்திற்கு அவைகள் எரிகின்ற வகையில், அதை அமைத்துத்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், எல்லாம் சேர்ந்து, டாஸ்க் போர்ஸ் கமிட்டியின் மூலமாக பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியிலே, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களைத்தான் பயனீட்டாளர்களாகத் தேர்ந்தெடுக்கிற ஒரு முறையை ஏற்படுத்தி, அதிலே ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், வட்டாட்சியர்கள், மற்றும் அந்தந்தப் பகுதியில் இருக்கிற வங்கியினுடைய மேலாளர்கள், இவர்களை எல்லாம் வைத்து, தற்போது அந்தப் பயனீட்டாளர்களைத் தேர்வு செய்கின்ற முறை இருக்கிறது. எனவே, அந்த முறையை மாற்றி, சட்டமன்ற உறுப்பினர்களையும், அதிலே இணைத்து, உண்மையாக, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு இந்தத் திட்டம் போய்ச் சேருகின்ற அளவிற்கு, பயன் பெறுகிற அளவிற்கு, சட்டமன்ற உறுப்பினர்களையும், அதிலே சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இந்தத் திட்டத்திலே பெண்களுக்கு 30 சதவீதம், ஆதி திராவிட மக்களுக்கு 50 சதவீதம் என்று அந்தப் பயனீட்டாளர்களைத் தேர்வு செய்கின்ற முறை இருக்கிறது. அவர்களைத் தேர்வு செய்கின்றபோது, அங்கே தொடக்கக் கூட்டுறவு வங்கிகளும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் அவர்களுக்குக் கடன் உதவி அளிக்க முன்வருவதில்லை. ஏன் என்று கேட்டால், இவர்கள் எல்லாம் கடனை எல்லாம் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையில் இருக்கிறார்கள், அதனால் வங்கிப் பணம் முடங்கிவிடும் என்று சொல்லி, இவர்களுக்கு கடன் உதவி

[திரு. க. பழனிசாமி] [1991 செப்டம்பர் 17

கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும் அமைச்சர் அவர்களும், இவர்களுக்கு உடன் உதவி அளிப்பதற்கு வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, எனது எடப்பாடி ஊராட்சி ஒன்றியக் கட்டிடமும், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியக் கட்டிடமும் மிகவும் பழுதான நிலைமையில் இருக்கிறது. எனவே, அதற்கு நிதி ஒதுக்கி, புதிய கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியில், பக்கநாடு கிராமத்தில், பெரும் பள்ளம் என்று ஒரு ஓடை ஓடுகின்றது. மழைக்காலங்களில் அந்த ஓடையில் அதிகமான தண்ணீர் வருகிற காரணத்தால், அங்கே வருகின்ற பள்ளிக்குழந்தைகள் எல்லாம் அந்த ஓடையைக் கடக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, அதன் குறுக்கே, சிறிய பாலம் ஒன்றைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

அதைப்போல கசிவுநீர் குட்டை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், எங்கள் பகுதியிலே வெள்ளப்பெருக்கின் காரணமாக கசிவு நீர்க் குட்டைகள் எல்லாம் உடைந்திருக்கின்றன. அந்தக் கசிவு நீர்க் குட்டைகளை எல்லாம் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காளிக்கவுண்டன்பாளையம், சொரியம்பட்டி, கூடலூர் போன்ற பகுதிகளிலே எல்லாம் கசிவுநீர்க் குட்டைகள் உடைந்திருக்கின்றன. அவற்றையும் சீரமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல எடப்பாடியில் நகராட்சி ஒரு நலிவுற்ற நகராட்சியாக இருக்கிறது. அந்த நகராட்சிக்கு போதுமான நிதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல எடப்பாடி நகராட்சியில் கடந்த 3, 4 மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்று கூறிப்பிட்டிருக்கிறார்கள். சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நகராட்சியிலே அனுமதி பெறாமல் கட்டப்பட்டிருக்கிற குடியிருப்புகளுக்கு எல்லாம் எந்தவிதமான அடிப்படை வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. அங்கேயும்,



1991 செப்டம்பர் 17] [திரு. க. பழனிசாமி]

அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அவர்களிடம் வரி வசூல் செய்யப்படுகிறது. 15, 20 ஆண்டுக் காலமாக அந்த மக்கள் அங்கே குடியிருந்து வருகிறார்கள். அப்படி இருந்தும் அந்தப் பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. உடனடியாக அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு நகராட்சியில் வார்டுக்கு ஒரு கழிப்பறை வசதியாவது கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். இப்போது பெரும்பாலும் அந்த வசதி இல்லை; எனவே, கழிப்பறை வசதிக்கு ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல நகராட்சிப் பகுதியிலேயும் அரிசன மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ''குரூப்ஹவுஸ்'' திட்டம் இல்லை. கிராமப்புறங்களில் இருக்கிற அரிசன மக்களுக்கு ஆதி திராவிட மக்களுக்கு ''குரூப்ஹவுஸ்'' திட்டத்தின் கீழ் இலவச வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. நகராட்சிப் பகுதிகளிலும் அதிகமாக ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற காரணத்தால் அவர்களுக்கும் அந்தத் திட்டத்தின்கீழ் இலவச வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதியில், ஆலச்சம்பாளையம், தாவந்தெரு மற்றும் வீரப்பம்பாளையம் போன்ற பகுதிகளில் அதிகமாக அரிசன மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி.

*திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சித் துறை மானியத்தின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற அனுமதி அளித்ததற்காக முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாரூர் நகரம் ஒரு மிகப் பெரிய நகரம். அந்த நகரத்தின் மையத்திலே கமலாலயம்குளம் அமைந்திருக்கிறது. அந்தக் குளத்தின் தண்ணீர் ஏறத்தாழ ஜனவரி மாதத்திலேயே கெட்டுவிடுகிறது. அந்தப் பகுதியிலே செல்ல முடியாத அளவுக்கு ஒரு வாடை வீசுகிறது. அந்த வாடையைப் போக்க அடிக்கடி சுத்தம் செய்வதற்கு என்ன செய்ய வேண்டுமென்று ஆய்வு செய்து, சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வி. தம்புசாமி] [1991 செப்டம்பர் 17

அதைப்போன்று அந்த நகரத்திலே குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால் 65.5 இலட்சம் ரூபாய் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, அந்தத் திட்டத்தை ஆய்வு செய்வதற்கு 1.34 இலட்சம் ரூபாய் ஆய்வுப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அந்த நகரத்திலே ஏழை எளிய மக்கள் குடியிருப்பதற்காக அடுக்குமாடிக் கட்டிடம் கட்டுவதற்கு திருச்சி குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக 12,000 வீடுகள் கட்டுவதற்கும் அதற்கு மாநகராட்சி நிலம் வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பாதாள சாக்கடைத் திட்டத்தை திருவாரூர் நகரத்திலே செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம் என்னவென்றால் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் அங்கே யானைக்கால் வியாதி பரவும் வாய்ப்பு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். திருவாரூர் நகரில் யானைக்கால் நோய் பரவுவதற்கான வாய்ப்பு அதிகரித்து வருவதாக மருத்துவர்களுடைய கணிப்பு இருக்கிறது. ஆகவே, அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றி, அதன் மூலமாக அந்த வியாதி பரவாமல் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, திருவாரூர் நகரை இரண்டாகப் பிரிக்கிற ஓடம்போக்கி ஆறு இருக்கிறது. ஒரு புறத்திலே விஜயநகரம்; மறு புறத்திலே திருவாரூர் நகரம். இரண்டாகப் பிரிக்கிறது ஓடம்போக்கி ஆறு. இந்த இரண்டு நகரங்களின் சாக்கடை முழுவதும் அந்த ஓடம்போக்கி ஆற்றில் விழுகிறது. அந்த ஆற்றினுடைய நீர் திருவாரூர் தாலுகா, நாகப்பட்டினம் தாலுகா ஆகிய இரண்டு தாலுக்காக்களுக்கும் பயன்படுகிறது. அதனால், குளங்களிலே அந்த நீர் நேரடியாகப் போய் சேருகிறது. அதுதான் அந்த வியாதி பரவுவதற்கு அஸ்திவாரமாக இருக்கிறது. அந்த ஓடம்போக்கி ஆறுதான் இதற்கெல்லாம் காரணமாக இருக்கிறது. ஆகையால் சாக்கடை நீர் ஆற்றில் விழாமல் தடுப்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கி, அதன் மூலம் இரண்டு நகரங்களிலும் இருக்கிற இலட்சக்கணக்கான மக்களை அந்த வியாதியிலிருந்து பாதுகாக்க ஒரு துரித நடவடிக்கை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 17] [திரு. வி. தம்புசாமி]

அதே நேரத்தில் நகரத்தினுடைய மையப் பகுதியில் இந்திய உணவுக் கார்ப்பரேஷன் மூலம் கட்டப்பட்டிருக்கிற இராட்சச மில் நெல் அரைக்கும்போது அதிலிருந்து கரி பரவி, நகரம் முழுவதும் கரிமயமாக இருக்கிறது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

அது மாதிரி திருவாரூர் நகராட்சிக்குச் சொந்தமான ஒரு மார்கெட் நகரத்தினுடைய மையப் பகுதியில் அமைந்திருக்கிறது. அதிலே அந்த மார்க்கெட்டை சுத்தப்படுத்தி, கட்டிடம் கட்டிக் கொடுத்து அதனால் நிறைய வருமானம் வரக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு அரசு கடன் வழங்கி நகராட்சி மூலம் அந்த மார்க்கெட்டை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நகராட்சி சார்பிலே இருந்த பூங்கா அழிந்துவிட்டது. ஆகவே மீண்டும் அந்த பூங்காவை ஏற்படுத்துவதற்கு அரசு அந்த நகராட்சிக்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி அந்த நகராட்சி எல்லைக்குள்ளே ஹரிஜன மக்கள் அதிகமாகக் குடியிருக்கிறார்கள். இன்னும்கூட அவர்களுக்கு நடந்து செல்வதற்கு ஒரு நல்ல பாதை கிடையாது. சந்து வழியாகவும், குறுக்காகவும் எப்படியோ சென்றுகொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு பாதை வசதிகள் அமைத்துக் கொடுப்பதற்கு ஒரு விசேஷ ஆணை நகராட்சிக்கு போட்டு அப்படி அதற்கான கூடுதல் வசதி செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து கிவாளூர், கொறடாச்சேரி ஆகிய இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. அந்த பேரூராட்சிகளில் சுகாதார கேடுகள் இருக்கின்றன. ஆகவே, சாக்கடைத் திட்டத்தை அபிவிருத்தி பண்ணுவதற்கு இரண்டு பேரூராட்சிகளுக்கும் அரசு மூலம் கடன் வழங்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக அந்தத் திட்டம் நகராட்சி, பேரூராட்சிகளில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால், தேர்தலை அவசியம் நடத்த வேண்டும். ஏனென்று சொன்னால் நாம் எவ்வளவு தீர்மானங்கள் எடுத்தாலும், எவ்வளவு நிதி ஒதுக்கினாலும் இந்த நிதி போய் சேர்கின்ற இடம், ஊராட்சி ஒன்றியம்,

[திரு. வி. தம்புசாமி] [1991 செப்டம்பர் 17

பேரூராட்சி, நகராட்சி, ஊராட்சி ஆகியவற்றிற்குத்தான். ஆகவே அந்த அடித்தளமான ஸ்தாபனம் இல்லாமல் எந்தத் திட்டத்தையும் நாம் நிறைவேற்ற முடியாது என்பதுதான் கடந்த காலத்தில் நமக்குக் கிடைத்திருக்கிற அனுபவம். அந்த வகையிலே தேர்தலை நடத்தி அதன் மூலம் தமிழக அரசு கொண்டு வரக்கூடிய நல்ல திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மக்களுடைய அன்றாட வாழ்க்கையோடு நாம் எவ்வளவு சொன்னாலும், எவ்வளவு திட்டமிட்டாலும், அன்றாடம் மக்களோடு தொடர்பு கொண்டிருக்கக்கூடிய அந்த நிர்வாக இயந்திரம் மக்களுடைய சேவைகளை, மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய அடித்தளமாக அமைந்திருக்கிற இடம். ஆகவே, அதற்கு விரைவாக தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையிலும் நாம் எவ்வளவு நிதி ஒதுக்கினாலும்கூட அது மக்களுக்கு விரைவாகப் போய்ச் சேர்வது கிடையாது. அதற்கு அடிப்படையாக இருக்கிற காரணம், அங்கே ஒரேயொரு பொறியாளர் மட்டும் இருக்கிறார். 10, 15 பஞ்சாயத்துக்களிலிருந்து தீர்மானங்கள் போட்டு, எங்களுக்கு ஒரு பாலம் அமைக்க வேண்டும் அல்லது ஒரு சாலை அமைக்க வேண்டுமென்று கேட்கின்றபொழுது அங்கே ஒரேயொரு பொறியாளர் அந்தத் தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை. அதனால் நீண்டகாலம் காலங்கடத்தப்பட்டு, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல், வீணாக அந்த நிதியும் செலவழிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு பொறியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். அத்தோடு ஒரு ஒன்றியத்திற்கு ஒரு வரைவாளர் நியமிக்கப்பட வேண்டும். ஏனென்றால் எஸ்டிமேட் போடுவதற்கு அங்கே ஆள் கிடையாது. அதை யாரிடம் போடுவது என்றே தெரியாது. ஏதோ இருக்கிறவர்கள் மற்றவர்களிடம் சொல்லி, எதையாவது போட்டுக் கொடுக்கச் சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த நிதியை முறையாக செலவழிக்க வேண்டுமென்றால் இரண்டு பொறியாளர்கள், ஒரு படம் வரையக்கூடியவர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் கட்டிடங்களை வேகமாகக் கட்டுவதற்கும் அவற்றை அளப்பதற்கும், திரும்ப சரியாக நடக்கிறதா என்பதைக் கண்காணிப்பதற்கும் முடியும். அந்த வகையிலே அதற்கு நிர்வாகத்தை ஒரு புதிய முறையிலே அமைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 17] [திரு. வி. தம்புசாமி]

அதே நேரத்தில் ரூ. 1 கோடி அனுமதித்திருப்பதை நான் வரவேற்கிறேன். அந்த ரூ. 1 கோடி என்பது ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்ினுடைய தொகையும் சேர்த்தா அல்லது தனியா என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. காரணம் என்னவென்று கேட்டால், முன்னாலே மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கூட சொன்னார்கள். என்.ஆர்.ஈ. பி., ஆர். எல். ஈ. ஜி. பி., இரண்டு திட்டங்களையும் ஒன்றாக இணைத்து ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் என்று உருவாக்குகிறபோது தமிழகத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய ரூ. 8 கோடி குறைந்திருக்கிறது. அந்த வகையிலே தான் சொல்கிறேன். அப்படி ஒன்றாக இணைத்தால் நிதி குறையக் கூடிய ஒரு சூழ்நிலைமை ஏற்படும். ஆகவே அந்த நிதி குறையாமல் இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி குடிநீர் பற்றிப் பேசினார்கள். குடிநீரில் நிறைய குறைபாடு வருவதற்கான அடிப்படையான காரணம் அந்த ஒன்றியத்திலே குடிநீரை அவ்வப்போது சரி பார்ப்பதற்கு ஆள் கிடையாது. ஏறத்தாழ 30, 32 ஊராட்சிகளைச் சேர்ந்திருக்கக்கூடிய ஒன்றியமாக இருந்தாலும், அந்த ஒன்றியத்திலே ஒரேயொரு குடிநீர் பராமரிப்பாளர்தான் இருக்கிறார். அவர் 32 ஊராட்சிகளுக்கும் சென்று பார்க்க முடியுமா என்பது தான் ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே குறைந்த பட்சம் குடிநீரை பராமரிக்கக்கூடிய அந்த ஊழியர்களை 10 பேரையாவது நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் மக்களுடைய குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். அத்தோடு மின் விளக்குகள் எரிவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள்.

பிற்பகல் 1-00

இதற்கு என்ன அடிப்படையான காரணம் என்று சொன்னால் அந்த மின் விளக்குகளை வைத்திருக்கும் ஒன்றியத்திற்கும், அந்த மின் விளக்குகளைப் போடுகின்ற அந்தப் பணியாளர்களுக்கும் சம்பந்தமே கிடையாது. மின் விளக்கு போடுகிற பொருள்களை வைத்திருப்பது ஒன்றியம். அந்த மின் விளக்குகளை மாட்டிக் கொடுப்பது மின் வாரியத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள். அவர்களுக்குள் தொடர்பு இல்லாத காரணத்தால் காலத்திலே அந்த மின் விளக்குகளை போடுவதில் சங்கடங்கள் இருக்கிறது. எனவே மின் வாரியத்திலே வேலை செய்யக்கூடிய அந்தப் பணியாளர்களை 10 நபர்களை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைத்து, அந்தப் பணிகளையும் அவர்களிடத்திலே ஒப்படைக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலேயிருந்து எந்தெந்த பகுதிகளிலே மின் விளக்கு போட வேண்டும் என்று நிர்ண

யிக்கப்படுகிறதோ அந்தந்த இடங்களில் மின் விளக்குகளை மாட்டுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும் என்று நான் கூற விரும்புகிறேன்.

அதே மாதிரி இந்த வேலைகள் விரைவாக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு வாகன வசதியை ஏற்படுத்தி தர வேண்டும். இப்போது ஒன்றியங்களிலே இருக்கும் ஜீப்பை நான்கைந்து பேர்கள் தள்ளி விட்டால்தான் அதை கிளப்ப முடியும். ஒரு இடத்திலிருந்து கொஞ்ச தூரம் சென்றால் மறுபடியும் தள்ளி விட வேண்டும் என்ற நிலைமைதான் இருக்கிறது. ஆகவே தயவு செய்து இப்படிப்பட்ட பழமையான ஜீப்புகளை ஏலம் போட்டு விட்டு புதிய ஜீப்புகளை ஒன்றியங்களுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்தப் பணிகளையெல்லாம் விரைவாக செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வளவு நிதி ஒதுக்கினாலும் அந்த நிதி முறையாக செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு ஒரு ஜீப்பு வேண்டும். அந்த ஜீப்புக்கு வழங்கக்கூடிய டீசலோ அல்லது பெட்ரோலோ இன்றைக்கு இருக்கிற அளவை விட கூடுதலாக வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அதேபோல சாலைகள். கிராமப்புறத்திலே பண வசதி இல்லாத காரணத்தால் அங்கு சாலை வசதிகள் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. அதுவும் குறிப்பாக அரிசனங்கள் குடியிருக்கிற பகுதியிலே இன்னமும் கூட ஒரு நல்ல சாலை வசதி இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஒரு கோடி நிதியையும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலிருந்து கிடைக்கக்கூடிய அந்த நிதியையும் சேர்த்து கொஞ்சம் அதிகமான பணம் ஒதுக்கி அரிசனங்கள் குடியிருக்கக்கூடிய பகுதிகளுக்கு சாலைகள் போடுவதற்கான திட்டத்தை விரைவாக அமல் படுத்துவதற்கு அரசு முன் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சிறுசிறு வாய்க்கால்கள் அதிகமாகக் கொண்டிருக்கக் கூடிய பகுதியாக இருக்கிறது. ஆகவே, இன்னமும் ஜனங்கள் தண்ணீர் காலங்களில் அந்த வாய்க்கால்களில் இறங்கித்தான் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவைகளின் மீது சிறு சிறு பாலங்களைக் கட்டித் தருவதற்கு கொஞ்சம் அதிகமான நிதியை தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டும் என்று



கேட்டுக்கொள்கிறேன். சாலைகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்பதிலே ஒரே ஒரு பிரச்சினை. தஞ்சை மாவட்ட சாலைகளுக்கும் மற்ற மாவட்ட சாலைகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. தஞ்சை மாவட்ட சாலைகள் ஏறத்தாழ 7 மாத காலம் தண்ணீரிலேயே மூழ்கி இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் தண்ணீரே பார்க்காமல் இருக்கிறது. இப்படி தண்ணீருக்குள்ளே இருப்பதால் அதிகமான வாகனங்கள் செல்லுகிற நேரத்தில் சாலைகள் வீணாகி விடுகிறது. ஆகவே, எங்கள் பகுதியிலே சாலைகளை சீரமைப்பதற்கு கொஞ்சம் அதிகப் பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஊராட்சிகளிலே சாலைகள் இருக்கின்றன. வரக்கூடிய பணத்திற்கும் சாலைகளுக்கும் சம்பந்தம் கிடையாது. பராமரிக்க முடியவில்லை. ஆகவே, இதிலே ஊராட்சிகளுக்கு வரையறுத்து 2 கிலோ மீட்டர் 5 கிலோ மீட்டர் அளவுக்கு சாலைகளை ஒதுக்கி ஒவ்வொரு ஆண்டும் செம்மைப்படுத்த வேண்டும். அப்போதுதான் அதை பராமரிப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஒன்றியத்திலே கூட நிதிக்கும் சாலைகளுக்கும் சம்பந்தம் கிடையாது. உதாரணத்திற்கு சொன்னால் கீவளூர் ஒன்றியத்திலே சாலை பராமரிப்புக்கு வேண்டுமென்றால் ஏறத்தாழ 98 இலட்சம் தேவை என்று மதிப்பீடு ஒன்று அளிக்கப்பட்டிருக்கிறது. அது மாதிரி திருவாரூர் ஒன்றியத்திலே சாலை பராமரிப்பிற்கு ஏறத்தாழ 81 இலட்சம் தேவைப்படுகிறது. இருக்கின்ற சாலைகளை பராமரிப்பதற்கு இவ்வளவு தேவைப்படுகிறது. அதுமாதிரி கொரடாச்சேரி ஒன்றியத்திலே அந்த சாலைகளைப் பராமரிக்க வேண்டும் என்றால் கிட்டத்தட்ட 88 இலட்சம் தேவைப்படுகிறது என்று ஆணையரிடம் தொடர்பு கொண்டு விவரம் கேட்கிறபோது இவ்வளவு ரூபாய் இருந்தால் தான் மொத்த சாலைகளையும் பராமரிக்க முடியும் என்று கூறினார்கள். எனவே அதிகமான நிதியை ஒதுக்கி கிராமப்புற மக்களை பெருவழியோடு இணைப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தொலைக்காட்சி பெட்டிகளை அமைப்பதற்தாக சொன்னார்கள். கூடுமானவரையில் தொலைக்காட்சி பெட்டிகளை அமைக்கின்றபோது ஒரு பொதுவான இடத்திலே—அனைவரும் சேர்ந்து பார்க்கக்கூடிய ஒரு பொதுவான இடத்திலே—அமைக்கப்படவேண்டும். அதுதான் மக்களுக்கு நலமாக இருக்கும். கிராமத்தின் ஒரு பகுதியிலே அமைத்துவிட்டால் இன்றைக்கும் சில கிராமங்களில் ஜாதீய வேறுபாடுகள், வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட நிலைமை அல்லாமல் அதைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஊராட்சி எழுத்தர்களுக்கு கிட்டத்தட்ட 15 ரூபாய் சம்பளத்திலிருந்து அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஊராட்சி ஒன்றிய தலைவனாக 1959லே இருந்தபோது அன்றைக்கு என்னுடைய ஊராட்சியிலே 15 ரூபாய் சம்பளம் கொடுத்தோம்.

பிற்பகல் 1-05

அப்படிப்பட்ட ஊராட்சி அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்களை இன்றைக்கு அரசு எடுத்துக்கொண்டு 400 சம்பளம் வழங்குகிறது. இதற்கு மேலே எந்த வருமானமும் அவர்களுக்கு கிடையாது. எந்த ஒரு பிரதி பிரயோஜனமும் கிடையாது. எந்த சலுகையும் கிடையாது. இறந்தால் கூட மற்றவர்களுக்கு வழங்கக்கூடிய சலுகை அவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட ஊழியர்கள் ஏறக்குறைய 385 ஊராட்சி ஒன்றியங்களிலே, அதனுடைய ஊராட்சிகளிலே 14,000 ஊராட்சிகளிலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் இப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்களை அரசு பரிசீலிக்க வேண்டும். மற்றவர்களுக்கு வழங்கக்கூடிய சலுகைகள் அவர்களுக்கு கிடையாது. பதவி உயர்வு கிடையாது. எந்த வித வருமானமும் கிடையாது. ஆனால் 24 மணி நேரமும் அவர்கள் வேலை செய்கிறார்கள். சாதாரண வேலை அல்ல. அவர்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகிறார்கள். லைட் எரியவில்லை என்றால் முதலில் அந்த க்ளார்க் தான் பேச்சு வாங்க வேண்டும். குடிதண்ணீர் வரவில்லை அப்போதும் கூட இந்த கிளார்க் தான் பேச்சுவாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி மக்களோடு, அவர்களுடைய வாழ்க்கையோடு நின்று உழைத்துக் கொண்டிருக்கின்ற அந்த அடிமட்டத்தில் இருக்கின்ற அந்த ஊழியர்களுடைய வாழ்க்கையை எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கு தமிழக அரசு கடுமையாக முயற்சிக்க வேண்டும். அதை ஒரு ஆய்வு பண்ண வேண்டும். அவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பது, மற்ற சலுகைகள் வழங்குவது, இறந்தால் அவர்களுக்கு சலுகை அளிப்பது அல்லது அரசால் வழங்கக்கூடிய விழாக்கால சலுகைகள் வழங்குவது இது போன்ற சலுகைகளை அவர்களுக்கும் அளிப்பதற்கான நடவடிக்கை எடுத்து அவர்களையும் ஊழியர்களாக கருத வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள் மக்கள் நலப் பணியாளர்களைப்பற்றி. தொடர்ந்து அதில் ஒரு விவாதமே வந்தது. உண்மையிலேயே ஏழ்மையானவர்கள்–நான் கட்சி வித்தியாசம், வேறுபாடு என்பதற்காக கூட சொல்லவில்லை—பொதுவாக ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். வேலை கிடைக்காதவர்கள். இந்த வேலையின் மூலம் 200 ரூபாய், 400 ரூபாய் கிடைத்தால் தான் வாழ முடியும் என்ற நிலை. பி.எஸ்.ஸி. பட்டதாரிகள் கூட இந்த குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்வதற்கு சம்மதித்து வந்தார்கள். ஒரு காலத்திலே பட்டதாரிகள் எல்லாம் இப்படிப்பட்ட வேலைக்கு வரமாட்டார்கள். அவர்களுடைய வேலை நெருக்கடி, குடும்பத்தினுடைய நெருக்கடி, பொருளாதார வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய சங்கடங்கள் போன்றவற்றினால் இந்த வேலைக்கு வருகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சங்கடங்களிலிருந்து அவர்கள் மீள, அவர்களுக்கு அந்த வேலையை வழங்குவதற்கு, அவர்களை எதிர்காலத்திலே வாழ வைப்பதற்கான உத்திரவாதத்தை தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும். மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் ஒரு வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த நேரத்திலே பேசுவதற்கு அனுமதியைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. முனி வெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு அரசு ஊழியர்களுக்கும் அவர்களுக்கு என்று தனித்தனியாக வேலைகள் உள்ளன. புரட்சித் தலைவர் அவர்களும் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதிலே பல்லாயிரக்கணக்கான ஏழை எளியவர்களுக்கு, படித்தவர்களுக்கு வேலை கொடுத்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டுவந்த மக்கள் நலப் பணியாளர்களுக்கு என்று எந்த வேலையும் இல்லாமல், எந்தத் துறையும் இல்லாமல், தேவையில்லாமல் நியமிக்கப்பட்டவர்கள். ஆகவே வேலை இல்லாமல் இந்த அரசாங்கத்திற்கு நிதி நஷ்டம் ஏற்பட வேண்டாம் என்ற காரணத்திற்காகவும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. அவர் வேலை கொடுக்க வேண்டும் என்கிறார். நீங்கள் கொடுக்க வேண்டாம் என்கிறீர்கள். திரு. ஆ. பாலையா.

*திரு. ஆ. பாலையா: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்து இருக்கின்ற நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த தமிழகத்தில் மூன்றாம் நிலையில் உள்ள நகராட்சிகள் 13 என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த 13 நகராட்சிகளும் பொருளாதாரத்திலே நலிந்த நகராட்சிகள் என்பது தெளிவாகத்

[திரு. ஆ. பாலையா] [1991 செப்டம்பர் 17

தெரிகின்றது. இந்த 13 நலிந்த நகராட்சிகளிலே கன்னியா குமரி மாவட்டத்திலே 3 நகராட்சிகள் இருக்கின்றன. இந்த 3 நகராட்சிகளிலே ஒரு பேரூராட்சிக்கு வரக் கூடிய வருமா னங்கள் வரவில்லை. குறிப்பாக குளச்சல் நகராட்சியைப் பற்றி சொல்கிறபோது அதனுடைய ஒரு ஆண்டினுடைய வருவாய் 7 இலட்சம் ரூபாய்.

பிற்பகல் 1-10

செலவு 11 இலட்சம் ரூபாய். இதிலே 8½ இலட்ச ரூபாய் அந்த நகராட்சி ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அந்த நகராட்சி அரசிடமிருந்து வாங்கிய கடனுக்கு வட்டிக் கொடுப்பதற்காகவும், அரசு ஊழியர் களுக்கு பொதுமககளிடமிருந்து வசூலிக்கின்ற வரிப் பணத்தை சம்பளமாக கொடுப்பதற்காகவும் அந்த நகராட்சி பெயர் அள வுக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நலிந்து போன அந்த நகராட்சிகள் மக்களுக்கு செய்ய வேண்டிய ஆக்கபூர் மான பணிகளைச் செய்ய முடியாத நிலையில் இருந்து கொண்டிரு கின்றன. அரசினுடைய திட்டங்களை நலிந்துபோன நக ராட்சிகளால் செயல்படுத்த முடியாது இருக்கின்றன. நலிந்து போன நகராட்சிகள் செய்ய முடியாத பொதுப்பணித் திட்டங் களை நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும். நகராட்சிகள் நலிந்து போயிருக்கிறது என்பதை அரசே ஒத்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நலிந்து போன நகராட்சி களால் மக்களுக்கு உரிய பொதுப் பணிகளைச் செய்வதற்கு வாய்ப்பு அற்றவைகளாக அவைகள் இருந்து கொண்டிருக் கின்றன. நான் சொன்னேனே குளச்சல் நகராட்சி, 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு நகராட்சி. இந்த நகராட்சி செயல்படத்தான் வேண்டுமா என்கிற ஒரு கேள்வி எழுவது இயற்கை. அரசு, ஒன்று, இந்த நகராட்சியை செயல்படு கின்ற அளவுக்கு அதை கொண்டுவர வேண்டும். மேலும் அந்த நகராட்சிப் பகுதியை விஸ்தரித்து அதற்குரிய ஆக்கப்பூர்வமான வருவாய்க்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நலிந்து போன நகராட்சிகளை வைத்துக்கொண்டு எத்தனை காலம்தான் நாம் நகராட்சிகளாக நடத்திக்கொண்டு இருக்க முடியும். நக ராட்சிகளுக்கு அரசு கடன் கொடுக்கிறது. அந்த கடனுக்குரிய வட்டியைக் கட்டுவதற்குத் தான் இந்த நகராட்சிகள் தேவையா என்பதை அரசு எண்ணிப் பார்க்குமாறு நான் இந்த சந்தர்ப்பத் திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருடம் 25 இலட்சம் ரூபாய் நகராட்சிகளுக்கு மானியம் வழங்குவதாகக் கூறியிருக்கிறீர்கள். அந்த குளச்சல் நகராட்சி யிலே ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பல மாதங்கள் சம்பளம் கொடுக்க வில்லை. குளச்சல் நகராட்சி மானியம் கேட்டு அரசுக்கு பரிந்



1991 செப்டம்பர் 17] [திரு. ஆ. பாலையா]

துரை செய்து அரசினுடைய பார்வைக்கு அனுப்பி வைத்து இருக்கிறது. எனவே, அந்த நகராட்சியைக் காப்பாற்றுவதற் காக, அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காக உடனடியாக அதற்கு மானியம் வழங்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு சிறப்பு தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு மேலான திட்டத்தை, சிறப்பான திட்டத்தை அறிவித்து இருக் கிறது. 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 384 கோடி ரூபாய் வழங்குவதாக அறிவித்து இருக்கிறீர்கள். 384 கோடி ரூபாய் வழங்குவதிலே நாங்கள் எல்லாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். காரணம் கிராமப்புறங்களில் இருக்கின்ற சாலைகளைச் செப்ப னிடுவது; குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் அமைத்தல், ஆகிய முக்கியமான பணிகளுக்காக இந்தப் பணம் செலவழிக்கப் பட இருக்கிறது என்பதால் இந்த நேரத்தில் நான் அரசினுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

கோடிக்கணக்கான ரூபாயை ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுக்க இருக்கிறார்கள். இந்தப் பணத்தை மக்கள் பிரதி நிதிகள் இல்லாத நேரத்திலே கொடுப்பதாலே அங்கே ஊழல் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது; என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏன் என்று சொன்னால் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை நம்மு டைய சர்க்கார் அமல்படுத்துகிறது. இந்த திட்டத்திற்கு வேண்டி சுமார் 13,778.93 இலட்சம் ரூபாய் மத்திய அரசினு டைய நிதியாகப் பெறப்படுகிறது. மாநில அரசினுடைய பங் காக 3,444.73 இலட்சம் ரூபாய் தமிழக அரசு வழங்குகிறது. இப்படி ஏராளமான பணத்தை ஜவகர் வேலைவாய்ப்புத் திட் டத்திற்கு ஒதுக்கி சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள் இப்படிப் பட்ட வேலைகள் செய்வதற்காக அந்த நிதி பயன்படுத்தப்படு கிறது.

பிற்பகல் 1-15

அரசு சொல்கின்றது இந்த ஜவஹர் வேலைவாய்ப்புத்திட்டத் தின்மூலம் செய்கின்ற வேலைகளை கான்ட்ராக்ட் கொடுக்கக் கூடாது; ஒப்பந்தக்காரர்கள் மூலம் செய்யக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களிலே என்ன நடைபெறுகின்றது? ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரிகின்ற கூடுதல் வட்டார வளர்ச்சி அதிகாரிகள், கான்ட்ராக்டர்களை வைத்துக்கொண்டு, எனக்கு முன்னாலே பல உறுப்பினர்களால் சபையிலே பேசப்பட் டதைப் போல 20 பர்சன்ட் வரை கமிஷன் பெற்று, லஞ்சம்

பெற்று, அந்த வேலைகளை கான்ட்ராக்ட் மூலம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? அரசே உத்தரவு போட்டிருக்கிறது. ஒப்பந்தக்காரர்கள் மூலம் அந்த வேலையைச் செய்யக்கூடாது என்று. அரசினுடைய உத்தரவை மீறி, உத்தரவுக்குக் கட்டுப் படாமல் அந்த அதிகாரிகள் செயல்படுகிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்; நடவடிக்கை எடுப்பதுதான் முறை.

ஊராட்சிகள், பேரூராட்சிகளைப் பொறுத்த அளவிலும் நிதிப் பற்றாக்குறையினால் பெரிதும் பாதித்துள்ள நிலைமை தான் இருக்கிறது. நிதிப் பற்றாக்குறையின் காரணத்தினாலே ஊழியர் சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பொது வேலைகளைக்கூட செய்யமுடியாத நிலைமையிலே ஊராட்சிகள், பேரூராட்சிகள் செயல்படு கின்றன. இந்த நிலையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபொழுது, ஆழ்குழாய் கிணறுகளை பழுது பார்ப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டு இருந்தது. ஊராட்சி ஒன்றியம், எங்கே ஆழ் குழாய் கிணறுகள் பழுதுபட்டிருக்கிறதோ அங்கே சென்று அங்கே இருக்கின்ற பிளம்பரை வைத்து அவர்கள் உடனுக் குடன் அந்தப் பழுதை நீக்கித் தந்தார்கள். ஆனால் இன்றுள்ள நிலைமையில் நிதிப் பற்றாக்குறையினால் சிரமப்படுகின்ற, கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிற ஊராட்சிகள், பேரூராட்சிகளுடைய கையிலே அந்த ஆழ்குழாய் கிணறு களைப் பழுதுபார்க்கின்ற பணியைக் கொடுத்து இருக்கிறார் கள். முன்பு போலவே அந்தப் பழுது பார்க்கின்ற வேலையை ஊராட்சி ஒன்றியத்தினுடைய கையிலே வழங்கவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, பேரூராட்சிகள், பஞ்சாயத்துக்களிலே குடிநீர் வசதி செய்வதற்காக, குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் ஒவ் வொரு பேரூராட்சிகளிலும் ஊராட்சிகளிலும் 3, 4 என்கிற திட்டங்கள் அவர்களுடைய கையிலே இருக்கிறது. குடிநீரை விநியோகிப்பதற்கு உடன் ஆள் என்கின்ற ஒரு அலுவலர் அங்கே வேலை பார்க்கின்றார். ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒரு உடன் ஆள் வேலை பார்க்கின்றார். இவர்களுக்குச் சம் பளம் கொடுக்க முடியவில்லை. மின்சாரக் கட்டணம் செலுத் துவதற்கும் வாய்ப்பு இல்லை. மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு முடியாத நிலைமையிலே இருக்கின்ற ஊராட் சிகள், குடிநீர் வழங்குவதற்கு இயலாத நிலையிலே இருக் கின்றது. மின்சார இலாகாவைச் சேர்ந்தவர்கள் ஊராட்சிகள், பேரூராட்சிகள் பணம் கட்டவில்லையென்கிற காரணத்தை காட்டி குடிநீர்த் திட்டத்திற்கான ஃபியூசை எடுத்துக்



கொண்டு சென்று விடுகிறார்கள். அதன் காரணத்தினாலே நஷ்டப்படுகின்றவர்கள் சாதாரண மக்கள், ஏழையெளிய மக்கள்தான். நான் அரசுக்கு ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப் படுகிறேன். நலிந்துபோன ஊராட்சிகள், நலிந்துபோன பேரூராட்சிகளினுடைய தலையிலே இப்படிப்பட்ட பெரிய சுமைகளைச் சுமத்துவதைத் தவிர்த்து ...... (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டணம் கட்ட முடியாத ஊராட்சிகளுக்காக, நம்முடைய தமிழகத் தினுடைய மாண்புமிகு முதல்வர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கி இந்த மாதிரி பிரச்சினைகள் எழாமல் இருப்பதற்காக அறிவித்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஆ. பாலையா : நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது இதுதான், ஊராட்சிகள், பேரூராட்சிகள் நிதிநிலைப் பற்றாக்குறையினால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதினாலே இத்தகைய நிலைமைகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக அந்தப் பணிகளை ஊராட்சி ஒன்றியத்தினுடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதாக இருந்தால் நிச்சயமாக, தடைபடாத நிலையிலே அந்தப் பணிகள் செம்மையாக சிறப்பாக நடைபெறுவதற்கு வாய்ப்பு கள் இருக்கின்றன. அதைத்தான் நான் சொல்ல வந்தேன். ஒரு கோடி ரூபாய் திட்டத்திலே எது வேண்டுமானாலும் செய்யலாம் என்பது எனக்கு நன்றாகத் தெரிகின்றது. ஆகவே ஊராட்சி ஒன்றியத்தினுடைய .......... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பணிக்கு என்று தனியாக ஒரு கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என் பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மின்சாரக் கட்டணம் பாக்கி இருக்கிற ஊராட்சிகளுக்கு உதவி செய்வதற்காக இந்த ஒரு கோடி ரூபாய். அந்த ஒரு கோடி ரூபாய் ஒவ்வொரு ஊராட்சிக்கும்.

பிற்பகல் 1-20

திரு. ஆ. பாலையா : அது போக, ஊராட்சிகள், பேரு ராட்சிகள் தெரு விளக்கு போட வேண்டும். மக்கள் அதைத் தான் எதிர்பார்க்கின்றார்கள். எங்கு போனாலும் தெரு

[திரு. ஆ. பாலையா] [1991 செப்டம்பர் 17

விளக்கு இல்லை என்ற புகார்கள் தான் மக்கள் மத்தியிலே இருந்து வந்து கொண்டிருக்கிறது. ஆனால் மின்சார இலாக்காவிற்கு ஊராட்சியிலேயிருந்து, பேரூராட்சியிலேயிருந்து பணம் கட்டிப் பல வருஷங்கள் ஆகியும் மின் இலாகா நடவடிக்கை எடுக்கவில்லை தெரு விளக்கு போடுவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இந்த அரசு முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பஞ்சாயத்து யூனியன்களிலே 60 முதல் 100 கிலோமீட்டர் தூரம் வரை பஞ்சாயத்து யூனியன் சாலைகள் என்று ஒன்று இருக்கிறது. இந்தச் சாலைகளுக்குக் கொடுக்கக்கூடிய மானியம் மிகக் குறைவாக இருந்து வருகிறது. லோக்கல் ரோட்ஸ் கிரான்ட்ஸ் என்கின்ற நிலையில் அந்த மானியம் மிகக் குறைவாகக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே, இவ்வளவு நீளம் உள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கு இந்த அரசு கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு.

மேலும், பஞ்சாயத்து யூனியன் சாலைகள் பழுதுபட்டால் அந்தப் பழுதுகளை நீக்குவதற்காகச் சாலைப் பணியாளர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வந்தார்கள். எந்தச் சாலை பழுதுபடுகின்றதோ அந்தச் சாலைகளைச் செம்மைப்படுத்துவதற்காக அந்தப் பணியாளர்களைப் பஞ்சாயத்து யூனியன்கள் பயன்படுத்தி வந்தன. ஆனால், கடந்த அரசினுடைய உத்தரவின் காரணமாக அந்தச் சாலைப் பணியாளர்கள் ரிடையராகிப் போய்விட்டால் அந்தப் பணியிடத்திலே மாற்று ஆட்கள் நியமிக்கப்படக் கூடாது என்கின்ற ஒரு கட்டுப்பாடு உள்ளது. அரசு வழங்கியிருக்கிறது. சாலைப் பணியாளர்கள் சாலைப் பணிக்கு மிக அத்தியாவசியமானவர்கள். சாலைப் பழுதுகளை உடனடியாகச் செய்வதற்கு அவர்கள் தேவைப்படுகின்றார்கள். ஆகவே, அந்தப் பணியிடத்திற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நிச்சயமாக அதற்கு நல்ல ஒரு முடிவை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பநலத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதிலே ஒன்றை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

சத்துணவு மையங்களிலே இருக்கின்ற அமைப்பாளர்கள், ஆயாக்கள் ஆகிய இவர்களைக் குடும்ப நலப் பணித் திட்டங்களுக்காக, அதைச் செய்ய வேண்டுமென்பதற்காக மிகவும் வற்புறுத்தப்படுகிறார்கள்.



1991 செப்டம்பர் 17]

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் யாரும் குடும்ப நலத் திட்டத்திற்குக் கட்டாயப்படுத்தப் படக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் நடைமுறையில் இருக்கக்கூடிய விவரங்களைத்தான் இங்கே சொல்லுகின்றேன். மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு அது வந்திருக்காது என்று நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால் அரசே ஒரு அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது. சத்துணவு அமைப்பாளர்கள், ஆயாக்கள் போன்றவர்களை, ....

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதற்கு முன்னாள் இருந்த உள்துறை செயலாளர் **அவர்கள் குடும்ப நலத் திட்டத்திற்குச் சத்துணவுப் பணியாளர்கள் மோட்டிவ் செய்யப்பட வேண்டுமென்று மட்டுமே குறிப்பிட்டிருந்தார்கள். ஆக, எந்த அமைப்பாளரையும் கட்டாயப்படுத்தச் சொல்லி அரசு உத்தரவு வழங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்கட்சித் தலைவரவர்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் முந்தைய நிலையைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதையே அமைச்சரும் இப்பொழுது ஒப்புக்கொண்டிருக்கிறார். முந்தைய செயலாளர் அப்படி ஒரு குறிப்பு எழுதி வைத்திருந்தார் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். கட்டாயப்படுத்த வேண்டுமென்று அந்தக் குறிப்பிலே இல்லாவிட்டாலும்கூட, கட்டாயப் படுத்தப்பட்டார்கள் என்பது முந்தைய நிலை. இந்த ஆட்சியிலே அந்த நிலை இருக்கக் கூடாது என்றுதான் தன்னுடைய எண்ணத்தை வெளியிடுகிறார். நீங்களும், நிச்சயமாகக் கட்டாயப் படுத்தக்கூடாது என்று முதலமைச்சரவர்கள் ஏற்கனவே அறிவித்திருக்கிறார்

---

(**) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 17

கள். எனவே, கட்டாயப்படுத்தமாட்டோம் என்று சொல்லி விட்ட காரணத்தாலே நிலையிலே எந்தவிதமான மாறுதலும் இல்லை என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்த குறிப்பில் முன்னாள் தலைமைச் செயலாளர் அல்லது உளதுறை செயலாளர் என்று இருந்தால் போதும்.** அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. திரு. பாலையா அவர்கள்.

திரு. ஆ. பாலையா : தலைவரவர்களே, எது எப்படியிருந்தாலும் பிராக்டிகலாக நடக்கக் கூடியவைகளை நான் சொல்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களிலே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட குடும்ப நலத் திட்டத்திற்கு ஒத்துழைக்காத அந்த ஆயாக்கள், அமைப்பாளர்கள் ஆகிய இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பேன் என்று அச்சுறுத்தல்கள நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை அமைச்சரவர்களுடைய பார்வைக்கு நான் கொண்டு வந்திருக்கின்றேன்.

பிற்பகல் 1.25

மேலும், ஊரக குடிநீர் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற மக்களுக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டிய பொறுப்பு அரசினுடைய பொறுப்பு. அதை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு, பஞ்சாயத்து யூனியனுடைய பொறுப்பு. ஆனால், அந்த ஒரு கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்யப்பட்டதன் மூலம், ஒரு ஒன்றியத்திற்கு எத்தனை லட்சம் ரூபாய் வரும் என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரககுடிநீர்த் திட்டத்திற்கு 1 கோடிரூபாய் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது; அது எப்படி போதும் என்ற கேள்வியை எழுப்புகிறார். அதைப் போலவே, ஏற்கனவே குடிநீர் வசதிக்கும், சாலை வசதிக்கும், தெரு விளக்குகளுக்கும் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். நான் உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெளிவுபடுத்த விரும்புவது என்னவென்றால், சாலைகளுக்கும், குடிநீர் வசதிக்கும், தெரு விளக்குகளுக்கும், தனித்தனியே நிதி வழங்க திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அந்தத் திட்டங்களின்கீழ், தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிதி ஒதுக்கப்படவேண்டுமென்றால் அது சாத்தியம் அல்ல. அதற்காகத்தான் இப்போது ஒரு சிறப்பு தன்னிறைவுத் திட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது



1991 செப்டம்பர் 17] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

என்று கொண்டுவந்து, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் என்று ஒதுக்குகிறோம். இந்த ஒரு கோடி ரூபாய் எதற்காக ஒதுக்கப்படுகிறது என்றால், இந்த அடிப்படை வசதிகள், அதாவது குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு வசதி இவற்றை ஓராண்டிற்குள் அந்த ஊராட்சி ஒன்றியங்களில் செய்து முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒரு கோடி ரூபாய் நிதி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கப் படுகிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில், ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் மொத்தமாக தமிழ்நாடு முழுமைக்கும் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. இது இப்போது பஞ்சாயத்து யூனியனில் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும்—இப்போது, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இந்த வருடம் ஊரக குடிநீர்த் திட்டத்திற்கு 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

திரு. ஆ. பாலையா : அது போதாது என்பதற்காகத்தான், அந்தத் திட்டங்களையெல்லாம் இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு. . (குறுக்கீடு)

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நான் மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். உறுப்பினர் குறிப்பிடும் ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பிய்த்துப் பிய்த்துக் கொடுத்தால், ஒரு லட்சமோ, இரண்டு லட்சமோதான் கிடைக்கும். அதுவும் இருக்கிறது. அதற்கு மேலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திற்கும் முழுவதுமாக ஒரு கோடி ரூபாய் தனித்தனியே ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. பாலையா : பல்வேறு பேரூராட்சிகளுக்கு நிர்வாக அதிகாரிகள். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஒரு கருத்தோடு முடியுங்கள். 1.28 ஆகிவிட்டது. நம்முடைய நேரமே முடியப் போகிறது.

[1991 செப்டம்பர் 17

திரு. ஆ. பாலையா : பல்வேறு பேரூராட்சிகளுக்கு நிர்வாக அதிகாரிகள் இல்லாத காரணத்தினால், பணிமுடக்கம் ஏற்பட்டிருக்கிறது. மக்களுடைய அன்றாடத் தேவைகளைச் செய்ய முடியாத நிலைமையில் பேரூராட்சிகள் இருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிர்வாக அதிகாரிகள் இல்லாத இடங்களுக்கு உடனடியாக நிர்வாக அதிகாரிகளை நியமனம் செய்வதற்கு உத்தரவிடுமாறு நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஊராட்சிகளிலே 11 ஆயிரம் பேர் பகுதி நேரப் பணியாளர்களாக, பகுதி நேர எழுத்தர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, அவர்களிடம் முறையீடு செய்ததின்பேரில் அந்த 11 ஆயிரம் பேரிலே, 3,500 ஊராட்சி எழுத்தர்களை முழு நேர அரசு ஊழியர்களாக அன்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்று, ஆணை பிறப்பித்தார்கள். மிகுதியுள்ளவர்கள் இன்னும் பகுதி நேரப் பணியாளர்களாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம் மிகுதியாக இருக்கிற அந்த பகுதி நேர எழுத்தர்களை—நீண்டகாலமாக அவர்கள் அவ்வாறு இருந்து கொண்டிருக்கிறவர்களை அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு நல்வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு—முழு நேர எழுத்தர்களாக அவர்களை ஆக்கித்தருவதற்கு ஆணை பிறப்பிக்குமாறு கேட்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி; வணக்கம்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலட்சக்கணக்கான தொண்டர்களை இலட்சிய வெறியோடும், சுயமரியாதை வேட்கையோடும், நாட்டில் நிமிர்ந்து நடக்க வைத்த, தந்தை பெரியார் பிறந்த நாளான, தமிழகம் எங்கும் கொண்டாடப்படுகிற இன்றைய தினம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 1.30

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு ; தந்தை பெரியாரின் பிறந்த நாள் தினத்தைத் தமிழகம் எங்கும் கொண்டாடுகிற இன்றைக்கு என்னுடைய துறையின் மானியக் கோரிக்கையை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, கோடிக்கணக்கான தமிழர்களின், வழிபாட்டு நாயகனும், தென்னாட்டுக் காந்தியுமான பேரறிஞர் அண்ணா



1991 செப்டம்பர் 17] [திரு. அழகு திருநாவுக்கரசு]

அவர்களின் பிறந்த நாள் விழாவும் சேர்ந்து நேற்று முன்தினம் முடிவு அடைந்திருக்கிறது. சிறப்புமிக்க தொண்டர்களை வளர்த்த, இப்படிப்பட்ட தலைவரின் குடும்பம் அல்லல் உறும் பொழுது, இன்னல் அடையும்போது, அந்தக் குடும்பத்தை ஆராதித்து, ஆதரவு காட்டி, இதோ நான் இருக்கிறேன் என்று ஓடோடி வந்து, ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து இலட்சம் ரூபாயை அறிஞர் அண்ணா அவர்கள் குடும்பத்திற்கு வழங்கிய புரட்சித் தலைவரின் வள்ளல் தன்மையின் வாரிசாக வாழ்ந்து வரும் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் அமைந்துள்ள தமிழக அரசின் சார்பில் எனது உள்ளாட்சித் துறை மானியத்தை இந்த மாமன்றத்தில் இங்கே சமர்ப்பிக்கின்றேன். சமர்ப்பிக்கின்ற அதே நேரத்தில் என்னை இந்தத் துறையின் அமைச்சராக ஆக்கித்தந்த ஐந்தரைக் கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கின்ற எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக ஆக்குவதற்கு வாக்களித்த ஒரத்தநாடு சட்டப்பேரவைத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு அலட்சியப்படுத்தப் பட்டாலும், ஏளனத்திற்கு ஆளாக்கப் பட்டாலும், எடுத்த காரியத்தை முடித்தே தீருவேன் என்ற திடச் சித்தமும், விடா முயற்சியும் இருந்தால், வெற்றி கிடைத்தே தீரும் என்று கூறிய பேரறிஞர் அண்ணா அவர்களின் வழித் தோன்றலாக, நமது புரட்சித் தலைவி அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், தந்தை பெரியாரின் அஞ்சாமை, பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவாண்மை, புரட்சித் தலைவர் அவர்களின் வள்ளல் தன்மை ஆகியவைகளின் ஒருங்கிணைப்பே நமது புரட்சித் தலைவி என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். எனவே, ஏழைகளுக்கு உதவுகிற, எந்தத் திட்டத்தையும் எவர் எதிர்த்தாலும், அவர் எதிர்ப்பு முறியடிக்கப்படும். ஏழைகளுக்குத் தொடர்ந்து நன்மை செய்ய வழி செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற காந்திஜியின் பிரதிபலிப்பாகவும், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக் குறிப்பாகவும். மக்கள் நலனே இந்த அரசின் மகத்தான திட்டம் என்கிற எங்கள் புரட்சி தலைவி அவர்கள் அறிவிப்பாகவும் இந்த அரசின் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. நாங்கள் துவக்கியிருக்கிற இந்த நெடும் பயணத்திற்குத் தோள் கொடுக்கின்றவர்களாகவும், எதிர்ப்படுகின்ற இடர்பாடுகளுக்குத் தீர்வு தரக்கூடிய ஆலோசகர்களாகவும் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்

[திரு. அழகு திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 17

னுடைய வணக்கம் கூறி, எனது துறையின் மானியக் கோரிக்கையை நீங்கள் ஆதரிக்கக் கோரி இந்த அவையிலே சமர்ப்பித்துள்ளேன். இந்த மானியக் கோரிக்கை மீது இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் அனைத்திற்கும் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறேன். அந்தக் குறிப்புகளின் அடிப்படையில் இந்தத் துறை செவ்வனே செயல்படத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறையின் விவாதத்தின்போது பேசிய பல்வேறு உறுப்பினர்கள் இந்த துறையின் மூலமாக நடைபெற வேண்டிய பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்துவதில் அதிகாரிகளிடத்தில் சில தவறுகள் இருக்கின்றன என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதெல்லாம், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நிச்சயமாகத் தவறுகள் எந்த இடத்திலே நடக்கின்றது என்று சுட்டிக் காட்டினாலும் அந்தத் தவறுகளைக் கண்டுபிடித்து அந்த அதிகாரிகளைத் தண்டிப்பதற்கு இந்த அரசு எந்த நேரத்திலும் பின் வாங்காது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே உறுதி மொழியாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வகையிலே, ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்த வரையில், மொத்தம் இந்த ஊராட்சியில் இருக்கிற, ஒன்றியங்களில் இருக்கின்ற 12,616 ஊராட்சிகளில் சாலைகள் அமைக்கிற பணிக்காகக் கிட்டத்தட்ட ரூ 237 கோடி செலவில் பல்வேறு ஒருங்கிணைந்த சாலைத் திட்டத்தை அமைக்கவிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி தனது வருவாயில் சுமார் 16 சதவிகிதத்தைச் சாலைப் பராமரிப்புக்காகச் செலவிடுகின்றது. இது போதுமானதாக இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தபோது இதுபோன்ற அடிப்படைத் தேவைகளை உயர்த்த வேண்டிய காரணத்திற்காக, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்திலே 22 கோடி ரூபாயைச் சாலை மேம்பாட்டிற்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு, தெரு விளக்குகளுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் வழங்கப்பட்ட பல்புகள், சோக்குகள், மின்பொறிகள் நீண்ட நாட்களுக்கு உழைப்பதில்லை, தரமுள்ள பல்புகள் மற்றும் மின் பொறிகளை மட்டுமே வாங்க வேண்டுமென்று முடிவு செய்து இதற்காக ஒரு உயர்மட்டக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரையின்படி, பல்பு, மற்றும் மின் பொறிகள் வாங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், ஊராட்சி அமைப்புகளுக்கும் அறிவிக்கப்படும்.



1991 செப்டம்பர் 17] [திரு. அழகு திருநாவுக்கரசு]

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், கைப் பம்புகள் பழுது ஏற்பட வாய்ப்பு உள்ளது. கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் பழுதுகளைச் சரி செய்வதற்காக 1991-92 ஆம் ஆண்டிற்கு மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. முந்தைய ஆண்டைவிட இந்த ஆண்டு 1½ கோடி ரூபாய் அதிகமாகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதில் காலதாமதத்தைத் தவிர்க்க, மாவட்டம் மற்றும் கோட்ட அளவில் மூன்று மாதங்களுக்குத் தேவையான உதிரி பாகங்களை கையிலே வாங்கி வைத்துக்கொள்ள ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-35

அனைத்து பம்புகளையும் வாரம் ஒரு முறை ஊர் நல் அலுவலர்கள் பார்வையிடவேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. கைப்பம்பு, விசைப்பம்பு உள்ள ஊரில் ஒரு முக்கிய நபரைத் தேர்வு செய்து அவரிடம் அச்சிட்ட கார்டுகளை வழங்கி பழுது ஏற்பட்டால் ஒன்றியத்திற்கு உடன் தகவல் அளிக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. மாவட்ட அளவில் குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொரு மாதமும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கூட்டம் நடத்தி அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களைப் போர்க்கால அடிப்படையில் செய்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. சாலை வசதிகள், தெரு விளக்குப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை போன்ற ஒட்டுமொத்தமான இந்தச் சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரிலே ஊராட்சிகளில் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாத அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற ரூபாய் 384 கோடி செலவில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

மத்திய அரசின் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தை இணைத்து மாநில அரசின் நிதியுதவியுடன் 50,000 இலவச வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டும் திட்டம், 1,400 கிலோ மீட்டர் தூரம் தார்ச்சாலை அமைத்தல், 2000 கிலோ மீட்டர் கற்சாலை அமைத்தல், 500 புதிய பள்ளிக் கட்டடங்கள் அமைத்தல், 500 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள் அமைத்தல், 2,100 இலவச பாசனக் கிணறுகள் ஆதிதிராவிடர்களுக்காக அமைத்தல், ஆயிரம் சிறு பாசன ஏரிகள் மேம்பாடு, 500 கசிவு நீர்க்குட்டைகள், 10,000 ஹெக்டேர் நிலத்தில் 3 கோடி அளவுக்கு சமூகக் காடுகள் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

உலக வங்கி நிதியுதவியுடன் தர்மபுரி, சேலம், திருவண்ணா மலை–சம்புவராயர், தென்னாற்காடு மாவட்டங்களில் 12,000 புதிய கைப்பம்புகள் அமைக்கப்படும். கைப்பம்பு பராமரிப் புக்கான அரசு மானியம் ரூபாய் 1.50 கோடியிலிருந்து 3 கோடியாக உயர்த்தப்படுகிறது.

தெரு விளக்கு சீராக எரிய சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இதுபோன்ற பல்வேறு திட்டங்களின் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற பல்வேறு பணிகளை எல்லாம் சிறப்பாகவும் நல்ல முறையிலும் செய்வதற்கு எங்களுடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சார்பிலே பல்வேறு அறிவிப்புகளை இங்கே செய்திருக்கிறோம்.

ஊரக வளர்ச்சிப் பணிகளின் பயன் முழுமையாக மக்களுக்குக் கிடைக்க மக்கள் கண்காணிப்புக் குழு அமைக்கப் படும். ஊராட்சிகள் நிர்வாகத்தை சீர்திருத்த உயர்மட்ட வல்லுநர் குழு அமைக்கப்படும். ஊராட்சி கட்டுமானப் பணிகளைத் தரமாகவும், உரிய காலத்தில் செய்து முடிக்கவும் ஊரக வளர்ச்சித் துறைக்கென தனி பொறியியல் பிரிவு ஏற்படுத்தப்படும். காவல் துறை, பொதுப்பணித் துறை போன்று ஊரக வளர்ச்சித் துறையிலேயும் சிறப்பாகச் செயல் புரியும் அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஊரக வளர்ச்சித் துறை உரிய முறையில், திட்டமிடவும் அதன் செயல்பாட்டினைக் கண்காணிக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் ஊரக வளர்ச்சி மாநில ஆலோசனைக் குழு நிறுவப்படும்.

நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பணிகள் பயன் முழுமை யாக மக்களுக்குக் கிடைக்க மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும். நகராட்சி மற்றும் மாநகராட்சி நிர்வாகத்தை மேம்படுத்த நிர்வாகச் சீர்திருத்த உயர்மட்ட வல்லுநர் குழு அமைக்கப்படும். கட்டுமானப் பணிகளைத் தரமாகவும் உரிய காலத்தில் செய்து முடிக்கவும் நகராட்சி மற்றும் மாநக ராட்சிப் பொறுப்பில் தனி பொறியியல் பிரிவு ஏற்படுத்தப்படும்.

காவல் துறை, பொதுப் பணித் துறை போன்று நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலர்களில் சிறப்பாகச் செயல் புரியும் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஆண்டுதோறும் பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். நகராட்சி மற்றும் மாநகராட்சிக்கு உரிய முறையில் திட்டமிடவும், திட்டமிட்டுச் செயல்படவும், கண்காணிக்கவும் மாண்புமிகு



தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு மாநில ஆலோசனைக் குழு நிறுவப்படும். திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் நக ராட்சிகள் மாநகராட்சிகளாக மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஈரோடு, திருச்சி, நாகர்கோவில் ஆகிய நகரங்களில் மாதிரி பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும். நகராட்சி மற்றும் மாநகராட்சிக் கணக்குகள் கம்ப்யூட்டர் மூலமாகப் பராமரிக்கப் படும். நகராட்சி மற்றும் மாநகராட்சியில் பணிபுரியும் வரித் தண்டலர்கள் என்ற பெயர் வருவாய் உதவியாளர்கள் என மாற்றப் படும். வருவாய் உதவியாளர்கள் மற்றும் மேல்நிலை உதவியாளர்கள் ஆகிய இரு பதவிகளும் ஒன்றுக்கொன்று மாற்றுவதற்குரிய பதவிகளாக மாற்றப்படும்.

இதுபோன்ற பல்வேறு சிறப்பு அம்சங்களையும் உள்ளடக்கிய இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசியிருக்கின்ற பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கியது பற்றிப் பேசி இருக்கிறார்கள். மாநகராட்சி, நகராட்சியில் இருக்கிற பல்வேறு அடிப்படை வசதிகளை எல்லாம் ஆராய்ந்து பரிசீலனை செய்து நிர்வாகத் தைச் சீரமைக்கிற வகையிலேயும், அங்கே இருக்கிற பொது மக்களுக்கும், ஏழை எளிய பாமர மக்களுக்கும் பயன் தருகிற அளவில், மாநகராட்சிகளும், நகராட்சிகளும் பல்வேறு பணிகளைச் சிறப்பாகவும், வேகமாகவும், விரைவாகவும், செயல்படுத்துவதற்கும் அரசின் மூலமாக அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் சென்னை மாநகராட்சியை மேம்படுத்துவதற்காக, எழில் மிகு சென்னை 2000 என்ற தொலை நோக்கு பார்வையோடு 1,000 கோடி ரூபாயில் 5 ஆண்டுகளுக்குத் திட்டங்களைத் தீட்டி, அவற்றை நிறைவேற்றுவதற்கு ஆணைப் பிறப்பித்திருக் கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.) அந்த முறையிலே சென்னை மாநகரத்தை எழில் மிக்க மாநகரமாக ஆக்குவதற்கு பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டிருக் கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் சென்னை மாநகரத்தில் சுற்றுப்புற சுகாதாரம் கெடுகின்ற அளவுக்கு இருக்கின்ற கால்நடை தொல்லைகளையும் நீக்கவேண்டும். சென்னை மாநகரம் முழுவதிலும் சுமார் 70 ஆயிரம் கால்நடைகள் உள்ளன. இவற்றால் சாணக் கழிவுகள் வடிகால் வாய்க்கால் களில் செலுத்தப்படுமானால் கால்வாய் அடைக்கப்பட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் இப்போது சொல்லியிருப்பதில் மேற்கொண்டு விளக்கம் ஏதாவது கேட்கலாம். திரு. கி. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி அரசு அதிகாரிகள் எந்த ஒரு திட்டத்தை செயல்படுத்தும் போதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை ஆலோசனைக் கேட்பதில்லை. அந்த கவுன்சில் கூட்டங்களுக்கு அழைப்பதும் இல்லை. அப்படி நடக்கின்ற கூட்டங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து, கலந்துப் பேசி திட்டங்களை செயல்படுத்த வேண்டுமென்ற முறையில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி முதலமைச்சரோடு கலந்து பேசி, மக்கள் கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த இருக்கிறோம் என்று ஏற்கனவே நான் அறிவித்திருக்கிறேன், அந்த மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு விட்டால் நிச்சயமாக இதுபோன்ற பிரச்சினைகள் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய மூன்று நகராட்சிகள் இருக்கின்றன. இந்த மூன்றையும் சேர்த்து மாநகராட்சியாக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்த சிறப்புத் திட்டமாகிய ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒரு கோடி ரூபாய் என்கிற திட்டத்திலே சட்டமன்ற உறுப்



பினர்களையும் இணைக்க வேண்டுமென்று நானும் இங்குள்ள அனைத்து உறுப்பினர்களும் வலியுறுத்தியிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் கண்காணிப்பு குழு அமைக்கப்படும் என்கிறார்கள். அதிலே எங்களுடைய பணி என்ன என்பதை சற்று விளக்கமாகச் சொன்னால் நாங்கள் எங்கள் பணிகளைத் தொடருவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் ஏற்கனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக நடைபெறும் பல்வேறு திட்டப் பணிகளை சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து, அவர்களை கலந்தாலோசித்துதான் முடிவுகளை எடுக்க வேண்டுமென்று நாங்கள் மிகத் தெளிவாக அறிவுறுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான உத்திரமேரூர் தொகுதியில் இருக்கின்ற உத்திரமேரூர் ஒன்றியமானது தமிழகத்திலே மிகப் பெரிய ஒன்றியமாக இருக்கிறது. அதிலே 74 ஊராட்சி மன்றங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. அதைப் பிரிக்க வேண்டுமென்று. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பேசியதில் ஏதாவது கேளுங்கள். புது கோரிக்கை வைக்கக் கூடாது.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : அதைப் பிரிக்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசிடத்தில் தாக்கீது இருக்கிறது. நானும் மனு கொடுத்திருக்கிறேன். தவிர விவரங்களையும் ஏற்கனவே கொடுத்திருக்கிறேன். அதைப் பிரிப்பதற்கான வழிவகை உண்டா என்று அமைச்சரிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய கால்நடைகளைத் தடுப்பதற்கும், மாற்றுவதற்கும் சட்டம் இயற்றுவதாக சொன்னார்கள். தமிழகம் பூராவும்

உள்ள நகராட்சிகளிலும் கால்நடைகள் தொல்லைகள் கொடுத்து வருகின்றன. வேலூரை எடுத்துக்கொண்டால், தடுக்கி விழுந்தால் பன்றிகள் மேல்தான் விழ வேண்டும். அந்த அளவுக்கு பன்றிகள் அங்கே இருந்துகொண்டிருக்கின்றன. இதன் விளைவாக மூளைக் காய்ச்சலும் பெருகிக் கொண்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் உள்ள நகராட்சிகளிலும் கால்நடைகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதயத் தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 'எழில்மிகு சென்னை இரண்டாயிரம்' உருவாக்க திட்டமிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளை தான் நாங்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறோம். மேற்கொண்டு பல்வேறு நகராட்சிகள், மாநகராட்சிகள் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் இந்த பட்ஜெட் கூட்டம் முடிகிறவரை இங்கே இருக்கின்ற நிலையில், ஐ.ஆர்.டி.பி. போன்ற டாஸ்க் போர்ஸ் கமிட்டி ஏற்பாடுகளை, அந்தந்த ஒன்றியங்களினுடைய ஆணையாளர்களே செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். எங்களுக்கு எந்த விவரமும் தெரியாது. ஆனால் அந்த கமிட்டியிலே சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறோம். எங்களை எல்லாம் கலந்துகொள்ளாமல், நாங்கள் இங்கே இருக்கிற நேரத்தில், அவர்கள் அங்கே அதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். தொகுதி மக்களுக்கு எல்லாம் உதவி செய்ய காத்திருக்கிற நாங்கள் அங்கே சென்ற பிறகு இந்த கமிட்டி இயங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்தாலோசித்த பின்னர் தான் அதுபற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டப்படுகின்ற திட்டத்திலே கிறிஸ்தவ ஆதி திராவிட மக்களும் இணைக்கப்படுவார்களா ?



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லாம் கொள்கை முடிவுகள். அரசாங்கம் முன்பே சொல்லியிருக்கிறது. மானியத்திலே இது வராது. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

''சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய 28ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 367,53,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 17

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 50— நகராட்சி நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண். 50— நகராட்சி நிர்வாகம் பற்றிய வெட்டுத்தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தர தாஸ்.

திரு. மா. சுந்தர தாஸ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.



1991 செப்டம்பர் 17] [பேரவைத் தலைவர்]

''நகராட்சி நிருவாகம் பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 43,43,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்ற மாண்புமிகு அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-51 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

83. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி இணையத்தினால் வாங்கப்படும் எண்ணெய் வித்துக்கள் மீதான கொள்முதல் வரியை 28-6-1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2-1-1991 ஆம் நாளிட்ட 3 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

84. தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தினால் விற்கப்பெறும் கையினால் செய்யப்பட்ட சோப்புகளுக்கு 20-2-1974 முதல் 16-5-1978 வரையுள்ள காலத்திற்குண்டான விற்பனை வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2-1-1991 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளி

யிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

85. மேட்டூர் அணை, திருவாளர்கள் மைக்கோ பார்ம் கெமிக்கல்ஸினால் செலுத்தப்பட வேண்டிய 50 சதவிகித வரியை மூன்றாண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2–1–1991 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

86. கோவை, திருவாளர்கள் பயனீர் மெசின் ஓர்க்ஸ் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 1–4–1991 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26–3–1991 ஆம் நாளிட்ட 175 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

87. கல்லல், திருவாளர்கள் லஷ்மி சங்கர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியினை 27–11–1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26–3–1991 ஆம் நாளிட்ட 176 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

88. அரசு ரப்பர் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

89. தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).



### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

44. கோரிக்கை எண் 29—தொழிலாளர், தொழிற்சாலைகள் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92 (ஆங்கிலம்).

45. மருத்துவம் மற்றும் குடும்பநலத் துறை பற்றிய செயல் திறன் குறிப்பு, 1991–92 (ஆங்கிலம்).

46. கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

47. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் குறித்த செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

48. கோரிக்கை எண். 50—நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

49. நகராட்சி நிருவாகம்—மாநகராட்சிகள் குறித்த செயல் திறன் குறிப்பு, 1991–92 (தமிழ்).

50. பேரூராட்சிகள் நிர்வாகம் ஊரக வளர்ச்சித் துறை குறித்த செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

51. கோரிக்கை எண் 30—சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

52. பொதுக் கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கை, 1991–92.

53. பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1991–92.

54. பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1991–92.

55. பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கை, 1991–92.

56. பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1991–92.

57. பொதுக் கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கை, 1991–92.

58. பொதுக் கணக்குக் குழுவின் ஏழாவது அறிக்கை, 1991–92.

59. பொதுக் கணக்குக் குழுவின் எட்டாவது அறிக்கை, 1991–92.



465-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

சமுதாய நல வளர்ச்சி.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், சாதி, சமய பொருளாதார வேறுபாடின்றி, கிராம சமுதாயம் முழு வளர்ச்சி அடைவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன. இத்திட்டங்கள், கிராம மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையை மாற்றியமைக்கும் பணியில் நாட்டம் செலுத்தின.

கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு முழுமையான வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் அங்கெல்லாம் ஒரு சமூகப் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதே சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். நாடு விடுதலையடைந்த பின், செயற்படுத்தப் பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் அனைத்தும், கிராமப் பகுதிகளின் ஒட்டு மொத்த ஊரக வளர்ச்சி என்பது, கிராம மக்களின், குறிப் பாக, ஏழைகளின் பொருளாதார சமூக வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் ஒரு செயல்முறைத் திட்டமாகும். இத் திட்டம், கிராமப் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றத்தை ஒருங்கிணைத்து கிராம மக்களின் வாங்கும் திறனையும் வாழ்க்கைத் தரத்தையும் முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டது. அது, சமூகப் பொருளாதார அடிப் படையில் வருமான உயர்வையும் விரிவான வேலை வாய்ப்பையும் சமூகப் பாதுகாப்பையும் சமத்துவ நெறியையும் உறுதிப்படுத்தும் நெறியாகும். சமூக வளர்ச்சி அணுகுமுறையானது, கிராம மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முடிவு காண்பதோடு, கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையின் புத்துணர்ச்சி மனப் பான்மை, கடமையுணர்ச்சி ஆகியவற்றில் தேவையான மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

சமூக வளர்ச்சியின் நோக்கம், பல்லடுக்கு நோக்கம் கொண்ட தாகும். அவற்றில் வேளாண்மையும், வேளாண்மை சாராத பணிகளும அடங்கும்.

அதன் வளர்ச்சி, அனைத்துப் பணிகளிலும் மேற்கொள்ளப் படும் பொருளாதார நடவடிக்கைகள், அவற்றின் நிகழ்ச்சி தொடர்பான சமூக நல செயல் முறைத் திறன் ஆகியவற்றை வலியுறுத்துவதாக அமைகிறது. கிராம வளர்ச்சியின் மூலம் அறிவியல், மற்றும் தொழில் நுட்பவியல் ஆகியவற்றை மனித ஆற்றலோடு இணைத்து, இயற்கை வளங்களை ஒருங்கிணைந்த முறையில் பயன்படுத்தி, மண்வளம், நீர்வளம், பயிர் வேளாண்மை வேளாண்மை முறைகள் உற்பத்திப் பொருட்கள், துணைப் பொருட்கள், சாலைகள், கட்டடங்கள், பொதுச் சுகாதாரம், நலவாழ்வு, சத்துணவு, குடும்ப நலக்காப்பு, வேளாண்மை கழிவுப் பொருட்கள், வனவளங்கள், கால்நடை சார்ந்த தொழில்கள்,

தூய்மைப் பாதுகாப்பு, சுற்றுச் சூழல், கழிவுப் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதே அதன் நோக்கமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்த இடங்களை நன்கு தெரிந்தெடுத்து, இயற்கை வளங்களை சமூக நீதிக்கேற்ப முழு வேலை வாய்ப்புக்கும் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சி பற்றிய பணிக்குழு, ஊரக வளர்ச்சி பற்றிய பிரச்சினையை ஒட்டுமொத்தமாக காணுகின்ற, நன்கு ஒருங்கிணைந்த அணுகுமுறை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி பின்வருமாறு தெரிவிக்கிறது. "ஊரக எளர்ச்சி தற்போதுள்ளவாறு பின்வரும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் :—

(1) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், சமூகக் காடு வளர்ப்பு போன்ற உற்பத்தியை நோக்கமாகக் கொண்ட திட்டங்கள்.

(2) சுகாதாரம், கல்வி, துப்புரவு, குடிநீர் போன்ற சமூகப் பயன்பாட்டுத் திட்டங்கள்.

(3) போக்குவரத்து, விற்பனை, சேமிப்பு, மின்சாரம், ஊரக வங்கிப் பணி ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை வசதி அளிக்கும் திட்டங்கள் நிருவாக வசதிக்காகவும், கணக்கிடும் வசதிக்காகவும், ஒவ்வொரு பணியும் (அல்லது) பல பணிகளும் தனித்தன்மையுடன் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, தனித்தனியாகச் செயலாக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள தனித்தனியான அணுகுமுறை, ஊரக வளர்ச்சியில் பெருத்த மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணிசமான அளவிற்கு உயர்த்தவல்ல ஊரகவளர்ச்சியின் ஒட்டு மொத்த மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் திட்டமிட்ட பணியில் நாம் தொடர்ந்து செயற்பட வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள (அல்லது) தொடங்கப்படவுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகள், நன்கு திட்டமிடப்பட்ட, பலதிறப்பணிகளின் முக்கியப் பகுதியாக அமைய வேண்டும்''.

கிராமங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது இந்த அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். வறுமையைப் போக்குவதற்கும் ஏழைகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கும் வகுக்கப்பட்ட திட்டங்களை ஒவ்வொரு துறையும் செயற்படுத்தி வருகின்றன. வறுமையை எதிர்த்துப் போராடும் இத்துறையின் கொள்கை, இரு முக்கிய அம்சங்களைக் கொண்டதாகும். முதலாவதாக, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பணிகளுக்கு



வகை செய்வதன் மூலம் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்குரிய திட்டங்களுக்கு வகை செய்தல், வேலை வாய்ப்பை வழங்குவதோடு, சமுதாயத்திற்குப் பயனுள்ள நிரந்தர சொத்துக்களை உருவாக்க வகை செய்யும் திட்டங்களுக்கு நிதி ஆதாரங்கள் முறைப்படுத்தி அனுப்புதல், இரண்டாவது அம்சம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற தனிநபர்,முக்கிய பங்கு வகிக்கும் திட்டங்களை செயல்படுத்துவது இதில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள தனிப்பட்டவர்கள், அவர்களுடைய வருவாய் ஈட்டும் திறனை மேம்படுத்த செய்யும் வகையில் பயனுள்ள சொத்துக்களை ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக, கீழ்க்கண்ட வசதிகளை உள்ளடக்கிய 'சிறப்பு தன்னிறைவுத் திட்டம்' ஒன்றினை அரசு துவக்கியுள்ளது :—

(1) கிராம குடிநீர் வசதி.

(2) ஊரகச் சாலை.

(3) மின் விளக்குகள்.

(4) ஆரம்ப கல்வி கட்டிடங்கள்.

(5) பாசனக் குளங்களை மேம்படுத்துதல்.

(6) மதிய உணவு மையங்களைக் கட்டுதல்.

(7) தொலைக்காட்சிப் பெட்டிகளை அளித்தல்

சுருக்கமாக, வருங்காலத்தில் ஊரக வளர்ச்சி துறையின் குறிக்கோள்கள் கீழ்வருமாறு இருக்கும்:

(அ) கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து, உதவித் தொகை, நிறுவனக் கடனுதவி ஆகியவற்றை அளிப்பதன் மூலம், அவர்களை வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வர உதவி செய்தல்.

(ஆ) கிராமப் பகுதிகளிலுள்ள நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கும், வேலை வாய்ப்பின்றி இருப்பவர்களுக்கும் (ஆண், பெண் ஆகிய இரு சாராருக்கும்) பொதுப்பணித் திட்டங்கள் மூலம் பயனுள்ள கூடுதல் வேலை வாய்ப்பை உருவாக்குதல்.

(இ) கிராமப்புறங்களிலுள்ள ஏழை மக்களின் பொருளாதார நிலை விரைந்து வளர்ச்சியடையவும், அவர்களுடைய வருமானம் படிப்படியாக உயரவும் வழிவகுக்கும் கிராமப்புற அடிப்

[1991 செப்டம்பர் 17

படை வசதிகளைப் பெருக்குவதற்குரிய, நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய சமுதாய சொத்துக்களை ஏற்படுத்துதல்;

(ஈ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மாற்று வகை எரிபொருளைக் கண்டுபிடித்து, அதன் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய தேசியத் திட்டத்தின் ஓர் அங்கமாக தனி நபருக்கும், சமுதாய அமைப்புகளுக்கும் சாண எரிவாயு அடுப்புகளையும், புகையில்லா அடுப்புகளையும் நிறுவுதல் ;

(உ) சிறு பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கு அல்லது தற்போதுள்ள கிணறுகளைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது பம்பு செட்டுகளை நிறுவுவதற்கும், நிலச் சீர்திருத்தத்திற்கும் உதவித் தொகையும் கடனுதவியும் வழங்குவதன் மூலம் சிறு விவசாயிக்கும் குறு விவசாயிக்கும் உதவுதல் ;

(ஊ) தேசியக் காடு வளர்ப்புப் பெருந்திட்டத்தின் ஒரு பகுதியாக காடுகள் அழியாமல் பாதுகாத்தல் உயிரின வாழ்க்கைச் சூழல் சமன்பாட்டினை பேணுதல் ஆகிய இரு தேவைகளையும் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இயன்ற அளவு நிலப்பரப்பில் காடு வளர்த்தல் ;

(எ) சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் மூலமாக கிராமப்புற வாழ்க்கை வசதிகளை மேம்படுத்தி மக்கள் நகர்ப் புறங்களுக்கு குடிபெயர்ந்து செல்வதைத் தடுத்தல்.

இம் மாநிலத்தில் 12,612 கிராமப் பஞ்சாயத்துகளும், 384 ஊராட்சி ஒன்றியங்களும், 648 பேரூராட்சிகளும் (ஊராட்சி நகரியங்கள் உட்பட) உள்ளன.

ஊரக வளர்ச்சி துறையைப் பொறுத்தவரையில் கோரிக்கை எண். 28-ல் சமுதாய வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் பேரூராட்சிகளையும் சேர்த்து 1991–92ஆம் ஆண்டிற்கு ரூ. 36,753.87 லட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சி மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகிய இரு துறை தலைவர்கள் இத்துறையின் கீழ் பணியாற்றி வருகின்றனர். ஊரக வளர்ச்சி ஆணையர், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மீது நிருவாகப் பொறுப்பேற்று உள்ளார். பேரூராட்சிகள் மற்றும் பஞ்சாயத்து நகரியங்கள் பொறுத்தவரையில் பேரூராட்சிகளின் இயக்குநர் நிர்வாகப் பொறுப்பேற்றுள்ளார். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.



1991 செப்டம்பர் 17]

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், மத்திய அரசு பாதி மாநில அரசு பாதி செலவினம் ஏற்கும் (50 : 50) அமைப்பில் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட திட்டம். இத்திட்டத்தின் நோக்கம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் வறுமைக் கோட்டை தாண்டி வரும் வகையில் உதவி செய்யும் பொருட்டு, கிராமங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கு குழு குடும்பத்தினர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அமைத்துக்கொள்வதற்கு வருமானத்தை பெருக்கி கொள்ளும் வகையில் சொத்துக்கள் வரும் வகையில் மூலதனமும், தேவைப்பட்ட இடங்களில் மான்யமும் நிறுவனக் கடனும் கொடுத்து உதவுவது ஆகும்.

2. ஒரு குடும்பத்தின் வருட வருமானத்தை வைத்து வறுமை நிலை நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தின் வருட வருமானம் ரூ. 6,400 அல்லது அதற்கும் குறைவாக இருந்தால் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்த திட்டத்தில் ஒரு குடும்பத்தின் வருட வருமானம் ரூ. 6,400-ஐ அடைவதற்கு உதவப்படுகிறது.

3. இத்திட்டத்தில் உதவி செய்யப்படும் குடும்பங்களை தேர்ந்தெடுக்க வருட வருமானம் ரூ. 4,800 என்று ஒரு இடைப்பட்ட கோடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் வருட வருமானம் ரூ. 3,500 உள்ள குடும்பங்களுக்கு உதவியளிக்கப்பட்டதா என்பது பற்றி உறுதியளிக்கப்பட வேண்டும்.

4. 1991–92 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பயனீட்டாளிகள் குடும்பங்களை, மத்திய அரசு வெளியிட்டுள்ள பின்பற்றத்தக்க வழிமுறைகள்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

கீழே குறிப்பிட்டுள்ள பொருளாதார நடவடிக்கைகளுக்கு மான்யம் அளிக்கப்படுகிறது :—

| | |
|---|---|
| சிறு விவசாயிகள் 25 சதவீதம் | ரூ. 3,000 வரை (வறட்சி நிவாரண திட்டம் இல்லாத இடங்களில்). |
| சிறிதளவு ஆதாயம் உள்ள விவசாயிகள், வேளாண்மை தொழிலாளர்கள் 33 1/3 சதவீதம், பெண்கள் 40 சத சதவீதம். | ரூ. 4,000 வரை (வறட்சி நிவாரணத் திட்டம் உள்ள இடங்களில்). |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 50 சதவீதம். | ரூ. 5,000 வரை. |

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவு காலமாகிய 1988–89-ல் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உதவியளிக்கப்பட்ட பயனாளிகள் குடும்பங்களில் பலவித காரணங்களால் ஏழ்மை நிலைமையைக் கடந்து வர இயலாதவர்களுக்கு, உதவி அளிக்க வேண்டும் எனவும், மேலும் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகள் குடும்பங்களுக்கு உதவியளிக்க வேண்டும் என்பதும் நோக்கமாக இருந்தது.

1989–90 ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருடம் புதிதாக பயனாளிகள் குடும்பங்களுக்கு மட்டும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 2,21,509 பேர்களுக்கு ரூ. 5,159.635 இலட்சம் மான்யத் தொகை வழங்கப்பட்டது.

1990–91 ஆம் ஆண்டு பயனளிக்கப்பட வேண்டிய நபர்களின் இலக்கு 1,57,041 எனவும் அவர்களுக்கு செலவிடப்பட வேண்டிய தொகை ரூ. 4,940.564 இலட்சம் எனவும் தோராயமாக விதிக்கப்பட்டது.

1990–91 முதல் 1991–92 வரையிலான இலக்குகளும் சாதனைகளும் கீழ் வருமாறு :—

| | செயல் இலக்கு. | | நிதி இலக்கு. | |
|---|---|---|---|---|
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| புது குடும்பங்கள். | 1,57,041 | 1,74,791 | 4,940.564 | 5,010.425 |
| பழைய குடும்பங்கள். | இல்லை. | 7,051 | | |
| மொத்தம் | — | 1,81,842 | | |
| 1991–92 (ஜூலை 1991 முடிய)— | | | | |
| புது குடும்பங்கள். | 1,48,749 | 4,597 | | |
| பழைய குடும்பங்கள். | இல்லை. | 196 | 4,648.434 | 258.22 |



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் பயனளிக்கும் புத்தறிவுத் திட்டமாக இருந்தபோதிலும் அடிப்படை வசதிகளை பெருக்க உதவி செய்ய 70 சதவீதம் ஒதுக்கீடு செய்யலாம். தனி நபர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்தை நிறைவேற்றுதில் உள்ள குறைகளை நீக்க வகை செய்யும் முறையில் அடிப்படை வசதிகளை பெருக்க முதலீடு செய்ய 10 சதவீதம் தொகை ஒதுக்கலாம்.

**கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.**

இத்திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகும். கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் நோக்கம், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் உள்ள இளைஞர்களுக்கு தொழில் பற்றி செயலாக்க திறனை அளித்து வேளாண்மை, தொழில், பணி மற்றும் வியாபாரம் போன்றவற்றில் அவர்கள் சுய வேலை வாய்ப்பு பெற உதவுவதாகும்.

2. தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர்களுக்கு வயது வரம்பு 18 முதல் 35 வரை என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர்களில் 50 சதவீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினராக இருக்க வேண்டும். மற்றும் பயிற்சியளிக்கப்படுபவர்களில் 40 சதவீதம் பெண்களாக இருக்க வேண்டும். பயிற்சி காலம் 3 மாதத்திலிருந்து 1 வருடம் வரை தொழில்களைப் பொருத்து மாறுபடும். பயிற்சிகள், ஊரக விரிவாக்க பயிற்சி நிறுவனங்களிலும் அரசாங்க தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் நடைபெறும். பயிற்சியாளர்கள் கீழ்க்கண்டவாறு ஊக்குவிப்புத் தொகை பெறத் தகுதியுடையவர்கள் :

| ஒரு பயிற்சியாளருக்கு ஒரு மாதத்திற்கு ஊக்குவிப்புத் தொகை. | | ஊக்குவிப்புத் தொகை. |
|---|---|---|
| | (1) | (2) |
| | | ரூ. |
| (அ) | பயிற்சியாளரின் சொந்த கிராமத்தில் பயிற்சி நடந்தால். | 150 |
| (ஆ) | பயிற்சியாளரின் சொந்த கிராமத்தில் இல்லாமல் வெளியில் இருந்து வந்து இலவச தங்கும் வசதி இருந்தால். | 250 |
| (இ) | பயிற்சியாளரின் சொந்த கிராமத்தில் இல்லாமல் வெளியில் இருந்து வந்து இலவச தங்கும் வசதி இல்லாதிருந்தால். | 300 |

பலவித தொழில்களில் பயிற்சியளிக்க தேவைப்படும் கச்சாப் பொருட்கள் வாங்க ஒரு பயிற்சியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 60 வீதம் பயிற்சி காலம் முடிய ரூ. 500 வரை செலவிடப்படலாம். பயிற்சியாளர்கள் பயிற்சி காலத்தில் இலவசமாக கருவிகள் வாங்க ரூ. 600 வரை பெற தகுதியுடையவர்கள் பயிற்சியளிக்கும் நிறுவனங்கள், ஒரு பயிற்சியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 100 மதிப்பூதியம் பெறலாம். பெரும் கைவினைஞராக இருந்தால் ஒரு பயிற்சியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 75 மதிப்பூதியம் பெறலாம். பயிற்சி காலம் முடிந்தவுடன் பயிற்சியாளர் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து அளிக்கப்படும். வெற்றிகரமாக பயிற்சி முடிக்கப்பட்டவுடன், பயிற்சியாளர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் மான்யத் தொகையும், நிதி நிறுவனக் கடனும் சேர்ந்து பெறலாம். இதுவரை இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு பெறும் திட்டத்தில் பயிற்சியளிக்க ஆகும் செலவினம் ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி திட்டத்தில் ஏற்கப்பட்டது. 1991–92ல் இருந்து இதற்காகும் செலவினம் தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு அதிலிருந்து செலவிடப்படும். மத்திய அரசு மேற்கூறிய திட்டத்திற்கு ஆகும் செலவினம் (மத்திய மற்றும் மாநில அரசு 50 : 50 ஏற்கப்பட வேண்டியது) ரூ. 263 இலட்சம் என்று தோராயமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

1990–91-ம் ஆண்டு 9,725 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதில் 2,498 இளைஞர்கள் சுயவேலையும் 3,490 இளைஞர்கள் கூலி வேலையும் செய்கிறார்கள்.

1991–92-ம் ஆண்டு 26,880 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று இலக்கு அளிக்கப்பட்டதில் 10–7–1991 வரை 4,531 பேர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்க உதவும் திட்டத்தில் உள்ளமைப்பு வசதிகளை பெருக்க உதவும் திட்டம்.

இத்திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு பெற பயிற்சி அளிக்கும் நிறுவனங்களாகிய மத்திய, மாநில, தனியார் நிறுவனங்களுக்கு உள்ளமைப்பு வசதிகளை பெருக்குவதற்காக உதவி அளிக்கும் திட்டமாகும். 1986-ம் ஆண்டிலிருந்து கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு பெற, பயிற்சி அளிக்கும் நிறுவனங்களுக்கு உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்கி உதவி செய்யும் திட்டத்திற்கு, மத்திய அரசு தனியாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இரு அரசுகளும் (மத்திய அரசு, மாநில அரசும் சேர்ந்து 50 : 50) என்ற



விகிதத்தில் இத்திட்டத்திற்காகும் செலவினத்தை சம பங்காக ஏற்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் பங்கு மாநில அரசிற்கு அளிக்கப்படுகிறது. மாநில வரவு செலவு திட்டத்தில் மத்திய அரசின் பங்கும் சேர்க்கப்படுகிறது. நிறுவனங்களின் செயற்குறிப்புகள் மாநில அளவிலான டிரைசம் துணைக் குழு மற்றும் மாநில அளவிலான ஒருமைப்பாட்டுக்குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெற்ற பிறகு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நிதி இரண்டு தவணைகளில் அளிக்கப்படும்.

இதுவரை எத்தனை நிறுவனங்களுக்கு உள்ளமைப்பு வசதி அளிக்கப்பட்டது என்பதற்கான விவரங்கள் கீழ் வருமாறு :—

| வருடம் | நிறுவனங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1986-87 | 5 |
| 1987-88 | 57 |
| 1988-89 | 31 |
| 1989-90 | 33 |
| 1990-91 | 24 |

இத்திட்டத்திற்கு 1991-92 ஆம் ஆண்டு தோராயமாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 105.20 இலட்சம். 1991-92 ஆம் ஆண்டு 33 நிறுவனங்களுக்கு அடிப்படை வசதி பெருக்கிக் கொள்ள மானியத் தொகை அளிக்கப்பட உள்ளது.

இவைத்தவிர தூத்துக்குடி மீன் வள கல்லூரிக்கு டிரைசம் உள்ளமைப்பு வசதிகளை பெருக்கி மீன் பிடிப்போர் திறனையும் மற்றும் வருமானத்தையும் பெருக வகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களிலுள்ள மீனவ இளைஞர்களுக்கு, மீன் பிடிக்கவும், மீன் பதப்படுத்தவும் மற்றும் தொழில் நுட்ப செயல் திறனை அளித்து அவர்கள் மீன் பிடிக்கும் தொழிலில் சுய வேலை தேடிக்கொள்ளவும் பயிற்சி அளிக்கப்படும் :—

(1) மீன் பிடிப்பதில் முன்னேற்ற முறைகள்.

(2) மீன் பதப்படுத்துதலில் முன்னேற்ற முறைகள்.

(3) கோஸ்டல் அக்வாகல்சர்.

இராமநாதபுரம், சிதம்பரனார், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்தும் 630 நபர்களுக்கு 3 மாதங்களுக்கு மூன்று தடவைகளாக (ஒரு தடவைக்கு 210 நபர்கள் வீதம்) பயிற்சி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காகும் செலவினம் ரூ. 12.47 இலட்சம் இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்ட நிதியிலிருந்து ஏற்கப்பட உள்ளது.

பணிக்கூடம் கட்ட ரூ. 27 இலட்சம் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்க ரூ. 30 இலட்சம் 1991-92 ஆம் ஆண்டு டிரைசம் உள்ளமைப்பு வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து இரண்டு தவணையாக, மீன் வளர்ப்பு கல்லூரி தலைவருக்கு, சிதம்பரனார் ஊரக வளர்ச்சி மாவட்ட முகமை திட்ட அதிகாரி மூலமாக அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் கிராமப்பகுதி மகளிருக்குத் தொழிற் பயிற்சியும், வருவாய் தரத்தக்க கைத்தொழில்கள் செய்ய வசதியும் அளிக்கப்படுகின்றன. அதே சமயத்தில், கிராமப் பகுதிகளில் கிட்டும் வசதிகளையும், வாய்ப்புகளையும் எளிதில் பெறுவதற்காக ஒரு குழுவாகச் செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது. இதற்கு முக்கியமான காரணம், மகளிர் ஈட்டும் பணத்தை அவர்கள் குடும்பத்தில் உணவு, உடை, குழந்தைகளின் மருத்துவச் செலவுக்குப் பயன்படுத்துவதேயாகும்.

இத்திட்டத்தின் கீழ், பெண்கள் குழுக்களாக அமைத்து அவர்களுக்கு வங்கிக்கடனும், மானியமும் அளிக்கப்படுகின்றன. ஒரு குழுவில் 15 பெண்கள் முதல் 20 பெண்கள் வரை இருக்கலாம். இந்தக் குழுக்கள் எந்தப் பணியை எடுக்க வேண்டும் என்று தாங்களே முடிவு செய்வர். பயனடையும் மகளிரில் ஒருவர் குழு அமைப்பாளராக இருப்பார். இந்தக் குழு அமைப்பாளர் தன் பணிக்காக மதிப்பூதியம் பெறுவார். ஒவ்வொரு குழுவிற்கும் தேவையுள்ளவைகளைப் பெற ரூ. 15,000 வழங்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் ஆண்டிற்கு சராசரியாக 100 குழுக்கள் அனுமதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 30 குழுக்கள் அதிகபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.





1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டம் பெரியார், தர்மபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து திருச்சி மாவட்டத்தில் 1986-87 ஆம் ஆண்டிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் 1987-88 ஆம் ஆண்டிலும், புதுக்கோட்டை, வடஆற்காடு மாவட்டத்தில் 1988-89 ஆம் ஆண்டிலும், சேலத்தில் 1989-90 ஆம் ஆண்டிலும், தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டத்தில் 1990-91 ஆம் ஆண்டிலும் விரிவுபடுத்தப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டிற்கு கோவை, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

1983-84 ஆம் ஆண்டு முதல் 1990-91 வரை கீழ்க்கண்டவாறு குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

| ஆண்டு. | பெரியார். | தர்மபுரி. | திருச்சி. | தென்னாற்காடு. | திருவண்ணாமலை சம்புவராயர். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1983-84 | 20 | 20 | .. | .. | |
| 1984-85 | 100 | 100 | .. | .. | .. |
| 1985-86 | 100 | 100 | .. | .. | .. |
| 1986-87 | 165 | 155 | 150 | .. | .. |
| 1987-88 | 178 | 80 | 100 | 100 | .. |
| 1988-89 | .. | 78 | 100 | 163 | 40 |
| 1989-90 | 37 | 7 | 100 | 100 | .. |
| 1990-91 | .. | .. | 100 | 100 | .. |
| | 600 | 540 | 550 | 463 | 40 |

| ஆண்டு. (1) | | | வடஆற்காடு அம்பேத்கார் (7) | புதுக்கோட்டை. (8) | சேலம். (9) | தஞ்சாவூர். (10) | திருநெல்வேலி கட்டபொம்மன். (11) |
|---|---|---|---|---|---|---|---|
| 1983-84 | .. | .. | — | .. | .. | .. | — |
| 1985-86 | .. | .. | — | .. | — | .. | .. |
| 1986-87 | .. | .. | — | — | — | — | — |
| 1987-88 | — | — | — | .. | .. | .. | .. |
| 1988-89 | .. | — | 60 | 100 | .. | .. | .. |
| 1989-90 | .. | — | — | .. | 100 | .. | .. |
| 1990-91 | .. | .. | 100 | 90 | .. | 100 | 100 |
| | | | 160 | 190 | 100 | 100 | 100 |

மொத்தம் 2,843

1990-91 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 0.204 கோடி.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டம் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் நாடு முழுவதும் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டச் செலவினை மத்திய அரசும் மாநில அரசும் முறையே 80 : 20 என்ற விகிதாசாரத்தில் ஏற்கின்றன.





இத்திட்டத்தின் பிரதான நோக்கம், கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பற்ற ஆண் மற்றும் பெண்களுக்கு ஊதியம் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்பு அளிப்பதுவேயாகும். மேலும், இத்திட்டத்தின்கீழ் பொருளாதார ரீதியாகப் பயனளிக்கும் சொத்துக்களை உருவாக்கி கிராமப்புற மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படச் செய்வது இத்திட்டத்தின் இரண்டாவது நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதிதிராவிட-பழங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும். இதில் பெண்களுக்கு 30 சதவீதம் வேலைவாய்ப்பு அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவி, மாநிலத்தில் நிலவும் கிராமப்புற ஏழ்மை நிலை அடிப்படையில் வழங்கப்படுகிறது. மாநிலத்திலிருந்து மாவட்டங்களுக்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்படும்போது, மாவட்டத்தின் பின் தங்கிய நிலைமை அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில், இந்திரா நினைவுக் குடியிருப்பு (ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு இலவச வீடுகள் கட்டுதல்) திட்டத்திற்காகவும் மில்லியன் கிணறுகள் (ஆதி திராவிடர், பழங்குடியினர் சிறு விவசாயிகளுக்கு பாசனக் கிணறு அமைத்தல்) திட்டத்திற்காகவும் மத்திய அரசால் ஒரு குறிப்பிட்ட அளவு நிதி நிர்ணயம் செய்யப்படுகின்றது. இது தவிர, மாவட்ட அளவில் எஞ்சியுள்ள நிதியில் 80 சதவிகிதத்தினை அம்மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் மக்கள் தொகை அடிப்படையில் வழங்க வேண்டும். மீதமுள்ள 20 சதவிகித நிதியை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், கிராமங்களுக்கிடையேயும், ஒன்றியங்களுக்கிடையேயும் செய்யப்பட வேண்டிய பணிகளைச் செய்ய பயன்படுத்தவேண்டும். இத்திட்டத்தின்கீழ் நாளொன்றுக்கு ஊதியம் ரூ. 15 வீதம் வழங்கப்படுகிறது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் பங்காக நிறுத்தப்பெறும் நிதி சில குறிப்பிட்ட இன வாரியான பணிகளுக்காக பின்வரும் விகிதாசார அடிப்படையில் செலவிடப்பட வேண்டும்.

| | | சதவீதம். |
|---|---|---|
| (அ) பொருளாதார ரீதியாக பயனளிக்கும் பணிகள். | .. | 35 |
| (ஆ) சமூகக்காடு வளர்ப்புப் பணிகள் | .. | 25 |

[1991 செப்டம்பர் 17

| | | |
|---|---|---|
| (இ) ஆதி-திராவிடர் பழங்குடியினருக்குத் தனிப் பட்ட முறையில் பயனளிக்கும் பணிகள். | .. | 15 |
| (ஈ) சாலைகள் மற்றும் இதர கட்டிடப் பணிகள் | — | 25 |

இத்திட்டப் பணிகளை ஒப்பந்தக்காரர்கள் மூலம் செயல் படுத்தக்கூடாது.

1990-91 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு விவரம் வருமாறு :

| | |
|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) |
| (1) நிதி ஒதுக்கீடு— | |
| (அ) ஆரம்ப இருப்பு | 1,322.94 |
| (ஆ) மத்திய அரசின் பங்கு நிதி | 13,778.93 |
| (இ) மாநில அரசின் பங்கு | 3,444.73 |
| (ஈ) மாநில அரசின் சிறப்பு நிதியுதவி-கிராமப் புற அடிப்படை வசதிகள் திட்டத்தி லிருந்து சாலைகள் மற்றும் பள்ளிக் கட்டிடங்களுக்காக. | 1,266.87 |
| (உ) ஆர்.சி.சி. கூரையுடன் வீடுகள் கட்ட மாநில அரசின் கூடுதல் நிதியுதவி. | 1,000.00 |
| (ஊ) ஊராட்சி- ஊராட்சி ஒன்றிய நிதி | 575.58 |
| (எ) நிர்வாகச் செலவிற்காக மாநில அரசு ஏற்றுள்ள கூடுதல் செலவு. | 357.58 |
| மொத்தம் .. | 21,746.63 |



1991 செப்டம்பர் 17]

| | |
|---|---|
| (2) மொத்தச் செலவு | 19657.57 |
| (3) உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள்— | |
| (அ) இலக்கு | 688.946 |
| (ஆ) சாதனை | 755.288 |

(3) எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்—

| | இலக்கு. | சாதனை. |
|---|---|---|
| (அ) தொகுப்பு வீடுகள் | 47,000 | 47,290 |
| (ஆ) ஊராட்சி மன்ற கட்டிடங் கள். | 2,010 | 1,981 |
| (இ) பள்ளிக் கட்டிடங்கள் | 677 | 618 |
| (ஈ) தார்ச் சாலைகள் (கிலோ மீட்டரில்) | 1,375 (1,608) | 790 (2,041) |
| (உ) சரளைக்கல் சாலைகள் (கிலோ மீட்டரில்) | 2,129 (2,309) | 1,933 (2,041) |
| (ஊ) மில்லியன் கிணறுகள் திட்டத் தின் கீழ் பாசனக் கிணறு கள். | 2,093 | 274 |
| (எ) சிறு பாசனப் பணிகள் | 4,126 | 525 |
| (ஏ) கசிவு நீர்க் குட்டைகள் | 529 | 107 |
| (ஐ) ஊராட்சிப் பணிகள் | 26,147 | 24,382 |
| மொத்தம் — | 86,086 | 80,870 |

1991-92 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு மற்றும் உத்தேசிக்கப்பட்ட பணி இலக்குகள்.

1991—92 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு விவரம்.

| வரிசை எண். | பணி விவரம். | வேலை எண்ணிக்கை. | நிதி | ஜ. வே. வாய்ப்புத் திட்ட நிதி. | மாநில உள்ளாட்சி நிதி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | வீடுகள் கட்டுதல்— | | | | |
| (அ) | சாதாரண நிலப் பகுதி. | 30,000 | 5,010.00 | 3,810.00 | 1,200.00 |
| (ஆ) | களிமண் நிலம் மற்றும் மலைப் பகுதி போன்ற சிறப்பு பகுதிகள். | 20,000 | 3,700.00 | 2,900.00 | 800.00 |
| | | 50,000 | 8,710.00 | 6,710.00 | 2,000.00 |
| 2. | சமூகக் காடுகள் | 10,000 (எக்டேர்) | 625.17 | 625.17 | |
| 3. | மில்லியன் கிணறுகள் திட்டம்—பாசனக் கிணறுகள். | 2,100 | 600.00 | 600.00 | |
| 4. | ஊராட்சிகளால் செய்யப்பட வேண்டிய பணிகள். | | 2,944.46 | 2,944.46 | |
| 5. (அ) | மயான சாலை அமைத்தல் | 4,000 (கி.மீ.) | | | |
| (ஆ) | வடிகால் அமைத்தல் | | | | |
| (இ) | தடுப்புச் சுவர் அமைத்தல். | | | | |
| 6. | நிர்வாகச் செலவு | | 344.47 | 344.47 | |
| | மொத்தம் — | | 13,224.00 | 11,224.00 | 2,000.00 |



## சிறப்பு தன்னிறைவுத் திட்டம்.

ஊரக வளர்ச்சித் துறையானது ஊரகப் பகுதிகளில் அடிப்படை மற்றும் வளர்ச்சிப் பணிகளை உள்ளாட்சி நிறுவனங்களின் வாயிலாக நிறைவேற்றி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் ஊரக வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்கள் செயலாக்கப்பட்ட போதிலும் ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் கூட செய்து தரப்படவில்லை. ஊரகப் பகுதியைச் சார்ந்த மக்கள் வேலை மற்றும் பல்வேறு வசதிகளை நாடி நகர்ப்புறத்திற்கு வருவது அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் சாலைகள் அமைத்தல், போதுமான அளவு குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகள் செவ்வனே செய்யப்பட வேண்டும். ஆதலால் ஊரகப் பகுதிகளின் அடிப்படை வசதிகள் செய்து தரும் பொருட்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் செலவில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் ஒன்றினை உடனடியாகச் செயலாக்க அரசு முடிவு செய்துள்ளது. 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களுடன் முடிவடையும் ஓராண்டு காலத்திற்குள் 384 ஊராட்சி ஒன்றியங்களிலும் இத் திட்டத்தினை செயலாக்குவதற்காக ரூ. 384 கோடி வழங்கப்படும். நடப்பாண்டில் இத் திட்டத்திற்காக ரூ. 192 கோடி வழங்கப்பட உள்ளது— இதே போன்று வரும் 1992-93 ஆம் ஆண்டிலும் நிதி ஒது செய்யப்படும்.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கான இச்சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ்க்கண்ட அடங்கும் :

1. ஊரக் குடிநீர் வழங்கல்.
2. ஊரகச் சாலைகள்.
3. தெரு விளக்குகள்.
4. ஆரம்பப் பள்ளிகள்.
5. பாசன ஏரிகளைப் புதுப்பித்தல்.
6. மதிய உணவுக் கூடங்கள் கட்டுதல்.
7. டெலிவிஷன் பெட்டிகள் அமைத்தல்.

குடிநீர் வழங்குதல், சாலை மற்றும் தெரு விளக்குகள் ஆகியவை அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

தன்னிறைவுத் திட்டத்ின்கீழ் 1991-92ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் பணி விவரங்கள் :

| வரிசை எண். | இனம். | எண்ணிக்கை. | நிதி ஒதுக்கீடு. | குறிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. | சாலைகள் : | | | |
| | (அ) தார் சாலை — — | 1,250 கி.மீ. | 2,062.50 | ஜ.வே. வா. திட்ட நிதியிலிருந்து நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை தலைமைப் பொறியாளரால் செயல்படுத்தப்பட வேண்டியது. |
| | (ஆ) தார் சாலை — — | 1,300 கி.மீ. | 2,200.00 | |
| | (இ) கப்பி சாலை — — | 1,760 கி.மீ. | 1,937.50 | |
| | | | 6,200.00 | |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2. | பள்ளிக்கட்டிடம் — — — | 700 | 1,000.00 | இப்பணிகளுக்கு ரூ. 500 இலட்சம் ஜ. வே. வா. திட்ட நிதியிலிருந்தும் ரூ. 500 இலட்சம் மாநில நிதியிலிருந்தும் வழங்கப்படும். |
| 3. | சத்துணவுக்கூடம் — .. — | 1,400 | 1,000.00 | |
| 4. | சிறுபாசனம் : | | | |
| | அ. ஏரி குளங்களை புதுப்பித்தல் — | 4,000 | 800.00 | ரூ. 1,000 லட்சம் ஜ.வே. வா. திட்ட நிதியிலிருந்தும் ரூ. 500 இலட்சம் மாநில நிதியிலிருந்தும் வழங்கப்படும். |
| | ஆ. கசிவு நீர்க்குட்டைகள் .. | 500 | 600.00 | |
| | இ. குடிமராமத்து — — | 600 | 100.00 | |
| | | | 1,500.00 | |
| 5. | குடிநீர் வடிகால் வாரியத்துடன் கலந்து முடிவெடுக்கப்பட வேண்டியவை. | | 6,400.00 | |
| 6. | தெரு விளக்கு (தமிழ் நாடு மின் வாரியத்துடன் கலந்து முடிவெடுக்கப்பட வேண்டியவை). | | 3,000.00 | |
| 7. | ஊராட்சிக்கு தொலைக்காட்சி பெட்டிகள். | 750 | 1,00.00 | |
| | | | 19,200.00 | |

[1991 செப்டம்பர் 17

## சமூகக் காடுகள் திட்டம்.

தமிழ்நாட்டில் சமூகக் காடுகள் திட்டம் 1985-86 முதல் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஊரக மக்கள் திட்டமாக செயல்பட்டு வருகிறது. 1989-90 என்று இத்திட்டம் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கீழ்

இத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு :—

1. கிராமத்தில் வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல்.

2. கிராமப்புற மக்களுக்குத் தேவையான அளவு எரிபொருள் விறகு மற்றும் கால்நடை தீவனங்களை அளித்தல்.

3. சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதுகாத்தல்.

4. சுற்றுப்புறத்தை மேம்படுத்தல்.

இந்த மரம் வளர்ப்புத் திட்டத்தில் நாற்றங்கால்களை ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் உற்பத்தி செய்து ஊராட்சி நிலங்களில் நடப்பட்டு வருகிறது. இதைத் தவிர சமுதாய புறம்போக்கு நிலங்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங் குடியினர் ஆகியோரின் பட்டா நிலங்களிலும், கொத்தடிமை யிலிருந்து விடுவிக்கப்பட்ட உழைப்பாளர்களின் நிலங்களிலும், காச நோய் மருத்துவ மனை மறு வாழ்வு இல்லங்கள் ; அனாதை இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்கள். ஆகியவை உள்ள நிலங் களிலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வாழும் வீடு களின் அருகில் உள்ள காலி நிலங்களில் வீட்டுச் செடிகளும் நடப்பட்டு வருகின்றன.

தோப்பு நடவாக இருந்தால் 10 முதல் 50 ஏக்கர் வரை உள்ள செடிகளைப் பாதுகாக்க மற்றும் வரிசை நடவாக இருந்தால் 3 முதல் 5 கி.மீ. வரை உள்ள செடிகளைப் பாதுகாக்க ஒரு பாதுகாவலர் நியமிக்கப்படுகிறார். அவருக்கு மாதம் ரூ. 350 ஊதியமாக வழங்கப்படுகிறது.

பட்டா நிலங்களில் பயிரிடப்பட்ட செடிகளைப் பராமரிக்க நில சொந்தக்காரர்களுக்கு செடிநட்ட நாளிலிருந்து பராமரிப்புத் தொகை மூன்று வருடங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பஞ்சாயத்து நிலங்களில் நடப்பட்ட செடிகள் 3 ஆண்டுகளுக்கு பிறகு பஞ்சாயத்தால் பராமரிக்கப்படுகிறது. மரப்பட்டா திட்டம் 1987-88 மற்றும் 1988-89-ம் ஆண்டுகளில் 72,000 வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பிற்பட்ட மற்றும் ஆதிதிராவிட



1991 செப்டம்பர் 17]

சமூகத்தைச் சேர்ந்த பெண் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு சிறந்த முறையில் இத் திட்டத்தை புத்துயிர் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 1990-91 சாதனை.

| | இலக்கு. | சாதனை. | சதவீதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. செடிகள் உற்பத்தி. (இலட்சத்தில்) | 300.00 | 282.16 | 96 |
| 2. செடிகள் நடுதல் (இலட்சத்தில்) | 300.00 | 306.10 | 100 |
| 3. மொத்தப் பரப்பளவு. (ஹெக்டேரில்). | 10,000.00 | 10,490.68 | 100 |
| 4. நிதி செலவினங்கள் (இலட்சத்தில்) | 610.930 | 677.570 | 110 |

## தேசிய கரிமவாயுத் திட்டம்.

திட்டத்தின் குறிக்கோள் :—

1. மாட்டுச் சாணத்தின் உரத் தன்மையை அதிகரித்தல்.

2. மகளிர் மற்றும் குழந்தைகள் தினந்தோரும் தலைச் சுமையாக விறகு எடுத்துச் செல்லுவதையும், மழைக் காலங்களில் விறகு சேமித்து வைக்க ஏற்படும் சிரமங் களையும் தடுத்தல்.

3. எரிபொருள் தட்டுப்பாடுகளை குறைத்தல்.

4. புகையினால் ஏற்படும் தீமையிலிருந்து மகளிர் மற்றும் குழந்தைகளைக் காப்பாற்றுதல், சமையல் நேரத்தைக் குறைத்தல், பாத்திரங்கள் கரி பிடிக்காமல் இருத்தல்.

5. காடுகளில் உள்ள மரங்களை வெட்டாமல் பாதுகாப்பதால் இயற்கை சூழல் பாதுகாத்தல்.

இத்திட்டம் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் 1981-82 முதல் தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் மார்ச் 1991 ஆம் ஆண்டு முடிய 95,857 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த 8,000 கலன்கள் இலக்கிற்கு 8,345 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. 1991-92-ம் ஆண்டிற்கு 8,000 கலன்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கலனுக்கான மானியங்கள், கலன் அளவைப் பொறுத்தும், கலன் அமைப்போரின் பிரிவினைப் பொறுத்தும் (தாழ்த்தப்பட்டவர் பழங்குடியினர்) வழங்கப்படுகிறது. கலன் அமைக்க மான்யம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

| கலன்கள் கொள்ளளவு. | மலைப் பகுதி. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர். | நிலமற்ற ஏழை எளியவர். | மற்றவர்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 க.மீ. | .. | 1,500 | 1,500 | 1,200 |
| 2 க.மீ. | 3,100 | 2,600 | 2,600 | 1,700 |
| 3 க.மீ. | 3,800 | 3,000 | .. | 2,100 |
| 4 க.மீ. (அதற்கு மேலும்) | 4,400 | 3,000 | .. | 2,200 |

மேலும் கலன்கள் அமைக்க சுழற்சாவி முகவர்களுக்கு ரூ. 400 வழங்கப்படுகிறது. கிராம நல ஊழியர்களுக்கு ரூ. 50 வழங்கப்படுகிறது.

கரிமவாயுத் திட்டத்தில் கலன்கள் கட்டுமானம் மற்றும் பராமரித்தல் பயிற்சி, புத்தூட்டு பயிற்சி, மகளிருக்கான ஒரு நாள் பயிற்சி முதலிய பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டு பயிற்சிக்கான இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை.

தேசிய கரிமவாயுத் திட்டம்.

1990—91

| | | |
|---|---|---|
| இலக்கு | ... | 3,000 கலன்கள். |
| சாதனை | .. | 8,345 கலன்கள். |

1990-91 ஆம் ஆண்டில் மத்திய அரசு சுமார் ரூ. 178.00 இலட்சத்தினை மான்யமாக விடுவித்துள்ளது.



1991—92

| | | |
|---|---|---|
| இலக்கு | .. | 8,000 கலன்கள். |
| சாதனை | .. | 432 கலன்கள். (1991 ஜூன் முடிய). |

1991-92 ஆம் ஆண்டில் முதல் தவணை மான்யமாக ரூ. 104.00 இலட்சத்தினை மத்திய அரசு வழங்கியுள்ளது.

தேசிய மேம்படுத்தப்பட்ட சூளா திட்டத்தின் நோக்கங்கள்.

1. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் பயன்படும் விறகினை குறைத்து அதன் முழு பயனையும் அடைதல்.

2. காட்டு மரங்கள் அழிப்பதைத் தடுத்தல்.

3. கிராமப்புறங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் மூலம் சூளா அடுப்புகள் கட்டப்படுவதால் வேலை வாய்ப்பினை அதிகரித்தல்.

4. சமையலறையிலிருந்து வெளிப்படும் புகையின் காரணமாக பெண்களுக்கு ஏற்படும் நுரையீரல் தொடர்புடைய நோய்கள் வராமல் பாதுகாத்தல்.

தேசிய மேம்படுத்தப்பட்ட சூளாத் திட்டப் 1983 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சூளா அடுப்புகள் (1) நிலையான சூளா அடுப்பு, (2) எடுத்துச் செல்லத்தக்க சூளா அடுப்பு என இரண்டு வகைப்படுகிறது.

சூளா அடுப்புகள் அமைக்க மத்திய அரசு அந்தந்த அடுப்புகளின் வகைக்கேற்ப மானியம் வழங்கப்படுகின்றது. மேலும் இத்தகைய அடுப்புகள் பயிற்சி பெற்ற சுயவேலைப் பணியாளர்கள் மூலம் கட்டித் தரப்படுகின்றன. இதனால் பலர் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். மேலும் சுயவேலைப் பணியாளர்கள் ஒவ்வொரு சூளா அடுப்பினையும் பராமரிக்கும் பொருட்டும் ஆண்டொன்றுக்கு அடுப்பு ஒன்றுக்கு ரூ. 10 வீதம் பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது.

நவீன முறையில் மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் தயாரிப்பதற்கான பயிற்சியினை கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தினர் பணியாளர்களுக்கு அளித்து வருகின்றனர்.

இத்திட்டம் துவங்கப்பட்ட ஆண்டில் இருந்து 1990–91-ம் ஆண்டு வரை 7,86,968 மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 1990–91 ஆம் ஆண்டில் இலக்கு ஒரு இலட்சம் சூளாவாக இருந்த போதிலும் 1,10,042 அடுப்புகள் அமைத்து இலக்கிற்கு மேல் சாதனை புரிந்துள்ளது.

நிலையான அடுப்புக்கு மான்யமாக ரூ. 62 வழங்கப்படுகிறது. எடுத்துச் செல்லத்தக்க சூளா அடுப்பு மதிப்பு ரூ. 120-க்கு தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கு 75 சதவீத மானியமும் பிற வகுப்பினருக்கு 50 சதவீத மான்யமும் அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மாவட்ட அளவில் திட்ட அலுவலரால் நடத்தப்பட்டு வருகிறது.

தேசிய மேம்படுத்தப்பட்ட சூளாத் திட்டம்.

1990—91

| | | |
|---|---|---|
| இலக்கு | .. | 1,00,000 |
| சாதனை | .. | 1,10,042 |

1990–91 ஆம் ஆண்டில் ரூ. 29.95 இலட்சத்தினை மான்யமாக மத்திய அரசு அளித்துள்ளது.

1991—92

| | | |
|---|---|---|
| இலக்கு | .. | 1,00,000 |
| சாதனை | .. | 634 |
| | | (ஜூன் 1991 முடிய). |

1991–92 ஆம் ஆண்டில் முதல் தவணை மான்யமாக ரூ. 32.59 இலட்சத்தினை மத்திய அரசு வழங்கியுள்ளது.

கிராமப் பணித் திட்டம்.

இணைப்புச் சாலைகள் :

இத் திட்டத்தின் கீழ், கிராமப் பகுதிகளில் இணைப்புச்சாலைகளை மேம்படுத்தும் பணியை ஊராட்சி ஒன்றியம் மேற்கொண்டு செயலாக்கியது. இப்பணி ஊரக வேலை வாய்ப்பு திட்ட நிதிகளையும், ஜவஹர் வேலை வாய்ப்பு திட்ட நிதிகளையும் கொண்டு மேற்கொள்ளப்படுவதால் இப்பணிக்கு 1986–87 முதல் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே ஒதுக்கப்பட்டு வருகிறது.



161493



கால்நடை பராமரிப்பு மானியம் :

ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களுக்கான இந்த மானியத்தின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் அதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள இணை மானியம் வழங்க முன்வர வேண்டும்.

இந்த மானியங்கள் பணி முடிந்தவுடன் வழங்கப்படும். அதாவது, இச்செலவு முதலில் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செய்யப்பட்டு பின்னர், கோட்ட வளர்ச்சி அலுவலர்களால் திருப்பி கொடுக்கப்பட்டு ஈடு செய்யப்படும்.

1989–90 ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்திற்கு அரசு முந்தைய ஆண்டைப் போலவே ரூ. 7.25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. 1990–91 ஆம் ஆண்டிற்கும் இதே அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் பாசன மானியம் :

1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டவிதி 85(1)ன்படி கிராம பகுதிகளில் அமைந்துள்ள குறைந்த ஆயக்கட்டுகளுடன் கூடிய சிறுபாசன ஆதாரங்களை பராமரிக்கும் பணி ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரிமை அளிக்கப் பெறுகிறது. 3,28,076 ஹெக்டேர் பரப்புள்ள ஆயக்கட்டுகளை கொண்ட 23,761 சிறு பாசன குளங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள சிறுபாசன ஆதாரங்களை பராமரிப்பதற்கான ஐந்தாண்டு சுழற்சி அடிப்படையில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு அதற்காக உள்ளூர் பாசன மானியம் வழங்கப்படுகிறது. 1990–91 ஆம் ஆண்டிற்கு ரூ. 55.00 இலட்சம் வழங்கப்பட்டது. இந்த மானியம் முழுவதும் பயன்படுத்தப்பட்டது. 1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூகக் கல்வி மானியம் :

நமது மாநிலத்தில் 384 தகவல் மையங்களும், 12,616 சமூகக் கல்வி மையங்களும் இயங்கி வருகின்றன. 'தமிழரசு' 'திட்டம்' 'பஞ்சாயத்து செய்தி' 'பஞ்சாயத்து ராஜ்' ஆகிய பத்திரிகைகள் வாங்குவதற்கு மேற்கூறிய சமூகக் கல்வி மையங்களுக்கு மையம் ஒன்றுக்கு ரூ. 100 விதமும், தகவல் மையங்களுக்கு மையம் ஒன்றுக்கு ரூ. 400 விதமும் அரசு மானியமாக நிதியுதவி அளித்துள்ளது.

1990–91 ஆம் ஆண்டு ரூ. 15.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த மானியம் முழுமையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

[1991 செப்டம்பர் 17

1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 15.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டம் :

| ஆண்டு. (1) | நிதி ஒதுக்கீடு. (2) (ரூபாய் கோடியில்.) |
| --- | --- |
| 1989—90 .. | 1.00 |
| 1990—91 .. | 1.00 |

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், ஊரக வளர்ச்சி துறையும் கிராமப் பணித் திட்டத்தின்கீழ், நீர் வாயில்களை நிறுவுவதற்கான முகமைகளாக செயல்படுகின்றன. 1990–91 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஊரக குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டது. இந்தத் தொகை, எஞ்சியிருந்த அனைத்துப் பணிகளையும் முடிப்பதற்கும், நிலமட்ட நீர்த் தேக்கங்களைக் கட்டுவதற்கும் குடிநீர்க் குழாய் வசதிகளை நீட்டிப்பதற்கும், மீதமுள்ள தொகை முழுவதையும் 1990–91 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். புதிய பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் முதலில் பயனடையும் வகையில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கான நிதியில் 20 சதவீதம், அத்தொகை ஆதிதிராவிடர்/பழங்குடியினர் குடிநீர் வழங்கல் ஆதாரங்களுக்கென ஒதுக்கிவிட்டு செலவிடப்பட்டு உள்ளது.

1991–92 ஆம் ஆண்டுக்கு ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கைப்பம்புகள் மற்றும் விசை பம்புகள் பராமரிப்பு :

சமுதாய வளர்ச்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்பது முக்கியமான அம்சமாகும். பருவமழை தவறிய காரணத்ினால் இன்றைய நிலையில் இதன் அவசியம் மிகவும் அதிகமாகி உள்ளது.



1991 செப்டம்பர் 17]

எனவே, தமிழக அரசு, தமிழ் நாட்டிலுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

கிராமங்களில் ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் கைப்பம்புகள் அமைக்கும் பணியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது. கைப் பம்புகளைப் பராமரிக்கும் பணி மூன்று அடுக்குகளில் மேற்கொள்ளப்படுகிறது. வெவ்வேறு நிலைகளில் உள்ள பணியாளர்களைப் பற்றிய விவரம் பின்வருமாறு :—

| | |
| --- | --- |
| (1) கிராம அளவில் | கைப் பம்புகளைப் பராமரிக்க பயன் பெறுவோரிலிருந்து ஒருவரைப் பராமரிப்பாளராக அமர்த்துதல். |
| (2) வட்டார அளவில் | பயிற்சி பெற்ற பழுது பார்த்து பொருத்துபவர், 100 கைப் பம்புகளுக்கு ஒருவர் என்று வட்டார அளவில் நியமிக்கப்பட்டுள்ளார். கூடுதலாக உள்ள ஒவ்வொரு 30 கைப்பம்புகளுக்கும் கூடுதலாக ஒரு பொருத்துபவர் தற்காலிகமாக நியமிக்கலாம். |
| (3) வட்ட அளவில் | உதவிப் பொறியாளர் தலைமையில் ஒரு நடமாடும் குழு உள்ளது. இவை தவிர, மாவட்ட அளவில் விசைப் பம்புகள் பராமரிப்பதற்கான தனி அமைப்பு ஒன்று அயல் பணியில் உள்ள உதவி செயற்பொறியாளர் ஒருவரின் தலைமையில் இயங்கி வருகிறது. |

இம் மாநிலத்தில், இத்துறையின்கீழ் தற்சமயம் 1,20,311 கைப்பம்புகளும் 35,421 வடிமுனை குழாய்களும் 22,264 விசைப் பம்புகளும் இயங்கி வருகிறது.

கை பம்பு மற்றும் விசைப் பம்புகள் பராமரிப்பினை குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையர் தினசரி ஆய்வு செய்கிறார். கோட்ட வளர்ச்சி அலுவலர் வாரம் ஒரு முறையும், மாவட்ட ஆட்சித் தலைவர் மாதம் இரு முறையும் இது குறித்து ஆய்வு செய்கிறார்கள். மாநில அளவில் ஊரக வளர்ச்சி இயக்குநர் இப்பராமரிப்பு பணியினை மாதம் இருமுறை ஆய்வு செய்கிறார். ஏழு நாட்களுக்குள் பழுது நீக்கும் அனைத்துப் பணிகளும் மேற்கொள்ள வேண்டும் என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டு, மிகுதி உள்ளவை இரண்டு விழுக்காடுகளுக்கு மிகாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் இவைகளை பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரங்கள் என்பதால் எந்த நேரத்திலும் இந்தப் பம்புகள் வேலை செய்யும் நிலையில் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1989 ஏப்ரல் மாதத்தில், விசை பம்புகள் பராமரிப்பதற்காக பின்வருமாறு திருத்திய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன :—

(1) ஊராட்சிகளில் உள்ள விசைப் பம்புகளின் பராமரிப்பு அந்தந்த ஊராட்சி ஒன்றியத் தலைவரின் பொறுப்பாகும்.

(2) இப்பராமரிப்புப் பணிக்குத் தேவையான செலவுகளை மேற்கொள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. வழக்கத்தில் உள்ளது போல் விலைப் பட்டியல் அல்லது ஒப்பந்தப் புள்ளி பெற்று இவற்றிலிருந்து குறைந்த விலைப் புள்ளியைத் தேர்வு செய்வது மற்றும் ஊராட்சியின் ஒப்பு தல் பெறுவது ஆகியவை ஊராட்சித் தலைவரின் பொறுப்பாகும்.

(3) தடையில்லாமல் இப்பம்புகள் வேலை செய்வது குறித்து உறுதி செய்யும் பொறுப்பு ஊராட்சித் தலைவருடைய தாகும்.

(4) ஒவ்வொரு மாதமும் ஊராட்சி ஒன்றிய ஆணை யாளருக்கு தகவலுக்காக, விசைப் பம்புகளில் ஏற்பட்ட பழுது கள், பழுது நீக்கம் செய்த நிறுவனம் பற்றிய குறிப்பு மற்றும் பழுது நீக்கத்திற்கான செலவுகளை, ஊராட்சித் தலைவர் அனுப்பி வைக்க வேண்டும்.

ஊரக தொடர்புத் திட்டம்;

இராமப்புற மக்களிடையே கல்வி அறிவை வளர்க்க மட்டு மல்லாமல் பொழுது போக்கு அம்சமாகவும் ஊரக தொடர்பு திட்டம் இந்த துறையின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. இதுவரை 12,041 சமுதாய தொலைக் காட்சிப் பெட்டி களும் 46,527 சமுதாய வானொலிப் பெட்டிகளும் அமைக்கப் பட்டு இத்துறையால் பராமரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஊராட் சிக்கும் குறைந்தபட்சம் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியாவது வழங்கப்பட வேண்டும் என்பதே இந்த அரசின் கொள்கையாகும். அதன்படி 12,041 தொலைக்காட்சிப் பெட்டிகள், 7,114 ஊராட்சி களில் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. இதில் 1990–91ஆம் ஆண்டில் 1,040 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அரசின் முழு மானியத் தொகையில் ரூ. 800க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள நலிந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.





இன்னமும் 6,150 ஊராட்சிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வரும் ஆண்டுகளில் வழங்கப்பட உள்ளன. ஊராட்சிகள் தங்க ளுடைய நிதியிலிருந்து தங்கள் தேவைக்கேற்ப தொலைக்காட்சிப் பெட்டிகளை சமுதாய நோக்கத்திற்காக வாங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது. ஊரக வளர்ச்சித் துறை செயலர், தலைமையில் ஒரு குழு அரசால் அமைக்கப்பட்டு, ஊராட்சிகள் தங்களுக்கு தேவையான தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்க மேக், மாடல் மற்றும் விலை விவரத்துடன் ஒரு பட்டியலை அங்கீ கரித்துள்ளது. இந்தப் பட்டியலில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஒன்றை தாமே தேர்ந்தெடுத்து வாங்கிக் கொள்ள ஊராட்சிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. சமுதாய தொலைக் காட்சிப் பெட்டிகள் இத்துறையால் பராமரிக்கப்படுகின்றன.

சுமார் 250 தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளர் என்ற விகிதத்தில் இவைகளைப் பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சியும், பெட்டி ஒன்றுக்கு ரூ. 100 ஐ பராமரிப்புத் தொகையாக அரசுக்கு வருடத்திற்கு வழங்க வேண்டும். அதைப் போலவே சமுதாய வானொலிப் பெட்டிகளை பராமரிக்க ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு வானொலி மேற்பார்வையாளர் உள்ளார். சுமார் 600 லிருந்து 800 வானொலிப் பெட்டிகள் ஒவ்வொரு வானொலி மேற்பார்வையாளரின் பராமரிப்பதற்காக, ஒரு வானொலிப் பெட்டிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 30 வீதம் முதல் 3 பெட்டி களுக்கும், அதற்குக் கூடுதலாக உள்ள ஒவ்வொரு பெட்டிக்கும் ரூ. 10 வீதம் பராமரிப்புத் தொகை செலுத்த வேண்டும்.

அரசிற்கு இதன் மூலம் ரூ. 28 இலட்சம் வருமானம் கிடைக்கிறது..

பயிற்சித் திட்டங்கள்.

ஊரக வளர்ச்சித் துறை பணியாளர்களுக்கு அவர்கள் பணி யினைத் திறம்பட செய்வதற்கும் புதிய செயல் திறனை உருவாக்கு வதற்கும் பயிற்சி திட்டமிடப்பட்டது. ஊரக வளர்ச்சித் துறை பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க மாநில அளவிலான பயிற்சி நிலையம் ஒன்று செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள மறைமலை நகர் அருகில் உள்ள பெரமானூரில் நிறுவப்பட் டுள்ளது. மேலும் கீழ்க்கண்ட 5 இடங்களில் ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:—

1. பவானிசாகர் .. — பெரியார் மாவட்டம்

2. கிருஷ்ணகிரி .. — தருமபுரி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 3. பட்டுக்கோட்டை | .. | தஞ்சாவூர் மாவட்டம் |
| 4. தே. கல்லுப்பட்டி | .. | மதுரை மாவட்டம் |
| 5. சத்தியவிஜயநகரம் | .. | திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம். |

அனைத்து ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களிலும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு கீழே உள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் அனைத்து ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களிலும் தொழிற் கூடங்கள் உள்ளன. அங்கு கிராமப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப் பிற்கான பயிற்சி அளித்தல் (TRYSEM) திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தே. கல்லுப்பட்டி மற்றும் ச.வி. நகரம் ஊரக விரிவாக்க பயிற்சி நிலையத்தில் மனையியல் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அங்கு ஊர்நல அலுவலர் (மகளிர்) மற்றும் சமூக நலத் துறையின் துணை பெண் ஊழியர் களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

| 1990–91 ஆம் ஆண்டிற்கான பயிற்சித் திட்டம். | பயிற்சி பெற்றவர் களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. ஊராட்சி விரிவாக்க அலுவலர்களுக்காக — ஒரு மாத பயிற்சி. | 725 |
| 2. மற்ற விரிவாக்க அலுவலர்களுக்கு — ஒருங்கிணைந்த ஒரு மாத பயிற்சி. | 290 |
| 3. ஊர்நல அலுவலர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கான 2½ மாத ஒருங்கிணைந்த பயிற்சி. | 267 |
| 4. துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான —10 நாட்கள் பயிற்சி. | 130 |
| 5. ஊர்நல அலுவலர் (மகளிர்) களுக்கான — 3 மாத பயிற்சி. | 80 |



இது தவிர 1991-92-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பயிற்சிகளை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

| பயிற்சியின் பெயர். | பயிற்சி பெறும் நாட்கள். | பயிற்சி பெறுபவர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தொழில் நுட்ப நிலையிலுள்ள விரிவாக்க அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சி. | 10 | 800 |
| 2. சமூக நல விரிவாக்க அலுவலர்களுக்கான புத்தாக்க பயிற்சி. | 5 | 600 |
| 3. பேரூராட்சி அலுவலர்களுக்கான பயிற்சி. | 15 | 400 |

இப் பயிற்சி நிலையங்களுக்கு தேவையான வசதிகளை ஆராய்ந்து பரிந்துரைகள் செய்ய ஊரக வளர்ச்சி ஆணையர் அவர்களின் தலைமையில் அ. ஆ. 457 ஊ. வ. (இ-5) துறை 1990-ம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் நாளில் அமைக்கப்பட்ட குழு சில பரிந்துரைகள் செய்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையம் மாநில அளவில் தலைமை பயிற்சி நிலையமாக உருவாக்கப்பட்டு வருகிறது. இங்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு மேல் உள்ள அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப் பயிற்சி நிலையம் தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனமாக 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி 2—5—1990 முதல் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையத்திற்கு ரூ. 61.71 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய கட்டிடம் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் மறைமலை நகர் அருகில் பெரமானூர் கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசு, ரூ. 55 இலட்சம், ஐரோப்பிய பொருளாதார சமுதாய நிதியுதவி திட்டத்தின்கீழ் மானியமாக வழங்கியுள்ளது. இது தவிர மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையத்திற்குத் தேவையான உபகரணங்கள் வாங்க மானியமாக மத்திய அரசு ரூ. 20 இலட்சம் வழங்கியுள்ளது. புதிதாகக் கட்டி முடிக்கப் பட்ட கட்டடத்திற்கு பயிற்சி நிலையம் மாற்றப்பட்டு அங்கு இயங்கி வருகிறது. அங்கு பயிற்சி பெறும் அலுவலர்களுக்காக

[1991 செப்டம்பர் 17

ஒரு விடுதி (Hostel) கட்டப்படவேண்டும். 1990-91-ஆம் ஆண்டில் இம்மாநில பயிற்சி நிலையத்தின் தொடர் செலவினத்திற்கு ரூ.12.94 இலட்சம் மானியமாக தரப்பட்டுள்ளது. 1991-92ல் மாநில பட்ஜெட்டில் இப்பயிற்சி நிலையத்திற்கு ரூ. 12.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்திற்கான தொடர் செலவினம் மத்திய அரசு மற்றும் மாநில அரசினால் 50 : 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

### வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள்.

**பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்பு டானிடா ஆதரவு பெற்ற தருமபுரி மாவட்டம் தளி வளர்ச்சி வட்டாரத்தில் நடைபெறும் சிறப்புப் பொதுப்பணி திட்டம்.**

ஜெனிவாவிலுள்ள பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்பு, தருமபுரி மாவட்டத்திலுள்ள தளி வளர்ச்சி வட்டாரத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக 14.97 இலட்சம் அமெரிக்க டாலர் நிதியுதவியுடன் (ரூ. 2.55 கோடி) பழங்குடியினர் ஆதிதிராவிடர், ஊரக நிலமற்ற தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் ஆகியோருக்காக வேலை வாய்ப்பை பெருக்கி வருமானம் கிடைக்கச் செய்யும் நடவடிக்கைகளுக்காக பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்பின் தொழில் நுட்ப உதவியுடன் சிறப்பு பொதுப்பணித் திட்டம் ஒன்றை மேற் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் 1989-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமானது. இந்த திட்டத்தின் கீழ், சிறு பாசன திட்டங்கள், சமுதாயக்காடு வளர்ப்பு, கிராமப்புறச் சாலைகள், கதர்-கிராமத் தொழில்கள், பட்டுப்புழு வளர்த்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட மூன்று ஆண்டு காலம் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் முடிவு பெறுகிறது. எனினும் இந்த திட்டக்காலத்தை மேற்கொண்டு 18 மாதங்களுக்கு நீட்டிப்பதற்கு பற்றிய செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

தருமபுரி மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தலைவராக உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த திட்டத்தினை செயல்படுத்தும் திட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒசூரிலிருக்கும் சார் மாவட்ட ஆட்சியர் திட்ட அலுவலராக பணிபுரிகிறார். இந்த திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக பொதுப்பணி, வனம், பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் அரசுத் துறையிலிருந்து பணியாளர்கள் தெரிந்து எடுக்கப்பட்டு சார் மாவட்ட ஆட்சியரின் நேரிடையான கட்டுப்பாட்டில் பணிபுரிகின்றனர்.



1991 செப்டம்பர் 17]

### II—யூனிசெஃப் நிதியுதவி பெறும் திட்டம்.

**தீவிரத் துப்புரவுத் திட்டம் :**

கிராமப்புற மக்களின் உடல் நலத்திற்கும் சுகாதாரத்திற்கும் ஆதாரமாக விளங்குவது கிராமப்புறத் துப்புரவாகும். இதனைக் கருத்திற்கொண்டு, யூனிசெஃப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தீவிரத் துப்புரவுத் திட்டம் ஒன்று பெரியார் மாவட்டத்தைச் சார்ந்த கிராமப்புற பகுதியில் செயற்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டக்கால அளவில் பெரியார் மாவட்டத்தைச் சார்ந்த கிராமப்புறப் பகுதிகளில் 85,000 தனிக் கழிப்பிடங்கள் கட்டப்பட உள்ளன.

ஒவ்வொரு கழிப்பிடத்திற்கும் ஆகும் செலவு ரூ. 1,600 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இச் செலவினை கீழே குறிப்பிட்டுள்ளவாறு பயனடைவோரும், மாநில, மத்திய அரசுகளும், யூனிசெஃப் நிறுவனமும் பகிர்ந்து கொள்கின்றன :—

| | |
|---|---|
| (1) ஒவ்வொரு துப்புரவு கழிப்பிடத்திற்காகும் மொத்தச் செலவு. | ரூ. 1,600 |
| (2) பயனடைவோர் பங்கு : | |
| (அ) அவர் வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/சிறு விவசாயிகள் சொற்ப நிலமுள்ள விவசாயிகள் ஆக இருந்தால் (ஐந்து விழுக்காடு). | 80 |
| (ஆ) வறுமைக் கோட்டிற்கு மேலே இருந்தால் (இருபது விழுக்காடு). | 320.00 |
| (3) யூனிசெஃப் நிறுவனத்தின் பங்கு .. | 400.00 |
| (4) மாநில அரசின் பங்கு .. | எஞ்சிய தொகையில் 50 சதவீதம். |
| (5) மைய அரசின் பங்கு .. | எஞ்சிய தொகையில் 50 சதவீதம். |

இந்நாள் வரை 11,845 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூபாய் 1.52 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் கொத்தனார்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், கிராமத்தில் முக்கியமானவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சித் தலைவர்கள் ஆகியோருக்கு பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன. மக்களிடையே சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதலும், கழிப்பிடங்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்குதலும் இத் திட்டத்தின் வெற்றிக்கான இன்றியமையா இரு அம்சங்கள் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு 10,000 கழிப்பிடங்கள் கட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. பெரும்பான்மையோர் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தென்னாற்காடு மாவட்டம் மரக்காணம் மற்றும் பரங்கிப் பேட்டையில் டானிடா உதவியுடன் செயலாக்கம் பெறும் ஒருங்கிணைந்த ஊரக துப்புரவு மற்றும் குடிநீர் திட்டம் :

1—10—1991 முதல் டென்மார்க் அரசு உதவியுடன் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கடற்கரை கிராமமான மரக்காணம் மற்றும் பரங்கிப்பேட்டையில் ஒருங்கிணைந்த ஊரகத் துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கும் திட்டம் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டு செயலாக்கம் பெற்று வருகிறது.

(1) மேற்கண்ட இரு கிராமங்களில் சுகாதார மேம்பாடு ஒருங்கிணைந்த அடிப்படையில் ஊரகக் குடிநீர் வழங்குதல் மற்றும் துப்புரவுத் திட்டம், சுகாதாரத் தூய்மை, சமுதாய ஈடுபாடு மற்றும் திட்ட விளக்கமும் செய்திகளின் அடிப்படையில் செய்தல்.

(2) சுற்றுப்புற சுகாதாரத்திலும், ஊரகக் குடிநீர் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களையும், உள்ளூர் அமைப்புகளையும் பலப்படுத்தல்.

(3) குடிநீர், துப்புரவு மற்றும் சுற்றுப்புறத் தூய்மைக்கும் சுகாதார மேம்பாட்டிற்கும் உள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வை கிராமப்புற மக்களிடையே ஏற்படுத்துதல்.

(4) இத்திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்குதலுடன் துப்புரவு, சுற்றுப்புறத் தூய்மை மற்றும் அதற்கான பயிற்சி அளித்தல் ஆகியன இவ்விரு கிராமங்களில் இத்திட்டத்தின் பகுதியில் அடங்கும். கடற்கரையோரக் கிராமங்களில் வாழும் மக்களுக்காக கைப்பம்பு அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 860 வடிமுனைக் குழாய்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனுடன்



பள்ளிக்கூடங்களுக்காக 50 வடிமுனைக் குழாயும் உள்ளது. மூன்று வருடம் மற்றும் மூன்று மாதத்தில் செயலாக்கம் பெறும்.

இத்திட்டத்திற்கு ரூ. 822.90 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

. . .

உலக வங்கி உதவியுடன் செயல்படும் கிராம குடிநீர் வழங்கல் திட்டம் :

. .

தமிழ்நாட்டில் ரூ. 260 கோடி மதிப்பீட்டில் வேளாண் வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு உலக வங்கி நிதி உதவி வழங்க இசைவு அளித்துள்ளது. இந்த திட்டத்தில் ஒரு பகுதியாக ரூ. 30 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் கிராம குடிநீர் வழங்கல் திட்டம் அமைந்துள்ளது.

இந்த கிராம குடிநீர் வழங்கல் திட்டத்தின் நோக்கம், முக்கியமாக கைப்பம்புகள் மூலமாக திருவண்ணாமலை சம்புவராயர், தென் ஆற்காடு, சேலம், தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள கிராம குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் தமிழ்நாடு அரசு திட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாகும். ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழும் குடியிருப்புகள் போன்று குறிப்பிட்ட அளவிற்கு தண்ணீர் தற்போது கிடைக்காமல் தவிக்கும் குடியிருப்புகளில் தண்ணீர் கிடைக்க வகை செய்வதை இத்திட்டம் வலியுறுத்துகிறது. இந்த ரூ. 30 கோடி, கிராம குடிநீர் வழங்கல் திட்டம் ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படத் துவங்கும்.

27 லட்சம் மக்களுக்கு உதவக்கூடிய 8,000 முதல் 10,000 குழாய்க் கிணறுகளும் மற்றும் 2,000 வடிமுனைக் குழாய்களும் அமைப்பது இந்த திட்டத்தில் அடங்கும். ஒவ்வொன்றும் 100 நபர்களுக்கு பயன்படக்கூடிய சாதாரண வடிமுனைக் குழாய்களும், ஒவ்வொன்றும் 200 முதல் 300 நபர்களுக்கு உதவக் கூடியதும் முக்கியமாக கைப்பம்புகள் பொருத்தப்பட்டதுமான கிணறுகள் அல்லது குழாய் கிணறுகளை ஒருங்கிணைந்து அமைப்பது இந்த திட்டத்தின் கட்டுமான பணியாகும்.

[1991 செப்டம்பர் 17

பேரூராட்சிகள் நிர்வாகம்.

தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கான சுமார் ஒரு கோடி மக்கள் 648 பேரூராட்சிகளில் வாழ்கிறார்கள். பேரூராட்சிகள் நான்கு நிலைகளைக் கொண்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| இரண்டாம் நிலை | .. | .. | .. | 60 |
| முதல் நிலை | .. | .. | .. | 262 |
| தேர்வு நிலை | .. | .. | .. | 290 |
| சிறப்பு நிலை | .. | .. | .. | 16 |
| | | | | 648 |

பேரூராட்சிகளின் கடமைகள் :

பேரூராட்சிகளின் கடப்பாடு பணிகளில் சாலைகள் அமைத்து பராமரித்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் அமைத்தல், தெருக்களைத் தூய்மைப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

பேரூராட்சியின் நிதி ஆதாரங்கள் ;

வீட்டுவரி, தொழில்வரி மற்றும் வாகனவரி ஆகியவை பிரதான வருவாயாகும். முத்திரை வரிதண்டம், கேளிக்கை வரி, பலன் தரத்தக்க இனங்களிலிருந்து கட்டணம் வசூலித்தல், கட்டிடங்கள் அனுமதி கட்டணம் மற்றும் தண்ணீர் வரி ஆகியவை பேரூராட்சிகளின் இதர முக்கிய வருவாய்களாகும்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் :

பேரூராட்சி மக்களுக்கு குடிநீர் வழங்குதல் பேரூராட்சிகளின் அடிப்படை பணிகளில் ஒன்றாகும். ரூ. 3.00 லட்சம் மதிப்பீட்டிற்கு மேல் உள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டப் பணிகள் ஆயுள் காப்பீட்டுக் கழகம், உலக வங்கி மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு கழக நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. 648 பேரூராட்சிகளில் 355 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டங்கள் உள்ளன. மேலும் 141 பேரூராட்சிகளில் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் இருந்து வருகின்றன. மீதமுள்ள



1991 செப்டம்பர் 17]

152 பேரூராட்சிகளில் ஆயுள் காப்பீட்டுக் கழகம், உலக வங்கி மற்றும் வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழக நிதி உதவி பெற்று திட்டம் செயல்படுத்தப்படும்.

பேரூராட்சிகள் நகரியங்கள் உள்பட 17,957 கைப் பம்புகளையும் 3,110 விசைப் பம்புகளையும் பராமரித்து வருகின்றன. மாவட்டத்தில் உள்ள விசைப் பம்பு பராமரிப்பு பிரிவு உதவி செயற் பொறியாளரின் தொழில் நுட்ப உதவியுடன் பேரூராட்சிகள் இப் பம்புகளை பராமரிக்கின்றன.

1990–91 ஆம் ஆண்டில் குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் ரூ. 36.55 லட்சம் பேரூராட்சிகளில் உள்ள மேற்படி பம்புகளைப் பராமரிக்க அரசு மான்யமாக அனுமதிக்கப்பட்டது. இதே போன்று 1991–92 ஆம் ஆண்டிற்கும் ரூ. 36.55 லட்சம் அரசு மானியமாக வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

துப்புரவு :—

வடிகால் திட்டம் :

முறையாகத் துப்புரவு செய்தலும், கழிவு நீர் மற்றும் வடிகால் நீரை அகற்றுவதும் பேரூராட்சிகளின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். பேரூராட்சிகளில் உள்ள மொத்தம் 12,662 கி.மீ. நீளமுள்ள தெருக்களில் 4,896 கி.மீ. நீளத்திற்கு மட்டும் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. 1990–91 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.00 லட்சமும், 1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.00 லட்சமும் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடிகால் திட்டத்துடன் மிகவும் நெருக்கமாக இணைந்துள்ளது துப்புரவு பணியாகும். பல்வேறு திட்டங்களின் மூலம் துப்புரவு பணி சில பேரூராட்சிகளில் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மாநில திட்டத்தின் கீழ் குறைந்த செலவிலான கழிப்பிடம் கட்டும் திட்டத் தலைப்பில் 1990–91 ஆம் ஆண்டிற்கு தலா 250 எண்ணிக்கை வீதம் கீழ்க்கண்ட 5 பேரூராட்சிகளில் 1,250 எண்ணிக்கை கழிப்பிடம் ரூ. 18.75 லட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு வேலை முடிவுற்று உள்ளது.

1. தெங்கம்புதூர் .. கன்னியாகுமரி மாவட்டம்.
2. கொடவாசல் .. தஞ்சாவூர் மாவட்டம்.

[1991 செப்டம்பர் 17

| | | |
|---|---|---|
| 3. உடன்குடி | .. | சிதம்பரனார் மாவட்டம். |
| 4. கருங்குழி | .. | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம். |
| 5. சோழவந்தான் | .. | மதுரை மாவட்டம். |

இத்திட்டத்திற்கு கீழ்க்கண்ட அடிப்படையில் நிதி உதவி பெறப்பட்டுள்ளது.

| | சதவீதம். |
|---|---|
| 1. அரசு மானியம் | 40 |
| 2. அரசு கடன் | 40 |
| 3. பயனடைவோர் பங்கு | 20 |

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் கடனுதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான கழிப்பிடம் அமைக்கும் திட்டம் 20 பேரூராட்சிகளில் அமுல் படுத்தப்படவுள்ளது. 4,444 எண்ணிக்கை உலர் கழிப்பிடங்கள் சுகாதாரக் கழிப்பிடங்களாக மாற்றப்பட உள்ளன. 1989-90 ஆம் ஆண்டில் மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மைய அரசின் தொகை ரூ. 30.00 லட்சம் இதற்கென பயன்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் ஒரு கழிவறைக்கு தரை மட்டம் வரை ரூ. 1,507 மற்றும் கூரை-வரை ரூ. 1,225 ஆகும். கீழ்க்கண்ட நிதி அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

| | தரை மட்டம் வரை. | மேற் கூரை வரை. |
|---|---|---|
| | (சதவீதம்). | |
| 1. மைய அரசு நிதி உதவி | 45 | — |
| 2. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகக் கடனுதவி .. .. | 50 | 90 |
| 3. பயனடைவோர் பங்கு .. | 5 | 10 |

பேரூராட்சிகள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியைக் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறுகின்றன.



1991 செப்டம்பர் 17]

கட்டணக் கழிப்பிடம் :

1990-91 ஆம் ஆண்டிற்கு 10 பேரூராட்சிகளில் தலா ரூ. 1.50 லட்சம் வீதம் கட்டணக் கழிப்பிடம் அமைக்க அரசு மானியமாக ரூ. 15.00 லட்சம் அனுமதிக்கப்பட்டு, 9 பேரூராட்சிகளில் வேலை முடிவுற்றுள்ளது.

சாலைகள் :

| | | | கிலோ மீட்டர். |
|---|---|---|---|
| 1. கான்கிரீட் சாலைகள் | .. | ... | 312 |
| 2. தார் சாலைகள் | .. | ... | 2,349 |
| 3. கருங்கல் சாலைகள் | ... | .. | 2,988 |
| 4. சரளைக்கல் சாலைகள் | .. | .. | 1,749 |
| 5 மண் சாலைகள் | .. | .. | 5,264 |
| | | | 12,662 |

பேரூராட்சிகளின் சாலைகள் நிதி பற்றாக்குறை காரணத்தால் பராமரிக்க முடியாத நிலை உள்ளது. எனவே, பேரூராட்சிகளில் உள்ள சாலைகள் பராமரிக்க நிதி வசதி அளிக்க வேண்டியது அத்தியாவசியமாகிறது. 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 40.00 லட்சமும், 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 40.00 லட்சமும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

புறநகர் மேம்பாட்டுத் திட்டம் (பெரிய நகரங்களுக்கு அருகில் அமைந்துள்ள பேரூராட்சிகளுக்கு உதவித் திட்டம்).

பெரிய நகரங்களுக்கு அருகில் அமைந்துள்ள பேரூராட்சிகள் அடிப்படை வசதிகள் இன்றி உள்ளன. பெரிய நகரங்களில் உள்ளது போன்ற அடிப்படை வசதிகளை அப்பேரூராட்சிகளில் வழங்குவதின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 30 லட்சமும் அரசு மானியம் அனுமதிக்கப்பட்டு 12 பேரூராட்சிகளுக்குத் தலா ரூ. 2.50 லட்சம் வீதம் பிரித்தளிக்கப்பட்டது.

இம்மானியம் அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்கும் திட்டம், சாலை வசதி மற்றும் வடிகால் வசதி ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்டது.

**பயன்தரத்தக்க முயற்சிகள் :**

**ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் :**

**8-வது ஐந்தாண்டுத் திட்டம் :**

பேரூராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்கவும். அந்த நிதியைக் கொண்டு தாமாகவே செயல்படவும் அரசு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தை பேரூராட்சிகளில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் நீண்டகால வட்டியுடன் கூடிய 20 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தக் கூடிய கடனாக நகர்—ஊரமைப்புத் துறை மூலம் அனுமதிக்கப்பட்டு பேருந்து நிலையங்கள் கட்டுதல், அங்காடிகள் கடைகள் வளாகம் கட்டுதல், போன்ற பயன்தரத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1991 ஆம் ஆண்டில் முன்னதாக ரூ. 181.17 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்த நகர்—ஊரமைப்புத் துறை 12 பேரூராட்சிகளை தேர்வு செய்துள்ளது. இத்திட்ட காலத்தில் கூடுதலான பேரூராட்சிகள் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இத்திட்டத்தின்கீழ் இதுவரை சாதனை கீழ்வருமாறு :—**

| திட்ட காலம். | பேரூராட்சிகளின் எண்ணிக்கை. | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்). | தற்போதைய நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 7-வது திட்டம் | 89 | 13,29.03 | 34 முடிக்கப்பட்டது. 55 முன்னேற்றத்தில் உள்ளன. |
| 9-வது திட்டம் | 12 | 181.17 | முதல்கட்ட வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. |



**சிறிய மற்றும் நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ் இதுவரை பயன் பெற்ற பேரூராட்சிகளின் விவரம் கீழ்வருமாறு :

| திட்ட காலம். | பேரூராட்சிகளின் எண்ணிக்கை. | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 7-வது திட்டம் | 3 | 300.00 | முன்னேற்றத்தில் உள்ளது. |
| 8-வது திட்டம் | 4 | 480.00 | முதல் கட்ட வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. |

8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு தலா ரூ. 120.00 லட்சம் திட்ட மதிப்பீட்டில் பேருந்து நிலையம், கடைகள் வளாகம், சிறிய கடைகள் மற்றும் தங்குமிடங்கள் (Dormitory) ஆகியவை கட்டப்பட உள்ளன.

1. திருச்செந்தூர் .. சிதம்பரனார் மாவட்டம்.
2. 15. வேலம்பாளையம் .. கோயமுத்தூர் மாவட்டம்.
3. புஞ்சைப்புளியம்பட்டி .. பெரியார் மாவட்டம்
4. மாமல்லபுரம் ... செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம்.

**ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் :**

இத்திட்டம் 1990–91 ஆம் ஆண்டில் முதல் முறையாக அனைத்து பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1990–91 ஆம் ஆண்டில் ரூ. 1,742.60 லட்சம் அனுமதிக்கப்பட்டது. பேரூராட்சிகள் மற்றும் நகரியங்களில் 10,410

[1991 செப்டம்பர் 17

எண்ணிக்கையுள்ள சமுதாய சொத்துக்கள் உருவாக்கும் வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.. அவை கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | தொகுப்பு வீடுகள் | 7,187 |
| 2. | அலுவலகக் கட்டிடங்கள் | 84 |
| 3. | பள்ளிக் கட்டிடங்கள் | 20 |
| 4. | கருங்கல் சாலைகள் | 1,137 |
| 5. | தார் சாலைகள் | 290 |
| 6. | இதர வேலைகள் | 1,692 |
| | | 10,410 |

பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு 1991-92 ஆம் ஆண்டில் 1,000 தொகுப்பு வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

1990-91 ஆம் ஆண்டு முதல் அரசு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை பேரூராட்சி பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி உள்ளது. சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 23,283 பயனீட்டாளர்கள் பயன் பெற்றனர்:

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதியில் அமைந்துள்ள பேரூராட்சிகளுக்குக் கீழ்க்கண்ட வேலைகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது:

| | | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கும் திட்டம் | 6.00 |
| 2. | மழைநீர் தடுப்புச் சுவர் அமைத்தல் | 4.00 |
| | | 10.00 |



1991 செப்டம்பர் 17]

பொது :

தமிழ்நாடு அரசு பேரூராட்சிகளின் வளர்ச்சிக்காக அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. பல பேரூராட்சிகளில் போதுமான நிதிவசதி இல்லாமையால் ஆக்கப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. எனவே, அடிப்படை வசதிகளின்றி பேரூராட்சிகள் பின்தங்கிய நிலையில் உள்ளன. பேரூராட்சிகளின் வளர்ச்சியில் விரைவான முன்னேற்றத்தை எய்த அரசு மேற்கொள்ளும் முனைப்பான நடவடிக்கைகள் :

—ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட செயலாக்கம்.

—தொகுப்பு வீடுகள் கட்ட அனுமதித்தல்.

— தூசி படியாத சாலைகள் அமைத்தல்.

—பிரதான சாலைகளுக்கு வடிகால்கள் அமைத்தல்.

—ஊரக துப்புரவு திட்டத்திற்கு அதிக முக்கியத்துவமளித்து தனியார் கழிப்பிடங்களும், கட்டணக் கழிப்பிடங்களும் கட்டுதல்.

—பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், அங்காடிகள் கட்டுதல் போன்ற பணிகளைப் படிப்படியாக நிறைவேற்றுதல்.

மேற்கண்ட வளர்ச்சிப் பணிகள் அனைத்துப் பேரூராட்சிகளிலும் (ஊரக மற்றும் நகரப் பேரூராட்சிகள்) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் வாயிலாகவும் மாநில அரசின் சிறப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் வாயிலாகவும் இவை செயல்படுத்தப்படும்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் வரும் ஐந்தாண்டுகளில் பேரூராட்சிகளில் திட்ட ஒதுக்கீடு தவிர கீழ்க்கண்ட வேலைகள் கட்டம் கட்டமாக நிறைவேற்ற உத்தேசிக்கப் பட்டுள்ளது.

| வரிசை எண். | அபிவிருத்தி வேலைகள். | எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு. | | 1991–92 ஆம் ஆண்டிற்கு. | |
|---|---|---|---|---|---|
| | | நிதி தேவை. | திட்ட இலக்கு. | நிதி தேவை. | திட்ட இலக்கு. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | திட்ட இலக்கு (ரூபாய் லட்சத்தில்). | | திட்ட இலக்கு (ரூ. இலட் சத்தில்.) | |
| 1 | சாலைகள் மேம்பாடு ... | 4,500 | 1,500 கி.மீ. | 900 | 300 கி.மீ. |
| 2 | வடிகால் வசதி .. | 2,500 | 1,250 கி.மீ. | 500 | 250 கி.மீ. |
| 3 | ஆதி திராவிடர் குடியிருப்பு களுக்கு அடிப்படை வசதி அளித்தல். | 500 | 100 | 100 | 20 |
| 4 | சிறிய பேருந்து நிலையம் அமைத்தல். | 500 | 50 | 100 | 10 |
| 5 | சிறிய குடிநீர் திட்டங்கள் | 750 | 250 | 150 | 50 |
| 6 | குறைந்த செலவிலான கழிப்பிடம் அமைக்கும் திட்டம். | 1,648.60 | 50,000 | 270 | 10,000 |



1991 செப்டம்பர் 17]

1991–92 ஆம் ஆண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத் தின்கீழ் ரூ. 2020 இலட்சங்கள் பேரூராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள அனுமதி கோரப்படு கிறது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அனைத்து அடிப்படை வசதிகளும் எல்லா பேரூராட்சிகளிலும் முழுமை யடைய தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதர திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு வருமாறு:

1990–91 மற்றும் 1991–92 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு.

| வரிசை எண். | திட்டம். | ஒதுக்கீடு. | |
|---|---|---|---|
| | | 1990–91 | 1991–92 |
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 | பேரூராட்சி சாலைகள் மேம்பாடு. | 40.00 | 40.00 |
| 2 | வடிகால் அமைத்தல் .. | 10.00 | 10.00 |
| 3 | குறைந்த செலவிலான கழிப்பிடம் அமைக்கும் திட்டம். | 15.00 | — |
| 4 | கட்டணக் கழிப்பிடம் கட்டுதல் | 15.00 | .. |
| 5 | பெரிய நகரங்களுக்கு அருகில் அமைந்துள்ள சிறிய நகரங் களின் வளர்ச்சித் திட்டம். | 30.00 | ... |
| 6 | உலர் கழிப்பிடங்களை துப்புரவு கழிப்பிடங்களாக மாற்றும் திட்டம். | 48.78 | 50.00 |
| | (மனித உரிமை பாதுகாப்புச் சட்டம்) | | |
| 7 | குறைந்த பட்ச தேவைத் திட்டம். (ஊரக குடிநீர் திட்டம்). | 36.55 | 38.[illegible] |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 8 தொட்டி மற்றும் இழுவையுடன் கூடிய விசை வண்டிகள் வினியோகம். | 10.00 | -- |
| 9 சிறிய அளவிலான குடிநீர் திட்டம். | — | 80.00 |
| | 205.33 | 166.55 |

திட்டமல்லாதது :

| | | |
|---|---|---|
| 1 தூசி படியாத சாலை அமைக்கும் திட்டம். | 20.00 | 50.00 |
| 2 வீட்டுவரி இணை மானியம் | 78.00 | 30.00 |
| 3 வேளாண்மை நிலங்களின்பேரில் விதிக்கப்படும் வரியின் பேரில் இணை மானியம். | 1.00 | 0.80 |
| | 99.00 | 80.80 |
| மொத்தம் (திட்டம்+திட்டமல்லாதது) | 304.33 | 247.35 |



## கொள்கை விளக்கக் குறிப்பு.

### நகராட்சி நிர்வாகம்.

தமிழ்நாட்டில் 99 நகராட்சிகளும் 7 நகராட்சி நகரியங்களும் உள்ளன. அந்நகராட்சிகளும் நகரியங்களும் ஆண்டு வருமானத்திற்கேற்ப ஐந்து நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் ஆகியவற்றை வகைப்படுத்துவதற்கான குறியீடுகள் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் மற்றும் நகராட்சியின் நிலை. | வரையறை (ஆண்டு வருமானம் ரூபாய் லட்சத்தில்). | நகராட்சிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சிறப்பு நிலை .. .. | 200 | 14 |
| 2. தேர்வு நிலை .. .. | 100 | 13 |
| 3. முதல் நிலை ... .. | 40 | 31 |
| 4. இரண்டாம் நிலை ... | 20 | 28 |
| 5. மூன்றாம் நிலை .. | 10 | 13 |
| மொத்தம் .. | | 99 |

| வரிசை எண் மற்றும் நகரியத்தின் நிலை. | வரையறை (ஆண்டு வருமானம் ரூபாய் லட்சத்தில்). | நகரியங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சிறப்பு நிலை .. | 50 | 1 |
| 2. தேர்வு நிலை ... .. | 10 (அதற்குமேலும்) | 1 |
| 3. முதல் நிலை ... .. | 5 (10-க்கு மிகாமல்) | 3 |
| 4. இரண்டாம் நிலை .. | 5 (இலட்சத்திற்கு குறைவாக) | 2 |
| மொத்தம் | .. | 7 |

திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் நகராட்சிகளை மாநகராட்சிகளாக மாற்றுவது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும் ஹோசூர் பேரூராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருத்துறைப்பூண்டி மற்றும் சில பேரூராட்சிகளும் நகராட்சிகளாக மாற்றப்படுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

நகராட்சித் திட்டங்கள்.

நகராட்சிகளில் அதிகரித்து வரும் நிர்வாக செலவினங்கள் மற்றும் நகராட்சிகள் பெற்றுள்ள கடன்களுக்குரிய ஆண்டு தவணைத் தொகையை செலுத்துதல் ஆகிய காரணங்களால், மக்களுக்கு அடிப்படை வசதிகளை போதுமான அளவுக்கு செய்து தர இயலாதவாறு நகராட்சிகளின் நிதி நிலைமை உள்ளது. எனவே அரசு மேற்கண்ட அடிப்படை வசதிகளை மக்களுக்கு நல்கும் பொருட்டு நகராட்சிகளுக்கு மான்யங்களையும் கடன்களையும் அளித்து வருகிறது.

1991–92-ம் ஆண்டு பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு விபரம் பின்வருமாறு :

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | நகராட்சிப் பணியாளர்களுக்கு வீடு கட்டும் முன் பணம். | 50.00 |
| 2. | விரைவுப்படுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 60.00 |
| 3. | ஒருங்கிணைந்த பிற்பட்ட பகுதி வளர்ச்சி திட்டம். | 15.00 |
| 4. | நகராட்சிகளில் பொதுகழிப்பிடங்களை சீரமைத்தல் | 17.00 |
| 5. | சாலைகள் : | |
| | பாதி கடன் மற்றும் பாதி மான்யம் .. | 55.00 |
| | முழுக்கடன் ... | 30.00 |

1991—92-ம் ஆண்டுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திட்டம் :

ஒருங்கிணைந்த மற்றும் குறைந்த செலவிலான கழிப்பிடம் கட்டுதல் மற்றும் துப்புரவு பணியாளர் புனர் வாழ்வுத் திட்டம், மத்திய அரசு மற்றும் ஹட்கோ நிதியுதவியுடன், 28 நகராட்சிகளில் அமுல்படுத்தப்படுகிறது. சமுதாய கழிப்பிடங்கள் கட்டு



தல் நீர் ஊற்றும் கழிப்பிடங்களாக மாற்றும் திட்டமதிப்பீட்டில் மத்திய அரசு 50 சதவீதம் மான்யம் வழங்குகிறது. மீதமுள்ள 50 சதவிகிதம் தொகையை ஹட்கோ நிறுவனம் ஏற்கும்.

1991–92 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் நிதி நிலைமை நலிவுற்ற 7 நகராட்சிகளுக்கு ரூ. 25.00 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட உள்ளது. 106 சமுதாய கழிப்பிடங்களின் மேம்பாட்டுப்பணி இத்திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்படும்.

நேரு வேலை வாய்ப்பு திட்டம்.

நேரு வேலை வாய்ப்பு திட்டம் என்பது நகர்ப்புற வறுமையை ஒழிக்கும் திட்டத்துடன் நகர்ப்புறங்களில் வசிக்கும் நலிவுற்ற பிரிவினரில் வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

இவ்வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன :

1. சுய தொழில் அமைத்தல்—பயிற்சி மற்றும் அடிப்படை ஆதார வசதி செய்து கொடுத்தல்.

2. நலிவுற்ற மக்களைக் கூலி கொடுத்து வேலை கொள்வதன் மூலம் நகராட்சி பணிகளைச் செய்தல்.

3. நலிவுற்ற மக்களின் குடியிருப்புகளை மேம்படுத்துவதற்கு நிதியுதவி அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பை உருவாக்குதல்—பயிற்சி மற்றும் அடிப்படை ஆதார வசதிகள் செய்து கொடுத்தல்.

நகர்ப்புறத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே வசிக்கும் நபர்கள் மட்டும் மேற்படி திட்டத்தில் பயனாளிகளாக் கருதப்படுவார்கள். சிறு தொழில் அமைத்தல் மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் 30 சதவிகிதம் மகளிர் பயன் பெறுவர். நகரின் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

1. சுய தொழில் துவங்குதல் :

இத்திட்டம் அனைத்து நகராட்சிகள் நகராட்சி, நகரியங்களிலும், சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய மாநகராட்சிகளிலும் செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு வழங்கப்படும் மான்யத்தில் 50 சதவிகிதம் மத்திய அரசாலும் மீதமுள்ள 50 சதவிகிதம் மாநில உள்ளாட்சி நிறுவனங்

களாலும், வழங்கப்படுகின்றன. சுயதொழில் செய்யத் தேவைப்படும் நிதியில் நபர் ஒன்றுக்கு 25 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். அதிகபட்ச மான்யமாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்களுக்கும், பெண்களுக்கும் ரூ. 5,000-ம் மற்றவர்கட்கு ரூ. 4,000 வழங்கப்படும், 75 சதவிகிதம் தொகை வங்கிகள் மூலமாக கடனாக வழங்கப்படும்.

1991–92 ஆம் ஆண்டுக்கு ரூ. 211.27 இலட்சங்களை மத்திய அரசு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழக அரசின் பங்காக ரூ. 169.016 இலட்சங்கள் இருக்கும், நகராட்சி நிறுவனங்களின் பங்கு ரூ. 42.254 இலட்சங்கங்கள் ஆகும். ஆக மொத்தம் ரூ. 422.54 இலட்சங்கள் ஆகும்.

2. பயிற்சி மற்றும் ஆதார வசதிகள் :

நகர்ப்புற வேலையில்லாத நலிவுற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் சுய தொழில் செய்வதற்கோ அல்லதுநல்ல ஊதியத்துடன்கூடிய வேலைவாய்ப்பை பெறவோ வாய்ப்பாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற்படி பயிற்சிக்காக நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ. 1,200 செலவிடப்படுகிறது.

இதற்கான தொகை முழுவதும் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. 1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 49.45 இலட்சங்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. 4,120 நகர்புற நலிவுற்றோர் பயனடைவர், அதில் 1,236 பெண்களாவர்.

3. பொது சொத்துக்கள் உருவாக்குதல் மூலம் வேலைவாய்ப்பு திட்டம் :

இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி ஒரு லட்சத்துக்கு குறைவாக மக்கள் தொகை உள்ள நகர்களில் செயலிலுள்ளது.

20,000 மக்களுக்கு குறைவாக உள்ள நகரங்களில் பொருள்கள் மற்றும் கூலி விகிதம் 50 : 50 மற்றும் 20,000-லிருந்து 1 லட்சத்திற்குள் மக்கள் தொகையுள்ள நகரங்களில் பொருள்கள் மற்றும் கூலி விகிதம் 60 : 40 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செலவினை மத்திய அரசு மற்றும் மாநில அரசு/உள்ளாட்சிகள் 80 : 20 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டுள்ளது.

1991–92 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசின் மானியமாக ரூ. 295.50 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் மானியமாக ரூ. 55.406 இலட்சங்கள் இருக்கும்.



நகராட்சிகளின் பங்கு ரூ. 18.469 இலட்சங்கள் ஆகும். ஆக மொத்தம் ரூ. 369.375 இலட்சங்கள் ஆகும். 5,91,000 மனித வேலை நாட்கள் உருவாக்கப்படும்.

4. குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் :

வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள நலிவுற்ற ஏழை மக்கள் சிறிய குடியிருப்பு கட்டுவதற்கும், ஏற்கனவே உள்ள குடியிருப்பில் கூரையை தளமாக்கவும் தரை போடவும், கூடுதல் அறை கட்டவும் அல்லது தேவையான மேம்பாட்டை செய்யவும் ரூ. 4,000 நிதியுதவி வழங்கப்படுகிறது. இதில் ரூ. 3,000 ஹட்கோ 6¼ சதவிகிதம் குறைந்த வட்டியில் கடனாகவும், ரூ. 800 மத்திய அரசு மானியமாகவும், ரூ. 200 மாநில அரசு மானியமாகவும் வழங்கப்படும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஒரு லட்சத்திற்கு மேலும் இருபது இலட்சத்திற்குக் குறைவாகவும் மக்கள் தொகையுள்ள நகரங்களில் நடைமுறையிலுள்ளது. நகர்ப்புற ஏழை மக்களின் குடியிருப்பினை மேம்படுத்துவதுடன் அங்குள்ள ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பினையும் உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எனவே மேற்படி திட்டம் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒரு லட்சத்துக்கும் குறைவாக தொகையுள்ள நகரங்களுக்கும் நீட்டிப்பதன் மூலம் அதிக அளவு வேலைவாய்ப்பினை வழங்க இயலும்.

1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 215.35 இலட்சங்களை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. தமிழக அரசு ரூ. 53.84 இலட்சங்களை வழங்கும். இத்திட்டத்தின் கீழ் 17,23,000 மனித வேலை நாட்கள் உருவாக்கப்படும்.

நலிவுற்ற பிரிவினருக்கு கட்டுமானத் தொழிலிலும் பயிற்சி வழங்கப்படுகிறது. நபர் ஒன்றுக்கு அதிகபட்ச தொகையாக ரூ. 1,500 வரை செலவிடப்படுகிறது.

1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 51.75 இலட்சங்களை மத்திய அரசு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது. 3,450 நலிவுற்ற ஏழை மக்கள் பயனடைவர். அதில் பெண்களின் எண்ணிக்கை 1,035 ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுக் கழகம்.

தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி, தொழில் நுட்ப மற்றும் இதர உதவிகள் அளிப்பதை நோக்க

மாகக் கொண்ட இக்கழகம் 1990 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 21 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 200 லட்சம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 1,99,40,000 ஆகும்.

ஒருங்கிணைக்கப்பட்ட குறைந்த செலவிலான கழிப்பிட வசதி மற்றும் துப்புரவு பணியாளர்களை விடுவிக்கும் திட்டத்திற்கு கடனுதவி பெறுவதற்காக ஹட்கோ நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள இக்கழகத்தை ''இணைக்க முகவர்'' ஆக அரசு நியமித்துள்ளது.

நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக நகராட்சிகள், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி இக்கழகத்தின் வழியாகத்தான் வழங்கப்பட வேண்டும் என அரசு உத்திரவிட்டுள்ளது. நகராட்சி நகர்ப்புற அபிவிருத்தி நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான நிதியும் இக்கழகத்தின் வழியாகத்தான் வழங்கப்படுகிறது.

இக்கழகத்தினால் இதுவரை ஒப்பளிக்கப்பட்ட மொத்த கடன் மற்றும் மான்யத் தொகையான ரூ. 7,172.60 லட்சத்தில், வீட்டு வசதி மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நகர்ப்புற வேலை வாய்ப்பிற்காக ரூ. 2,407 லட்சமும், ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான கழிப்பிட வசதி மற்றும் துப்புரவு பணியாளர்களை விடுவிக்கும் திட்டத்திற்காக ரூ. 4,438.84 லட்சமும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் உள்ள நடைபாதைகளில் வசிப்பவர்களுக்கு இரவு விடுதிகள் கட்டுவதற்கு ரூ. 16.76 லட்சமும், சென்னையில் அல்லிக்குளத்தில் அங்காடி வளாகம் கட்டுவதற்காக ரூ. 3.10 கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான கழிப்பிட வசதி மற்றும் துப்புரவு பணியாளர்களை விடுவிக்கும் திட்டத்தின் கீழ் குடியிருப்பவர்களுக்கு நீர் ஊற்று கழிப்பிட வசதிகளும் பொது கழிப்பறை வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றது. இதற்கான பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

பொதுமக்கள் மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்காக கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் நிதி உதவி செய்ய இக்கழகம் தீர்மானித்துள்ளது. நகர்ப்புற வீட்டு வசதி பிரிவிற்காக பெரிய அளவில் நிதி உதவி செய்திட திட்டமிட்டுள்ளது. தற்பொழுதுள்ள குடியிருப்புகளை மேம்படுத்த, மாற்றியமைக்க மற்றும் சிறிய அளவில் கூடுதல் கட்டிடங்களை கட்டி முடிக்கும் வகையில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.



குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம்.

நகராட்சிகளில் நிதி நிலை பற்றாக்குறையின் காரணமாக பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் செயல்படுத்த இயலவில்லை. இத்திட்டம் அமைப்பதால் ஏற்படும் அதிகப்படியான செலவை நகராட்சி ஏற்க இயலாது. பாதாள சாக்கடைத் திட்டம் இயங்கும் இடங்களில் கீழ்க்கண்ட குறைபாடுகள் காணப்படுகின்றன :

1. நகர் முழுமைக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட முடியவில்லை.

2. இடப்பற்றாக்குறை மற்றும் விலையேற்றத்தின் காரணமாக கழிவு நீர்ப் பண்ணை அமைக்க இயலவில்லை.

3. இத்திட்டம் முழுமையாக முடிவடைந்தாலும், கழிவு நீர்க் குழாய்களில் ஏற்படும் குறைபாடுகளை நீண்ட கால அளவில் நிவர்த்தி செய்ய இயலாமல் போகிறது.

நகரங்களில் பலதரப்பட்ட வருவாய்ப் பிரிவினருக்கு உதவும் வகையில் குறிப்பாக வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் மற்றும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு உபயோகமாக இருக்கும் வகையில் ''குறைந்த செலவில் கழிப்பிடம்'' என்னும் புதிய திட்டம் நகரங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இரு நோக்கங்களாவது :

(1) மனித மலத்தை கையில் எடுத்துத் தலையில் சுமந்து செல்லும் துப்புரவு பணியாளர்களை இப்பணியினின்று விடுவிப்பது.

(2) நகர்ப் பகுதியை துப்புரவு கேடுகளிலிருந்து நீக்கி துப்புரவான சுற்றுப்புற சூழ்நிலையை ஏற்படுத்துவது.

சென்ற வருடங்களில் குறைந்த செலவிலான கழிவறை கட்டும் திட்டம் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஆறாவது மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், உலக வங்கியின் உதவியுடனும் மத்திய அரசின் மானிய உதவி மற்றும் மாநில அரசின் கடனுதவியுடனும் செயல்பட்டு வந்தது.

1991–92 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த திட்டம் 37 நகராட்சிகளில், மத்திய அரசின் மானியம் மற்றும் ஹட்கோ நிறுவனத்தின் கடனுதவியுடனும் நகர் முழுமைக்கும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் 1,49,413 தனி வீட்டு கழிப்பிடங்கள் கட்டப்படவுள்ளது. சில உலர் கழிப்பிடங்களும்

[1991 செப்டம்பர் 17

கொட்டு நீர் ஊற்றும் கழிப்பிடங்களாக மாற்றப்படவுள்ளது. இதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 5,492.00 லட்ச மாகும். இதில் ஹட்கோ நிறுவனத்தின் கடனாக 3,650.00 லட்சமும் மத்திய அரசின் மானியமாக ரூபாய் 1,225.00 லட்சமும் அடங்கும். இத்திட்டம் முடிவடைந்த வுடன் 1,776 துப்புரவு தொழிலாளர்கள் மலம் அகற்றும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு அந்தந்த நகராட்சியிலேயே மாற்றுப் பணியில் அமர்த்தப்படுவர்.

இதுநாள்வரை இத்திட்டம் 5 லட்சத்திற்கு குறைவான மக்கட்தொகை உள்ள நகரங்களில் செயல்பட்டு வந்தது. தற்பொழுது மத்திய அரசு ஐந்து இலட்சத்திற்கும் மேல் மக் கட் தொகையுள்ள பெரிய நகரங்களுக்கும் விஸ்தரிக்க முடி வெடுத்துள்ளது. இந்த முடிவின்படி மேலும் 40 நகராட்சி களில் செயல்படுத்த பிரேரணைகள் அனுப்ப கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையர்களால் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. 1991–92-ல் இத்திட்டம் அமு லாக்கப்படும்.

1994–95 ஆம் ஆண்டிற்குள் நகராட்சிகளில் உலர் கழிப் பிடங்கள் அறவே அகற்றப்படும். மலமெடுக்கும் துப்புரவு பணியாளர்கள் விடுவிக்கப்பட்டு அவர்கள் வேலை செய்யும் நகராட்சியிலேயே மாற்றுப் பணியில் அமர்த்தப்படுவர்.

நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்.

நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1987–88 ஆம் ஆண்டு துவக் கப்பட்டு, ரூ. 167.2 கோடிக்கு மேல் நகராட்சிகளின் பல் வேறு திட்டங்களுக்கு 5-லிருந்து ஆறு ஆண்டுக்கு செலவிடப் படும். தொடக்கத்தில் இத்திட்டத்திற்கு மாநில அரசு ரூ. 10.00 கோடியும் மற்றும் உலக வங்கி உதவியுடன் ரூ. 6.00 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட் டத்தின் கீழ் மூன்று மாநகராட்சிகளிலும் மற்றும் 26 நக ராட்சிகளிலும் ரூ. 46.18 கோடிக்கு பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.

1990–91 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஐந்து நகராட்சி களில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 7.43 கோடிக்கு பல்வேறு திட்டப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட் டுள்ளது.



1991 செப்டம்பர் 17]

1. கும்பகோணம்.
2. தர்மபுரி.
3. உதகமண்டலம்.
4. சிவகங்கை.
5. தஞ்சாவூர்.

1991–92 ஆம் ஆண்டில் கரூர் நகராட்சியில் இத்திட்டத் தின் கீழ் ரூ. 1.99 கோடிக்கான திட்டங்களுக்கு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

மேலும் திருவண்ணாமலை, நாமக்கல், இராமநாதபுரம், மற்றும் புதுக்கோட்டை நகராட்சிகளிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் திட்ட மேலாண்மைக் குழுவினர்களால் ஒப்பு தல் அளிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்படும்.

மேலும் 15 நகராட்சிகளுக்கான நிதி நிலைமை மற்றும் முதல் நிலை குறித்து ஆய்வு செய்ய கலந்தாய்வாளர்கள் நிய மனம் செய்யப்பட்டுள்ளனர்.

1991–92 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசு ரூ. 15.00 கோடி நகர மேம்பாட்டுத் திட்டத் திற்கு ஒதுக்கியுள்ளது.

32 நகராட்சிகள் மற்றும் 2 மாநகராட்சிகளில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) இத்திட்டங்கள் ஏற்கனவே துவங் கப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை திட்டங்கள் மாற்றப்பட்டு உள்ளன. அரசு மாற்று நிர்வாக அனுமதி வழங்கும்.

இத்திட்டத்தின்கீழ் 31—3—1991 வரை நகராட்சி மற் றும் மாநகராட்சிகளுக்கு அரசு ரூ. 17.48 கோடி வழங்கி யுள்ளது.

விற்பனை வரி மீது விதிக்கப்படும் மேல் வரியினை நகராட்சி களுக்கு ஒதுக்கீடு செய்தல்.

நகராட்சி பகுதிகளில் 1990-91 நிதி ஆண்டில் கூடுதலாக விதிக்கப்பட்ட 2 விழுக்காடு விற்பனை வரி மீதான மேல் வரி வருவாயில் 20 விழுக்காடு நகராட்சிகளுக்கு நிதியுதவியாக வழங்க அரசால் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அந்நிதியுதவி மிகவும்

நலிந்த நிலையில், உண்மையாகவே நிதி தேவைப்படும் நகராட்சிகளுக்கு அதிக ஒதுக்கீடு கிடைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் கீழ்க்கண்ட அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1. மக்கள் தொகை அடிப்படையில் 50 சதவிகிதம்.
2. வரி வசூல் அடிப்படையில் 25 சதவிகிதம்.
3. வருவாய் பற்றாக்குறை அடிப்படையில் 25 சதவிகிதம் நகராட்சிகள் ஏற்கும்.

மேற்படி வரன்முறைகளுக்கு உட்பட்டு 1990-91 நிதியாண்டில் ரூ. 10.00 கோடி ஒதுக்கீடு செய்து "கார்பஸ் நிதி" (ccrpus fund) நிறுவப்பட்டுள்ளது. அதற்குரிய வட்டித் தொகையை ஆண்டுதோறும் தலநிதி கணக்காய்வாளருக்கு நகராட்சி ஊழியர்கள் மற்றும் மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சி ஊழியர்களுக்கான ஓய்வூதிய நிதிக்கான செலவுகளை சரிக்கட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

நகராட்சிகளில் குப்பைகளை அகற்ற "வெற்றிட துப்புரவுக் கருவியை" பயன்படுத்துதல்.

தமிழ்நாட்டில், பெரிய நகரங்களில் குப்பைகளை அகற்றும் முறையில் இதுவரை 'வெற்றிட துப்புரவு கருவிகள்' பயன்படுத்தப்படுவது முயற்சிக்கப்படவில்லை. லாரிகள், டிராக்டர்கள், டிப்பர்கள், பவர் டில்லர்கள் மற்றும் மாடுகள் இழுக்கும் வண்டிகள் ஆகியவையே பயன்படுத்தப்படுகின்றன. குப்பைகளைக் கூட்டி வண்டிகளில் ஏற்றும் பணி ஆட்கள் மூலம் செய்யப்படுகிறது. இந்த முறையில் குப்பைகளை சாலைகளில் இருந்து அகற்றி மக்குரக் கிடங்குகட்கு கொண்டு சேர்ப்பதில் பெருமளவு தாமதம் ஏற்படுகிறது. எனவே குப்பைகளை அகற்றி துப்புரவுப் பணியைச் செம்மையாகச் செய்ய ஒரு உத்தியைக் கையாள்வது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாட்டில் சிலநகராட்சிகளிலேனும் துப்புரவுப் பணியில் தற்போது வழக்கத்திலுள்ள குப்பை அகற்றும் முறையைத் தவிர்த்து "வெற்றிட துப்புரவு கருவியை" பயன்படுத்துவதன் மூலம், குப்பைகளை சீரிய முறையில் அகற்றும் திட்டத்தை பரிசோதனை முறையில் செயல்படுத்தலாம்.

வெற்றிட துப்புரவுக் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஆட்களைக் கொண்டு குப்பைகளை அகற்றுவது தவிர்க்கப்படுவதோடு மட்டுமல்லாமல் குப்பைகளை அகற்றும் பணியை திறம்படவும், விரைவாகவும் செய்யலாம்.



பத்தாண்டுகால சாலை அபிவிருத்தி திட்டம்.

நகராட்சிகளில் 6403.823கி.மீ. சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. அனைத்து நகராட்சிகள் மற்றும் நகராட்சி நகரியங்களிலுள்ள மண் சாலைகளையும், கற்சாலைகளையும் படிப்படியாக பத்தாண்டு காலத்திற்குள் தார் சாலைகளாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1990-91 முதல் ஒவ்வொரு ஆண்டும், ஒரு குறிப்பிட்ட அளவு மண்சாலை மற்றும் கற்சாலைகள், தார் சாலைகளாக மாற்றப்படும். அனைத்து சாலைகளும் தார் சாலைகளாக மாற்றப்படும் வரை இத்திட்டம் தொடரும். இத்திட்டத்திற்கான நிதி நகராட்சி வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும்.

நகராட்சி நிதியைக் கொண்டு 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 384.975 இலட்ச மதிப்பீட்டில் 250.167 கி.மீ. சாலைகள் தார் சாலைகளாக மாற்றப்பட்டன.

1991-92 ஆம் ஆண்டில் நகராட்சிகளில் 248.056 கி.மீ. சாலைகளை நகராட்சி நிதியைக் கொண்டு தார் சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சென்னை மாநகராட்சி.

நமது நாட்டிலுள்ள நான்கு பெருநகரங்களுள் சென்னை மாநகரமும் ஒன்றாகும். 300 ஆண்டுகளுக்கு முன்பாக சென்னை மாநகராட்சி ஏற்படுத்தப்பட்டது. நகரின் பரப்பளவு தற்போது 174 ச.கி. மீட்டராகும். நகரில் சுமார் 50 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். நகரத்திற்கு வந்து போகும் மக்கள் சுமார் 10 லட்சம் ஆகும்.

**1. நிர்வாகம் :**

மாநகராட்சி மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களது பதவிக் காலம் 1973 ஆம் ஆண்டில் முடிவுற்றது. அதன் பின் மன்றத்தின் பணிகளை சிறப்பு அலுவலர் கவனித்து வருகின்றார். சென்னை மாநகராட்சியின் தலைமை நிர்வாக அலுவலர் ஆணையாளராவார். 10 வட்ட அலுவலர்கள் ஆணையாளருக்கு உதவியாக பராமரிப்புப் பணிகளை கவனித்து வருகின்றனர்.

**2. வருவாய் :**

சொத்து வரி, தொழில் வரி, சொத்து மாற்றங்களின் மீது விதிக்கப்படும் தீர்வை, கேளிக்கை வரி, விற்பனை வரி மீதான மேல் வரி ஆகியவை மாநகராட்சிக்கு வருவாய் தரும் முக்கிய இனங்களாகும். அவற்றில் பிந்தைய மூன்றும் அரசினரால் வசூலிக்கப்பட்டு மாநகராட்சிக்கு தரப்படுவனவாகும்.

மாநகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் நோக்குடன் 5 சதவிகிதம் விற்பனை வரி மீதான மேல்வரியை 1981-82 ஆம் ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியது. 1987-88 ஆம் ஆண்டு வரையில் இவ்வரியின் மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை மாநகராட்சிக்கு அரசு அளித்து வந்தது. 1988-90 ஆம் ஆண்டில், இவ்வரியின் மூலம் கிடைக்கும் வருவாயில் 65 சதவிகிதம் தொகையை மாநகராட்சிக்கென அரசு ஒதுக்கியது. 1990-91 ஆம் ஆண்டில் விற்பனை மேல் வரி 10 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக உயர்த்தப்பட்டதுடன், இவ்வருவாயில் 50 சதவிகிதம் மாநகராட்சியின் பங்காக நிர்ணயிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இத்தலைப்பின் கீழ் செ ன மாநகராட்சிக்கு ரூ. 20.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**3. சாலைகள் :**

சென்னை மாநகராட்சியினால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் சுமார் 1960 கி.மீ. ஆகும். இவற்றில் பேருந்து வழித்தட சாலைகள் 260 கி.மீ. ஆகும். இச்சாலைகள் 5



ஆண்டுகளுக்கொருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும். 1991-92 ஆம் ஆண்டில் உட்புறச் சாலைகள் பராமரிப்பதற்காக ரூ. 9.38 கோடியும் பேருந்து வழித்தடச் சாலைகளை புதுப்பிப்பதற்காக ரூ. 5.62 கோடியும் ஆக மொத்தம் ரூ. 15.00 கோடி செலவிடப்படும். இத்திட்டங்களை நிறைவேற்றும்பொழுது, விஸ்தரிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள சாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**4. தெரு விளக்குகள் :**

சென்னை மாநகராட்சியில் தற்போது 46,477 குழல் விளக்குகள், 2113 மெர்குரி அல்லது பாதரச ஆவி விளக்குகள், 7377 சோடியம் ஆவி விளக்குகள் உள்ளன. நடப்பு ஆண்டில் 120 கி.மீ. மின் கம்பிகளை புதுப்பிக்கவும், 1000 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 6995 குழல் விளக்குகள் பொருத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 300.00 லட்சம் செலவிடப்படும்.

**4(அ) எழில்மிகு சென்னை 2000 திட்டம் :**

நகராண்மைப் பணித் திட்டத்தின்கீழ் மழை நீர் வடிகால்களைப் பெருமளவில் மேம்படுத்துதல், தெரு விளக்கு வசதிகள் செய்து கொடுத்தல், கழிவுப் பொருட்களை அகற்றுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இது "எழில்மிகு சென்னை-2000" திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

**5. மழைநீர் வடிகால் :**

தற்போது மாநகராட்சி வசம் உள்ள மழைநீர் வடிகால்களின் நீளம் 550 கி.மீ. ஆகும். பழைய மழை நீர் வடிகால்களை புதுப்பித்து கட்டவும் புதிய வடிகால்கள் அமைக்கவும் 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 158.00 லட்சம் செலவு செய்யப்படும்.

**6. துப்புரவு :**

நகரின் தூய்மைக்கு துப்புரவு பணி இன்றியமையாததாகும். நகரில் தினமும் சுமார் 3000 டன் குப்பைகள் சேருகின்றன. இவற்றை அகற்றுவது ஒரு பெரும் பணியாகும். 267 லாரிகள், 7 ஹைட்ரோகோன் டிப்பர்கள், 3 காம்பாக்டர்கள், 56 கார் மூவர்கள், 25 டில்லர்கள் ஆகியவற்றை பயன்படுத்தி தினமும் இக்குப்பைகள் அகற்றப்படுகின்றன. துப்புரவுப் பணியை

[1991 செப்டம்பர் 17

மேலும் திறம்பட செய்வதற்காக நடப்பு ஆண்டில் ரூ. 3.10 கோடி செலவு செய்யப்படும். தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் இதற்கான நிதி உதவி பெறப்படும்.

7. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் :

திரு.வி.க. சாலை, புல்லா அவென்யு, ஷெனாய்நகர் ஆகிய இடங்களில் கடைகள், அலுவலக கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், குடிசைப் பகுதிகளில் கழிப்பிடங்கள் கட்டுவதற்காகவும் நகர்ப்புற அபிவிருத்தி திட்ட நிதியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது. இவை தவிர, பின்வரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் நிதி உதவி கோரப்பட்டுள்ளது :—



1991 செப்டம்பர் 17]

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | எண்ணிக்கை. | தேவைப்படும் தொகை. | அனுமதிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் லட்சங்களில்) | |
| 1. | துப்புரவு பணி : | | | |
| | (அ) லாரிகள் | 105<br>102 | 1,111.00 | 310.00 |
| | (ஆ) மாற்று நிலையங்கள் | 5 | 150.00 | — |
| 2. | மின்சார சுடுகாடு | 1 | 50.00 | — |
| 3. | பாலங்களை அகலப்படுத்துதல், புதுப்பித்துக் கட்டுதல் | 2 | 180.00 | 40.00 |
| 4. | தெரு விளக்குகள் | 8.000— | | |
| | தரையின் மேல் செல்லும் மின் கம்பிகளை அகற்றி தரைக்கடியில் புதிய மின் கம்பிகள் அமைத்தல் மற்றும் மின் நிலையங்கள் கட்டுதல் | 16 | 537.00 | 200.00 |
| 5. | பிறப்பு ,இறப்பு பற்றியஆவணங்களை மைக்ரோபிலிம் செய்தல் | — | 22.00 | — |
| 6. | கெங்கு (ரெட்டி) பாலம் | .. | .. | 18.00 |

| 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|
| (1) பின்வரும் இடங்களில் கடைகள் கட்ட— | | | | |
| (அ) புல்லா அவென்யு. ஷெனாய் நகர் (ரூ. 81 60 இலட்சம்) | | | | 20.00 |
| (ஆ) என்.எஸ்.கே. சாலை, ஆற்காடு சாலை (ரூ. 46.00 இலட்சம்). | | | | |
| (இ) சி.பி. இராமசாமி சாலை (ரூ. 76.80 இலட்சம்) | | | | |
| (2) திரு.வி.க. சாலையில் அலுவலக கட்டிடங்கள் கட்ட | | | | 40.00 |
| | மொத்தம் | .. | 2,050.00 | 628.00 |



8. பாலங்கள் :

நடப்பு ஆண்டில் ரூ. 2.59 கோடி செலவில் பாலங்களை புதுப்பித்து கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. கட்டிடங்கள் :

சென்னை மாநகராட்சியின் கட்டிடங்களை புதுப்பித்து கட்டுவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் நடப்பு ஆண்டில் ரூ. 4.80 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மைலாப்பூர் சுடுகாட்டிலுள்ள மின் சாதனத்தை மேம்படுத்துவதுடன், மேலும் இரு மின் சாதனங்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மக்கட் தொகை கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் ரூ. 95.00 இலட்சம் செலவில் மருத்துவ மனைகள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டது. இம் மருத்துவ மனைகளில் பயன்படுத்துவதற்காக ரூ. 55.00 லட்சம் செலவில் தேவையான கருவிகள் வாங்கப்படும்.

10. அல்லிக்குளம் பகுதியில் அங்காடிகள் கட்டுதல் :

மூர் அங்காடியில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளது புனர் வாழ்விற்காக அல்லிக்குளம் பகுதியில் ரூ.6.25 கோடி செலவில் புதிய அங்காடி ஒன்று கட்டப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்காக இதுவரையில் ரூ. 3.15 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதற்கு மேலும் ரூ. 3.10 கோடி செலவாகும். இத்தொகையை கடனாக வழங்குமாறு ஹட்கோ நிறுவனத்திடம் தமிழ்நாடு நகர்ப்புற நிதிவளர்ச்சி கழகம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இக்கடன் தொகை பெறப்பட்டதும் இவ்வங்காடி விரைவில் கட்டி முடிக்கப்படும்.

11. நேரு வேலை வாய்ப்புத் திட்டம்:

நேரு வேலைவாய்ப்புத் திட்ட பணிகளை சென்னை நகரில் சென்னை மாநகராட்சி நடைமுறைப்படுத்தி வருகின்றது. நகர்ப்புற ஏழை மக்களது சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்காக இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ. 10,000-க்கு மேற்படாத குடும்பத்தை சேர்ந்த மக்கள் இத்திட்டத்தின்கீழ் உதவி பெற தகுதி உடையவர்களாவர். 1989-90 ஆம் ஆண்டில் இந்திய அரசு இதற்காக ரூ. 50.00 லட்சமும், 1990-91-ம் ஆண்டில் ரூ. 20.00 லட்சமும் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இது வரையில் 2096 இளைஞர்கள் பலன் பெற்றுள்ளனர். இவ்விரு ஆண்டுகளுக்கும் மாநில அரசு மற்றும் மாநகராட்சியின் பங்கு முறையே ரூ. 36,80 இலட்சமும், ரூ. 9.20 இலட்சமும் ஆகும்.

[1991 செப்டம்பர் 17

12. துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச மழைக் கோட்டு வழங்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த சட்டப் பேரவை கூட்டத் தொடரில், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவசமாக மழைக் கோட்டு வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

இந்த உள்ளாட்சி நிறுவனங்களில் 33,269 துப்புரவுத் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ஒரு மழைக் கோட்டு வீதம் இலவசமாக வழங்க மொத்தம் ரூ. 94,81,665 செலவாகும். (ஒரு மழைக் கோட்டின் விலை ரூ. 285 வீதம்) இதில் 50 விழுக்காடு செலவினை உள்ளாட்சி நிறுவனங்களே ஏற்கும். எஞ்சியுள்ள 50 விழுக்காடு செலவினை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும். தமிழ்நாடு தோல் பொருள் உற்பத்தி நிறுவனம் (TALCO) இவற்றை வழங்க முன் வந்துள்ளது.



1991 செப்டம்பர் 17]

மதுரை மாநகராட்சி.

1971 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி முதல் மதுரை நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மதுரை மாநகராட்சியில் மக்கள் தொகை 8.18 லட்சமாகும். இருப்பினும் தற்போதைய மக்கள் தொகை 10 லட்சங்கள் என மதிப்பீடு செய்யப்படுகிறது. மாநகராட்சியின் பரப்பளவு 51.85 சதுர கிலோ மீட்டர் ஆகும். மாநகரின் அருகிலுள்ள சில கிராம பஞ்சாயத்துக்களை மேலும் மாநகராட்சியுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமீப காலங்களில் கிராமப்புறங்களிலிருந்து மதுரைக்கு குடியேறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1991–92 ஆம் ஆண்டின் மொத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி வரவு ரூ. 5,828 லட்சங்களும் மற்றும் செலவு ரூ. 5,814 லட்சங்களாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1. சாலைகள் :

மதுரை மாநகராட்சி கீழ்க்கண்ட வகை சாலைகளை பராமரித்து வருகிறது :

| சாலை வகைகள். | நீளம். (கி.மீ.) |
|---|---|
| (1) | (2) |
| (1) தார்ச் சாலைகள் .. .. | 292.748 |
| (2) சரளை சாலைகள் .. .. | 88.514 |
| (3) செம்மண் சாலைகள் .. .. | 64.225 |
| (4) கல்தளம் பரவப்பட்ட நடைபாதைகள் .. | 54.715 |
| (5) பாதசாரிகள் செல்ல சாலையின் இரு பக்கமும் உள்ள கல்தள நடைபாதை .. | 43.203 |
| மொத்தம் .. | 545.405 |

மனைப்பிரிவு ஒப்புதல் செய்யப்படாத பகுதியில் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள செம்மண் மற்றும் சரளை சாலைகள் தார்ச்சாலைகளாக மாற்றப்

பட்டு வருகிறது. 1991–92 ஆம் ஆண்டு முடிவிற்குள் அனைத்து சாலைகளும் தார்சாலைகளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனால் பொது மக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்ற முடியும்.

2. மின்சார மயானம் அமைத்தல் :

தத்தனேரி மயானத்தில் மின் எரியூட்டு சாதனம் அமைக்கும் பணிக்கு ஏற்கெனவே அரசு ரூ. 10 லட்சம் கடனாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 25 லட்சங்களாகும். இவ்வேலை பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1991–92-ல் ரூ. 15 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. இரவு தங்கும் விடுதி :

நடைபாதை வாசிகள் இரவில் குறைந்த செலவில் தங்க வசதிக்காக இரவு தங்கும் விடுதி மேல வெளிவீதி மாநகராட்சி இடத்தில் ரூ. 12.50 லட்சம் மதிப்பீட்டில் ஹட்கோ நிதி உதவியுடன் கட்டப்படவுள்ளது. கட்டிடம் கட்ட ரூ. 8.18 லட்சம் கடனாகவும் மீதித் தொகை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யப்படவுள்ளது.

4. கட்டிடங்கள் :

மாநகராட்சி கட்டிடங்கள், மருத்துவமனைகள், பள்ளிக் கட்டிடங்கள் பராமரிப்பிற்காக ரூ. 72.50 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. கல்விப்பிரிவு :

மாநகராட்சி பள்ளி ஊழியர்கள் 1–6–1986 முதல் அரசாணை (நிலை) எண் 702, கல்வி, நாள் 23–5–1986-ன் கீழ் அரசு ஊழியர்களாக மாற்றி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் ஊதியம் போன்ற செலவினங்கள் 1–4–1990 முதல் அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது. ஓய்வு பெற்ற ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் ஓய்வூதிய பயன்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஓய்வுற்ற ஆசிரியர் மற்றும் ஆசிரியல்லாத பணியாளர்களின் யூதரந்திர ஓய்வூதியங்களையும் மாநகராட்சி வழங்கி வருகின்றது.

மாநகராட்சி நிர்வாகத்தில் 54 ஆரம்பப் பள்ளிகளும், 13 நடுநிலைப்பள்ளிகளும், 12 உயர்நிலைப் பள்ளிகளும் மற்றும் 8 மேல் நிலைக்கல்வி பள்ளிகளும் உள்ளன.



6. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் 20,870 மாணவர்களும், 1,823 முதியோர் ஓய்வூதியம் பெறுவோரும் பயன் பெறுகிறார்கள்.

7. துப்புரவுப் பணி :

நாளொன்றுக்கு சராசரியாக 400 முதல் 450 மெ. டன். குப்பையும், 10 மெ. டன் மலமும் சேகரிக்கப்பட்டு மேலூர் சாலையில் உள்ள உரக்கிடங்குக்கு அனுப்பப்படுகிறது. தற்போது மாநகராட்சியில் 2604 துப்புரவு பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

8. குடிநீர் வழங்குதல் :

குடிநீர் வழங்கும் அமைப்பின்கீழ் 799.77 கி.மீ. அளவிற்கு கீழ்க்கண்டவாறு விநியோகம் செய்யப்படுகிறது.

| | கி.மீ. |
|---|---|
| (1) பாதுகாக்கப்பட்ட குடிநீர் குழாய் நீளம் | 448.43 |
| (2) கிணற்றுநீர் வழங்கும் குழாய் நீளம் | 351.34 |
| மொத்தம் .. | 799.77 |

குடிநீர் வழங்கும் குழாய் பொருத்தப்படாத இடங்களுக்கு 15 குடிநீர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

குடிநீர் அபிவிருத்திப் பணிக்காக ரூ. 10.66 லட்சத்தில் கீழ்க்கண்ட வேலைகள் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (1) பைப் லைன் அமைத்தல் (3,000 மீட்டரில்) .. .. | 1.95 |
| (2) குழாய் மேடைகள் அமைக்க (22 எண்ணிக்கை) .. .. | 0.11 |
| (3) பராமரிப்பு .. .. .. | 2.50 |
| (4) ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல் .. | 6.10 |
| மொத்தம் .. | 10,66 |

[1991 செப்டம்பர் 17

9. சாக்கடை அமைத்தல் :

சாக்கடை அமைக்கும் பணிக்காக ரூ. 6.36 லட்சத்தில் கீழ்க்கண்ட வேலைகள் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) பாதாள சாக்கடை, திறவை சாக்கடை பராமரிப்பு பணிக்காக | .. | 1.74 |
| (2) கழிவு நீர்ப்பண்ணை பராமரிப்பு | — | 1.12 |
| (3) திறவை சாக்கடை கட்ட (2'300மீ) | — | 3.50 |
| மொத்தம் | — | 6.36 |

மதுரை மாநகராட்சியில் மொத்தம் 542 பொதுக் கழிப்பறைகள் உள்ளன. இதுவரை தண்ணீர் வசதியுடன் 284 கழிப்பறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மீதி கழிப்பறைகளுக்கு லாரி மூலம் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. அனைத்துக் கழிப்பறைகளுக்கும் ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் நிரந்தர தண்ணீர் வசதி செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி 1991–92 ஆம் ஆண்டுக்குள் நிறைவு பெற்றுவிடும்.

10. தெரு விளக்குகள் :

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பஞ்சாயத்துப்பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் தமிழ்நாடு மின்வாரியத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மின்விளக்குகள் மாநகராட்சியால் கீழ்க்கண்டவாறு பராமரிக்கப்படுகிறது.



1991 செப்டம்பர் 17]

| | | மின்சார வாரியம். | மா நகராட்சி. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1. சோடியம் ஆவி விளக்கு | .. | 357 | 1,890 | 2,247 |
| 2. மெர்குரி ஆவி விளக்கு | .. | 156 | 748 | 904 |
| 3. இரட்டை குழல் விளக்கு | .. | 1,249 | 549 | 1,798 |
| 4. ஒற்றை குழல் விளக்கு | .. | 3,735 | 6,018 | 9,753 |
| 5. சாதாரண விளக்கு | .. | .. | 756 | 756 |
| மொத்தம் | .. | 5,497 | 9,961 | 15,458 |

1991–92 ஆம் ஆண்டில் ரூ. 64.52 லட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட வேலைகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| | | தொகை இலட்சத்தில். |
|---|---|---|
| (1) 16 எண்கள் புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்தல் | .. | 28.87 |
| (2) 20 எண்கள் மின் மாற்றிகள் அமைத்தல் | .. | 20.36 |
| (3) புதிய தெரு விளக்குகள் அமைக்க | .. | 2.87 |
| (4) பிற மூலதனச் செலவினங்களுக்காக | | 12.42 |
| மொத்தம் | .. | 64.52 |

தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் நடைமுறைப்படுத்துவது போல் மின் கட்டண பட்டியல்களை வசூலிக்க மாநகராட்சியிலும் அட்டைப்பட்டியல் முறை அமுல் படுத்தப்படவுள்ளது.

11. சமூகநலத் திட்டங்கள் :

கீழ்க்கண்ட சமூகநலத் திட்டங்கள் அரசிடமிருந்து பெறப்படு கின்ற மான்யத்தில் மதுரை மாநகராட்சியினரால் செயல்படுத்தப் படுகிறது.

1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்நினைவு திருமணநிதி உதவி.

2 டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவி

3 நேரு ரோஜ்கர் யோஜனா திட்டம் :—

(1) நேரு ரோஜ்கர் யோஜனா மைக்ரோ எண்டர் பிரைசஸ் திட்டத்தின்கீழ் பயிற்சி கடன் மற்றும் மானியம் வழங்குதல்.

(2) நேரு ரோஜ்கர் யோஜனா தொழிற்பயிற்சி வழங்குதல்.

(3) நகர்ப்புற குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்.

(4) குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்குதல்.

12. 8-வது ஐந்தாவது திட்டம் :—

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மதுரை மாநக ராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்காக 8,903 லட்சங்களுக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளது: இவற்றில் வரைவு செயல் திட்டத்தின்கீழ் ரூ. 500 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1991–92-ம் ஆண்டில் ரூ 200 இலட்சம் மதிப்பீட்டில் வேலைகள் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

13. நிதி ஆதாரம் :

சென்னை நகரத்தை போன்று விற்பனை வரியின் மீதான மேல் வரியிலிருந்து 20 சதவீதத் தொகையை மதுரை மாநகராட்சிக்கும் வழங்க அரசாணை எண் 726 வ. வரி மற்றும்நு.க. துறை நாள் 17—12—1990-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. தமிழ்நாடு அரசு நகராட்சிகளின் நகர் வளர்ச்சி நிதித் திட்டங்களின்கீழ்



மதுரை மாநகராட்சிக்குக் கீழ்க் கண்ட திட்டங்களுக்காக ரூ. 300 லட்சம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங் களுக்காக இதுவரை ரூ. 75.05 லட்சம் வழங்கப்பட்டுள்ளது:

| விபரம். | மதிப்பீட்டுத் தொகை | பெறப் பட்ட தொகை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| 1 மின் விளக்குகள் அமைக்க .. | 50.00 | 50.00 |
| 2 கம்ப்யூட்டர் அமைக்க .. | 20.00 | ... |
| 3 சாலைகள் பராமரிப்பு கருவிகள் வாங்குவதற்கு | 15.00 | 7.58 |
| 4 மழைநீர் வடிகால் அமைக்க ... | 62.00 | ... |
| 5 வடிகால் திட்டத்திற்கு ... | 127.50 | |
| 6 குப்பைகள் அகற்றும் மேலாண்மையில் வாகனங்கள் வாங்குவதற்கு | 25.00 | 17.47 |
| மொத்தம் .. | 300.00 | 75.05 |

வரப்பெற்றுள்ள ரூ. 75.05 லட்சத்திற்கான பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன மீதித் தொகைகள் வரப்பட்டவுடன் மற்ற பணிகள் மேற் கொள்ளப்படும். ரூ 20 லட்சம் செலவில் கம்ப்யூட்டர் அமைத்து பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. இதன் மூலம் அனைத்துப் புள்ளி விபரங்களை யும் பதிவு செய்து கொள்ள இயலும். தேவைப்படும்போது உட னுக்குடன் வழங்க இயலும். மாநகராட்சிப் பணிகளை விரைந்து மேற்கொள்ள பல்வேறு வரிமற்றும் கட்டணங்களுக்கான டிமாண்டு கள் விரைந்து வழங்க இயலும். அனைத்து ஊழியர்களின் சம் பளப்பட்டியல்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும்.

(2) திட்ட மேலாண்மை குழுமம் வருவாய்தரும் அலுவலக கட்டிடங்கள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டுவதற்கு ரூ. 300 லட்சம் ஒதுக்கீடு செய்ய இசைந்துள்ளது. இத்திட்டத்தில் நகரில் 5 இடங்களில் அங்காடிகள், வணிக மையங்கள், அலுவலக வளாகங்கள், வணிக மையங்களில் கூடுதல் கட்டிடங்கள் மற்றும் காய்கறி அங்காடிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட் டங்கள் அனைத்தும் 1991–92-க்குள் செயல்படுத்தப்படும்.

[1991 செப்டம்பர் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி.

கோயம்புத்தூர் நகராட்சி 1981-ம் ஆண்டு மே திங்கள் முதல் நாள் அன்று மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. மாநகரத்தின் மொத்தப் பரப்பளவு 105.60 சதுர கிலோமீட்டராகும். 1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநகரின் மொத்த மக்கள் தொகை 7,04,514 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 12 லட்சம். 1991-92-ம் ஆண்டின் உத்தேச வரவு-செலவு திட்ட மதிப்பீட்டின்படி மின்சாரத்துறை மற்றும் குடிநீர் விநியோக நிதி உள்பட முறையே ரூ. 43 கோடியும், ரூ. 46 கோடியும் ஆகும்.

1. பொதுப் பணிகள்:

(அ) சாலைகள்

இம்மாநகராட்சி 606.85 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. அவைகளின் விபரம் பின்வருமாறு:

| | (கி.மீ.) |
|---|---|
| (1) சிமெண்ட், கற்சாலை, தார்சாலை, சந்துகள் முதலியன | 476.64 |
| (2) கல்தளச் சாலைகள் .. .. | 61,94 |
| (3) மண்சாலைகள் மற்றும் கல்தளமிடாத சாலைகள் | 31.36 |
| (4) கான்கிரீட் சதுரக் கற்களுடன் நடை பாதைகள் | 36.91 |
| மொத்தம் .. | 606.85 |

(ஆ) கீழ்க் குறிப்பிட்டவாறு சாலைப் பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

| | செலவு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| (1) கல்தளச் சாலைகள் அமைத்து தார்தளமிடுதல் 50 கி.மீ. .. ... | 122.04 |
| (2) தற்போதுள்ள சாலைகளைப் பராமரித்தல் | 323.93 |



1991 செப்டம்பர் 17]

(இ) சுழல்நிதித் திட்டத்தின் கீழ் புதியதாக உருவாகியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் ரூ. 15 லட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கவும் மற்றும் வடிகால்கள் கட்டப்படவும் உள்ளன.

2. கட்டிடங்கள் :

(அ) மாநகராட்சி ஊழியர்களுக்காக ரூ. 10 லட்சம் செலவில் 10 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் மூலமாக ரூ. 93 லட்சம் மதிப்பீட்டில் துப்புரவுப் பணியாளர்களுக்கு தவணை முறையில் வாங்கும் திட்டத்தின் கீழ் 288 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி திட்டச் செயலாக்கம்.

உலக வங்கி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி உதவியுடன் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்த உள்ளன:

| வ.எண். | திட்டத்தின் பெயர். | உத்தேசத் தொகை. | அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பாலக்காடு ரோட்டில் டிரக் டெர்மினல் அமைக்கும் திட்டம். | 50.00 | 50.00 |
| 2. | பெரிய கடை வீதியில் நவீன வணிக மையம் கட்டுதல். | 400.00 | 210.00 |
| 3. | திடக் கழிவுப்பொருள் திட்டம் (வாகன மற்றும் உபகரணங்கள் வாங்க). | 121.00 | 121.00 |
| | கூடுதல் .. | 571.00 | 381.00 |

(இ) மேலும் ரூ. 500 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சியின் வருமானத்தை அதிகரிப்பதற்காக கீழ் குறித்தவாறு வணிக மையத்துடன் கூடிய அலுவலக வளாகமும், காசு கொடுத்து உபயோகிக்கும் கழிவறைகள் முதலியன வருமானம் தரத்தக்க இனத்தின் கீழ் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

| | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| (1) அவினாசி சாலை வணிகமையத்தில் முதல் மற்றும் இரண்டாவது மாடி வணிகமையங்கள் கட்டுதல். | 100.00 |
| (2) திவான் பகதூர் சாலையில் அலுவலக மையம் கட்டுதல். | 155.00 |
| (3) காந்திபுரம் நகரபேருந்து நிலையத்தில் கடைகள் மற்றும் அலுவலக மையங்கள் கட்டுதல். | 170.00 |
| (4) 50 நவீன கட்டணமுறைக் கழிப்பிடங்கள் கட்டுதல். | 75 00 |
| மொத்தம் .. | 500.00 |

(3) குடிநீர் விநியோகம் :

(அ) 575 கி.மீ. நீளக் குழாய் அமைப்புகள் மூலம் மாநகர் முழுவதும், சிறுவாணி குடிநீர் வழங்கப்படுகிறது. குடிநீர் குழாய் அமைப்புக்கள் இல்லாத பகுதிகளுக்கு 13 தண்ணீர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இம்மாநகரில் தற்பொழுது 54,830 வீட்டுக் குழாய் இணைப்புகளும் 1,087 பொது குடிநீர்க் குழாய்களும் உள்ளன.

1991–92-ம் ஆண்டில் பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளுக்கு ரூ. 120 லட்சம் செலவில் மேற்படி குழாய்கள் அமைக்கும் பணியை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வீட்டுக் குடிநீர் குழாய்கள் 2000-மும், பொது குடிநீர் குழாய்கள் 50-ம் அதிகமாக அமைக்கப்படும்.

(ஆ) பில்லூர் குடிநீர் விநியோகத் திட்டம்.— உலக வங்கி நிதியுதவி ரூ. 76 கோடி மதிப்பீட்டில் பில்லூர் தண்ணீர் விநியோகத் திட்டப்பணிகள் ஏற்கனவே தொடங்கி நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதில் மாநகராட்சி பங்கு ரூ. 40 கோடியாக இருக்கும் என அளவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1993-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.





(4) கழிவுநீர் வடிகால் திட்டம் :

1. கழிவுநீர் வடிகால்கள் அமைக்கும் பணியைத் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இப்பணி மாநகராட்சியாக உயர்த்தப்படுவதற்கு முன்பிருந்த நகராட்சியில் 3 பகுதிகளை உள்ளடக்கியதாகும். புதைவடிகால் திட்டங்களில் பகுதி 1 மற்றும் 2 திட்டப் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. பகுதி 3-ல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மாநகரில் வடிகால் அமைக்கப்படாமல் உள்ளபகுதிகளுக்கும் புதைசாக்கடைத் திட்டத்தினை விரிவுபடுத்த, ஓர் உத்தேச மதிப்பீடு ரூ. 1,500 லட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(2) 1991—92-ம் ஆண்டில் ஏற்கெனவே உள்ள மழைநீர் வடிகால்களைப் பராமரிக்க ரூ. 100 லட்சமும், புதிதாக மழைநீர் வடிகால் கட்ட ரூ. 100 இலட்சமும் நிதிஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

(5) தெரு விளக்குகள் :

(அ) மாநகராட்சி, கீழே குறிப்பிட்டுள்ளவாறு மொத்தம் 16,316 தெரு விளக்குகளைப் பராமரித்து வருகிறது:

| | | |
|---|---|---|
| 1. சோடியம் ஆவி விளக்குகள் | .. | 1,157 |
| 2. பாதரச ஆவி விளக்குகள் | .. | 1,475 |
| 3. குழல் விளக்குகள் | .. | 13,684 |
| | | 16,316 |

1991–92-ம் ஆண்டில் கூடுதலாக ஒளி வசதியளிக்க மாநகரில் உள்ள பிரதான சாலைகளில் ரூ. 10.00 லட்சம் செலவில் சோடியம் ஆவி விளக்குகள் அமைகத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் ரூ. 5.00 லட்சம் செலவில் 1,500 கூடுதல் விளக்குகள் அமைக்கப்படவுள்ளது.

(இ) குறைந்த மின் அழுத்தத்தை அபிவிருத்தி செய்ய பீளமேடு துணை மின் நிலையத்திலிருந்து ஒரு 11. கி.வா. விநியோக முனைப்பு அமைத்து 10 விநியோக டிரான்ஸ்பார்மர்கள் நிறுவ உத்தேசிக்கப்படவுள்ளது. இப்பணிக்காக ரூ. 30 லட்சம் செலவிடப்படவுள்ளது.

[1991 செப்டம்பர் 17

(ஈ) கோவை வடக்கு ரயில் நிலையம் அருகில் கிராஸ்கட் ரோட்டில் மேம்பாலம் அமைக்கப்படவிருப்பதால், உயர் மின் அழுத்த மேல் நிலையக் கம்பிகளை மாற்றி பாதாள உயர் அழுத்த கேபிள்கள் பொருத்தும் பணியை நெடுஞ்சாலைத் துறையினர் மூலம் ரூ. 56.00 லட்சம் செலவில் மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது.

(உ) மாநகராட்சி பகுதியிலுள்ள பூங்காக்களில் நவீன விளக்குகள் பொருத்த ரூ. 10.00 லட்சம் செலவில் திட்டமிடப் பட்டுள்ளது.

(ஊ) மின்சாரப்பிரிவு பணிகளை துரிதமாகச் செய்ய விசை மூலம் இயங்கும் ஏணி பொருத்திய வாரி ரூ. 5.00 லட்சம் செலவில் வாங்கப்படவுள்ளது.

**(6) கல்வி :**

1–6–1986 முதல் ஆரம்ப, உயர் ஆரம்ப, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்றி, ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் ஊதியம் போன்ற செலவினங் களை, 1–4–1990 முதல் மாநில அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. கோவை மாநகராட்சி 65 ஆரம்பக் கல்வி பள்ளிக்கூடங்கள், 13 உயர் ஆரம்பப்பள்ளிகள், 9 மேல்நிலைப்பள்ளிக்கூடங்கள், 23 உயர்நிலைக் கல்விக்கூடங்கள், ஒரு நடுநிலைப்பள்ளி மற்றும் ஓர் காது கேளாதோர் பள்ளி போன்றவற்றை பராமரித்து வருகிறது.

**(7) பொது சுகாதாரம் :**

துப்புரவுப் பணிகளுக்காக 1857 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். சராசரியாக தினசரி 600 மெட்ரிக் டன் குப்பை மற்றும் கழிவுப் பொருள்கள் சேகரித்து அப்புறப் படுத்தப்படுகிறது.

பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கென பயன் படுத்தப்படும் வாகனங்களின் விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. பிரண்ட் என்ட் லோடர் | — | 1 |
| 2. எக்ஸ்கேவேட்டர்-கம்-லோடர் | — | 1 |
| 3. டம்பர் பிளேசர் | | 1 |
| 4. லாரிகள் | | 11 |
| 5. சிறிய லாரிகள் | | 19 |



1991 செப்டம்பர் 17]

**(8) பல்வகை :**

அ. மரம் நடுதல்—

வன இலாகா மற்றும் நெடுஞ்சாலைத் துறையுடன், சமூக சேவை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தி 5,500 மரக் கன்றுகளை இந்த ஆண்டில் நட திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. உயிரியல் பூங்கா—

மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் உயிரியல் பூங்கா வானது பள்ளிக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு உகந்ததாக உள்ளது. இதற்கு 1991—92-ம் ஆண்டு உத்தேச திட்ட மதிப் பீட்டில் கூடுதலாக ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் புதியதாக மிருகங்கள் மற்றும் பறவைகள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இ. விளையாட்டு செயற்பாடுகள்—

இம்மாநகராட்சி எல்லைக்குள் இளைஞர்களின் விளையாட்டு திறன்களை ஊக்குவிக்கும் பொருட்டு நகரத்தின் பல்வேறு பகுதிகளில் 1991–92-ம் ஆண்டு ரூ. 27 லட்சம் மதிப்பீட்டில் டென்னிஸ்கோர்ட், கூடைப்பந்து, கைப்பந்து திடல்கள் போன்ற விளையாட்டு மையங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேலும் வ.உ.சி. பூங்காவில் ரூ. 50 லட்சம் செலவில் ஒரு நீச்சல் குளம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

ஈ. ஒதுக்கப்பட்ட இடங்களை பாதுகாத்தல்—

மாநகராட்சியில் பொதுக்காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் பொதுமக்களால் ஆக்கிரமிப்புகள் செய்வதையும் தவறான முறையில் பயன்படுத்துவதையும் தவிர்க்கும் நோக்கத் துடன் இந்த ஆண்டும் ரூ. 50 லட்சம் செலவில் தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

161493
சென்னை-600 009